திருவருணைக் கலம்பகம்

மூலமும் உரையும்

காழி. சிவ. கண்ணுசாமி.

உ

சிவமயம்

எல்லப்ப நாவலரவர்கள்

இயற்றியருளிய

திருவருணைக் கலம்பகம்

நகராமலை

நா. இராமலிங்கம் பிள்ளையவர்கள்

இயற்றிய

உரையுடன்

சீகாழி வித்துவசிகாமணி

ப. அ. முத்துத் தாண்டவராய பிள்ளை அவர்களாற்

பார்வையிடப்பட்டு,

தருமையாதீன வித்துவான்

காழி. சிவ. கண்ணுசாமி பிள்ளை B. A.

அவர்களால்

சென்னை புரோகிரேஸிவ் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1934

[விலை ரூ. 1-0-0.

திருக்கயிலாய பரம்பரைத் திருத் தருமபுரவாதீன
௨௪-வது மகா சந்நிதானமும் சைவசமயப் பெருங்
ஆசானும் செந்தமிழ்ப் புலவரும் ஆகிய



ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக பரமாசார்ய சுவாமிகள்
திருவடிகட்கு, இத் திருவருணைக்கலம்பக நூலாசிரியர்
இவ்வாதீனத்துச் சீடரும் வித்துவானுமாக இருந்த
உரிமைபற்றி, இப்பதிப்பைப் பணிவுடன்
சமர்ப்பிக்கின்றேன்.

—காழி. சிவ. கண்ணுசாமி

பதிப்புரை

விளவார் கனிபட நூறிய கடல்வண் ணனும் வேதக்
கிளர்தா மரை மலர் மேலுறை கேடில் புகழோனும்
அளவா வண மழலாகிய வண்ணா மலை யண்ணல்
தளரா முலை முறுவல் லுமை தலைவன் னடிசரணே.

திருவருணைக் கலம்பகம் என்ற இந்நூல் கலம்பகங்களுள் தலைசிறந்ததெனப் புலவர்களாற் போற்றப்படுவது; நூன்முழுதும் சைவமணம் கமழ்வது; பாடல்தொறும் சிவபரத்துவம் பொங்கித் ததும்புவது; நவில்தொறும் நயம் பயப்பது; பயில்தொறும் பத்திச் சுவை புகட்டுவது; ஏனைய கலம்பகங்களுட் காணப்படாத சைவசமய குரவர்களின் துதி அமையப் பெற்றிலங்குவது.

ஆழ்ந்த கருத்துகளும், பொருட் செறிவும், பன்னயமும் பொருந்திய ஒப்பரிய இந்நூலுக்கு, காலஞ்சென்ற யாழ்ப்பாணத்து மேலைப் புலோலி நா. கதிரைவேற் பிள்ளையவர்கள் முப்பத்தைந்தாண்டுகட்கு முன், விளக்கவுரை யொன்றைத் திங்கள் வெளியீடாக எழுதிவரக் கருதி முதல்வெளியீட்டையும் எழுதிமுடித்துதவினார்கள்; தக்க ஆதரவின்மையாற் போலும் அதற்குமேல் அருளினார்களில்லை. பின்னர், மதுரைத் தமிழ்ச்சங்கத்தாரால் சேற்றூர்ச் சுப்பிரமணியக் கவிராயர் அவர்களைக்கொண்டு எழுதுவித்த அரும்பதவுரை யொன்று அச்சேறி வெளிவந்தது. ஆயினும், அது பண்டிதர்க்கும் பாவலர்க்குமேயன்றி பாமரர்க்கும் மற்றையோர்க்கும் பயன்படுவது அரிதாகவிருந்தது. பல்லாண்டுகளாக இருந்துவரும் ஏற்ற விளக்கவுரையொன்றில்லாத இக்குறையை நீக்கு

வாகன் கூற்றின் தொம்பரத்தைச் சேர்ந்த நகரமலையி லிருக்கும், ஆன்ற கேள்வியும், சான்ற நூற் புலமையும் வாய்ந்த பேராசிரியர் ரா. இராமலிங்கம் பிள்ளையவர்கள் முன்வந்தது தமிழர்தம் பெருந்தவப் பயனேயாம்.

இத்தகைச் சிறப்பு வாய்ந்த இவ்வுரைநூலை யச்சிடுதல் இன்றியமையாததாகும் என்று எனதாசிரியர் கருணையாளின வித்துவசிகாமணி காழி. ப. அ. முத்துத் தாண்டவராயபிள்ளையவர்கள் விரும்ப, அவ்விருப்பத்தை நிறைவேற்றுவதே கடனாகக் கொண்டு எம்பெருமான் திருவருளால் இயன்றவாறு சீரிய முறையில் அச்சிட்டுள்ளேன். இம்முயற்சியில் முதற்கணிருந்து என்னை ஊக்கியும், பொருட்செலவால் இடையீடுபடாதவாறு பெருதவிபுரிந்தும், ஒப்புநோக்குதல் முதலிய அரும்பணி யாற்றியும் வந்த என் கெழுதகை நண்பர் திருமயிலை. சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளை யவர்களுக்கு நான் என்றும் எழுமையுங் கடப்பாடுடையேன்; மற்றும், எனக்கு உதவி புரிந்த வீரசைவப் பெருந்தகையார் திரு. S. C. நாகி செட்டியாரவர்களுக்கும், நண்பர் P. ஜானகிராம முதலி யாரவர்களுக்கும், வித்துவான் R. S. சாம்பசிவ சர்மா அவர்களுக்கும், ஆசிரியர் தங்கவேற்பிள்ளை யவர்களுக் கும், புரோகிரஸிவ் அச்சுக்கூடப் பொறுப்பாளர் திரு. S. கோவிந்தராஜ முதலியாரவர்களுக்கும் என் நன்றி உரியதாகுக.

'என் கடன் பணிசெய்து கிடப்பதே'

காழி. சிவ. கண்ணுசாமி.

பொருளடக்கம்

திருவருணையைப் பற்றிய இதர நூல்கள்

1. அருணாசல புராணம்—சைவ-எல்லப்ப நாவலர்.
2. திருவருணை யந்தாதி— ,,
3. அருணகிரி புராணம்—மறை ஞான தேசிகர்.
4. தேவாரம்—(சம்பந்தர் 2 பதிகம்; அப்பர் 3 பதிகம்)
5. திருவாசகம்—(திருவெம்பாவை; திருவம்மானை)
6. திருப்புகழ்—(8 பாடல்கள்)
7. அருணகிரி யந்தாதி—குகைநமசிவாயர்.
8. அருணைத் தனிவெண்பா— ,,
9. அண்ணாமலை வெண்பா—குரு நமசிவாயர்.
10. சோண சைலமாலை—சிவப்பிரகாச சுவாமிகள்.
11. அருணாசலேசுரர் சாரப்பிரபந்தம்—நமசிவாய சாமி.
12. உண்ணாமுலை யம்மன் சதகம்—வித்துவான் சின்ன கவுண்டர்.
13. அருணாசலேசுரர் பதிகம்—புரசை அஷ்டாவதானம் சபாபதி முதலியார்.
14. அண்ணாமலையார் வண்ணம்—யாழ்ப்பாணம் தியாகராச பிள்ளை.
15. அண்ணாமலை சதகம்—திருச்சிற்றம்பல நாவலர்.
16. உண்ணாமுலை யம்மை வருகைப் பதிகம்.
17. அருணாசல சதகம்—காஞ்சீபுரம் சபாபதி முதலியார்.
18. அருணாசல அக்ஷரமாலை—இரமணமகரிஷி.
19. அண்ணாமலை பஞ்சரத்தினம்.
20. திருவண்ணாமலை திருவருட்பதிகம்—திருவருட்பா இராமலிங்கசாமிகள்.
21. கார்த்திகைத்தீப வெண்பா—சோணாசல முதலியார்.
22. சோணாசல வெண்பா ,,
23. சோணாசல சதகம் ,,
24. அருணைக்கலி வெண்பா ,,
25. அருணாசலேசர் பதிகம்.
26. அருணாசலேசுரர் பதிகம்.
27. உண்ணாமுலை யம்மன் பதிகம்.
28. அருணாசலேசுரர் நவகாரிகைமாலை.

முன்னுரை

பலவளங்கள் சிறந்த சோழநாட்டில் திருவெண் காட்டிற்குத் தென்மேற்கில் நான்கு கடிகை தூரத்தி லுள்ள பூந்தாழை என்னும் நகரத்தில் கார்காத்த வேளாண்மரபில், காலிங்கராயர் கோத்திரத்தில் திவ்ய கவி சைவசிகாமணி சைவ. எல்லப்ப நாவலர் பிறந்தார்.

இவர் இளமையிலேயே தென்மொழி வடமொழி களில் வல்லுநராய், அன்பறிவாதி ஒழுக்கங்களிற் சிறந்து சைவப்பற்றுடையராய்த் திகழ்ந்தனர். தருமபுர ஆதீ னத்து ஸ்ரீ சிவஞான தேசிகரிடம் சிவதீக்கை பெற்று, சைவசித்தாந்த சாத்திரமுங் கற்றுக் கவிபாடுதலில் மிக வல்லவரானார்.

இவர்தங் கவிநயமும் சிவபெருமானை யன்றிப் பாடாத மன உறுதியுங்கண்டு, மடாதிபரும், பிறரும், இவரைத் திவ்யகவி என்றும், சைவகவி என்றும், நாவல ரென்றும், சைவசிகாமணி யென்றும் பட்டாபிதானஞ் சூட்டிப் பாராட்டினர். இவர் தலந்தோறும் சென்று தரிசிக்க விழைந்தவராய், திருவண்ணுமலை என்னுந் திவ்யதலத்தை அடைந்து தரிசித்து ஆங்கு வைகுநாள், அருணுசல புராணம், திருவருணையந்தாதி முதலிய நூல் களையும் பின்னர்த் திருவெண்காட்டுத் தலபுராணம், செவ் வந்திப் புராணம், திருவிரிஞ்சைப் புராணம், தீர்த்தகிரிப் புராணம், திருச்செங்காட்டங்குடிப் புராணம், திருவாரூர்க் கோவை, சௌந்தரியலகரியுரை முதலியவற்றையுந் இயற் றினர். இவர்தம் மனைவியாரும் கற்பிலருந்ததியையும், பொற்பில் திருமகளையும், கல்வியிற் கலைமகளையும் ஒத்துத் திகழ்ந்தனர்.

ஒருநாள் இந்நாவலர், தருமபுர வாதீனத்துத் தேசிகர்பால் அளவளாவி இருக்குங்கால், அங்குவந்த புலவர் ஒருவர் திருவரங்கக் கலம்பகச் செய்யுட்களைப் புகழ்ந்து கூறி, "இதுபோல் கலம்பகம் பாடுதல் இக்காலத்துப் புலவர்கட்கு இயலாது" என்றனர். அதுகேட்ட நாவலர், 'ஐயங்கார் அம்பலவனைப் பாட மறந்தனர்' எனக் குற்றங் கூறி, அன்றிரவே அடியார்களுக்குத் தாம் பரம்பொருள் என்று காட்டிய திருவண்ணாமலையார் மேல், திருவருணைக் கலம்பகம் பாடிமுடித்து மறுநாட் காலை ஆதீனத்துத் தேசிகர்பால் குழுமியிருந்த புலவர்களிடத்துக் காட்ட, அதுகண்ட தேசிகரும், ஏனைய புலவர்களும் நாவலரது கலம்பகத்தின் கவிச்சுவையையும் பொருட்செறிவையுங்கண்டு பாராட்டிப் புகழ்ந்தனர்.

இவரைப் போலவே சிவபெருமானிடத்துப் பேரன்பு பூண்ட இவர்தம் மனைவியார் திருவரங்கக் கலம்பகத்தி லுள்ள "வாடியோட வனசமன்ன" என்னும் சிவ தூடணை மலிந்த பாடலைக் கண்டு மனக்கவலையுற்றிருந் தமையால் தமது நாயகர் கலம்பகம் பாடுவதறிந்து, இதுவே தக்க சமயம் என்று கண்டு, அன்றிரவே

கருடனோட மற்சமாமை கமலமோட முற்கரங்
காட்டிலோட மூன்றிராமற் கண்டமட்டி லோடவே
மருளிவந்த சிங்கமோட வாமனென்பு பாறவே
வஞ்சமுள்ள கண்ண னோட மாரனீறச் சேனனு
மிருளினோட முண்டகத்த னேங்கியோட வென்றவர்க்
கீறுறாதங் குயிரளித்த வேந்தல்யாவன் வேதமே
யருளுமந்த முதல்வன்யாவ னருணைகண்டு வாழ்மினோ
வாரநாதி மூலமென்ப தறிகிலாத மாக்களே.

வெண்பாச் செய்யுளைப்பாடி அக்கலம்பகத்திற் சேர்த்துக் கொள்ளும்படி வேண்டினர். நாவலர் யாது காரணத் தாலோ அச்செய்யுளைத் தம் கலம்பகத்திற் சேர்த்திலர்.

பிள்ளைப்பெருமாளையங்கார், தாம் பாடிய திருவரங் கக் கலம்பகத்தை நாவலர் பார்க்கும்படி அனுப்பின ரெனவும், நாவலரதனைப் பார்த்து "ஐயங்கார் அம் மானையி லடிசறுக்கினார்" என்று கூறி உடனே தாம் இக் கலம்பகத்தைப்பாடி அன்றிரவே அவரிடமனுப்பின ரெனவும், அதனைப் பார்த்து ஐயங்கார் புகழ்ந்தன ரெனவும் ஒரு சாரார் கூறுப.

மற்றொரு சாரார், ஐயங்காருக்கும் நாவலருக்கும் வாதம் நிகழ, நடுநின்றார் அவ்வாதத்தை முடித்தற்கு அவ்விருவரையும் தனித்தனிக் கலம்பகம் பாடச் சொல் லின ரெனவும், இருவரும் அவ்வாறே பாடிக் கொண்டு வந்து காட்ட, நடுநின்றார் அவ்விரண்டையும் நோக்கி, 'ஐயங்கார் அம்மானையி லடிசறுக்கினார்' என்று குறை கூறி, நாவலர் கலம்பகத்தைப் புகழ்ந்தனர் எனவுங்கூறுப.

இவர் சிவபெருமானையன்றிப் பாடாத சைவப்பற் றுள்ளவர் என்பது, "செப்புமியற் றமிழ்களெல்லா மரி யயனே முதலான தேவர்க்கோதி, யொப்புவிக்க வறி யாம லரனிடத்தே வளைத்து வளைத்து உரையாநின்றேன்" எனத் திருவெண்காட்டுப் புராணத்தும், "சைவத்தின் மேற்சமயம் வேறிலை" எனத் திருவருணைக் கலம்பகத் தும் வற்புறுத்திக் கூறுதலா னுணர்க. இந்நாவலர் காலிங்கராய கோத்திரத்தா ரென்பது, திருவெண்காட் டுப்புராணைத் திறுதியில், "காலிங்கராயனுரை புராணம்

வாழியே" என்பதனாற் பெறப்படும். இவர் பெயர் "எல்லான்" எனக்காணப்படுவதால், சூரிய மூர்த்தியின் நாமமாதல் வேண்டும். ஆந்திர கன்னட தேசங்களினும் எல்லப்பன், எல்லம்மன் எனத் தெய்வங்கட்கும், மனிதர்கட்கும் இப்பெயர் வழங்குதல் காண்க. திருவெண்காட்டுப் புராண மச்சிட்ட திரு. துரைசாமிப் பிள்ளையவர்கள், நாவலர் ஊர் திருவெண்காட்டிற்குத் தென்மேற்கில் ஒரு கடிகை தூரத்திலுள்ள இராதாநல்லூர் என்பர்.

ஆராய்ச்சியில் வல்ல இக்காலத்துப் பெரியார்களிற் சிலர், நாவலர் ஊர் சீகாழி யென்றும், அவர் பூந்தாழையிற் பிறந்தவர் என்றும், அவர் மரபினருக்கு இராதாநல்லூரைச் சேர்ந்த இலையமுது கூடத்து எல்லையம்மன் குலதெய்வம் என்றும், நாவலர் பிறந்தவுடன் அவர்தம் பெற்றோர் ஆண்மகனாதலின் எல்லையப்பன் எனத் தம் குலதெய்வத்தின் பெயரை வைத்தனரென்றும் கூறுவர்.

நாவலரும் ஐயங்காரும் பட்டர் காலத்தே (கி. பி. 1061) இருந்தனரெனச் சிலரும், மதுரைத் திருமலைநாயக்கர் காலத்தே (கி. பி. 1623—59) இருந்தனரெனச் சிலரும், ஐயங்கார் பட்டர்காலத்தும் (கி. பி. 1061), நாவலர் சிவஞான தேசிகர் காலத்தும் (கி. பி. 1760) இருந்தனரெனச் சிலரும் கூறுவர்.

இந்நாவலரைப் பற்றிப் புலவர் புராண முடையார்

"சைவ வெல்லப்ப நாவல னெனும்பேர்
தரித்தவன் சங்கரன் வசிக்கு
மைவகைத் தலத்தி னடுவெனக் குலவு
மருணையின் புராணமா தியநூல்

பொய்வரோர் வாக்கண் டவருமெச் சிடுஞ்சீர்
கெழ்தரத் தொடுத்தன னவற்றைக்
கையயி னெழுதிச் சுமந்துரைத் துணர்ந்து
களிப்பவர் கணிக்கரும் பலரே''

எனக் கூறுவதால் இவர் பெருமை புலனும்.*

இனி, திருவருணைக் கலம்பகம் என்ற இந்நூற்கு உரை யெழுதிய இராமலிங்கம் பிள்ளை என்பார் சிதம்பரத்தை அடுத்த நகராமலை எனும் ஊரில், பரம்பரையே படித் துயர்ந்ததும், சிறந்ததுமாய கார்காத்த வேளாண்மரபில், செம்பியதரையர் கோத்திரத்தில், சாலிவாகன சகம் ௧அ௧௬-க்கு மேல் செல்லாநின்ற ஹேவிளம்பியில் நாராயண பிள்ளை குமாரராகத் தோன்றியவர். இவர் மதுரைத் தமிழ்ச் சங்கத்து ஆசிரியர் பல்லோரிடம் பன் னூல் பயின்று உலகியலறிவும் இலகுநூலறிவும் ஒருங் கமைவுற்று, மாணவர் பலர்க்கும் பாடம் கற்பித்தலையே கடமை எனப்பெற்ற அருங்கலை விநோதர்; அருந்தமிழ் நூல் பலவற்றையுந் திருத்தமாய் ஆராயும் மனோநிலை வாய்ந்தவர். இவரை ஆதி ஆசிரியரெனக் கொண்டு தேறி வெளிவந்துள்ள என்போன்ற மாணவர் பலராவர்.

இத்தகைய எனது ஆசிரியர், மாணவர் சிலர்க்கு இவ்வரிய நூலைப் பாடஞ்சொல்லுங்காலை உரைகூறும் திறத்தைக் கண்ட பின்னலூர் திரு. க. வாகீச பிள்ளை

---

* இன்னும் நாவலரைப்பற்றி மிகுதியாக அறியவிரும்பின் "செந்தமிழ்ச் செல்வி'' என்னும் தமிழ்த் திங்கள் வெளியீட் டின் எழாவது சிலம்பில் திருவாளர் S. அனவரத விநாயகம் பிள்ளையவர்கள் M.A., L.T. எழுதியுள்ள ஆராய்ச்சிக் கட்டுரை யைப் படித்தறிக.

அவர்களும், கருமகல்லூர் திரு. மு. வடிவேற் பிள்ளை அவர்களும். "தாங்கள் இக்கலம்பகத்திற்கு உரை யெழுதல் வேண்டும்" என்று விரும்பிக் கேட்டதற் கிணங்கி இவ்வுரையை எழுதத் துணிந்தனர். இலக்கியப் பயிற்சி பெறுபவர் விளக்கமாய்ப் பயிலும் நூல்களில் இஃதும் ஒர் தகைமையாய நூலாதலாலும், கலம்பகத்திற்கு உரை காண்டல் அரிது, அதிலும் இக்கலம்பகத்திற்கு உரைகாணல் மிகவும் அரிதாதலாலும், இந்நூற்கு முன்னாம் எழுதிய குறிப்புரைகள் நன்மையுடைய ஒருசிலர்க்கேயன்றி பலர்க்கும் அறிதற்கரிதாகலானும், இதுகாறும் இந்நூற்கு அரியதும் பெரியதுமாய ஒரு விளக்கமான உரை வெளிவாராமையானும், சென்னைச் சர்வ கலாசாலையார் இந்நூலின் அருமை பெருமைகளை யுணர்ந்து இதனைத் தேர்வுப் பாடமாக வைப்பதானும் இப்புத்துரை விரைவுடன் வெளிவரலாயிற்று.

இவ்வுரை மாணவரேயன்றி மற்றியாவரும் தெளிவாய்ப் பொருளறிந்து கொள்ளும் நிலையில் அமைந்த புத்துரையாம். கலம்பகத்திற்கென அமைந்த பதினெட்டு உறுப்புக்களுக்கும், ஏனைய உறுப்புக்களுக்கும் ஏற்ற வரையறைத் தொடர்களும், செய்யுள் ஒவ்வொன்றற்கும் கருத்துரையும் விளக்கவுரையும் இதன்கண் செவ்வனே திகழ்கின்றன. மேலும், இதனுள் வந்துள்ள மடக்கு, சிலேடை முதலிய அணிகள் அமைந்த செய்யுள்கட்கு எழுதிய பொருட்டெளிவு மிகத் தெளிவானதாகும். கற்பவர் மனத்தைக் கவரச்செய்யும் சொன்னயம் பொருணயங் கூறியும், பல்பொருள் குறித்த ஒவ்வோர் மொழிக்கும் நலமுறு பொருள் இன்னதெனச் சிறப்பாய்க் குறித்தும், பாடபேதங்களை எடுத்துக்காட்டி அவற்றிற்குத்

[illegible] நிறுவியும், கலாசாலை மாணவர்க் [illegible] சொல்முடிபு, பொருள்முடிபு, இலக்கண அமைதி முதலிய விசேடணங்களை ஈந்தும், சிலசொற்களுக்கும், பிரயோகங்களுக்கும், கருத்துக்களுக்கும், தேவாரம், திருவாசகம், திருக்கோவையார், சித்தியார், கந்தபுராணம், மணிமேகலை முதலிய பன்னூல்களினின்று மேற்கோள் காட்டியும், செந்தமிழ்நூல் பலவற்றிற்குத் தந்துரைத்த பழைய உரையாசியர் பலரைத் தழுவி, ஐவகை இலக்கணமும் செவ்விதின் அமைய, நூலாசியர் பெருமை தோன்ற, எழுதிய இவ்வுரைநடைச் செல்வம் யாவரும் பெற்றுப் போற்றத் தக்கதொரு பெருஞ் செல்வமாகும். இந்நூலுட்கிடந்த புதைபொருளனைத்தையும் எளிதில் எடுத்துரைத்து ஆசிரியர் செய்த நன்றி என்றும் எந்நாட்டும் நின்று நிலவுக.

இத்தகைச் சிறப்பு வாய்ந்த இவ்வுரைநூலை அச்சிடக் கருதி யான் சீகாழி வித்துவசிகாமணி ப. அ. முத்துத் தாண்டவராய பிள்ளை அவர்களிடமும், சீகாழி சபாநாயகமுதலியார் இந்து உயர்தரப்பள்ளிக்கூடத் தலைமைத்தமிழாசிரியர் திரு. மு. சண்முகதேசிகர் அவர்களிடமும் தெரிவித்துக் கொண்டபோது, அவர்கள் தங்கள் நேயர் சென்னை வித்துவான் காழி. சிவ. கண்ணுசாமி பிள்ளை அவர்கள் B.A., மூலமாய்த் தக்க முயற்சி பெரிதும் அச்சிடுவிக்க இசைந்தார்கள். இம்மூவருக்கும் யான் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

சீகாழி,
25-2-1934.

த. சுந்தரேச ஆச்சாரியார்
தமிழாசிரியர், லூதரன்மிஷன் ஹைஸ்கூல், சீகாழி.

சீகாழி வித்துவசிகாமணி


ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை

அவர்கள் இயற்றிய

உரைச் சிறப்புப்பாயிரம்

திருநாம மைந்துடையார் திருவருணைக்
கலம்பகத்தைச் சிறக்க வாய்ந்து
பெருநாம வுரை யியற்றிப் பேரறிஞ
ருளமகிழப் பிறங்கத் தந்தான்
கருநாமந் துடைப்பவர்வாழ்ந் துறைநகரா
மலைக்கணமர் காரா ளன்சீர்
தருநாம விராமலிங்க பூபதிநாற்
கவிசொலுமுக் தமிழ்வல் லோனே.

திருவருணை



திருச்சிற்றம்பலம்

திருவருணைக் கலம்பகம்

மூலமும் உரையும்



இது திருவருணையைப் பற்றிய கலம்பகமென விரியும்; இரண்டாம் வேற்றுமை யுருபும்பயனும் உடன்றொக்க தொகை. திருவருணையினது சம்பந்தமான கலம்பகம் என விரித்து ஆறும் வேற்றுமைத் தொகையாகக் கொள்ளினுமமையும். திருவருணையின்மேற் பாடிய கலம்பகம் என்று விரித்துப் பொருள்கொண்டு ஏழனுருபும்பயனும் உடன்றொக்கதொகை யென்பாருமுளர்.

'திரு' என்னும் பலபொருளொருசொல், வடமொழியில் 'ஸ்ரீ' என்பதுபோல, தமிழிலே தேவர்கள், அடியார்கள், ஞானநூல்கள், மந்திரங்கள், புண்ணியதலங்கள், புண்ணிய தீர்த்தங்கள் முதலிய மேன்மையுடைய பல பொருள்கட்கு விசேடணபதமாகி, மகிமைப் பொருளைக் காட்டி, அவற்றிற்கு முன்னே நிற்கும்; திருநந்திதேவர், திருநாவுக்கரசர், திருவாசகம், திருவைந்தெழுத்து, திருவருணை, திருவையாறு, திருவடி எனவும் வழங்குவது காண்க. இங்கு, இது அருணைக்கு அடைமொழி; கலம்பகத்திற்கு அடைமொழியாகவுமாம். திரு என்பதற்கு மேன்மையான என்று பொருள்கொண்டால் திருவருணை என்ற தொடர், பண்புத்தொகையும், மேன்மையையுடைய என்று பொருள் கொண்டால் இரண்டாம் வேற்றுமை

யுருபுப்பயனும் உடன்றொக்க தொகையுமாம். திருவருணை யென்ற தொடரில், வகரவொற்று உடம்படுமெய்.

அருணையென்பது அருணகிரி அல்லது அருணாசலம் என்பதன் மரூஉ. அருணம் என்பது செந்நிறம்; அது பண்பாகு பெயராய்ச் செந்நிறமான அக்கினியை யுணர்த்திற்று. முன்னொரு காலத்தில் திருமால், பிரமன் என்னும் இருவருந் தாம் தாம் பரம்பொருளென்று போர்புரிய அங்கே சிவபெருமான் அழலுருக்கொண்டு பரம்பொருளாகி நின்ற தலமே அருணகிரி எனப்பெயர் பெற்றது. அது "பிரம னரியென் றிருவருந்தம் பேதைமையாற், பரமமி யாம்பரமம் என்றவர்கள் பதைப்பொடுங்க, அரனு ரழ லுருவா யங்கே யளவிறந்து, பரமாகி நின்றவா தோணோக்க மாடாமோ" என்ற திருவாசகத்தானறிக. இதனால் பஞ்சபூத தலங்களு ளிது தேயு தலமாகும். இவ் வருணையை நினைத்த மாத்திரத்தில் முத்தியுண்டாகும். அது "தில்லையைக் காணக் காசியிலிறக்கச் சிறக்குமாரூர் தனிற்பிறக்க, வெல்லையில் பெருமை யருணையை நினைக்க வெய்தலாமுத்தி" (அருணாசல புராணம்) என்பதனு லறிக.

கலம்பகமாவது, ஒருபோகும் வெண்பாவும் கட்டளைக் கலித்துறையும் முதற்கவியுறுப்பாக முதலிற்கூறி, புய வகுப்பு, மதங்கு, அம்மானை, காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல் என்னும் பதினெட்டு உறுப்புக்களும் இயையுமாறு, மருட்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரியவிருத்தம், கலிவிருத்தம், கலித்தாழிசை, கலிநிலைத் துறை, வஞ்சிவிருத்தம், வஞ்சித்துறை, ஆசிரியத்துறை, வெண்டுறை முதலியவற்றால், இடையிடையே வெண்பா

வும் கலித்துறையும் விரவிவர, மடக்குடைச் செய்யுளும் வண்ணம் சந்தம் முதலியனவும் பொருந்த, *அந்தாதித் தொடையால் முற்றுற, இறுதியும் முதலும் மண்டலித்துப் பாடுங்கால், தேவர்க்கு நூறும், அந்தணர்க்குத் தொண்ணூற்றைந்தும், அரசர்க்குத் தொண்ணூறும், அமைச்சருக்கு எழுபதும், வணிகர்க்கு ஐம்பதும், வேளாளர்க்கு முப்பதுமாகப் பாடுவதொரு பிரபந்தம்; இக்கலம்பகவிலக்கணத்தைப் பன்னிருபாட்டியல், வச்சணந்திமாலை, இலக்கணவிளக்கம் முதலியவற்றிற் காண்க.

இந்நூற் றலைச்செய்யுளில், 'கலம்பகப்பாமாலை' எனக் கூறப்பட்டுள்ளதனால் பலவகை மலர்களைக்கொண்டு தொடுக்கப்பட்டுள்ள மாலைபோலப் பலவகைப் பாக்களைக் கொண்டு அமைக்கப்பட்ட பாமாலையைக் கலம்பகமெனப் பெரியார் பெயரிட்டு வழங்கினர்போலும். இதற்கு இவ்வாறு பொருள் கொள்ளும்போது, இது கதம்பம் என்னும் வடமொழியின் திரிபுபோலும். இனி, கலப்பு அகம் எனப்பிரித்து, மெலித்தல் விகாரம் பெற்றதாக்கி, பலவுறுப்புக்களும் கலத்தலைத் தன்னிடத்தே யுடையதென அன்

---

* அந்தாதி - அந்தத்தை ஆதியாகவுடையது; அந்தாதியாவது, முன்னின்ற செய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்தாயினும் அசையாயினும் சீராயினும் அடியாயினும் அடுத்துவருஞ் செய்யுளின் முதலாக அமையும்படி பாடுவது; இங்ஙனம் பாடும் நூலினது ஈற்றுச் செய்யுளின் அந்தமே முதற்செய்யுளின் ஆதியாக அமையவைத்தல், மண்டலித்தலெனப்படும். சொற்றொடர்நிலைச்செய்யுள், பொருட்டொடர்நிலைச்செய்யுள் என்றவகையில் இது சொற்றொடர்நிலை; "செய்யுளந்தாதி சொற்றொடர்நிலையே" என்றார் தண்டியலங்காரத்தும்.

மொழித்தொகைக் காரணக்குறியாகவுங் கொள்ளலாம்; இனி, ஒரு சாரார் பன்னிரண்டு மரக்காலென்னும் பொருளுள்ள 'கலம்' என்னுஞ் சொல்லும், கடவுளது அறுகுணங்களைக் குறிக்கும் 'பகம்' என்னுஞ் சொல்லும், குறிப்பாய்ப் பன்னிரண்டு, ஆறு என்னுந் தொகையை மாத்திரம் உணர்த்தி உம்மைத்தொகையாகப் புணர்ந்து பதினெட்டு உறுப்புக்களையுடைய பிரபந்தத்துக்கு ஏதுப்பெயராயிற்றென்றும், அகப்பொருள் கலத்தலையுடையது எனக் காரணக் குறியாயிற்றென்றும் உரைப்பர். "முதனூல் கருத்தன் அளவு மிகுதி, பொருள்செய் வித்தோன் தன்மை முதல் நிமித்தினும், இடுகுறியானும் நூற்குஎய்தும் பெயரே" என்று (நன்னூலிற்) கூறப்படுகின்ற நூல்வகைகளுள், நுதலிய பொருளினாலும் தன்மையினாலும் பெயர்பெற்றது இந்நூலெனவறிக. (நுதலிய பொருள்—நூலிற் கூறப்பட்ட விஷயம். தன்மை - நூலின் இயல்பு.) இங்கு "அருணை" என்பது அத்திருப்பதியி லெழுந்தருளி யிருக்கின்ற சிவபிரானைக் குறித்தது; இலக்கணை.

ஆசிரியர் தொல்காப்பியனார் செய்யுளியலில் "விருந்தே தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" என்பதனால் 'விருந்து தானும், பழங்கதை மேலதன்றிப் புதிதாகத் தாம் வேண்டியவாற்றால் தொடுக்கப்படுந்தொடர்நிலைமேலது' என்று கூறினமையின், இந்தக் கலம்பகம் அங்ஙனங் கூறிய விருந்தாமென்று உணர்க. அச்சூத்திரவுரையில் அந்தாதியும் கலம்பகமும் முதலாயின உதாரணங் காட்டப்பட்டுள்ளவாறுங் காண்க. இனி, இதனைச் சிறுகாப்பியத்துள் அடக்குவர் பிற்காலத்தார். இப்பிரபந்தம் தோத்திர ரூபமானது.

காப்பு

காப்பு - காத்தல்; அது, இங்குக் காக்கின்ற கடவுளின் விஷயமான வணக்கத்தைக் குறிக்கும்; ஆகவே, கவி தமக்கு நேரிடத்தக்க இடையூறுகளை நீக்கித் தமது எண்ணத்தை நிறைவேற்றவல்ல தலைமைப்பொருளின் விஷயமாக உயர்ந்தோர் வழக்கத்தின்படி செய்யுந் தோத்திரமென்பது கருத்து.

விநாயகக் கடவுள்

நேரிசைவெண்பா

அன்னவயல் சூழருணை யண்ணு மலையார்மேன்
மன்னுங் கலம்பகப்பா மாலைக்குத்—துன்னியசீர்
மெய்க்கோட்டு மேருவெனும் வெள்ளேட்டின் மீதெழுதுங்
கைக்கோட்டு வாரணமே காப்பு.

அன்னம் வயல்சூழ் - அன்னப்பறவைகள் வசிக்கின்ற வயல்கள் சூழ்ந்த, அருணை - அருணகிரிப் பதியிலுள்ள, அண்ணுமலையார்மேல் - அருணசலேசுரர்மேல் (யான் பாடுகின்ற), மன்னும் - நிலைபேறுயுள்ள, கலம்பகம் பாமாலைக்கு - கலம்பகமாகிய பாமாலைக்கு, துன்னிய சீர் - நெருங்கிய கீர்த்தியினையுடைய பாரதத்தை, மெய்கோடு மேருஎனும் - என்றும் உள்ளதாகிய சிகரங்களையுடைய மகாமேருமலை யென்கின்ற, வெள் ஏட்டின் மீது - எழுதப்பட்டில்லாத வெற்றேட்டின்மேல், எழுதும் - எழுதிய, கைகோடு வாரணம் - கையின்கண் கொம்பினையுடைய யானைமுகக் கடவுள், காப்பு - பாதுகாவலாவார்.

இக்காப்புச் செய்யுள், வழிபடு கடவுள் வணக்கம் எற்புடைக்கடவுள் வணக்கம் என்றவகை யிரண்டனுள் வழிபடு கட

வுள் வணக்கமாம். பின்வருஞ்செய்யுளுமிது. தத்தமது மதத்திற்குரிய கடவுளை வணங்குதலேயன்றி, அக்கடவுளினடியார்களை வணங்குதலும் வழிபடு கடவுள் வணக்கத்தின்பாற்படுமென்க.

எல்லா நூல்களும் மங்கலமொழி வகுத்துக் கூறவேண்டுவது பெருமரபாதலின், காப்புச் செய்யுளின் முதலில் 'அன்னம்' என்று தொடங்கினார். மேல், நூல் தொடக்கத்தில் 'மணி' என்னுஞ் சொல்லை வைத்தவாறுங் காண்க. என்னை? "வழிபடு தெய்வ வணக்கங்கூறி, மங்கல மொழிமுதல் வகுத்தெடுத்துக் கொண்ட, விலக்கண விலக்கிய மிடுக்கணின்றி, யினிது முடியுமென்மனார் புலவர்" (உரைச் சூத்திரம்) என்றாராகலின். யான் பாடுகின்ற கலம்பகப் பாமாலைக்கு விநாயகக் கடவுள் இடையூறு வாராமல் பாதுகாவலாவாரென்க.

அருணையின் வயல்வளப்பங் கூறுவார், அன்னவயல் சூழ் என்றார். அருணை என்றது அப்பதிக்கு வாளா பெயர்மாத்திரையாய் நின்றது. அண்ணாமலையா ரென்பதற்கு ஒருவராலும் நெருங்க முடியாத நெருப்புமலை வடிவமானவர் என்பது பொருள். ஏனைய பூமாலைபோன்று வாடி யழிந்துபோந் தன்மையின்றாகலின், "மன்னுங் கலம்பகப் பாமாலை" என்றார். மாலை போறலின் மாலை என்றார்; வரிசை எனினுமாம். பாரதம் ஐந்தாம் வேதமென்று புகழப்படுதலின் "துன்னியசீர்" என்றார். சீர்மை என்னும் பண்பு மை விகுதி கெட்டது. அது ஈண்டு "மேருவெனும் வெள்ளேடு" என்ற குறிப்பான் பாரதமாகிய பண்பியை யுணர்த்தி நின்றது. உலகந்தோன்றிய காலந்தொட்டு அழிவின்றி மேரு விளங்குதலின் ,'மெய்க்கோட்டு மேரு"வென்றார். வெள்ளேடு என்பதில் வெண்மையென்னும் பண்பு ஈண்டு எழுதப்படாமை யென்னு மின்மை குறித்து நின்றது; இலக்கணக்கொத்து ஒழிபியல் கஉ-ம் சூத்திரத்தில் ஆதியென்றதனாற் கொள்க.

பேரு மலை எடாயினமை :—வியாச முனிவர் விநாயகப் பெருமான்முன் ஐந்தாம் வேதமெனப் புகழ்ப்பெற்ற பாரத மாகிய இதிகாசத்தைக் கூற, அப்பெருமான் மேரு மலையை ஏடாகவும், கயமுகா சூரன் பொருட்டு ஒடித்த தமது கொம்பை எழுத்தாணியாகவுங் கொண்டு அவ்விதிகாசத்தை யெழுதின ரென்பதாம். அது, "நீடாழி யுலகத்து மறைநாலொ டைந் தென்று நிலைநிற்கவே,—வாடாத தவ்வாய்மை முனிராசன் மா பாரதஞ் சொன்னநா,—ளேடாக மாமேரு வெற்பாக வங்கூ ரெழுத்தாணிதன்,—கோடாக வெழுதும் பிரானைப் பணிந்தன்பு கூர்வாமரோ" என்னும் மாபாரதக் காப்புச்செய்யுளா னுணர்க. ஒரு கையில் எழுதிய தமது கொம்பை வைத்துக்கொண் டிருக் குங் காரணம் பற்றி, "கைக்கோட்டு வாரணம்" என்றார். உரு வத்திற் சிறந்த உறுப்பு முகமாகலின் வாரண முகத்தை யுடைய வரை வாரணமென்றார். எக்காரியந் தொடங்கினும் விநாயகரை வழிபடினன்றி, அக்காரியம் இடையூறின்றி யினிது நடைபெறா தாகலின் விநாயகரையே தமது நூலுக்குக் காப்பென்றார்; அதை, " என்னரே யாயினும் யாவதொன் றெண்ணுதன், முன் னரே யுனதுதாண் முடியுறப் பணிவரே, லன்னர்தஞ் சிந்தைபோ லாக்குதி யலதுனே, யுன்னலார் செய்கையை யூறுசெய் திடுதிநீ" (கந்தபுராணம்) என்ற சிவபிரான் கட்டளையா னறிக.

விநாயகப் பெருமான் யானை முகமாயினமை :—இறைவன் களிற்றுருக் கொண்டும் உமையவள் பிடி யுருக் கொண்டுஞ் சேர்ந்தமையின் விநாயகப் பெருமான் யானை முகக் கடவு ளாயின ரென்க. அது, " பிடியத னுருவுமை கொளமிகு கரி யது, வடிகொடு தனதடி வழிபடு மவரிடர், கடிகண பதிவர வரு ளினன் மிகுகொடை, வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே" என்ற திருஞானசம்பந்தர் தேவாரத்தா னுணர்க.

அன்னம் - வயல்; சாதி யொருமை. சூழ் அருணை - வினைத் தொகை. துன்னிய - செய்த வென்னும் வாய்பாட்டுப் பெய

ரெச்சம்; துன் - பகுதி, அ - விகுதி, இன் - இறந்தகால விடைநிலை; இடைநிலை னகரம், கடைக் குறை; ய், உடம்படுமெய். மன்னும், எழுதும் என்பன செய்யுமென் வாய்பாட்டு எதிர் காலப் பெயரெச்சம். இவை முறையே ஈண்டு நிகழ்காலமும் இறந்தகாலமுங் காட்டின. மன்னும் என்பது மன் என்னும் இடைச்சொல்லடியாகப் பிறந்தது. ஏ, பிரிநிலை; தேற்றமுமாம். ஆவாரென்னுஞ் சொல் எஞ்சிநின்றது.

இச் செய்யுள், காசு என்னும் வாய்பாட்டான் முடிந்த இரு விகற்ப நேரிசை வெண்பா. (க)

நால்வர்

கட்டளைக்கலித்துறை

சைவத்தின் மேற்சம யம்வே
றிலையதிற் சார்சிவமாந்
தெய்வத்தின் மேற்றெய்வ மில்லெனு
நான்மறைச் செம்பொருள்வாய்
மைவைத்த சீர்த்திருத் தேவார
முந்திரு வாசகமு
முய்வைத் தரச்செய்த நால்வர்பொற்
றாளெம் முயிர்த்துணையே.

சைவத்தின்மேல் - சைவசமயத்தின் மேற்பட்ட, வேறு சமயம் - வேறு சமயமானது, இல்லை - இல்லை; அதில் சார் - அச்சமயத்தைச் சார்ந்த, சிவம் ஆம் தெய்வத்தின்மேல் - சிவமாகிய கடவுளின் மேற்பட்ட, தெய்வம் - கடவுள், இல் - இல்லை, எனும் - என்கின்ற, நான்மறை - நான்கு வேதங்களின், செம்பொருள் - செவ்விய பொருளின், வாய்மை - உண்மையை, வைத்த - அமைத்தருளிய, திருதேவாரமும் - மேன்மை பொருந்

திய பேருபகாரங்களும், திருவாசகமும் - திருவாசகமும் ஆகிய நால்களோ, உய்வை தரசெய்த - ஆன்மாக்கள் பாவத்தினீங்கும் வாயிலைத் தரும்படி செய்தருளிய, நால்வர் - திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் சுந்தரரும் மாணிக்கவாசகருமாகிய நால்வர்களுடைய, பொன்தாள் - அழகிய திருவடிகள், எம்உயிர் - எங்கள் உயிருக்கு, துணை - துணையாகும்.

சைவத்தின் மேற்சமயம் வேறிலை யென்பது *எல்லாச் சமயங்களையும் சோபானக் கிரமத்தில் தன்கீழடக்கித் தான் எல்லாவற்றினும் மேம்பட்டிருத்தல். அது "ஓது சமயங்கள் பொருளுணரு நூல்க ளொன்றோடொன் றொவ்வாம லுளபலவு மிவற்றுள், யாது சமயம் பொருணூல் யாதிங்கென்னி னிதுவாகு மதுவல்லதெனும் பிணக்கதின்றி, நீதியினு னிவையெல்லா மோரிடத்தே காண, நின்றதி யாதொருசமய மதுசமயம் பொருணூ, லாதலினு னிவையெல்லா மருமறை யாகமத்தே யடங்கியிடு மவையிரண்டு மரனடிக்கீ ழடங்கும்" என்னுஞ் சிவஞானசித்தித் திருவிருத்தத்தா னுணர்க. "சைவ சமயமே சமயம்" "ராசாங்கத்தி லமர்ந்தது வைதிக சமயம்" என்ற தாயுமானார் வாக்கானுமுணர்க. சிவமாம் தெய்வத்தின்மேல் தெய்வமில் என்பது "ஆறு கோடியாஞ் சமயங்க ளகத்தினு மவைமேல், வீறுசேர்ந்த சித்தாந்த வேதாந்த நாதாந்தந், தேறுமற்றைய வந்தத்துஞ் சிவமொன்றேயன்றி, வேறு கண்டிலேன் கண்டிரேற் பெரியர்காள் விளம்பீர்" என்னுந் திருவருட் பிரகாச வள்ளலார் திருவாக்கா னுணர்க. நான்மறை என்பன இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்பன. செம்பொருள் என்பதற்கு "தோற்றக் கேடுக ளின்மையின் நித்தமாய், நோன்மையாற் றன்னையொன்றுங் கலத்தலின்மையிற் றூய்தாய்த், தானெல்லா

---

*அகம், புறம், அகப்புறம், புறப்புறம் ஆகிய சமயங்கள். இவற்றைச் சிவஞான சித்தியார் முதலிய நூல்களுள் பரக்கக் காண்க.

வற்றையுங் கலந்து நிற்கின்ற முதற்பொருள் விகாரமின்றி எஞ்ஞான்றும் ஒருதன்மைத் தாதல்பற்றி" என்றார் **பரிமேலழகர்.** வாய்மை யென்பது வாயினது தன்மை; அதாவது உண்மை கூறல். மெய்ப்பொருளின் தன்மையைப் பல வற்புத வாயிலாக விளக்கிக் காட்டுதலின் சீர் என்றார். தேவாரம் - திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர்களும் பாடியது. திருவாசகம் மாணிக்கவாசக ரருளியது. எம் என்னும் தன்மைப்பன்மை தன்னைச் சார்ந்தாரை உளப்படுத்தியது. நினைத்தவுடன் விரைந்து சேறலின் தாள் என்றார். பொன் - பொன் போலருமையாகப் பாராட்டத்தக்க எனினுமாம். சைவம் சிவசம்பந்தம். இலை என்னும் குறிப்புவினைமுற்று இடையில் தொக்கது. பின் இல்லை என்பதில் ஈறு தொக்கது. நான்மறை - நான்கு கூறும், மறைந்த பொருளும் உடையது. ஆகும் என்ற சொல் வருவிக்கப்பட்டது.

இச்செய்யுள் நேரசை முதலாய் ஒற்றொழித்துப் பதினெழுத்துப் பெற்றுவந்த கட்டளைக் கலித்துறை.

நூல்

மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா

எட்டடித் தரவு—க.

மணிகொண்ட நெடுங்கடலில் விழிவளரு மாதவனு
மணிகொண்ட புண்டரீக மகலாத சதுமுகனு
ஞானக்கண் ணதுகொண்டு நாடுமா றுணராதே
யேனத்தின் வடிவாகி யெகினத்தின் வடிவாகி
யடிதேடி யறிவலென வவனியெலா முழுதிடந்து
முடிதேடி வருவலென மூதண்ட மிசைப்பறந்துங்
காணரிய வொருபொருளாய்க் களங்கமற விளங்குபெருஞ்
சோணகிரி யெனநிறைந்த சுடரொளியாய் நின்றருள்வோய்.

ஈரடித்தாழிசை—எ.

மலைமிசையி லிருப்பதற்கோ மலைசிலையா வெடுப்பதற்கோ
மலையரையன் மகிழ்வதற்கோ மலையுருவ மெடுத்தனையே.

இத்தலத்தி லைந்தொழிலு மிருபிறப்போ ரறுதொழிலுந்
தத்துவமுந் திருமேனி தரித்திலையே லியலாவே.

இருக்காதி சதுர்வேத மிசைப்பதுநின் பலபேத
மொருக்காலு மொன்றுரைத்த தொன்றுரைக்க வறியாதே.

கருமுடிவைத் தருகால கற்பமெலாங் கடக்கவுநின்
றிருமுடியிற் பிறைசிறிதுந் தேயாது வளராதே.

தானவரைக் கடிந்துமலர்ச் சதுமுகனை யொழித்துமற்றை
வானவரை யழித்துநின்கை மழுப்படைவாய் மழுங்காதே.

அண்டருக்கு முனிவருக்கு மழலான கொடுவிடத்தைக்
கண்டமட்டு நுகர்ந்திடவுங் கண்டமட்டிற் கடவாதே.

மூவாமை தனக்குநின்றன் முதனடுவீ றிலாதமைக்குஞ்
சாவாமை பிறவாமை தமக்குமிவை சான்றன்றே.

நாற்சீரோரடி இரண்டு கொண்ட அராகம்—உ

தடவரை நடைகெழு தாமென வருமொரு
கடகரி யுரிவிரி கலையென மருவினை.
படமுடை யரவொடு பகைபடு முடுபதி
தடையற வுடனுறை சடைநெடு முடியினை.

முச்சீரோரடி அம்போதரங்கம்—ச.

சிலையென மலையை வளைத்தனை.
திரிபுர மெரிய நகைத்தனை.
கலைமறை யிவுளி படைத்தனை.
கதிரவ னெயிறு புடைத்தனை.

இருசீரோரடி அம்போதரங்கம்—அ

க. விதி சிரத்தினை.
உ. அகழ் கரத்தினை.
௩. விடை நடத்தினை.
ச. பொது நடத்தினை.
ரு. நதி தரித்தனை.
சு. மதி பரித்தனை.
எ. நாள்க ளாயினை.
அ. கோள்க ளாயினை.

ஈரடித்தாழிசை—௩

பண்ணுநீ சுவையுநீ பரிதியுநீ பனிக்கதிர்நீ
பெண்ணுநீ யாணுநீ பேதமுநீ யபேதமுநீ.

செங்சாலிற் கருங்காலன் சிரமுருள வுதைத்தனையே
சங்காழி முகுந்தனுக்குச் சங்காழி கொடுத்தனையே.

ஆராலு மளவிடுதற் கரியவனை யொருகரத்து
நீராலு மலராலு நெஞ்சுருகப் பணலாமே.

தனிச்சொல்

எனவாங்கு

பந்தடிநேரிசைஆசிரியச்சுரிதகம்

வேற்று மருந்தால் விடாதவெம் பிறவியை
மாற்று மருந்தா மலைமேன் மருந்தா
வழகிய நாயகி யருளுடை நாயகி
புழுகணி நாயகி பொருந்திய புனிதா
காசியி லிறந்துங் கமலையிற் பிறந்துந்
தேசமர் தில்லையுட் டிருநடங் கண்டு
மரிதினிற் பெறும்பே றனைத்தையு மொருகாற்
கருதினர்க் களிக்குங் கருணையை விரும்பி
யடைக்கலம் புகுந்தன னடியே
னிடர்க்கடல் புகுதா தெடுத்தரு ளெனவே. க.

[மணிகொண்ட * * * நின்றருள்வோய்.]

மணி கொண்ட - இரத்தினங்களைத் தன்னிடத்தே கொண்ட, நெடுகடலில் - நீண்டகடலி னிடத்து, விழிவளரும் - கண்ணுறங்குகின்ற, மாதவனும் - திருமாலும்; அணிகொண்ட - அழகினைத் தன்னிடத்தே யுடைய, புண்டரிகம் - தாமரை மலரினின்றும், அகலாத - நீங்காத, சதுமுகனும் - பிரமனும்; ஞானம் கண் அதுகொண்டு - அறிவாகிய கண்ணைக்கொண்டு, நாடுமாறு உணராது - கருதுந்தன்மை யறியாது, ஏனத்தின் வடிவாகி - (முறையே) பன்றியுருவமாகியும், எகினத்தின் வடிவாகி - அன்ன உருவமாகியும், அடிதேடி அறிவல் என - திருவடியைத் தேடி யறிவேனென்று, அவனி எலாம் - உலக முழுமையும், உழுது இடந்தும் - கொம்பினுலுழுது தோண்டிச் சென்றும்,

முடிதேடி அறிவல் என - திருமுடியைத் தேடி வருவேனென்று, முதுஅண்டம் மிசை பறந்தும் - பெரிய ஆகாயத்தின்மேல் பறந்து சென்றும், காண்அரிய - பார்த்தற்கரிய, ஒரு பொருளாய் - ஒப்பற்ற பரம்பொருளாய், களங்கம்அற விளங்கு - தூய்மையாக விளங்குகின்ற, பெரு சோணகிரி என - பெரிய செந்நிறம் பொருந்திய மலையென்று சொல்லும்படி, நிறைந்த சுடர் ஒளியாய் - நிறைந்தருளிய அக்கினிப் பிரகாசமாய், நின்றருள்வோய் - நின்றருள்பவனே!

கேட்டருள்வாயாக என்ற சொல் எஞ்சிநின்றது.

மணி என்பது மங்கலச் சொல். என்னை? "சீர்மணி பரிதியானை" என்ற நிகண்டுச் செய்யுளா னுணர்க. மதுரைக் கலம்பகத்தில் மணிகொண்ட எனக் கடலைச்சுட்டி இவ்வாறே மங்கலச்சொல் தொடங்கி யுள்ளார். கடல் இரத்நாகரம் ஆகலின் இவ்வாறு கூறினர். மணி - முத்தும் பவளமுமாம். நவ ரத்தினங்களும் உள என்பது "ஒன்பான் மணிகிடந்து இமைக்கு நீரால்" என்ற திருவிளையாடற் புராணத்தா னுணர்க. கடல் - (ஈண்டு) திருப்பாற்கடல். கண்ணுறங்கல் - அறிதுயில் கொள்ளல்; அதாவது யோக நித்திரை. மாதவன் - இலக்குமி நாயகன். தாமரை மலர் - (ஈண்டு) திருமாலுந்தியந் தாமரை மலர். சதுர் என்பது சது எனக் கடைகுறைந்தது. சதுர்முகன் - நான்கு முகங்களை யுடையவன். களங்கமற என்பதற்கு அவ்விருவர் களின் செருக்காகிய குற்றம் நீங்கும்படி எனினுமாம்.

திருமால் திருவடியை யறிவேனென்று பன்றி வடிவங் கொண்டு பூமியைத் தோண்டிச் சென்றும், நான்முகன் திரு முடியை யறிவேனென்று அன்னப்புள் வடிவங்கொண்டு விண் மிசைப் பறந்தும் காண்பதற்கரிய ஒப்பற்ற பொருள் திரு வண்ணாமலை என்பது விளக்கப்பட்டது. இவ்வரலாற்றை அருணாசலபுராணம் திருமலைச் சருக்கத்தா லறிக.

அறிவல், வருவல், தன்மை யொருமை வினைமுற்று. கண்ணாற் கொண்டு - அது பகுதிப்பொருள் விகுதி, அழலது வேந்தினென்றாற்போல. கொண்டு என்பது மூன்றாம் வேற்றுமைக் கருவிப் பொருளில் வந்த சொல்லுருபு. நின்றருள்வோய் - விளி. இச்செய்யுள் வினை வேறு பல அடுக்கியது. மூதண்டம் - முதுமை என்னும் பண்பின் ஈறுகெட்டு முதல் நீண்டது.

இது, எட்டடித் தரவு. தந்து நிறுத்துவது தரவு.

[மலை மிசையில் * * * எடுத்தனையே.]

மலைமிசையில் இருப்பதற்கோ - கயிலாய மலையின்கண் வசிப்பதற்கோ, மலை சிலையா எடுப்பதற்கோ - மேருமலையை வில்லாக ஏந்துவதற்கோ, மலையரையன் மகிழ்வதற்கோ - இமாசல மன்னன் களிப்படைவதற்கோ, மலையுருவம் எடுத்தனை - மலை வடிவத்தை எடுத்தாய்.

அதனைக் கூறுவாயாக என்றது எஞ்சிநின்றது.

மலையின்மே லிருப்பதற்கு ஒரு சிறுவடிவால் விளங்காமையானும், மலையை வில்லாக வளைப்பதற்கு மலைபோன்று பெரிய வடிவன்றி முடியாமையானும், மலை மன்னன் புகழ்வதற்கு அவன் மாமனாகலானுந் தன்னைப்போ லிருந்தாலன்றிப் புகழானாகையானும் இவ்வாறு கூறினார். ஓகாரங்கள் வினாப்பொருளன. எடுத்தனை முன்னிலை யொருமை வினைமுற்று. ஏ அசைநிலை.

[இத்தலத்தில் * * * இயலாவே.]

இ தலத்தில் - இவ்வருணைப் பதியில், ஐந்தொழிலும் - பஞ்ச கிருத்தியங்களும், இரு பிறப்போர் அறுதொழிலும் - அந்தணர்களுடைய ஆறு தொழில்களும், தத்துவமும் - தத்துவங்களை யுணர்தலும், திருமேனி தரித்திலையேல் - அருட்சோதி வடிவம் தாங்காவிடில், இயலா - நடைபெறுவாம்.

அருணைப் பதியில் அருட்சோதி வடிவங்கொள்ளாவிடில் பஞ்ச கிருத்தியங்களும், அந்தணரது தொழில்களும், தத்துவங்களை யுணர்தலும் நடைபெறாவாம் என்க. ஐந்தொழிலாவன: படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பன. அறுதொழிலாவன: ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்பன. ஏகாரம் அசைநிலை. தத்துவங்கள்: அகக்கருவி முப்பத்தாறும் புறக்கருவி யறுபதுமாகிய தொண்ணூற்ருறு. தத்துவம் – உண்மைப் பொருள் எனினுமாம்.

[இருக்காதி * * * அறியாதே.]

இருக்கு ஆதி சதுர்வேதம் - இருக்கு முதலாகிய நான்கு வேதங்கள், இசைப்பது - கூறுவது, நின் பலபேதம் - உன்னுடைய பலவித வடிவங்களை (ஆனாலும்), ஒன்று உரைத்தது - ஒரு வேதம் கூறிய வடிவை, ஒன்று உரைக்க அறியாது - மற்ருெரு வேதம் கூறவறியாது.

சதுர்வேதமாவன முன்னர்க் கூறினும்; ஆண்டுக் காண்க. உரைத்தது வினையாலணையும் பெயர். ஏ, அசைநிலை.

[கருமுடிவை * * * வளராதே.]

கரு முடிவை - உலகமுடிவை, தரு - தருகின்ற, கற்பகாலம் எல்லாம் - கற்ப காலங்கள் எல்லாம், கடக்கவும் - செல்லவும், நின் - உன்னுடைய, திருமுடியில்—, பிறை - சந்திரகலையானது, சிறிதும் - அற்பமாயினும், தேயாது - குறைந்து போகாமலும், வளராது - வளர்ச்சி யடையாமலும் இருக்கின்றது.

கடவுள் என்றும் ஒருதன்மைத்தா யழிவின்றி விளங்குதலின் அவரை யடைந்த ஆன்மாக்களும் அவ்வாறே யாமென்பார் பிறை சிறிதுந் தேயாது வளராது என்ருர். பின்னதுமது.

பிறை - **பிறப்பது** என இளஞ் சந்திரனுக்குக் காரணக் குறி. **முடிவு** - முடிதல்; ஈண்டு அழிதலை யுணர்த்திற்று. முடி - முடியப்படுவது என்னுங் காரணம் பற்றி வந்த பெயர். கரு - பிறப்பு; உலக முதலியன தோன்றுவவாதலின் இதற்கு உலகம் என்னும். கற்பமாவது, சிருட்டிமுதற் பிரளய மிறுதியாகிய காலம்.

[தானவரை * * * மழுங்காதே.]

தானவரை கடிந்தும் - அசுரர்களை அழித்தும், மலர் சதுமுகனை ஒழித்தும் - தாமரை மலரிலுள்ள நான்முகன் றலையைக் கிள்ளியும், மற்றை வானவரை அழித்தும் - மற்றைய தேவர்களைச் சங்கரித்தும், நின் கை - உன்னுடைய கையிலுள்ள, மழு படை வாய் மழுங்காது - மழுவாயுதத்தினது வாய் தேயாது.

மழு - எரி யிரும்புப் படை; அக்கினிப் பிழம்பென்றுங் கூறுவர். தானவர், காசிபருக்கு தநு என்னும் மனைவியிடம் பிறந்தவர்; அது அம் மரபினருக்குப் பெயராயிற்று. ஏ அசைநிலை.

[அண்டருக்கும் * * * கடவாதே.]

அண்டருக்கும் - தேவர்களுக்கும், முனிவருக்கும் - தவஞ் செய்வோருக்கும், அழல் ஆன - அக்கினி போல் தகிக்கும்படியான, கொடு விடத்தை - கொடிய நஞ்சை, கண்டமட்டும் நுகர்ந்திடவும் - பார்த்தவளவில் உண்ணவும், கண்டம் மட்டில் கடவாது - கண்டத்தின் அளவினின்றும் நீங்காது. ஏ அசைநிலை.

[மூவாமை * * * சான்றன்றே.]

நின்றன் - உன்னுடைய, மூவாமை தனக்கும் - மூப்பு அடையாமைக்கும், சாவாமை - இறவாமைக்கும், பிறவாமை தமக்கும் - பிறவா திருத்தற்கும், முதல் நடு ஈறு இலாதமைக்

கும் - ஆதி நடு அந்தம் இல்லாமைக்கும், இவை - மேற்சொல்லியவைகள், சான்று - சாட்சி யாகும்.

முதல் நடு ஈறு என்பன காலம் இடம் முதலியவற்றை. அன்று, ஏ அசைநிலைகள்.

இவை ஏழும் ஈரடித் தாழிசை. தாழம் பட்ட ஓசை யுடையது தாழிசை.

[தடவரை * * * மருவினை.]

தடவரை - பெரிய மலையானது, நடைகெழு தரம் என - நடையோடு கூடிய தன்மையைப் போல, வரும் - வந்த, ஒரு கடகரி - ஒரு மதத்தை யுடைய யானையினது, உரி-தோலை, விரி கலை என - விரிந்த ஆடையைப் போல, மருவினை - போர்த்தாய்.

அசுரனாகிய யானையின் தோலைப் போர்த் தருளினமை:— கயமுகாசூரன் பிரமனிடம் வரம் பெற்றுத் தேவர் முதலாயினோரைத் துன்புறுத்தி, மக்களையும் வருத்தத் தொடங்க, அவர்கள் காசி யடைந்து உருத்திரமூர்த்தியை அபயம் வேண்ட, அவர் கயமுகனைக் கொன்று அவன் தோலை யுரித்து உயிர்கள் யாவும் தன் ஒளியுருவைக் கண்டு கண்ணொளி கெடாதபடி அக்கரித் தோலைப் போர்த்தனர் என்பது கந்த புராணம்; ததீசி யுத்தரப் படலத்துட் காண்க.

கரத்தை யுடையது கரி. உரி தொழிலாகுபெயர்.

[படமுடை * * * முடியினை.]

படம் உடை அரவொடு - படத்தை யுடைய பாம்பொடு, பகை படும் - அதற்குப் பகையாகப் பொருந்திய, உடுபதி - சந்திரன், தடையற - இடையூறு நீங்க, உடன் உறை - சேர்ந்து வசிக்கின்ற, நெடு சடை முடியினை - நீண்ட சடை முடியினை யுடையாய்.

இறைவன் சடை முடியைச் சேர்ந்ததனால் சந்திரனும் பாம்பும் பகையின்றி வசிக்கின்றன என்பதாம்.

இவை இரண்டும் நாற்சீரோரடி யிரண்டு கொண்ட அரா[illegible]ன். நட்சத்திரங்களுக்கு நாயகனாதல் பற்றி உடுபதி என்றார்.

[சிலையென * * * புடைத்தனை.]

சிலை என - வில் என்னும்படி, மலையை - மேரு மலையை வளைத்தனை - வளைத்தாய்.

மேருவை வில்லாக வளைத்தது, திரிபுர சங்கார காலத்தில்.

திரிபுரம் - முப்புரங்களையும், எரிய - எரியும்படி, நகைத்தனை - சிரித்தாய்.

திரிபுரம்—சஞ்சரிக்கின்ற புரம் எனினுமாம்.

கலை மறை - சாகைகளையுடைய வேதங்களை, இவுளி - குதிரையாக, படைத்தனை - கொண்டாய்.

வேதங்களைக் குதிரையாகக் கொண்டது திரிபுர சங்கார காலத்தில்.

கதிரவன - சூரியனது, எயிறு - பற்களை, புடைத்தனை - தகர்த்தாய்.

சூரியனது எயிற்றை உடைத்தல் தக்கயாக சங்கார காலத்தில்.

இவை நான்கும் முச்சீரோரடி அம்போதரங்கங்கள்.

[விதிசிரத்தினை * * * கோள்களாயினை.]

விதி - பிரமனது, சிரத்தினை - தலையை.

அகழ் - கிள்ளிய, கரத்தினை - கையினையுடையாய்.

இவ் விரண்டு அம்போதரங்கத்தானும் தன்னை மதியாத பிரமன் தலையைக் கொய்த வரலாற்றைக் கூறினார்.

விடை - தருமதேவதையாகிய இடபத்தை, நடத்தினை - ஏறிச் செலுத்தினாய்.

திருமாலாகிய இடபம் எனினுமாம்.

பொது - சபையின்கண், நடத்தினை - நடனஞ் செய்தருளினாய்.

பொன், வெள்ளி, தாமிரம், இரத்தினம், சித்திரம் என சபைகள் ஐந்து.

நதி - கங்காநதியை, தரித்தனை - சடையில் தரித்தருளினாய்.

மதி - சந்திரனை, பரித்தனை - சடையில்தாங்கி யருளினாய்.

நாட்கள் - நட்சத்திரங்கள், ஆயினை - ஆயினாய்.

நட்சத்திரங்கள் அசுவனி முதலிய இருபத்தேழு.

கோள்கள் - கிரகங்கள், ஆயினை - ஆனாய்.

கிரகங்கள் சூரியன் முதலிய ஒன்பது.

இவ்வெட்டும் இருசீரோரடி யம்போதரங்கங்கள்.

[பண்ணுநீ * * * அபேதமுநீ].

பண்ணும் நீ - இசையும் நீ, சுவையும் நீ - அறுவகை உருசிகளும் நீ, பரிதியும் நீ-சூரியனும் நீ, பனிகதிர் நீ-குளிர்ச்சி பொருந்திய சந்திரனும் நீ, பெண்ணும் நீ - பெண்ணாய் விளங்குகின்ற பொருளும் நீ, ஆணும் நீ - ஆணாய் விளங்குகின்ற பொருளும் நீ, பேதமும் நீ - வேற்றுமைப் பொருளும் நீ, அபேதமும் நீ - ஒற்றுமைப் பொருளும் நீ.

[செங்காலின் * * * கொடுத்தனையே.]

"செங்காலின் - சிவந்தகாலினால், கருகாலன் - கரிய இயமனது, சிரம் உருள - தலையானது பூமியில் உருளும்படி, உதைத்தனை - உதைத்தருளினாய்; சங்கு ஆழி - சங்குகளையுடைய திருப்பாற் கடலில் அறிதுயில் கொள்ளுகின்ற, முகுந்

திருமாலுக்கு - திருமாலுக்கு, சங்கு ஆழி - அழகிய சக்கரத்தையும், கொடுத்தனை - கொடுத்தருளினாய்.

அருமை - வலிமை யெனினுமாம். சங்கு - படைக்கல மாகிற எனினுமாம். ஆழி, கடல் என்ற பொருளில் ஆழ்ந்துள்ளது என்றும் சக்கராயுத மென்ற பொருளில் வட்ட வடிவுடையதென்றும் காரணப் பொருள்படும். இனி, கடலென்ற பொருளில் பிரளய காலத்து உலகங்களை யழிப்பதென்றும், சக்கராயுதமென்ற பொருளில் பகைவர்களை யழிப்பதென்றும் காரணப் பொருள் கொள்ளலுமாம்.

[ஆராலும் * * * பணலாமே.]

ஆராலும் - யாவர்களாலும், அளவிடுதற்கு அரிய - அளவிட்டுச் சொல்லுதற்கரிய, உனை - உன்னை, ஒரு கரத்து - ஒரு கரத்திலேந்திய, நீராலும் - நீரினாலும், மலராலும் - பூக்களினாலும், நெஞ்சு உருக - மனம் உருகும்படி, பணலாம் - செய்யலாம்.

உனை, பணலாம் தொகுத்தல் விகாரம். ஆர் என்பது யார் என்பதன் மரூஉ.

இம்மூன்றும் பெயர்த்தும் ஈரடித் தாழிசை.

[எனவாங்கு]

எனவாங்கு - அசைநிலை. இது தனிச்சொல.

[வேற்று * * * ளனவே.]

வேற்று மருந்தால் - மற்றைய மருந்துகளினால், விடாத - தீராத, வெம்பிறவியை - கொடிய பிறவிநோயை, மாற்றும் - நீக்குகின்ற, மருந்துஆ - மருந்தாக, மலைமேல் - மலையின்மேல், மருந்தா - மருந்தா யுள்ளவனே!, அழகிய நாயகி - அழகிய

தலைவியும், அருள உடை நாயகி - திருவருள் பொருந்திய தலைவியும், புழுகு அணி நாயகி - புனுகு அணிந்த தலைவியும் ஆகிய அம்பிகையை, பொருந்திய - இடப்பாகத்தில் பொருந்திய, புனிதா - மலரகிதனே; காசியில் - காசிப்பதியில், இறந்தும் - உயிர் துறந்தும், கமலையில் - திருவாரூரில், பிறந்தும் - உற்பவித்தும், தேசுஅமர் - விளக்கம் பொருந்திய, தில்லையுள் - சிதம்பரத்தில், திருநடம் - ஆனந்தத் தாண்டவத்தை, கண்டும் - தரிசித்தும், அரிதினில் - அருமையில், பெறும்பேறு அனைத்தையும் - அடைகின்ற பலன்கள் எல்லாவற்றையும், ஒருகால் - ஒருதரம், கருதினர்க்கு - சிந்தித்தவர்களுக்கு, அளிக்கும் - கொடுத்தருள்கின்ற, கருணையை விரும்பி - கிருபையை விரும்பி, அடியேன் - தொண்டனேன், இடர்கடல் - துன்பக்கடலில், புகுதாது - மூழ்காது, எடுத்தருள் என - தூக்கியருளக்கடவாய் என்று, அடைக்கலம் - உன்னைச் சரணம், புகுந்தனன் - அடைந்தேன்.

ஒருகால - கருதினர்க் களிக்கும் கருணை பற்றி; சிவப்பிரகாச சுவாமிகளும் "துவக்கறவறிந்து பிறக்குமாரூருந் துயர்ந்திடா தடைந்து காண்மன்று, மூவப்புடனிலத்து மரிக்குமோர்பதியு மொக்குமோ நினைக்கு நின்னகரை" என்றார்.

வேறு - வேற்றுஎன ஒற்றிரட்டியது. மருந்தா என்பன விளி.

இலக்குமி பூசித்த காரணத்தால், திருவாரூர் கமலை எனப் பெயர் பெற்றது.

இது பத்தடி நேரிசை ஆசிரியச் சுரிதகம்.

இப் பாட்டு தரவும், தாழிசையும், அராகமும், அம்போதரங்கங்களும், பெயர்த்துந் தாழிசையும், தனிச்சொல்லும், சுரிதகமும் பெற்றுவந்த மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா. (க)

நேரிசைவெண்பா

வேதநுவல் சோணகிரி வித்தகர்க்கார் வேறுவார
சோதியிய மானனிவர் சோமனிவ—ராதவனும்
மண்ணுங்கா லும்புனலும் வானுமழ றானுமிவ
ரெண்ணுங்கா லெல்லா மிவர். உ

வேதம்நுவல் - வேதங்களை யருளிச் செய்த, சோணகிரி வித்தகர்க்கு - அருணசலத்திலுள்ள சதுரப்பா டுடையவர்க்கு, வேறு ஆவார் - வேறாயுள்ளவர், ஆர் - யாவர்? (ஒருவருமில்லை) ஏனெனில்; சோதி இயமானன் இவர் - ஒளியையுடைய ஆன் மாவும் இவர், சோமன் இவர் - சந்திரனும் இவர், ஆதவனும் இவர் - சூரியனும் இவர், மண்ணும் - நிலனும், புனலும் - நீரும், அழல்தானும் - நெருப்பும், காலும் - காற்றும், வானும் இவர் - ஆகாயமும் ஆகிய ஐம்பூதங்களும் இவர், எண்ணுங்கால் - இவ் வாற்றால் ஆராயுமிடத்து, எல்லாம் இவர் - எல்லாப் பொருள் களும் இவரே.

எல்லாப் பொருள்களு மிவராதலால் இவர்க்கு வேறுவார் ஒருவருமில்லை யென்றபடி.

நிலம், நீர், தீ, காற்று, விசும்பு என்பதே முறையாயினும், ஈண்டு, செய்யுள் நோக்கிப் பிறழ வைத்தார்.

வேதம் என்பதற்கு ஞானத்தைத் தருவது என்று பொருள்.

எட்டு மூர்த்தங்களாய் விளங்கியுள்ளா ரென்பதை,

“நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப் பகலோன், புலனாய மைந்தனோடெண் வகையாய்ப் புணர்ந்து நின்றான்”. என்ற **திருவாசகத்தா** னுணர்க.

வேதம்நுவல் என்பதற்கு வேதங்கள் புகழ்ந்து சொல்லு கின்ற வெனினுமாம். இயமானன் - யாகத்துக்குத் தலைவர். தான் அசைநிலை.

இது மலர் என்றும் வாய்பாட்டான் முடிந்த இரு விகற்ப நேரிசை வெண்பா. (உ)

கட்டளைக் கலித்துறை

எல்லா வுயிர்க்கு முயிரரு ணேச ரிவரசைவி
னல்லா தணுவு மசையாத தென்ப தறிந்தனமே
வில்லாடன் மார னிருக்கவும் யோகம் விளைத்தவந்நாட்
புல்லா திருந்தன வெல்லா வுயிருந்தம் போகத்தையே. ந

எல்லா உயிர்க்கும் - எல்லா உயிர்களுக்கும், உயிர் அருணேசர் இவர் - உயிராய் விளங்குகின்ற அருணசலேசுரராகிய இவர், அசைவின் அல்லாது - அசைவினலல்லாமல், அணுவும் அசையாதது என்பது - அணுப்பொருளும் தானே அசைவதற்கியலாதென்பதை, அறிந்தனம் - தெரிந்து கொண்டோம், (எதனலெனின்,) வில்ஆடல் மாரன் - கரும்பு வில்லால் வெற்றி கொள்ளும் மதன், இருக்கவும் - உயிரோடிருக்கவும், யோகம் விளைத்த அ நாள் - யோகத்தைச் செய்த அக்காலத்தில், எல்லா உயிரும் - எல்லா ஆன்மாக்களும், தம் போகத்தை புல்லாது இருந்தன - தம்முடைய போகத்தை அனுபவிக்காமலிருந்தன.

சிவபெருமான் கைலையிற் சனகாதி முனிவருக்காக, கல்லால விருட்சத்தின் கீழிருந்து யோக நிலையை யுணர்த்திய அக்காலத்து எல்லா உயிருந் தம் போகத்தைத் துறந்திருந்தமையால் "அவனன்றி யோரணுவு மசையாது" என்னும் பெரியார் மொழியை நன்கு தெரிந்துகொண்டே மென்றார். உலகத்திலே போகமும் யோகமு நிகழ்வது அப்பெருமானு லென்பதை;

"போகியா யிருந்துயிர்க்குப் போகத்தைப் புரிதலோரார், யோகியா யோகமுத்தி யுதவுத லதுவுமோரார், வேகியானுற் போற் செய்த வினையினை வீட்டலோரா, ரூகியா மூடரெல்லா

மும்பரி ெனருவனென்பர்" என்னும் சிவஞானசித்தித் திரு விருத்தத்தா னுணர்க.

ஏ இரண்டு மசைநிலை. அணு - வீட்டினுள் நுழை கின்ற சூரிய கிரணத்தில் தோன்றும் நுட்பஉரு; அதை "இன் னுழை கதிரின் றுன்னணு" என்ற மணிவாசகத்தா னுணர்க. அருண + ஈசன்; வடமொழிப் புணர்ச்சி, குணசந்தி.

இது நேரசை முதலாய் ஒற்றொழித்துப் பதினாறெழுத்துப் பெற்றுவந்த கட்டளைக்கலித்துறை. (௩)

கலித்துறை

போகம் விடுத்தே தாக மெடுத்தே புவிமீதே
யோகம் விளைத்தே யாக மிளைத்தே யுழல்வீர்கா
ளாகம வித்தார் மோகம வித்தா ரருணேசர்
கோக னகத்தா ளாக நினைத்தே குழைவீரே.

புவிமீது - பூமியில், போகம் விடுத்து - உலக வின்பங் களைத் துறந்து, தாகம் எடுத்து - முத்தி யின்பத்தைப் பெறும் வேட்கையை யடைந்து, யோகம் விளைத்து - யோகத்தை யனுட்டித்து, ஆகம் இளைத்து - உடலை மெலியச் செய்து, உழல்வீர்காள் - திரிகின்றவர்களே!, ஆகமம் வித்தார் - சிவாக மங்களை யருளிய மூலப் பொருளா யுள்ளவரும், மோகம் அவித் தார் - இயற்கையிலே மலமயக்க மற்றவரும் ஆகிய, அருணே சர் - அருணசலேசுரருடைய, கோகனகம் தாள் - தாமரை மலர்போன்ற திருவடிகளை, ஆகம் - மனதினால், நினைத்து குழைவீர் - சிந்தித்து நெகிழக் கடவீர்.

சிந்தித்து நெகிழ்வீர்களானால் நீங்கள் கருதிய முத்தி யின் பத்தை எளிதில் பெறலாம் என்றபடி.

ஆகம், மனதிற்கு ஆகுபெயர்.

கோகனகம் - கோகநதம் என்பதன் விகாரம்; சக்கரவாகப் பறவைகள் கூடிக்குலாவுவதற்கு இடமாயிருப்பது என்றும், கோகமென்னும் நதியில் மிகுதியாய்த் தோன்றுவது என்றும் பொருள்.

யோகம், ஆகமம் என்பனவற்றை, எஎ-ம் செய்யுளுரையிற் காண்க.

இது ஈற்றுச்சீர் புளிமாங்காய்ச் சீரும், முதற்சீரும் மூன்றுஞ்சீரும் தேமாச்சீரும், இரண்டாஞ்சீரும் நான்காஞ்சீரும்புளிமாச்சீர்களுமாகிய விருத்தக் கலித்துறை. (சு)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

குழையடுத்த விழியிடத்தர் மழுவலத்த ரருணையத்தர்
குளிர்வெற் பூடே
மழையடுத்த துளிநனைக்க மடிசுருக்கி மயிர்பொடித்து
வருந்துஞ் சேதா
தழையடுத்த விடையர்பற்று குழலிசைக்கு மனமுருக்கித்
தளரு மாலை
பிழையடுத்த மொழியுரைத்த தலைவருக்கு மிகவிரக்கம்
பிறப்பி யாதே. (ரு)

குழை அடுத்த - காதைச் சமீபித்த, விழி இடத்தர் - கண்ணையுடைய உமாதேவியை இடப்பாகத்தி லுடையவரும், மழுவலத்தர் - மழுப்படையை வலக்கரத்தி லேந்தியவரும் ஆகிய, அருணை அத்தர் - அருணைப்பதியிலுள்ள கடவுளது, குளிர் வெற்பூடு - குளிர்ச்சி பொருந்திய மலையினிடத்து, மழை அடுத்த துளி நனைக்க - மழையினாலுண்டாகிய நீர்த்துளிகள் நனைத்தலால், மடிசுருக்கி - வயிற்றைச் சுருக்கிக்கொண்டு, மயிர்பொடித்து - மயிர்க்கூச்செறிந்து, வருந்தும் - வருந்து

கின்ற, சேதா - செவ்விய பசுவானது, தழைஅடுத்த - தழையை யேந்திய, இடையர் - ஆயர்கள், பற்று - பிடித்து ஊதுகின்ற, குழல் இசைக்கு - புல்லாங்குழலின் இசைக்கு, மனம் உருக்கி - மனதை உருகச்செய்து, தளரும் - இரங்குகின்ற, மாலை-மாலைக் காலமானது, பிழை அடுத்தமொழி - பிழைபொருந்திய வார்த்தைகளை, உரைத்த - கூறிய, தலைவருக்கு - நாயகருக்கு, மிக இரக்கம் - என்மேல் மிகுந்த இரக்கத்தை, பிறப்பியாது - உண்டாக்காது.

தோத்திரப் பிரபந்தங்களில் அகப்பொருட் கிளவித்துறைகளை இடையிடையே கூறுதல் கவிசமயமாதலை இலக்கியங் கொண்டுணர்க. இங்ஙனம் வெளிப்படையாகக் கூறுகின்ற சிற்றின்பத்துறைச் செய்யுட்கெல்லாம் பேரின்பத்தின் பாற்படுத்தும் உள்ளுறைப் பொருளுமுண்டு; அவற்றைக் கற்றுவல்ல ஆன்றோர்பால் கேட்டுணர்க. கடுத்தின்றுதாளைக் கட்டிபூசிக் கடுத்தின்பிப்பார் போல, சிற்றின்பங்கூறும் வகையாற் பேரின்பத்தைக் காட்டி நாட்டுதல் என்ப. இச்செய்யுள் தலைவன் கார்ப்பருவங் கண்டும் வாராமை கருதி, தலைவி மாலைக்காலங்கண் டிரங்கிக்கூறல்.

குழை - குண்டலம்; தானியாகுபெயர். சிவபிரானது திருமேனியில் இடப்பாகம் உமைபாகம் ஆகையால் குழையடுத்த விழி என்றார். விழி - சினையாகுபெயர். சேதா, செம்மை + ஆ எனப்பிரிவுபடும்; செம்மை யென்னும் பண்பின் மை விகுதி கெட்டு முதனீண்டு முன்னின்ற மெய்திரிந்தது. செம்மை - உறுப்பிலக்கணத்தின் நன்மை, அன்றி நிறமுமாம். மடி - வயிறு என்னும் பொருள்படுதல் "படியை மடியகத்திட்டான்" என்னும் நான்மணிக்கடிகையானுணர்க. அன்றி, முலைமடி யெனினுமாம். நனைக்கவென்னும் செயவெனச்சம் காரணப்பொருட்டாய் இறந்தகாலங் காட்டியது. மழுப்படை வலது கையி

லுள்ளாரென்பது மதுரைக் கலம்பகத்திலும், காசிக்கலம்பகத் திலும் முறையே, "வைக்கொண்ட மழுவுடையீர்" "மழுவலத் தினை" எனக் கூறப்பட்டிருத்தலாற் காண்க. தழையடுத்த - முல்லை நிலத்தில் வசிக்கின்ற எனினுமாம். இடையர் - குறிஞ்சி நிலத்திற்கும் மருத நிலத்திற்கும் நடுவிடமான முல்லை நிலத்தி லுள்ளவர்; பொதுவர் என்றும் பெயர்க்குங் காரணமிதுவே. வருவோம் என்ற நாளில் தலைவர் வாராமையான் அவர் கூறிய மொழியைப் பிழைமொழி என்றார்.

இது ஈற்றுச் சீரிரண்டும் மாச்சீரும், மற்றை நான்குங் காய்ச்சீர்களுமாகிய அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம். (௫)

எழுசீர்ச்சந்தவிருத்தம்

யாதவர் குலத்துநெடு மாதவன்ம ருப்புடைய
வேனமி ருகத்து ருவமாய்
வேதமொழி பெற்றவய னோதிம மெனப்பறவை
வேடமு மெடுத்த திலையோ
வோதருணை வித்தகரை மூவரி லொருத்தரென
வோதியிடு மற்ப மதியீர்
சீதமதி வைத்தமுடி பாதமல ரைச்சிறிது
தேடுதனி னைத்த பரமே.

ஓது அருணை வித்தகரை - வேதாகமங்களை யருளிச் செய்த திருவருணைப்பதியிலுள்ள சிவபெருமானை, மூவரில் ஒருத்தர் என ஓதியிடும் - திரிமூர்த்திகளி லொருவர் என்று கூறுகின்ற, அற்ப மதியீர் - அற்ப புத்தியுடையவர்களே !, சீதம் மதிவைத்தமுடி - அப்பெருமானது குளிர்ச்சி பொருந்திய சந்தி ரனைத் தரித்தருளிய திருமுடியையும், பாதம் மலரை - திருவடித் தாமரை மலரையும், சிறிது தேடுதல் நினைத்து - எளிதில் கண்டு

[illegible] கூறு[illegible], அபரமே - பின்னே, யாதவர் குலத்து நெடு மா[illegible]ன் - இடையர் குலத்திலே வளர்ந்த நீண்டவடிவுடைய திருமால், மருப்பு உடைய எனம் மிருகத்து உருவமாய்-கொம்பு [illegible]ாயுடைய பன்றியென்னும் விலங்கின் வடிவமாகியும், வேத மொழி பெற்ற அயன் - வேதத்திற் கூறுகின்ற பிரமன் என்னும் உயர்ந்த பெயரை யடைந்த நான்முகன், ஓதிமம் என பறவை வேடமும் - அன்னமென்று சொல்லப்பட்ட பறவை யுருவம், எடுத்தது இலையோ - கொண்டும் அறியப்படாமல் இருக்கவில்லையா?

திருமால் பிரமன் ஆகிய இருவர்களும் முறையே பன்றி வடிவாகித் திருவடியையும் அன்னப்புள் வடிவாகித் திருமுடியையும் காணப்பெறுமையால் சிவபெருமானே பரம்பொருள் என்பது கருத்து.

மதி - மதிக்கப்படுவது எனப் பொருள்படும் காரணக்குறி. யாதவரென்றது, யதுஎன்னு மரசர் குலத்துப் பிறந்தவராதலின்.

இது, தானதன தத்ததன தானதன தத்ததன தானதன தத்த தனனா என வந்த எழுசீர்ச் சந்தவிருத்தம். (சு)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

பரவை யாடினு நதிக ளாடினும்
படியெ லாநடந் தடிக டேயினுங்
குரவ ராயினுங் கனலி னின்றதன்
கொதிபொ றக்கினுங் கதிகி டைக்குமோ
வரவ மாடுசெஞ் சடில ரங்கண
ரமுதர் தாணிழ லடியர் தம்மொடு
விரவி நீறணிந் தருணை சேர்வரேல்
வெற்ற ராயினு முத்த ராவரே

பரவை ஆடினும் - சமுத்திரத்தில் ஸ்நானஞ் செய்யினும், நதிகள் ஆடினும் - கங்கை முதலிய நதிகளில் ஸ்நானஞ் செய்யினும், படி எலாம் நடந்து - பூமி முழுவதும் வலஞ் செய்து, அடிகள்தேயினும் - பாதங்கள் தேய்ந்தாலும், குரவர் ஆயினும் - ஆசிரியர் ஆனாலும், கனலில் நின்று - நெருப்பி லிருந்து, அதன்கொதி பொறுக்கினும் - அதனுடைய உஷ்ணத்தைப் பொறுத்தாலும், கதி கிடைக்குமோ - முத்திப்பேறு கிடைக்குமோ, (கிடைக்காதென்றபடி). அரவம்ஆடு - பாம்புகளாடுகின்ற, செம்சடிலர் - சிவந்த சடைமுடி யுடையவரும், அம்கணர் - அழகிய நெற்றிக்கண்ணை யுடையவரும், அமுதர் - அமுதர் என்னும் பெயரை யுடையவருமாகிய சிவபெருமானுடைய, தாள்நினைந்து - திருவடிகளை நினைந்து, அடியர் தம் மொடுவிரவி - அடியார்களோடு கூடி, நீறு அணிந்து - விபூதி தரித்து, அருணை சேர்வரேல்-அருணாசலத்தை அடைவார்களானால், வெற்றர் ஆயினும் - ஒன்றுமில்லாதவரானாலும், முத்தர் ஆவர் - சீவன்முத்தர் ஆவார்கள்.

முன்னர்க்கூறிய உம்மைகளெல்லாம் உயர்வுசிறப்பு. வெற்றராயினும் என்பதில் உம்மை இழிவுசிறப்பு. கிடைக்குமோ என்பதில் ஓகாரம் எதிர்மறை. கணர் - கண்நிறைந்த எனினுமாம். அமுதர் - மோட்சத்தைத் தருகின்றவர் என்பது பொருள். அமுதம் - மோட்சம். குரவர் - குருத்தன்மை யுடையவர்; * குரு - அஞ்ஞானத்தை ஒழிப்பவன். வெத்தர் எனப் பாடங் கொள்வாருமுளர். அதில் வெத்தர் என்பது பெத்தர் என்பதன் மரூஉ. பெத்தர் - மலபந்தத்தோடு கூடியவர். நீறு- [மலத்தை] பாவங்களை நீறுபடுத்துவது. பரவை - பரவியிருத்தல். அரவம் அரா என்பது குறுகி அம்சாரியை பெற்றது. முத்தர் - மலங்களினின்றும் விடுபட்டவர்.

---

* கு - இருள்.

இது முதல் மூன்று ஐந்து ஏழு சீர்கள் மாச்சீரும், இரண்டு நான்கு, ஆறு எட்டுசீர்கள் விளச்சீரும் பெற்றுவந்த எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம். (எ)

பதின்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

முத்தமிழ் முறைமுறை யன்பொடு
மப்பர் கவுணியர் சொல் சுந்தரர்
முப்பொ ழுதுமெதிர் புகழ்ந்திடு முதுநூலா
ரத்த ரருணையி னெடுந்திரை
தத்து திருநதியின் மென்பெடை
யச்ச மறவுட னணைந்துறை மடநாரா
யொத்த மனமொடு புணர்ந்தவர்
சற்று மகல்வதிலை யென்றவ
ருற்ற துணையென விருந்தவ ருளம்வேறா
யெத்தனை கபட நினைந்தவர்
கைப்பொ ருள்கருதி நடந்தன
ரெப்படி யிறைவரை நம்புவ தினநாமே.

முத்தமிழ்முறை - மூன்று தமிழும் கலந்த தேவாரத் திருமுறையை, முறை - வரிசையாக, அன்பொடு - அன்போடும், அப்பர் - திருநாவுக்கரசர், கவுணியர் - திருஞான சம்பந்தர், சொல்சுந்தரர் - புகழையுடைய சுந்தரர் ஆகிய மூவர் களும், முப்பொழுதும் - மூன்று காலமும், எதிர் - தமக்கு முன்னே, புகழ்ந்திடும் - புகழ்ந்திடுகின்ற, முதுநூலார் - பெருமை தங்கிய நூலினை யுடையவராகிய, அத்தர் - சிவபெரு மான் எழுந்தருளி யிருக்கின்ற, அருணையின் - அருணகிரிப்பதி யின்கண்ணுள்ள, நெடுதிரை தத்து - பெரிய அலைகள் தாவி

வருகின்ற, திருநதியில் - திருநதியினிடத்து, மென்பெடை - மிருதுவாகிய பேட்டுடன், அச்சம்அற - பயமின்றி, உடன் அணைந்து உறை - சேர்ந்து கூடிவசிக்கின்ற, மடம் நாராய் - அழகிய நாரையே!, ஒத்தமனதோடு - உடன்பட்ட மனதோடு, புணர்ந்தவர் - கூடியவரும், சற்றும் - சிறிதும், அகல்வதுஇலை என்றவர் - நீங்குவது இல்லை யென்றவரும், உற்றதுணை என இருந்தவர் - தகுந்த துணையென்று சொல்லும்படி இருந்தவரும் ஆகிய தலைவர், உளம் வேறாய் - மனம் வேறுபட்டு, எத்தனை - எவ்வளவோ, கபடம் - வஞ்சகத்தை, நினைந்தவர் - நினைந்தவராய், கைப்பொருள் கருதி - பொருள் சம்பாதித்தலை நினைத்து, நடந்தனர் - சென்றனர், (ஆதலால்) இனம் நாம்-இன்னம் நாம், இறைவரை - சிறிதளவும், எப்படி நம்புவது - எவ்வாறு நம்புவது ?

இச்செய்யுள், பொருள்வயிற் பிரிந்த தலைவனைப்பற்றித் தலைவி நாரையை முன்னிலையாக்கிக் கூறல்.

முத்தமிழ், முப்பொழுது என்பதில் மூன்றென்பது மெய் வர முதல்குறுகி ஈற்றுயிர்மெய் கெட்டு னகரமெய் வந்த மெய் யாகத் திரிந்தது. முத்தமிழ் - இயல், இசை, நாடகம் என்பன. முப்பொழுது - காலை, உச்சி, மாலை, என்பன. மூவர்களும் செய் தருளிய முத்தமிழை முக்காலமும் ஓதுவார்கள் எதிரே புகழ்ந்து கூறுகின்ற எனினுமாம். முதுநூலார் - பெருமை பொருந்திய உபவீதமணிந்த எனினுமாம். நினைந்தவர் என் பதை, நினைந்து + அவர் எனப்பிரித்தும் பொருள் கொள்ள லாம். கைப்பொருள் என்பதில் கை உபசர்க்கம். 'இனி நாமே' யெனப் பாடங் கொள்வாருமுளர். அது 'இனமகலும்'' எனப் பின்பாட்டிற் றொடங்குவதாற் பொருந்தாமை யறிக. இறைவர்- தலைவருமாம்.

இது பதின்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம். (அ)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

இனமகலு மருகர்மட மிசையிலிடு கனன்மதுரை
யிறைவனுடல் புகமொழிவரே
கனகமுக படகவள கரடதட விகடமத
கரியின்மத மறநினைவரே
வனமருவு மருமுதலை யொருமதலை தரவினிய
மதுரகவி மொழிமுதல்வரே
யனகரபி நயரதுல ரமலரெம தருணகிரி
யடிகடம தடியவர்களே. ௬

அனகர் - பாவமில்லாதவரும், அபிநயர் - கூத்தரும், அதுலர் - ஒப்பில்லாதவரும், அமலர் - மலமில்லாதவரும் ஆகிய, எமது அருணகிரி அடிகள்தமது - எம்முடைய அருணசலேசுரரது, அடியவர்கள் - தொண்டர்கள்; இனம் அகலும் அருகர் - பெருமை நீங்கிய சமணர்கள், மடம்மிசையில் இடுகனல் - தாம் தங்கிய மடத்திலிட்ட தீயை, மதுரை இறைவன் உடல்புக மொழிவர் - கூன்பாண்டியனது உடலிலே செல்லும்படி கூறுபவரும்; கனகம் முகபடம் - பொன்னாலாகிய முகபடாமணிந்த, கவளம் - கவளங்கொள்கின்ற, கரடம் - மதம்பாய் சுவட்டினையுடைய, தட - பெரிய, விகடம் - அழகிய, மதம்கரி - மதத்தையுடைய யானையின், மதம் அற நினைவர் - மதம் ஒழிந்து போகும்படி கருதுபவரும், வனம் மருவு அருமுதலை - நீரில் வசிக்கின்ற இல்லாத முதலையை வரவழைத்து, ஒரு மதலைதர - ஒரு பிள்ளையைத் தரும்படி, மதுரம் கவி மொழி முதல்வர் - இனிமை பொருந்திய கவியைக் கூறுகின்ற முதன்மை யுடையவரும் ஆவார்கள்.

மதுரையில், தாம் தங்கிய மடத்தில் சமணர்களாலிடப்பட்ட தீயைப் பாண்டியனைப் பற்றும்படி செய்தவர், திருஞான

சம்பந்தர். சமணர்கள் தம்மைக் கொல்லும்படிவிட்ட யானை மத மற்று வணங்கிப் போகும்படி செய்தவர் திருநாவுக்கரசர். குளத் தில் முன்னர்ப் பிராமணப் பிள்ளையையுண்ட முதலையை வர வழைத்து அப்பிள்ளையைத் தரும்படி செய்தவர் சுந்தரர். இவ்வரலாறுகளைப் பெரிய புராணத்தாலுணர்க.

அருமை – இன்மை. ஏகாரம் ஈற்றில் தேற்றமும், மற்றைய அசைநிலையுமாம். இனம் அகலும் என்பதற்குக் கூட்டமாகப் பெருகிய எனினுமாம். அனகர் – அநகர், அகம் – பாவம். அதுலர் – துல்யம் – ஒப்பு. இவைகளில் அகரம் இன்மைப் பொருள் தந்தது.

இது, முதல் ஐந்துசீர்கள் கருவிளங்காய்ச்சீரும் இறுதிச் சீர் கருவிளங்கனிச்சீரும் பெற்றுவந்த அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம். (௯)

தலைவன் வினவுதல்

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

அடியவர் சிந்தையி லினிதுறை சங்கர
  ரருணைவ ளம்பதி யன்னாரே
படியினெ டுங்கரி யனையம தங்கொடு
  பதறிந டந்திடு மின்னாரே
யொடியுமெ ருங்கென வுணர்கிலிர் நின்றினி
  யொருவச னஞ்சொல வொண்ணாதோ
கடியச ரங்களி னிளைஞரு டன்பல
  கலகவி தம்பயில் கண்ணாரே. (௧௦)

அடியவர் சிந்தையில் – அன்பர்களின் மனதில், இனிது உறை சங்கரர் – விருப்பத்தோடு வீற்றிருக்கின்ற சிவபெரு மானது, அருணை வளம்பதி அன்னாரே – பல வளப்பங்களை

[illegible]ணாமலைப் பதியை ஒத்துள்ளவரே; படியில் - பூமியில், பெரிய கரி அனைய மதம்கொடு - பெரிய பெண் யானையை ஒத்த மதத்தைக் கொண்டு, பதறி நடந்திடும் மின்னாரே - ஒய்யாரமாக நடக்கின்ற மின்னற்கொடி போன்றவரே! இளைஞருடன் - காளைப் பருவம் வாய்ந்தவரோடு, கடிய சரங்களின் - கொடிய பாணங்களைப் போல, பல கலகம் விதம்பயில் கண்ணாரே - பலவிதமான சண்டைகளைச் செய்கின்ற கண்களை உடையவரே! மருங்கு ஒடியுமென - இடையானது இற்றுப் போகுமென்று, உணர்கிலிர் - அறியாதவரா யிருக்கின்றீர், இனி நின்று - இனிமேல் நின்று, ஒரு வசனம் சொல ஒண்ணாதோ - ஒரு வார்த்தை சொல்லக்கூடாதோ?

இது தலைமகளை முன்னிலையாக்கித் தலைமகன் வினாவிய தென்க.

சங்கரன் - சுகத்தைக் கொடுப்பவர். பதிகளில் அருணை நகர் பல வளத்தானும் எவ்வளவு சிறப்புற்றதோ அதைப் போல பெண்களுள் நீ பல இலக்கணத்தானும் சிறப்புற்றாய் என்றபடி; வளமை வாய்ந்த பதியை யொத்துள்ளாய் என்று தலைவியைக் கூறுதல் கவிமரபு. அது "புலியூரன்ன பொன்" என்னும் **திருக்கோவையா**ரானுணர்க.

பெண்யானை - தலைவியின் நடைக்கு உவமம். பெண் யானைக்கும் மத முண்டென்பதைப் **பெருங்கதை**யானுணர்க. மதம் - தலைவிக்குப் பெருமிதம். கண்கள் கண்ட ஆடவர்களை வருத்துந்தன்மையால் சரங்களின் என்றார். ஒண்ணாது - ஒன்றாது என்பதன் மரூஉ. ஓகாரம் வினாப்பொருள். அன்னாரே, மின்னாரே, கண்ணாரே என்பன விளி. கரி - கரத்தை உடையது. கடிய - வேகமான எனினுமாம்.

இச்செய்யுள், முதல் மூன்று ஐந்தாஞ்சீர்கள் **கருவிளச்** சீரும், இரண்டு நான்கு ஆறாஞ்சீர்கள் கூவிளச்சீரும், இறுதிச்சீர்

தேமாங்காய்ச் சீரும் பெற்றுவந்த எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம். தனதன தந்தன தனதன தந்தன தனதன தந்தன தனனா என்பது சந்தக் குழிப்பாம். (௧0)

அம்மானை

கலித்தாழிசை

நாரா யணனறியா நாதரரு ணேசருக்கு
வாரார் சிலைகலைமெய் மாதங்க மம்மானை
வாரார் சிலைகலைமெய் மாதங்க மாமாயி
ஞராயுங் காலெடுப்ப தையமன்றோ வம்மானை
யன்னமறி யாரெடுப்ப தையமோ வம்மானை. ௧௧

நாராயணன் அறியா - திருமாலினாலறியப்படாத, நாதர் அருணேசருக்கு - யாவருக்குந் தலைவராகிய அருணாசலேசுரருக்கு, வார் ஆர் சிலை கலை மெய் - கட்டமைந்த வில்லும் ஆடையும் சரீரமும், மாதங்கம் - முறையே பெரிய பொன்மலையும், யானைத்தோலும், பாதி உமையின் திருமேனியும் ஆகும், அம்மானை—;வார் ஆர் சிலை கலை மெய் - கட்டமைந்த வில்லும் ஆடையும் திருமேனியும், மாதங்கம் ஆம் ஆயின் - மாதங்கமாகுமானால், ஆராயுங்கால் - ஆராயுமிடத்து, எடுப்பது ஐயம் அன்றோ - அவர் தாம் யாசிப்பது பிச்சையல்லவா, அம்மானை—; அன்னம் அறியார் எடுப்பது - அன்னம் கண்டு அறியாதவர் எடுப்பதற்கு, ஐயமோ - சந்தேகமோ, அம்மானை—.

மூன்று மங்கையர் அம்மானை யாடும்போது பிரபந்தத் தலைவனது தன்மையை வார்த்தையாடுவது அம்மானை என்னும் உறுப்பின் இலக்கணமாம்.

அன்னமறியா ரென்பதற்கு, சோறாகிய அன்னத்தை அறியாதவரென்றும், பிரமனாகிய அன்னத்தினா லறியப்படாதவ

[illegible] கொள்க. வார் - நீட்சியுமாம். நாராயணன் - நீரை [illegible]கக் கொண்டவன்; இதற்கு இன்னும் பல பொரு [illegible]. மாதங்கமென்றதை மா + தங்கம், மாதங்கம், மாது + [illegible] எனப் பிரித்துப் பொருள் கொள்க. பொன்மலை - மேருமலை. மாதங்கம் - யானையை உணர்த்தும் வடசொல்; மதங்க முனிவரிடத்தினின்று ஆதியிலுண்டானதென்று காரணப்பொருள்படும். இச்செய்யுள் வஞ்சப் புகழ்ச்சி அணியின் பாற்படும், கருணையாற் செய்ததாகலின்.

இது நான்கு அடிகளால் தனித்துவந்து ஈற்றடி எண்சீராய் [illegible] ஏனையடிகள் அளவடிகளாய் நின்ற கலித்தாழிசை. (கக)

பாங்கி தலைவியை வினுதல்

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

மானென்பார் கலையென் பார்கைம்
　　மலையென்பார் வழியே தென்பா
ரேனென்பா ரிலையென் பார்யா
　　னேந்துமாந் தழைநன் றென்பா
ரூனென்பார் நிறையுந் தாரா
　　ருறையுந்தென் னருணை மானே
கானென்பார் குழலை வேந்தர்
　　கருத்தென்னோ கருதுங் காலே. கஉ

[illegible]லும்பு - தசைபொருந்திய எலும்பும், ஆர் - ஆத்திப் [illegible], நிறையும்-நிறைந்திருக்கும், தாரார்-மாலையையுடைய *சிவ [illegible], உறையும் - வீற்றிருக்கும், தென் - அழகிய, அருணை- [illegible]பதியில் வசிக்கின்ற; மானே - மான்போன்ற [illegible]யே! வேந்தர் - அரசராகிய தலைவர், மான் என்பார் -

மான் என்று கூறுவார், கலை என்பார் - கலைமான் என்று கூறுவார், கைமலை என்பார் - யானை என்று கூறுவார், வழி ஏது என்பார் - செல்லும் வழி யாது என்று கேட்பார், என் என்பாரிலை என்பார் - எதற்காக என்று கேட்பவர் இல்லை என்று கூறுவார், யான் - நான், ஏந்தும்-ஏந்தியுள்ள, மாதழை - மாவினது தழை, நன்று என்பார் - நல்லது என்று கூறுவார், குழலை - உனது கூந்தலை, கான் என்பார் - காடு என்று கூறுவார், கருதுங்கால் - ஆராயுமிடத்து, கருத்து என்னோ - இவர் எண்ணம் யாதோ?

இது தலைவியும் பாங்கியு முடனிருந்துழி, தலைவன் தழை கொண்டு வந்து நின்று, மான் முதலியன வந்தனவோ வென்று வினவிய தறிந்த தோழி, இத்தலைவர் பலவிதமாகக் கூறலால் இவரெண்ணம் யாதோவெனத் தலைவியை வினவியதாகக் கூறியதென்க.

கலை - ஒருவகை மான். கைமலை - கையையுடைய மலை, எனவே, யானையை யுணர்த்திற்று. மலை - உவமையாகு பெயர். பருமை - வலிமை, அருவிகளால் உவமம். தழை - மலர்களை யிடையிட்டுத் தளிர்களாற் செய்த உடை விசேடம். இங்ஙனம் தொடுத்த தழையை ஆடையாக உடுத்திக்கொள்ளுதல் குறிஞ்சி நிலத்து மகளிரியல்பு. கானல் - சோலை; கான் எனக் கடைக் குறையாயிற்று என்றுமாம். கான் - வாசனையுமாம். பதுமினி கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டென்ப. 'எவன்' என்னும் வினாவினைக் குறிப்புமுற்று இடைக்குறைந்து 'என்' என்று ஆகி நீட்டல் விகாரத்தால் 'ஏன்' என நின்றது.

இது, முதற்சீர் தேமாங்காய்ச் சீரும், இரண்டும் ஐந்தும் புளிமாச்சீரும், மூன்றும் ஆறும் தேமாச்சீரும், நான்காஞ்சீர் பெரும்பாலும் புளிமாங்காய்ச்சீரும் பெற்றுவந்த அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம் (கஉ)

புயவகுப்பு

ஆசிரியவண்ணவிருத்தம்

கருணைமுக மண்டலத் தொளிர்மகர குண்டலக்
கலன்மலிக வின்குழைக் குறவாயிசைந்தன
களபமகில் குங்குமத் தளறுகுடி கொண்டுகட்
டியபுழுக ணைந்துமெய்ப் பனிநீர்துளைந்தன
கலைமதிம ழுங்கிநத் தினமிருள டைந்துமுத்
தொளிகருக வெண்சுதைத் திருநீறணிந்தன
கனலிசைய ரிந்துகட் பரிதியை முனிந்துதக்
கனைமுடிக டிந்துமைத் தலையேவழங்கின
விரணியனு ரங்கிழித் தளவறும கங்கொழித்
தெழுநரம டங்கலைத் தடமார்பிடந்தன
விமயமட மங்கைபொற் புளகவிரு கொங்கையிற்
சுவடுபட வின்பமுற் றிதிலேகுழைந்தன
விரவிகிர ணங்கொழித் ததிசயமு டன்கிளைத்
தெழுபவள வன்பொருப் பெனவேவளர்ந்தன
விதழியர விந்தமுற் பலமகிழ்செ ருந்திகட்
குரவலரி சண்பகத் தொடையாணிறைந்தன
தரியலர்பு ரங்கெடச் சுரர்நரர்ப யங்கெடத்
தமனியநெ டுஞ்சிலைச் சிலைநாணெறிந்தன
தனுவலத நஞ்செயற் கமர்பொருச ரந்தரச்
சரதமென வந்துமற் பொருபோர்புரிந்தன
சலசமலர் மண்டபச் சதுமுகவ யன்றிருத்
தலைபுடனி லங்குமுத் தலைவேலுவந்தன
தடவிகட கும்பமத் தகதவள தந்தநற்
றறுகண்மத குஞ்சரத் துரிபோர்வைகொண்டன

வருணகிர ணங்களிற் பலமணிநெ ருங்கிநச்
சரவமிளிர் கங்கணப் பணியான்மலிந்தன
வனவரத மம்பலத் தினிடமி டுங்தொழிற்
கபிநயவி தங்கள்பெற் றழகோடிருந்தன
வருமறைதெ ரிந்தசொற் புகலியிறை செந்தமிழ்க்
கரசினொடு சுந்தரப் பெருமாள்புகழ்ந்தன
வரிபிரமர் தங்களுக் கரியபத பங்கயத்
தருணையதி ருங்கழற் பெருமாள்புயங்களே.

கருணைமுகம் மண்டலத்து - கிருபை தங்கிய முகவட்டத்தில், ஒளிர் - விளங்குகின்ற, மகரகுண்டலம் கலன் - சுறாமீன் போன்ற வடிவத்தினையுடைய குண்டலமாகிய ஆபரணம், மலி கவின் - நிறைந்த அழகினைச் செய்கின்ற, குழைக்கு - காதுக்கு, உறவாய் இசைந்தன - சம்பந்தமாய்ப் பொருந்தி யிருந்தன; களபம் - கலவைச் சாந்தையும், அகில் குங்குமத்து அளறு - அகிற் குழம்பையும் குங்குமக் குழம்பையும், குடிகொண்டு - அணிந்து, தட்டிய புழுகு அணைந்து - தட்டப்பட்ட புனுகையும் அதன்மே லணிந்து, மெய் - தனது வடிவம், பனிநீர் துளைந்தன - பனிநீரில் முழுகப்பெற்றன; கலைமதி மழுங்கி - கலைகளையுடைய சந்திரன் ஒளி குறைந்து, நத்து இனம் இருள் அடைந்து - சங்கினம் கருநிறமடைந்து, முத்து ஒளி கருக - முத்துக்களின் பிரகாசம் குறைய, வெண்சுதை திருநீறு அணிந்தன - வெண்ணிறம் பொருந்திய பொடியாகிய திருநீற்றை யணிந்துள்ளன; கனலி கை அரிந்து - அக்கினி தேவனது கையை யரிந்து, கண் பரிதியை முனிந்து - கண்ணாகிய சூரியனைக் கோபித்து, தக்கனை முடிதடிந்து - தக்கனது தலையை வெட்டி, மை தலை வழங்கின - ஆட்டின் தலையைக் கொடுத்தன:

இரணியன் உரம் கிழித்து - இரணியன் என்னும் அசுரனது மார்பைப் பிளந்து, அளவு அறு மதம் கொழித்து எழு - வரம்பு அற்ற செருக்கினால் செழித்தெழுந்த, நரமடங்கலை - திருமாலாகிய நரசிங்கத்தை, தடமார்பு இடந்தன - பெரிய மார்பைப் பிளந்தன; இமயம் மடம் மங்கை - இமாசல மன்னனது புத்திரியாகிய மடப்பத்தினை யுடைய உமாதேவியின், பொன்புளகம் இரு கொங்கையின் - அழகிய விம்மிதமுற்ற இரண்டு தனங்களின், சுவடுபட - சுவடு உண்டாகும்படி, இன்பம் உற்றதில் குழைந்தன - இன்ப மடைந்ததனால் நெகிழ்ந்து காட்டின; இரவி கிரணம் கொழித்து - சூரியனைப் போலப் பிரகாசம் வீசி, அதிசயமுடன் கிளைத்து எழு - ஆச்சரியத்தோடு கவடுவிட்டுயர்ந்த, வன்பவளம் பொருப்பு என - வலிய பவளமலையென்று சொல்லும்படி, வளர்ந்தன - வளர்ச்சி யடைந்தன; இதழி - கொன்றையும், அரவிந்தம் - தாமரையும், உற்பலம் - நீலோற்பலமும், மகிழ் - மகிழும், செருந்தி - செருந்தியும், குரவு - குராவும், அலரி - அலரியும், சண்பகம் - சண்பகமும் ஆகிய இவைகளின், கள்தொடையால் நிறைந்தன - தேன் பொருந்திய மலர்களாற் றொடுக்கப்பட்ட மாலையால் நிறையப் பெற்றன:

தரியலர் புரம் கெட - பகைவர்களுடைய முப்புரங்களும் அழியும்படி, சுரர்நரர் பயம்கெட - தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் அச்சம் ஒழியும்படி, தமனியம் நெடுசிலை - பொன்மயமாகிய பெரிய மேருமலையை, சிலைநாண் எறிந்தன - வில்லாகக் கொண்டு நாணொலி செய்தன; தனுவல தநஞ்செயற்கு - வில் வித்தையில் வல்ல அருச்சுனனுக்கு, அமர்பொரு சரம்தர - போர் செய்கின்ற பாசுபதாஸ்திரந் தருதற்கு, சரதம்என வந்து - உண்மையாக வந்து, பொரு மல்போர் புரிந்தன - ஒருவர்க்கொருவர் மோதுகின்ற மல்ல யுத்தத்தைச் செய்தன; சலசம்

மலர் மண்டபம் - தாமரை மலராகிய மண்டபத்தில் வீற்றிருக்கின்ற, சதுமுகம் அயன் - நான்கு முகங்களையுடைய பிரமனது, திருதலையுடன் இலங்கு - அழகிய தலையோடு விளங்குகின்ற, முத்தலைவேல் உவந்தன - மூன்று தலையினையுடைய சூலத்தை விரும்பின; தட விகடம் கும்பம் மத்தகம் - பெரிய அழகிய குடம் போன்ற மத்தகத்தையும், தவளம் நல்தந்தம் - வெண்மையான நல்ல தந்தத்தையும், தறுகண் - அஞ்சாமையையும், மதம் குஞ்சரத்து - மதத்தினையும் உடைய கயமுகாசுரனது, உரி போர்வை கொண்டன - தோலாகிய போர்வையைத் தரித்துக் கொண்டன:

வருணம் கிரணங்களின் - செந்நிறம் பொருந்திய ஒளியினையுடைய, பலமணி நெருங்கி மிளிர் - பல மாணிக்கங்கள் நெருங்கி விளங்குகின்ற, நச்சு அரவம் - விடத்தையுடைய பாம்புகளாகிய, கங்கணம் பணியால் மலிந்தன - கங்கண ஆபரணத்தால் நிறைந்துள்ளன; அனவரதம் - எப்பொழுதும், அம்பலத்தினில் நடம்இடும் தொழிற்கு - சபையின்கண் நடனஞ் செய்கின்ற தொழிலுக்கு, அபிநயம் விதங்கள் பெற்று - கூத்து விகற்பங்களைப் பெற்று, அழகோடு இருந்தன - அழகுடனேயிருக்கப்பெற்றன; அருமறை தெரிந்த - அரிய வேதங்களையுணர்ந்த, சொல்புகலி இறை - புகழினையுடைய திருஞான சம்பந்தர், செம்தமிழ்க்கு அரசு - திருநாவுக்கரசருடன், சுந்தரப் பெருமாள் - சுந்தரமூர்த்திகளால், புகழ்ந்தன - புகழப்பெற்றன; (அவை யாவை யென்றால்) அரிபிரமர் தங்களுக்கு - திருமால் பிரமன் என்னு மிருவர்களுக்கு, அரிய - காணுதற்கரிய, பதம் பங்கயத்து - திருவடித் தாமரைகளையுடைய, அருணை அதிரும் கழல் பெருமாள் புயங்கள் - அருணகிரிப் பதியிலுள்ள அதிருங்கழற் பெருமாள் என்னுந் திருநாமத்தையுடைய சிவபெருமானது திருத்தோள்களாகும்.

...பரந்த தலைவனது தோள்களைப் பலபடியாக வருணித்து... முதல் புய வகுப்பாம்.

குண்டலக்கலன் - குண்டலக் கலனாகிய குழை யெனினு மாம். சிவபெருமான் திருவெண்ணீ றணிந்தது :—சர்வ சங்கார காலத்தில் பிரமனாதியோரை நுதல்விழியங்கியா னீறாக்கி யணிந் தனர். இதனைக் **கந்தபுராணம்** ததிசீ யுத்தரப் படலத்தா லுணர்க. திருவெண்ணீற்றின் ஒளியால் சந்திர னொளி மழுங்கி, சங்கு இருளடைந்து, முத்துக் கருகிற்று என்றதனால் மிக்க தாவள்யமானதென்பது கருத்து. அக்கினிதேவனது கையை வெட்டியதும், சூரியனைக் கோபித்துப் பல்லைத் தகர்த்ததும், தக்கனுடைய தலையை வெட்டி ஆட்டுத் தலை வழங்கியதும், **கந்தபுராணம்** தட்ச யாக சங்கார படலத்தா லுணர்க.

இரணியன் - பொன் னிறமானவன். இரணியம் - பொன். செழித்தல் - மேம்படல். தட - பெருமை; உரிச்சொல் : அது "தடவுங் கயவும் நளியும் பெருமை" (தொல்-சொல்-உரி. உஉ) என்றதனா லுணர்க. நரமடங்கல் - உடல் மனித வடிவும் தலை சிங்க வடிவும் உள்ளது. மடப்பம் - இளமைக் குணம். புளகம் - பெரு மகிழ்ச்சியுமாம்; (**திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்** ௬௦-௪௫.) சுவடு-வடுப்படல். தரியலர்-பகைவர்; அவர்-தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்துன்மாலி என்னும் மூவர். சுரம்-அமுது; அதனை யுண்டவர் சுரர். சலசம்-சலத்தில் தோன்றுவது. முத்தலை - மூன்று என்பதன் ஈறு கெட்டு முதல் குறுகி னகரம் வந்தமெய்யாகத் திரிந்தது. உரி-தொழிலாகுபெயர். போர்வை - போர்க்கப்படுவது. போர் - பகுதி; ஐ செயப்படுபொருள் விகுதி, வ் எழுத்துப்பேறு. நஞ்சு என்பது நச்சென வலித்தலாயிற்று.

வருணம் - நிறம்; ஈண்டு செந்நிறத்தை யுணர்த்திற்று. கங் கணம் - கைவளை. புகலி - சீகாழியின் பன்னிரண்டு நாமங்க ளுள் ஒன்று; இந்திரன் சூரபதுமனுக்குப் பயந்து சரணடைந்த

காரணம் பற்றி வந்தது. இறைவன் என்பது இறை என நின்றது; இறு பகுதி, ஐ வினைமுதற்பொருள் விகுதியுமாம்; எப்பொருளிலுந் தங்குதல் பற்றிக் கடவுளை இறை யென்பர்; இறுத்தல் - தங்குதல்; அது ஈண்டு திருநாவரசந்தப் பெருமானை யுணர்த்திற்று. அரசு என்பது சொல்லால் அஃறிணையும் பொருளால் உயர்திணையும் பெற்று வந்தது. பெருமாள் - பெருமான், பெருமை யுடையவன்; இதில், பெருமை யென்ற பண்புப் பகுதி யீற்று ஐகாரம் மாத்திரங் கெட்டு, பெரும் என நின்றது; 'ஆன்' என்ற ஆண்பால் விகுதி 'ஆள்' என ஈறு திரிந்தது; 'ஆள்' என்ற பெண்பால் விகுதியே சிறுபான்மை ஆண்பாலுக்கு வந்ததெனினுமாம்: அன்றிப் பெருமையை யாள்பவன் எனக் கொண்டால் ஆள் என்ற வினைப்பகுதி கருத்தாப்பொருள் விகுதி புணர்ந்து கெட்டதென வேண்டும். திருநாவுக்கரசர் செந்தமிழிலேயே பாடிய காரணம்பற்றிச் செந்தமிழ்க் கரசென்றார். களபம் - கலவைச் சாந்து, பலவகை வாசனைப் பண்டங்களுங் கலந்த சந்தனம். புழுகு - புனுகு; கஸ்தூரியுமாம். தமனியம் - தபநீயம் என்னும் வடசொல்லின் திரிபு; நெருப்பிற் சுடப்பட்டு விளங்குவது என்று பொருள்.

இது ஒன்று மூன்று ஐந்து கருவிளங்காய்ச் சீர்களும், இரண்டு நான்கு ஆறு கூவிளச் சீர்களும், ஏழு புளிமாச் சீரும், எட்டு கருவிளச் சீரும் வந்தது காலடியாகவும், அது நான்கு பெற்றது ஓர் அடியாகவும் வந்த கழிநெடிலடி நான்கு கொண்ட முப்பா னிருசீ ராசிரிய வண்ண விருத்தம். 'தனதனன தந்தன தனதன்ன தந்தன தனதனன தந்தன தனனு தனந்தன' என்பது சந்தக் குழிப்பாம். குற்றெழுத்து மிக்குப் பயிலுதலால், இது குறுஞ்சீர் வண்ணமாம்; என்னை? "குறுஞ்சீர் வண்ணங் குற்றெழுத்துப் பயிலும்" (தொல்காப்பியம்-செய்யுளியல்-சூத்திரம்-உஉக) என்றாராகலின். (கரு)

தலைவனை வேண்டல்

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

புயந்தழுவுங் கண்ணியுஞ்செவ் விதழி யேமால்
பூண்டகயற் கண்ணியுஞ்செவ் விதழி யேமால்
வியந்துசொலி னன்னதும்பொன் னிறமே யெங்கண்
மின்னிறமும் பொன்னிறமே புயம்பெ றாம
லயர்ந்திவள்வா டத்தகுமோ வருட்கண் பாரீ
ரருணகிரிப் பெரியீரே யமல ரேநல்
வயந்தவிழா வழகரே நினைக்க முத்தி
வரந்தருவா ரேமலைமேன் மருந்த னாரே. கச

அருணகிரி பெரியீரே - அருணகிரிப் பதியிலுள்ள தலைவரே! அமலரே - மலங்களில்லாதவரே! நல் - நல்ல, வயந்த விழா அழகரே - வசந்த விழா அழகர் என்னும் பெயரை யுடையவரே! நினைக்க முத்தி வரம் தருவாரே - சிந்திக்க வீடு பேறாகிய வரத்தைக் கொடுக்கின்றவரே! மலை மேல் மருந்து அனாரே - மலையின் மேலுள்ள சாவா அமிழ்தத்தை ஒத்தவரே! புயம் - உம்முடைய திருத்தோள்களில், தழுவும் - தழுவப் பெற்ற, கண்ணியும் - மாலையும், செம் இதழியே - செவ்விய கொன்றைப் பூ மாலையே யாகும்; மால் பூண்ட - மயக்கங் கொண்ட, கயல் கண்ணி - மீன் போற் பிறழுகின்ற கண்களை யுடைய தலைவியும், செம் இதழியே - செம்மையாகிய இதழினை யுடையாளாகும்; மால் - பெருமையை, வியந்து சொலின் - புகழ்ந்து சொன்னால், அன்னதும் - அத் தன்மை யுடையதாகிய கொன்றைப் பூவும், பொன் நிறமே - பொன்னின் நிறமாகும், எங்கள் - எங்களுடைய, மின் நிறமும் - மின்னற் கொடி போன்ற தலைவியின் நிறமும், பொன் நிறமே - பொன் போன்ற பசலை நிறமே யாகும்; புயம் பெறாமல் - (ஆத

லால்) உம்முடைய தோள்களைச் சேராமல், அயர்ந்து - தளர்ந்து, இவள் - இத் தலைவியானவள், வாடத் தகுமோ - வருந்தத் தகுமோ? அருள் கண் பாரீர் - கிருபா நோக்கஞ் செய்வீர்.

பெரியீரே, அமலரே, அழகரே, தருவாரே, மருந்தனரே என்பவை விளி. தோழி தலைவனை நோக்கித் தலைவியை மாலைக்கு உவமை கூறி யணைய வேண்டல். மலங்கள் - ஆணவம், மாயை, கன்மம் என்பன. வயந்த விழா அழகர் - வசந்தோற்சவத்தில் மிக்க அழகுடையராகத் திருக்கோலங் கொண்டிருக்கும் காரணம் பற்றிக் கூறப்பட்டது. அனர் - தொகுத்தல். ஏகாரம் நான்கும் தேற்றம். ஓகாரம் எதிர்மறை. இதழ் - உதடு. காம மயக்கத்தால் பசலை பூத்திருத்தலின் பொன்னிற மென்றார். மின் - உவமையாகுபெயர். மின்னற் கொடி இடைக்கு உவமம், நுண்மைக்கும் ஒளிக்கும்.

இது, ஒன்று இரண்டு ஐந்து ஆறு காய்ச் சீர்களும், மூன்று ஏழு புளிமாச் சீர்களும், நான்கு எட்டு தேமாச் சீர்களும் பெற்று இடைமடக்காய் வந்த எண்சீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம். (கசு)

இரங்கல்

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

மலைமேன் மருந்த ரருணேச ரன்று
வலைவீ சிநின்ற வலையே
யலைமே னிறைந்து வருமீ னருந்தி
யருகே யிடங்கொள் குருகே
முலைமேன் முயங்கு தலைநா ளிலன்பர்
மொழிசூண் மறந்த பிழையோ
தலைமேன் வரைந்த படியோ விருந்து
தமியேன் வருந்து தகவே. கரு

மலை மேல் மருந்தர் - மலையினிடத்துள்ள அமிழ்தத்தை யொத்தவராகிய, அருணேசர் - அருணசலேசுரர், அன்று வலை வீசி நின்ற அலையே - அந்நாளில் வலையை வீசி நின்ற கடலே! அலை மேல் நிறைந்து வரும் மீன் அருந்தி - அலைகளினிடத்துக் கூட்டமாகப் பெருகி வருகின்ற மீன்களைப் புசித்து, அருகு இடம் கொள் குருகே - அக்கடலின் சமீபத்தில் வசிக்கின்ற பறவைகளே! தமியேன் இருந்து வருந்து தகவு - யாதொரு துணையுமில்லாத யான் தனியே யிருந்து வருந்துகின்ற முறைமையானது, முலைமேல் முயங்கு தலைநாளில் - தனங்களி னிடத்துக் கூடிய முதல் நாளில், அன்பர் மொழிசூள் மறந்த பிழையோ- தலைவர் கூறிய சபதத்தை மறந்துபோன குற்றமோ, (அன்றி) தலைமேல் வரைந்தபடியோ-தலையின்மேல் எழுதியபடியோ அறியேன்.

இரங்கல் நெய்தற்றிணைக் குரியதாதலால் தலைவி, பிரிந்த தலைவன் வாராமை கண்டு, ஆண்டுள்ள கடலையும் கடற் பறவைகளையும் விளித்து வருந்திக் கூறியது. என்னை? "ஞாயிறு திங்களறிவே நாணே, கடலேகானல் விலங்கே மரனே, புலம்புறு பொழுதே புள்ளே நெஞ்சே யவையல பிறவுநுதலிய நெறியாற், சொல்லுந போலவுங் கேட்குந போலவுஞ், சொல்லி யாங்கமையு மென்மனார் புலவர்." என்னுஞ் (**தொல்காப்பியம்-செய்யுளியல்-உ0க**) சூத்திரத்தான் அஃறிணைப் பொருள்கள் கேட்பனபோலக் கூறப்பட்டதென்க.

இரங்கல் நெய்தற்றிணைக் குரித்தென்பதை; "போக்கெல்லாம் பாலை புணர்த னறுங்குறிஞ்சி, யாக்கஞ் சேரூட லணி மருத - நோக்குங்கா, லில்லிருக்கை முல்லை யிரங்க னறுநெய்தல், சொல்லிருக்கு மைம்பாற் றுறைக்கு" (**தனிச்செய்யுள்**) என்றதனா னுணர்க.

மேல் - ஏழனுருபுகள். அலை - சினையாகு பெயர். ஓகாரங்கள் ஐயப்பொருளன. அலையே, குருகே என்பன விளி. அருகே

என்றதில் ஏ தேற்றம். தகவே - ஏ அசைநிலை. இடம் கொள் - தனக்குரிய இடமாகக் கொண்ட. சபதமாவது நின்னைப் பிரியேன் என்றுரைத்தது.

வாரியில் வலைவீசிய வரலாறு:—முன்னொரு காலத்தில் உமைக்குச் சிவபெருமான் வேதங்களைக் கூறுங்கால் அவள் பராமுகமாகக் கேட்டாளாக அவளை வலைஞர் மகளாகென்று சபித்தார். அதுகேட்ட விநாயகரும் முருகவேளும் வெகுண்டு வேதங்களையும் சிவஞான போதத்தையும் வாரிக் கடலிலெறிந்தனர். உடனே, அவ்விருவர்களையும் செவ்வியறியாமல் நந்தி உள்விட்டமைக்குப் பரமன் சினந்து நந்தியைக் கடலில் மீனாகென்று சபித்ததுடன் முருகவேளை மூங்கையாகென்றும் சபித்தார். பின்னர் அவ்வாறு பிறந்த உமையை மணஞ்செய்தல் காரணமாகக் கடலில் பிறந்திருந்த நந்தி தேவராகிய மீனை வலைவீசிப் பிடித்து உமையை மணஞ் செய்தனர். இதன் விரிவைத் **திருவிளையாடற் புராணம்** வலைவீசிய படலத்தா னுணர்க.

இது புளிமாச் சீர்களான் வந்த எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம். (கரு)

தலைவியைப் புகழ்தல்

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

தகன முறுவலின் மதனை முனிபவர்
சடையி லணிபல தலையினா
ரகன லடியரொ டுறையு மிறையவ
ரருணை வளநக ரரிவையார்
நிகரி றனதட வமுத நிறைகுட
நிலவு முகபடம் விலகினாற்
ககன வமரரு நரரு மிகல்கொடு
கலக மிடுவரிவ் வுலகிலே. கசு

[illegible]ம் முறுவலின் - தகனச் சிரிப்பினால் மதனை - மன்மதனை, முனிபவர் - கோபிப்பவரும், சடையில் - சடையி[illegible] [illegible], அணி - தரித்த, பல தலையினர் - பல தலைகளை யுடையவரும், அகன் நல் அடியரொடு - நல்ல மனசையுடைய அடியார்களோடு, உறையும் - வீற்றிருக்கின்ற, இறையவர் - கடவுளருமாகிய சிவபெருமான் எழுந்தருளி யிருக்கின்ற, அருணை வளம் நகர் - வளப்பம் பொருந்திய அருணைப் பதியிலுள்ள, அரிவையார் - தலைவியரது, நிகர்இல் - ஒப்பற்ற, தனம் - முலைகளாகிய, [illegible]ட - பெரிய, அமுதம் நிறைகுடம் முகம் - அமுதம் நிறைந்த குடங்களின்மேல், நிலவு - விளங்குகின்ற, படம் - துகில், விலகினால் - சிறிது நீங்கினால், ககனம் அமரரும் - விண்ணுலகத்திலுள்ள தேவர்களும், நரரும் - மனிதர்களும், இகல்கொடு - பகைமேற் கொண்டு, இ உலகில் - இந்த நிலவுலகத்தில், கலகம் இடுவர் - சண்டை செய்வார்கள்.

மன்மதனைச் சிரித்தெரித்த வரலாற்றினை, "அனங்கனுடல் பொடியாய் வீழ்ந்து மங்க நகத்தான் வல்ல மருந்து தன்னை" என்னும் திருத்தாண்டகத்தா னுணர்க. அல்லினை யுடைய மன்மதன் எனக் கொள்வாரும் உளர். தகனமுறை எனப் பாடங் கொள்ளலுமாம்.

இது தலைவியின் முலையெழினலங் கண்டு தலைவன் புகழ்ந்து கூறியது. அணி அழகுமாம். பிரமனாதியோர் தலைகளைத் தலையிலணிந்ததை "தலைமாலை தலைக்கணிந்து" என்னுந் திருநாவுக்கரையர் திருவாக்கா னுணர்க. அகன் - மொழியிறுதிப் போலி. அரிவையார் - உவப்பினால் ஒருமைப்பால் பன்மைப்பாலாயிற்று. சிவபிரானுக்குக் கூறியது உயர்வுபற்றி என்க. இவ்வாறே வருமிடந்தோறுங் கொள்க. அமரர் - மரித்தலில்லாதவர். அமுதநிறை குடமானதால் எங்கட்கே யுரியதென்று அமரர்கள் இவ்வுலகில் கலகமிடுவ ரென்க. ஏகாரம் - ஈற்றசை.

இது, முதல் மூன்று ஐந்து சீர்கள் புளிமாச்சீரும் மற்றைய கருவிளச்சீரும் பெற்றுவந்த எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம். தனன தனதன தனன தனதன தனன தனதன தனதனு என்பது சந்தக் குழிப்பு. (கசு)

இதுவுமது

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

உலககண் டகனுய் வருசலந் தரனு
 ருடறடிந் திடுவார் கடல்விடங் கொளுவார்
குலவுசங் கரனு ரருணையங் கிரிசூழ்
 குளிர்புனந் தனிலே கிளிகடிந் திடுவார்
மலர்முகஞ் சசியே வடிவமுஞ் சசியே
 மகரமென் குழையே வருணமென் குழையே
முலையுமந் தரமே யிடையுமந் தரமே
 மொழியுமா சுகமே விழியுமா சுகமே. கஎ

உலகம் - உலகத்திலுள்ளவர்களுக்கு, கண்டகன் ஆய்வரு - துட்டனுகி வந்த, சலந்தரன் - சலந்தராசுரனுடைய, ஆர் - பிறரால் பிளத்தற்கரிய, உடல் - உடலை, தடிந்திடுவார் - பிளந்தவரும், கடல் - திருப்பாற்கடலிற் ரேன்றிய, விடம் - விடத்தை, கொளுவார் - பானஞ்செய்தருளியவரும் ஆகிய, குலவு - வீற்றிருக்கின்ற, சங்கரனுர் - சிவபெருமானுர், அருணை அம்கிரி - அருணைப் பதியைச் சார்ந்த அழகிய மலையிடத்து, சூழ் - சூழ்ந்துள்ள, குளிர்புனம் தனில் - குளிர்ச்சி பொருந்திய தினைப் புனத்தில், கிளி கடிந்திடுவார் - கிளி யோட்டுகின்ற தலைவியரது, மலர்முகம் - தாமரை மலர்போன்ற முகம், சசியே - சந்திரனே, வடிவமும்-உருவழகும், சசியே-இந்திராணியே, (காதில் அணிந்

திருப்பமுயர்) மகரம் மென்குழை - மகரமீன் வடிவான மிருது வாயிய குண்டலமே, வருணம்-நிறமும், மெல்குழையே - மெல்லிய தளிரே, முலையும் - தனங்களும், மந்தரமே - மந்தரகிரியே, இடையும் - இடையும், அந்தரமே - ஆகாயமே, மொழியும் - சொற்களும், மாசுகமே-பெருமை பொருந்திய கிளிமொழியே. விழியும் - கண்களும், ஆசுகமே - அம்பே யாகும்.

இது தலைவன் தலைமகளது அவயவ முதலியவற்றைப் புனைந்து சொல்லியது. கண்டகன் - முள்போன்றவன் எனினுமாம். கண்டகம் - முள். வரு சலந்தரன் - வினைத்தொகை. சலந்தரன் - நீரில் தோன்றியவன் என்று பொருள். சலந்தரன் யாவரையும் வென்று கைலாயத்தை நோக்கிச் செல்லுகையில் சிவபிரான் விருத்த பிராமண வடிவங்கொண்டு அவனெதிரே வந்து பூமியில் சக்கரம்போற் சுற்றி அதனை எடுக்க வல்லையோவென, அவன் அவ்வாறே பெயர்த்துத் தலையில் வைக்க அது அவனைப் பிளந்தது என்றதைக் குறிக்க உடல் தடிந்திடுவா ரென்றார். இவ்வரலாற்றைக் காஞ்சிப்புராணம் சலந்தரீசப் படலத்தா னுணர்க.

கொளுவார் - கொள்ளுவார்; தொகுத்தல். வர்ணம் என்னும் வடசொல் வருணமென் றாயிற்று. இச்செய்யுள் மடக்கு என்னும் சொல்லணியாதல் காண்க. தடிந்திடுவார், கடிந்திடுவார் என்பவற்றில் 'இடு' துணைவினை. அருணையங்கிரி என்பதில் அம் சாரியையுமாம். உலகம் என்பது தமிழ் மொழியேயாமென்பர் ஆசிரியர் நச்சினார்க்கினியர்; லோகமென்ற வடசொல்லின் திரிபென்பாரு முளர்.

இது, ஒன்று மூன்று ஐந்து ஏழுசீர்கள் கருவிளச்சீரும் ஏனைய புளிமாச்சீரும் பெற்றுவந்த எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம். (கஎ)

இரங்கல்

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

சுகமே சுகமே யிரும்வந் தடுபுனஞ்
சூழ்கின் றவுமைத் தினமித் தினையு
புகமே யவிடா தகடிந் திடுமெம்
பொல்லா மையுமின் றுபொறுத் திடுமின்
மகமே ருநெடுஞ் சிலையா ளரணு
மலையா ரருணு புரிமால் வரைமே
லகமே செலுமா றுதுணிந் திதண்விட்
டகறுன் பமுமன் பர்வரிற் சொலுமே. கஅ

சுகமே - கிளிகளே !, சுகமே இரும் - சுகமாக இருங்கள், புனம் - தினைக்கொல்லையில், வந்து சூழ்கின்ற - வந்தடைகின்ற, உமை - உங்களை, தினம் - எந்நாளும், இ தினையுள் - இந்தத் தினைக்கதிரினிடத்து, புக - புகுந்து, மேயவிடாது - மேய விடாமல், கடிந்திடும் - ஓட்டுகின்ற, எம் - எங்களுடைய, பொல்லாமையும் - தீங்கையும், இன்று - இந்நாள், பொறுத்திடுமின் - பொறுத்துக் கொள்ளுங்கள், (நீங்கள்) அன்பர்வரின் - தலைவர் வந்தால், மகமேரு - மகா மேருமலையை, நெடு சிலையாளர் - நீண்ட வில்லாக உபயோகிக்கின்றவராகிய, அணுமலையார் - அண்ணுமலையாருடைய, அருணுபுரி - அருணை நகரிலுள்ள, மால் வரைமேல் - பெரிய மலையின்கண் இருக்கின்ற, அகமே - வீட்டிற்கே, செலுமாறு - போகும்படி, துணிந்து - நிச்சயித்து, இதண்விட்டு - பரணைவிட்டு, அகல் - நீங்கிய, துன்பமும் - துயரத்தையும், சொலும் - சொல்லுங்கள்.

இச்செய்யுள் தினை யறுத்தமையால் இதண்விட்டு இல்விற் கேகுந் தலைவி, பரிந்து கிளிகளைப் பார்த்துத் தலைவற்குப் பிரிவுணர்த்தக் கூறியதென்க.

[illegible] - விளி. ஏகாரம் விளிப்பொருள் தந்தது. சுகமே, [illegible] வற்றில் ஏகாரங்கள் தேற்றம். இறுதி ஏகாரம் அசை [illegible] இரும் முன்னிலைப் பன்மை வினைமுற்று. புகலவென் [illegible] புகுந்து எனச் செய்தெனெச்சமாகத் திரிக்க.

[illegible] மால் - திருமால் போலும் குவடுகள் ஓங்கிய எனவும், மூங் [illegible] எனவும், கருமை எனவும் கூறும் "வரைமேல்" வசிக் [illegible] ‘சுகமே’ எனக்கூட்டிப் பொருள்கொள்ளினு மமையும். [illegible] என்றது தோழியையும் உளப்படுத்தி. பொல்லாமை - பண்புப்பெயர்.

இது பெரும்பாலும் புளிமாச்சீரால் வந்த எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம். (கஅ)

இதுவுமது

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

சொல்லா ரணத்திற் கறிவரியார்
சோணா சலத்திற் சுகங்கடமைக்
கல்லா லெறிந்த பகைக்குவழி
காட்டா தொழிதல் கண்டாயே
கொல்லா வம்புஞ் சமர்க்களத்திற்
குனியா வில்லுங் கொண்டுநிற்கும்
புல்லா டவனே யெமக்குறுதி
புகன்று ரெங்கே யகன்றாரே. கசு

கொல்லா அம்பும் - கொலை செய்யாத பாணத்தையும், சமர் களத்தில் குனியா வில்லும் - போர்க்களத்தில் வளையாத வில்லையும், கொண்டு நிற்கும் புல் ஆடவனே - ஏந்திக்கொண்டு நிற்கின்ற புல்லினாற் செய்யப்பட்ட ஆண்மகனே! சொல் ஆர

ணத்திற்கு அறிவு அரியார் - புகழ்ந்து சொல்லுகின்ற வேதத்திற்கும் அறிதற்கரியவராகிய சிவபெருமானுரது, சோணுசலத்தில் - அருணகிரியில், சுகங்கள்தமை - கிளிகளை, கல்லால் எறிந்த பகைக்கு - கல்லினுலெறிந்தவிரோதத்தின் பொருட்டு, வழிகாட்டாது ஒழிதல் கண்டாய் - தலைவர் போன வழியைக் காட்டாமல் நீங்குதலை யறிந்தாய், (ஆதலால் நீ) எமக்கு உறுதி புகன்றூர் - எங்கட்கு உறுதி வார்த்தைகளைக் கூறிய தலைவர், எங்கு அகன்றூர் - எவ்விடத்திற்குச் சென்றூர்? (அதனைக் கூறுவாயாக).

இச்செய்யுள், தலைவி புல்லாடவனைப் பார்த்து, தலைவன் சென்ற வழியை யிரங்கிக் கேட்டல் கூறியது.

தினைப்புனத்தில் விலங்கும் பறவையும் வாராமைப் பொருட்டுப் புல்லினுற் செய்யப்பட்டு வில்லும் அம்பு மேந்தி நிற்கும் ஆண்மகன் வடிவத்தைப் புல்லாடவனே என்று விளித்தாள் என்க. சோணுசலம் - சோண + அசலம்; வடமொழிப் புணர்ச்சி; தீர்க்க சந்தி: சோணம் - சிவப்பு (நெருப்பு); அசலம் - மலை; சலித்தலில்லாதது; சலித்தல் - சஞ்சரித்தல்: செந்நிறம் பொருந்திய அக்கினிமலை யென்பது பொருள். ஏகாரங்கள் அசைநிலை. கொல்லாத, குனியாத என்னும் எதிர்மறைப் பெயரெச்சங்களின் ஈறு தொக்கது.

இது, மூன்று ஆறுசீர்கள் காய்ச்சீரும், ஏனைய மாச்சீரும் பெற்றுவந்த அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம். (௬௬)

பிரிவு விலக்கல்

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

ஆரும்வி ரும்பிய கல்விமே லாசையு மக்குள தாயிடிற்
பாருற வெண்பொரு பாவையாப் பாடிய பாவலர் போலவே

நீரும ருந்தமிழ் செப்பிடு நீர்மைய றிந்திவ ணேகுவீர்
மேரு நெடுஞ்சிலை யத்தனார் வீற்றரு ணாபுரி வெற்பரே. உ௦

மேரு நெடு சிலை அத்தனார் - மேருவாகிய நீண்டவில்லை **யேந்திய** சிவபெருமானார் வீற்றிருக்கின்ற, அருணாபுரி வெற்**பரே** - அருணைப்பதியிலுள்ள குறிஞ்சிநிலத் தலைவரே! உமக்கு - உங்கட்கு, ஆரும் - யாவர்களும், விரும்பிய - விரும்புகின்ற, கல்விமேல் - வித்தையினிடத்து, ஆசை - விருப்பம், உளதாயிடின் - உள்ளதானால், பார் உற - இவ்வுலகத்தில் பின்னும் வதியும்படி, என்பு ஒருபாவை ஆ பாடிய - எலும்பை ஒரு பெண்ணாகப் பாடியருளிய, பாவலர் - திருஞான சம்பந்தப் பெருமானைப் போல, நீரும் - நீங்களும், அருந்தமிழ் செப்பிடும் நீர்மை அறிந்து-அரிய தமிழ்ப் பாக்களைக் கூறுந்தன்மையைத் தெரிந்து கொண்டு, இவண் ஏகுவீர் - இவ்விடத்தை விட்டுநீங்குவீர்.

இது, பிரிவீராயின் என் உயிர் நீங்கும் என்று தலைவி தலைவனது ஓதற்பிரிவை விலக்கியது.

ஆர் என்பது யார் என்பதன் மரூஉ. விரும்பிய, பாடிய - செய்தவென்னும் வாய்பாட்டு இறந்தகாலப் பெயரெச்சம். உளது-குறிப்பு வினைமுற்று; தொகுத்தல் விகாரம். ஆயிடின், செப்பிடும் என்னும் எச்சங்களில் இடு துணைவினை. உற என்பது உறு என்னும் உரிச்சொல் அடியாகப் பிறந்த வினையெச்சம். போலவே - ஏகாரம் தேற்றப் பொருட்டு. வெற்பரே - விளி. ஏகுவீர் - முன்னிலைப் பன்மை வினைமுற்று. வீறு - பிறிதொன்றற்கில்லாத பெருமை. பாவை - உவம வாகுபெயர். தமிழ் செப்பிடு நீர்மை என்பதற்கு "உமது பிரிவால் யான் இறந்து என்பாவேன், என்னைப் பெண்ணுருவமாகச் செய்யுந்" தமிழ்க் கவி சொல்லுந் தன்மை என வருவித்துரைக்க. அறிந்திவணேகுவீர் என்ற குறிப்பான், விலக்கணியின்பாற் படும்.

என்பைப் பெண்ணுருவாக்கிய வரலாறு: **திருஞான** சம்

பந்தர் புராணத்தா னுணர்க. அத்தனார் - ஆர் இடைச்சொல்; உயர்த்தற் பொருளில் வந்தது.

இச்செய்யுள் கூவிளச்சீரான் வந்த அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம். (உ௦)

காலம்

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

வெற்றிமதன் *போர்க்காய வம்பிறைக்குங் காலம்
 வெங்கனலே போற்காய வம்பிறைக்குங் காலம்
சற்றுமிரு கரமென்னே சங்கணியாக் காலம்
 தலைவர்துறை மறந்தென்னே சங்கணியாக் காலம்
கற்றைநெடுஞ் சடைமுடியா ரடியார்மேன் முழுதுங்
 கருணைநாட் டம்புரியு மருணைநாட் டுறையும்
பெற்றவிளந் தென்றன்மறு கிடத்தியங்குங் காலம்
 பேதையேன் சிந்தைமறு கிடத்தியங்குங் காலம். உக

வெற்றிமதன்-வெற்றியையுடைய மன்மதன், போர்க்குஆய-யுத்தத்திற்குத் தகுந்த, அம்பு இறைக்கும் - மலர்ப்பாணங்களைத் தூவுகின்ற, காலம் - காலமும்; அம்பிறைக்கும் - அழகிய இளஞ் சந்திரனுக்கும், வெம் கனல்போல் - கொடிய நெருப்பைப் போல், காய - வருத்துதற்குரிய, காலம் - காலமும்; இரு கரமும் - இரண்டு கைகளும், சற்றும் - சிறிது நேரமும், என்னே- யாது காரணத்தினாலோ, சங்கு அணியா - வளையல்களை அணியாத, காலம் - காலமும்; தலைவர் - நாயகர், துறைமறந்து - வழிமறந்து, என் நேசம் - என்னுடைய அன்பை, கணியா - கருதாத, காலம் - காலமும்; கற்றை - தொகுதியாகிய, நெடு சடை முடியார் - நீண்ட சடைமுடியையுடைய சிவபெருமானார்,

---

* "போர்க்காயம் பிறைக்குங்காலம், வெங்கனலேபோற் காயம் பிறைக்கும் என்றும்" பாடபேதம் உண்டு.

அடியார்மேல் - தொண்டர்களிடத்து, முழுதும் - முழுமையும், கருணைநாட்டம் - கிருபா நோக்கம், புரியும் - செய்தருளுகின்ற, அருணைநாட்டு - அருணைப்பதியை யுடைய நாட்டில், உறையும் - தங்கிய, இளம் தென்றல் பெற்றம் - இளந்தென்றற் காற்று, மறுகிடத்து - வீதியின்கண், இயங்கும் - சஞ்சரிக்கின்ற, காலம்-காலமும்; பேதையேன் - பேதையாகிய யான், சிந்தை மறுகிட தியங்கும் காலம் - மனம்சுழலச் செய்வதின்னதென் றறியாது கலங்குகின்ற காலமுமாம், இது.

இப்படிப்பட்ட மாலைக்காலத்தில் யான் எங்ஙனம் தலைவனைப்பிரிந்து உயிர்வாழ்வது எனத் தலைவி வருந்திக் கூறியவாறு.

'மதன் போர்க்குரிய அம்புகளைச் சிதறுங்கால' மென்றதால் வசந்த காலம் என்பது குறிக்கப்பட்டது. மாலைக்காலத்தில் சந்திரன் பிரிந்த தலைவன் தலைவியை வருத்துங் காரணம் பற்றி "வெங்கனல் போற்காய அம்பிறைக்குங் கால"மென்றாள். தலைவன் பிரிவாற்றாமல் உடல்மெலிந்து வளையல் கழன்ற காரணத்தால், "சங்கணியாக் கால"மென்றாள். தலைவன் வாராமை பற்றி "என் நேசங் கணியாக் கால"மென்றாள். நினைத்த மாத்திரத்தில் வீடுபேறு தருந் தலமாதல்பற்றி, "சடைமுடியாரடியார்மேல் முழுதுங் கருணை நாட்டம் புரியு" மென்றாள். வசந்தகால மாதல்பற்றி "தென்றல் மறுகிடத்து இயங்குங் கால"மென்றாள். இக்காரணங்கட்குரிய காலம், தனக்கும் சிந்தை கலங்கும்படி செய்தலால் "பேதையேன் சிந்தை மறுகிடதியங்குங் காலம்" என்றாள்.

மன்மதனுக்குரிய மலரம்புகளாவன : தாமரை, மா, அசோகு, முல்லை, நீலம் ஆகிய இவற்றின் மலர்கள். வளையல் சங்கினாற் செய்யுங் காரணம்பற்றிச் சங்கென்றார். துறை என்பதற்கு இடமென்றும், களவுத் துறையென்றும் பொருள் கூறுவாருமுளர். மன்மத பாணம் எய்யும் முறையும் அதன் செய்கையும்:—

"நெஞ்சி லரவிந்த நீள்சூதங் கொங்கையினி
லஞ்சும் விழியில சோகமாம்—வஞ்சியர்தஞ்
சென்னியிலே முல்லை நிகழ்நீல மல்குலிலே
யென்னவே ளெய்யு மியல்பாம்"

"நினைக்கு மரவிந்த நீள்பசலை மாம்பூ
வனைத்துணையு நீக்கும சோகு—வனத்திலுறு
முல்லை கிடைகாட்டு மாதே முழுநீலங்
கொல்லுமத னம்பின் குணம்."

என்ற இரத்தினச் சுருக்கச் செய்யுட்களா னுணர்க.

இது மடக்கு என்னுஞ் சொல்லணி பெற்று நான்கு எட்டு சீர்கள் மாச்சீரும் ஏனைய பெரும்பாலும் காய்ச்சீரும் பெற்று வந்த எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம். (உக)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

காலிற் றுலங்கு நகத்தாலுங்
 கையிற் பொலிகூர் நகத்தாலுஞ்
சீலத் தரக்க னுரங்கொண்டீர்
 திசைமா முகனைச் சிரங்கொண்டீர்
மேலைப் புரத்தை நகைத்தெரித்தீர்
 வில்வேள் புரத்தை *விழித்தெரித்தீர்
சூலப் படையேன் மழுப்படையேன்
 சுமந்தீ ரருணை யமர்ந்தீரே. உஉ

அருணை அமர்ந்தீர் - அருணைப்பதியை விரும்பிய கடவுளே! (உம்முடைய), காலில் - பாதத்தில், துலங்கும் - விளங்குகின்ற, நகத்தாலும்-பெருவிரல் நகத்தினாலும், கையில்- கையினிடத்து, பொலி - விளங்குகின்ற, கூர் - கூர்மை பொருந்

* பகைத்தெரித்தீரெனவும் பாடபேதம்.

[illegible]ய, நகத்தாலும் - நகத்தினாலும், (முறையே) சீலத்து அரக்கன் - ஒழுக்கமில்லாமையுடைய இராவணனது, உரம் - மார்பை, கொண்டீர் - நெரித்தீர், மாதிசைமுகன் - பெருமை பொருந்திய நான்முகனது, சிரத்தை - தலையை, கொண்டீர் - கிள்ளினீர், (இவையேயன்றி) மேலை - முன்னாளில், புரத்தை - முப்புரத்தை, நகைத்து - சிரித்து, எரித்தீர் - கொளுத்தினீர், வில்வேள் - கருப்பு வில்லையுடைய மன்மதனது, புரத்தை - உடம்பை, விழித்து - அக்கினிக்கண்ணைத் திறந்து, எரித்தீர் - கொளுத்தினீர், (இவ்வாறிருக்க) சூலம்படை ஏன் - சூலாயுதம் எதற்காக, மழுபடைஏன் - மழுவாயுதம் எதற்காக, சுமந்தீர் - தரித்தீர் ?

கூர் - பண்புப்பகுதியின் ஈறுகெட்டது. பொலிகூர் என்பதற்கு - விளக்கம் மிகுந்த எனினுமாம்; பொலிவு என்பதன் ஈறுதொக்கது. கூர் - உரிச்சொல். சீலம் - இழிவு சிறப்பு; ஈண்டு ஒழுக்கமில்லாதவன் என்பது குறிப்பு. திசைமுகன் - நான்கு திக்குகளையும் நோக்கிய நான்கு முகங்களையுடையவன் என்பது பொருள். முன் இரண்டடி நிரனிறைப் பொருள்கோள், உம்மை எண்ணும்மை. **அரக்கனுரங் கொண்டது:** இராவணன் கைலையைப் பெயர்த்தெடுத்த காலை, தம்முடைய பெருவிரல் நகத்தால் ஊன்றி மலையை யழுத்த அவன் மார்பு நொறுங்கியதைக் குறித்தது. **திசைமுகன் சிரங்கொள்ளல்:** ஒரு காலத்தில் பிரமன் நானே முதற்கடவுளென்று செருக்குற்றுத் தன்னை மதியாதிருந்ததைப்பற்றிச் சிவபெருமான் வயிரவக்கடவுளை ஏவி அவனுக்குரிய ஐந்து தலைகளுள் ஒரு தலையைக் கிள்ளியதைக் குறித்தது. முகனை என்பதிலுள்ள இரண்டனுருபு சிரம் என்பதனோடு கூட்டப்பட்டது. உம்முடைய வீரச்செயல்களெல்லாம் இவ்வாறிருக்க எதற்காக † இவ்வாயுதங்

---

† சூலமும் மழுவும் வீரத்தன்மைக்கு அடையாளமாகக் கொண்டமை திருவானைக்காப்புராணம் நகரப்படலம் ௩௫-ம் கவியிற்காண்க.

கொண்டீர் என்பது கருத்து. இச்செய்யுளிற் கூறிய வரலாறுகளைக் கந்தபுராணம், காஞ்சிப்புராணம் முதலிய நூல்களாலுணர்க

இச்செய்யுள், மூன்று ஆறு சீர்கள் காய்ச்சீரும் ஏனைய மாச்சீரும் பெற்றுவந்த அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம். (உஉ)

மாலையிரத்தல்

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

அமர்ந்தரு ணைப்பதி வாழ்வீரே
யன்பர்க ளன்பினி லாழ்வீரே
சுமந்தொளிர் சூலமெ டுப்பீரே
தோளணி மாலைகொ டுப்பீரே
யிமந்தரு வெண்மதி காயாதே
யிருகணெ டும்புனல் பாயாதே
கமழ்ந்தகு ழற்கொடி வாடாதே
கங்குலு மிப்படி நீடாதே. உ௩

அருணைப்பதி - திருவருணைப்பதியை, அமர்ந்து - விரும்பி, வாழ்வீரே - வாழ்கின்றவரே! அன்பர்கள் - பத்தர்களுடைய, அன்பினில் - பத்தியில், ஆழ்வீரே-மூழ்குகின்றவரே! சுமந்து - பிரமனாதியோர் உடலை யெடுத்தேந்தி, ஒளிர் - விளங்குகின்ற, சூலம் - முத்தலைச் சூலத்தை, எடுப்பீரே - எடுக்கின்றவரே! (நீர்) தோள் அணி - புயத்தில் அணிந்த, மாலை - பூமாலையை, கொடுப்பீரேல் - கொடுப்பீரானால், இமந்தரு - குளிர்ச்சியைத் தருகின்ற, வெண்மதி - வெண்ணிறம் பொருந்திய சந்திரன், காயாது - சுடாது, இருகண் - இரண்டு கண்களினின்றும், நெடு புனல் - மிகுந்தநீர், பாயாது - சொரியாது, கமழ்ந்த குழல் -

[illegible] மணம் வீசுகின்ற கூந்தலையுடைய, கொடி - தலைவி, வாடாது - வருந்தி மெலிந்துபோகாள், கங்குலும் - இராக்காலமும், இப்படி - இவ்விதம், நீடாது - நீண்டுபோகாது.

வாழ்வீரோ, ஆழ்வீரே, எடுப்பீரே, கொடுப்பீரே என்பனவை விளிகள். விளி ஏகாரங்கள் தவிர, ஏனைய அசைநிலைகள். மாலை கொடுப்பீரேல் இவ்விதத் துன்பங்கள் உளவாகா வென்று தோழி தலைவனை நோக்கி யிரங்கிக் கொடுக்கும்படி வேண்டல்; செவிலி கூற்றுமாம். கொடி வாடாது என்றது உருவகம். மடக்கு என்னுஞ் சொல்லணி காண்க.

இச்செய்யுள், முதற்சீர் கருவிளச்சீரும், இரண்டு ஐந்து சீர்கள் கூவிளச்சீரும், மூன்று ஆறுசீர்கள் தேமாங்காய்ச்சீரும், நாலாஞ்சீர் பெரும்பாலும் விளச்சீரும் பெற்றுவந்த அறுசீர்க் கழி நெடிலாசிரிய விருத்தம். (உங)

ஒன்பதின்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

நீடாழி ஞாலம் வானொடு தீகா லுலாவுமி யாவையு
நீறாய காலமாய் விடுநாள்
கோடாழி மால்பி தாமக னூறுன கோடி வீழ்தலை
கோடீர பாரமீ துறவே
சூடாத மாலை சூடுவர் தோளோடு தோளை வீசுவர்
சோணாச லேசர்சோ பனமா
வாடாத வாட லாடுவர் பாடாத பாடல் பாடுவ
ராராத வோகைகூ றுவரே. உச

சோணசலேசுரர் - அருணசலேசுரர், ஞாலம் - பூமியும், நீடு ஆழி - பெரிய கடலும், தீ - நெருப்பும், கால் - காற்றும், உலாவும் - இவைகள் இயங்குகின்ற, வானொடு - ஆகாயத்தோடு, யாவையும் - எல்லாப் பொருள்களும், நீறு ஆய - துகளாகின்ற

காலம் ஆய்விடு - காலமாகி விடுகின்ற, நாள் - சர்வசங்கார காலத்தில்; கோடு ஆழிமால் - சங்கையும் சக்கரத்தையுமேந்திய திருமாலும், பிதாமகன் - பிரமனுமாகிய இவர்களின், நூறு ஆன கோடி - நூறாகிய கோடி, வீழ் தலை - இறந்த தலைகளை, கோடீரம்பாரம்மீது உற - சடாபாரத்தின்மேல் பொருந்தும்படி, சூடாத மாலை - பிறர் தரிக்காத மாலையாக, சூடுவர் - தரிப்பார்; தோளோடு - புயங்களோடு, தோளை - தோள்களை, வீசுவர் - வீசுவார்! சோபனம் ஆ - மங்களகரமாக, ஆடாத - வேறொருவரும் ஆடாத, ஆடல் - * பாண்டரங்க முதலிய கூத்துக்களை, ஆடுவர் - நடிப்பார்; பாடாத - ஒருவரும் பாடாத, பாடல் - சாமகானப் பாடலை, பாடுவர் - பாடுவார், ஆராத - அடங்காத, ஓகை - மகிழ்ச்சி, கூருவர் - அதிகரிப்பார்.

நிலம், நீர், நெருப்பு, காற்று, விண் ஆகிய ஐம்பூதங்களும் மற்றுள்ள இயங்கியற்பொருளும் நிலையியற்பொருளும் ஆகிய எல்லாப் பொருள்களும், அழிகின்ற சர்வசங்கார காலத்தில், அழிந்து போகின்ற திருமால் பிரமர்களுடைய தலைகளை மாலையாகக்கோத்து அணிவர்.

நீருயகாலம் - அழிந்து போகுங்காலம். நூறானகோடி என்பது, மிகுதியின் மேற்று; மிகப்பலவாகிய எண்ணிற்கு ஒன்று எடுத்துக்காட்டியவாறு; திருக்குறளில் "எழுபது கோடியுறும்" என்பதுபோல.

எண்ணிறந்த பிரமவிட்டுணுக்கள் அழிந்துள்ளாரென்பதை,

"நூறுகோடி பிரமர்க ணொங்கினார்
ஆறுகோடி நாராயண ரங்ஙனே

---

* அது தேவர்களாகிய தேரில், முன் நின்ற பிரமன் காணும்படி, பைரவ வடிவாகிய பரமசிவன் திரிபுரசங்கார காலத்தில், வெண்ணீற்றையணிந்தாடியது.

[illegible] மணிமேலண்ணி லிந்திரர்
[illegible] ருவனே.”

என்னும் ஆளுடைய வரசுகள் திருவாக்கா னுணர்க.

[illegible] மாலை என்பதற்கு, என்புமாலை எனவும் பொருள் கூறுவர். சிவபெருமான் எட்டுத்தோள்வீசி யாடுவர் என்பதை “எண்டோள்வீசி நின்ருடும் பிரான்” என்ற ஆளுடைய வரசுகள் திருவாக்கா னுணர்க. ஓகை - உவகை யென்பதன் மரூஉ. [illegible]வகைக்கூத்துள் சிவபெருமான் நடிக்கின்ற கூத்து பாண்டரங்கம், கொட்டி யென்பன. அவை

“கடையமயி ராணிமரக் கால்விந்தை கந்தன்
குடைதுடிமா லல்லியமல் கும்பஞ்—சுடர்விழியாற்
பட்டமதன் பேடுதிருப் பாவையரன் பாண்டரங்கங்
கொட்டியிவை காண்பதினேர் கூத்து.”

என்ற சிலப்பதிகார உரைமேற்கோட் செய்யுளா னுணர்க.

இது, ஒன்று நான்கு எழுசீர்கள் தேமாங்காய்ச்சீரும், மூன்று ஆறு எட்டு ஒன்பதுசீர்கள் கூவிளச்சீரும், இரண்டு ஐந்துசீர்கள் தேமாச்சீரும் பெற்றுவந்த ஒன்பதின் சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம். (உ௪)

புன்ணகங்கண்டிரங்கல்

கலித்துறை

கூத்தாடு மருணேசர் வரையன்பர்
பொருளன்பு கொண்டுன்னையு
நீத்தார்கொ னிழலாரு மிலையாகி
நின்ருய்நெ டுங்காலமே

பார்த்தா லு மயலேகி ளைத்தாய்ச
லித்தாய்ப சுந்தென்றலாற்
பூத்தாய்பொன் னிறமாக வென்னுகை
மேயன்ன புன்னாகமே. உரு

என் ஆகமே அன்ன - எனது உடம்பையே யொத்த, புன்னாகமே - புன்னைமரமே! கூத்து ஆடும் - நடனஞ் செய்கின்ற, அருணேசர் - அருணசலேசுரரது, வரைஅன்பர் - மலையிலுள்ள தலைவர், பொருள் அன்புகொண்டு - பொருளினிடத்து அன்பினால், உன்னையும் - (என்னைவிட்டுப் பிரிந்ததே யன்றி) நின்னையும், நீத்தார்கொல் - நீக்கினார்போலும்; நெடுங்காலம் பார்த்தாலும் - நீண்டகாலம் பார்த்தாலும், நிழல் ஆரும் இலையாகி நின்றாய் - [நானும் பற்றுக்கோடு யாரும் இல்லையாகி நின்றேன்] நீயும் நிழனிறைந்திருக்கும் இலைகளை யுடையனவாகி நிற்கின்றாய், (மயலே) அயலே கிளைத்தாய் - [மயக்கமே பெருகினேன்] பக்கமே கிளைகள் விட்டிருக்கின்றாய், சலித்தாய் - [இளைத்தேன்] அசைகின்றாய், பசு தென்றலால் - இளந்தென்றற் காற்றால், பொன்நிறம் ஆகபூத்தாய் - (பொன்னிறமாக அடைந்தேன்) பொன்னிறமாக மலர்ந்தாய்.

உன்னையும் என்றதில் உம்மை எச்சவும்மை. கொண்டு - சொல்லுருபு. பற்றுக்கோடு - தஞ்சம். தலைவியைக் குறிக்குங்கால், ஆர் என்பது யார் என்பதன் மரூஉ. மயல் எனப் பிரிக்க. இல்லையென்பது இலை எனத் தொகுத்தல் விகாரம் பெற்றது. பொன்னிறமாகப் பூத்தல் - பசலை நிறமடைதல். பசலை - தேமல்; கிளைத்தல் - அடைதல்; அது பொன்னிறமாக இருத்தல்பற்றி இவ்வாறு கூறினார். புன்னைக்கு அயல் எனப் பிரிக்க. புன்னை மலர் பொன்னிறமாக இருத்தல்பற்றி யிவ்வாறு கூறினார். பசுமை என்னும்பண்பின் மைவிகுதிகெட்டு இனமிகுந்தது. பசுமை-இளமை.

பொருள்வயிற் பிரிந்த தலைவன் வாராமை கண்டு, தலைவி [illegible] தன்மை யடைந்த கடற்கரையிலுள்ள புன்னை [illegible]தைப் பார்த்து இரங்கிக் கூறியது. கேளாமரபின கேட்பனபோலக் கூறப்பட்டது மரபு வழுவமைதி. இத்துறை, "தன்னுட்கையா றெய்திடுகிளவி" எனப்படும்; அதாவது; தமக்கு நேர்ந்த துன்பத்தைத் தம் ஆற்றாமையாற் பிறிதொன்றன் மேலிட்டுச் சொல்லுஞ் சொல்.

இது, முதற்சீர் தேமாங்காய்ச்சீரும், இரண்டு மூன்று நான்கு சீர்கள் பெரும்பாலும் புளிமாங்காய்ச்சீரும் இறுதிச்சீர் தேமாங்கனிச்சீரும் பெற்று வந்த விருத்தக் கலித்துறை. (உரு)

இரங்கல்

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

நாகமெ டுத்தவ ரம்பானார்
நாலுும றைக்குவ ரம்பானார்
தோகையி டத்தவர் சேணாராய்
சோணகி ரிப்பதி வாணாராய்
மாகம டுத்தவி ளங்காவே
மன்னவ ரெண்ணம்வி ளங்காவே
கோகன கத்திமி ருந்தேனே
கொண்கரை விட்டுமி ருந்தேனே. உசா

நாகம் எடுத்தவர் - கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்தவரை, அம்பு ஆனார் - அம்பாகப் பெற்றவரும், நாலு மறைக்கு வரம்பு ஆனார் - நான்கு வேதங்களுக்கும் எல்லையாக உள்ளவரும், தோகை இடத்தவர் - உமாதேவியாரை இடப் பாகத்தி லுள்ளவருமாகிய சிவபெருமானரை, சேண் ஆராய் -

வாஞே ராராய்கின்ற, சோணகிரிப்பதி - அருணகிரிப்பதியில், வாழ் நாராய் - வாழ்கின்ற நாரையே! மாகம் அடுத்த - ஆகாயத்தை யளாவிய, இள காவே - இளமரச் சோலையே! கோகனகத்து - தாமரை மலரில், இமிரும் தேனே - ஒலிக்கின்ற வண்டே! மன்னவர் எண்ணம் - தலைவருடைய நினைப்புகள், விளங்கா - இன்னவென்று தெரியாவாம்; கொண்கரை விட்டும் - நாயகரை நீங்கப்பெற்றும், இருந்தேன் - இறவாமல் உயிர் தரித்திருந்தேன்.

தலைவி நாரைகளையும் சோலைகளையும் தடாகத்திலுள்ள தாமரை மலரில் வசிக்கின்ற வண்டுகளையும் பார்த்துத் தலைவன் பிரிந்தமை கூறிவருந்தல்.

நாகமெடுத்தவர்-கண்ணபிரான்; இனிச் சேடஞகிய நாகத்தாற் ருங்கப்பெற்ற திருமால் எனினுமாம். தோகை - மயில்; உவமவாகு பெயர்; சாயலுக்குவமை. திருமால் அம்பு ஆதல், திரிபுரதகன காலத்திலென்க. சேண் - இடவாகு பெயர்; சேஞர் ஆய் எனினுமாம். ஆய்-ஆராய். ஆய்சோணகிரி வினைத்தொகை. வாஞராய் வாழ்நாராய்; ழகரங்கெட்டு நகரந் திரிந்தது; இதை விதியின்பாற் படுத்துவர் வீரசோழியகாரர்; மரூஉவின்பாற் படுத்துவர் நன்னூலார். கொண்கர் - கொழுநர் என்பதன் மரூஉவுமாம். இச்செய்யுளில் மடக்கு என்னும் சொல்லணி காண்க.

இது, மூன்று ஆறுசீர்கள் தேமாங்காய்ச்சீரும், ஏனைய கூவிளச்சீரும் பெற்றுவந்த அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

ஊசல்

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

இருசரணச் சிலம்பாட வாடி ரூச
விளமுலைப்பொற் சிலம்பாட வாடி ரூசன்

கலைமருவு மருங்கசைய வாடீ ரூசல்
வரிவளைக்கை மருங்கசைய வாடீ ரூச
லருமறைக ளளவிடுதற் கரிதா மைய
ரருணகிரிப் பரமர்புக ழடைவே பாடிப்
பொருமிருகட் கயலுலவ வாடீ ரூசல்
புயமதனன் கயலுலவ வாடீ ரூசல். உஎ

இருசரணம் - இரண்டு கால்களிலுமணிந்துள்ள, சிலம்பு - சிலம்புகள், ஆட - அசையும்படி, ஊசல்ஆடீர் - ஊஞ்சல் ஆடுவீராக; இளமுலை - இளங்கொங்கைகளாகிய, பொன் சிலம்பு - அழகிய மலை, ஆட - அசையும்படி, ஊசல்ஆடீர்—, கலைமருவு-ஆடையணிந்த, மருங்கு அசைய - இடை அசையும்படி, ஊசல் ஆடீர்—, வரி வளை கை - வரிகளையுடைய வளையலணிந்த கைகள், மருங்கு அசைய-பக்கங்களில் அசையும்படி, ஊசல்ஆடீர்—, அருமறைகள் அளவிடுதற்கு - அரிய வேதங்களாலும் அளவிட்டுச் சொல்லுதற்கு, அரிது ஆம் ஐயர் - அரிதாகிய தலைவராகிய, அருணகிரி பரமர் - அருணசலேசுரரது, புகழ் - புகழை, அடைவே பாடி - முறையே பாடி, பொரும் - போர்புரிகின்ற, இருகண் கயல் - இரண்டு கண்களாகிய மீன்கள், உலவு - உலாவும்படி, ஊசல் ஆடீர்—, புயம் மதன் - புயங்களையுடைய மன்மதன், அயல் - பக்கத்தே, நன்கு - நன்றாக, உலவ - உலாவும்படி, ஊசல்ஆடீர்—.

இச்செய்யுள், தலைவியர் ஊஞ்சலிலிருக்க அவ்வூஞ்சலாட்டும் மகளிர் பாடுவதாகக் கூறியது என்க.

ஊசலாவது: ஆசிரிய விருத்தத்தாலாதல், கலித்தாழிசையாலாதல் ஆடீரூசல், ஆடாமோவூசல், ஆடுகவூசல் என ஒன்றால் முடிவுறக்கூறுவது. 'பொன்னூசலாடாமோ' என்று திருவாசகத்திலும், 'ஆடுக பொன்னூசல்' என்று மதுரைக் கலம்பகத்திலும் வருதல் காண்க.

சிலம்பு - காலணி, சிலம்புவது எனக் காரணக்குறி. முலை மலைக்கு உவமை பருமையானும் வன்மையானும் கூறப்பட்டது. பரமர் - மேலானவர். பொருபிருகண் என்றது ஆடவரை வருத்துந் தன்மைபற்றி. மதுரைக் கலம்பகத்தும் "போர்த்தடங் கண்" என்றார். கண்களுக்குக் கயல் உவமம் பிறழ்தல் காரணம்பற்றி. பாணந் தொடுத்தற்கேற்ற சமயம் என்று மன்மதன் பக்கத்திலுலாவுதல் என்றார்; உலாவுதல் - சஞ்சரித்தல். உலவ செயவென் வாய்பாட்டு வினையெச்சம்; உலா பகுதி. மதனன் கயல் என்பதற்கு மன்மதனுடைய மீனக்கொடி யென்பாருமுளர். * வரி - சித்திரக்கோடு; நிறமுமாம். இது மடக்காதலறிக.

இது, ஒன்று இரண்டு ஐந்துசீர்கள் காய்ச்சீரும் ஏனையமாச் சீரும் பெற்றுவந்த எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம். (உஎ)

பாங்கி கழறல்

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

ஊசலுகைத்திடுவார் குன்றெதிர் கூவிடுவா
 ரொண்டரளங்கொளுவார் தண்டலை கொய்திடுவா
ராசில்புனற்குடைவா ரம்மனை பந்துகழங்
 காடிம கிழ்ந்திடுவார் கோடிம டந்தையரே
யீசர்வி டைக்கொடியார் பூசைசெ யற்கெளியா
 ரோரரு ணைப்பதிசூழ் மேருவி னிற்கவணை
வீசுதினைப்புனமே யாவரெ னத்தெளியேம்
 வேலர்ம னத்திடையே மாலைவி ளைத்தவரே. உஅ

---

* புள்ளிகளுமாம்; மதுரைக் கலம்பகம் செய்யுள். கஉ.

வேலவர் - வேலையேந்திய தலைவரே, ஈசர்விடைக் கொடி யார் - தலைவரும் இடபக்கொடியை யுடையவரும், பூசை செயற்கு - பூசை செய்வதற்கு, எளியார் - எளிமையானவரும் ஆகிய அருணாசலேசுரர் எழுந்தருளி யிருக்கின்ற, ஏர் அருணைப் பதிசூழ் - அழகிய அருணைப்பதியைச் சூழ்ந்துள்ள, மேருவினில் - மேரு மலையினில், கவண்வீசு - கவணை வீசுகின்ற, தினைப்புனம் - தினைப்புனத்தில், ஊசல் உகைத்திடுவார் - ஊஞ்சல் ஆட்டு கின்றவர்களும், குன்றுஎதிர் கூவிடுவார் - மலையினெதிரே ஒலி யுண்டாகும்படி அழைக்கின்றவர்களும், ஒள்தரளம் கொளுவார் - ஒளி பொருந்திய முத்துக்களைச் சேர்ப்பவர்களும், தண்டலை கொய்திடுவார் - சோலைகளிலுள்ள தளிர்களைக் கிள்ளுபவர்களும், ஆசுஇல் - குற்றமில்லாத (தூய்மையான), புனல்குடைவார் - நீரில் குளிக்கின்றவர்களும், அம்மனை - அம்மனையும், பந்து - பந்தும், கழங்கு-கழங்கும் ஆகிய விளையாட்டுகளை, ஆடி - விளை யாடி, மகிழ்ந்திடுவார் - மகிழ்ச்சி யடைகின்றவர்களும் ஆகிய, கோடி மடந்தையர் - கோடி யளவினையுடைய பெண்களுள்ளார்; (அவர்களுள்) மனத்திடை - நும்மனத்தில், மாலை விளைத்தவர் - மயக்கத்தை உண்டாக்கினவர், யாவர்என - யாவரென்று, தெளி யேம் - அறியோம்; (கூறக்கடவீர்).

தலைவரே! இப்புனத்தில் கோடி மடந்தையர்களுளர். உம் மனத்தில் மாலை விளைத்தவர் யாவரென்றறியேம் கூறுவீரெனப் பாங்கி கூறினளென்க. மடந்தையரே, கவணே என்பவற்றுள் ஏகாரங்கள் அசைநிலை. விளைத்தவரே என்பதில் ஏகாரம் பிரி நிலை. யாவரெனத் தெளியேம் என்பதில் என இடைச்சொல்; வினையோடியைந்தது. கோடி மிகுதியைக் குறித்தது. வேலர் என்பது விளி.

இது, பெரும்பாலும் ஒன்று மூன்று ஐந்து எழு சீர்கள் கூவிளச்சீரும், இரண்டு நான்கு ஆறு எட்டு சீர்கள்

கூவிளங் காய்ச்சீரும் பெற்றுவந்த எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம். (உஅ)

கலிவிருத்தம்

மாலையென்பாங் கலத்தாரு மறைநாறுங் கலத்தாருங்
கோலமன்ன கலத்தாருங் குறைவில்பரி கலத்தாரு
மாலைவில்வேள் சலத்தாரு மதர்த்தமதா சலத்தாரு
மேலகலாச் சலத்தாரும் விளங்கருணை சலத்தாரே. உக

என்புமாலைஆம் - எலும்புமாலையாகிய, கலத்தாரும் - ஆபரணத்தை யுடையவரும், மறைநாறும் - வேதமணங் கமழ்கின்ற, கலத்தாரும் - பிரமகபாலமாகிய பாத்திரத்தை யுடையவரும், கோலம் - பன்றிக்கொம்பு, மன் அகலத்தாரும் - நிலைபெற்று விளங்குகின்ற மார்பையுடையவரும், குறைவுஇல் - குறைவில்லாத, பரிகலத்தாரும் - பூதச்சேனைகளை யுடையவரும், மாலை - மாலைக்காலத்தில் அம்பு தொடுக்கின்ற, வில்வேள் - வில்லை யுடைய மன்மதனை, சலத்தாரும் - கோபித்தெரித்தவரும், மதர்த்த - களிப்புற்ற, மதாசலத்தாரும் - அயிராவணமென்னும் யானையை யுடையவரும், மேல் - சடையின்மேல், அகலா - நீங்காத, சலத்தாரும் - கங்கைநீரை யுடையவரும், விளங்கு - விளங்குகின்ற, அருணசலத்தாரே அருணசலேசுரரே யாவார். ஏ - தேற்றம்.

என்புமாலை - பிரமன் முதலியோருடைய எலும்பு மாலை. மறைநாறும் கலம் என்றதால் பிரமகபாலம் என்பது பெறப்பட்டது; பிரமன் வேதம் ஓதுகின்ற காரணம்பற்றி இவ்வாறு கூறினர். கோலம் - பன்றி. ஈண்டுப் பொருளாகு பெயர்; குறைவில் - மிகுந்த என்னும் பொருளது. மதாசலம் - மத + அசலம்; தீர்க்கசந்தி.

அயிராவணம் - இரண்டாயிரங் கொம்புகளையுடையது.

அது: "நிரைநிரை, யாயிரம் வகுத்த மாயிரு மருப்பின், வெண் ணிறச் செங்கண் வேழமும்" என்ற கோயிலுன்மணிமாலையா னுணர்க. குறைவில் பரிகலம் என்பதற்கு அக்ஷயபாத்திரம் என் பாருமுளர். பரிகலம் - பரிவாரம், சேனை.

இச்செய்யுள்மடக்கு என்னுஞ் சொல்லணியாதல் காண்க. இது காய்ச்சீரான் வந்த கலிவிருத்தம். (உக)

தலைவியைப் புகழ்தல்

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

அருணனொளி தனிலுமொளி ரருமலைம
ருந்தாய வமலரதி ருங்கழலினார்
மருமலர்வி ரிந்துநதி பெருகருணை
யம்பதியின் மருவியமடந்தையிடையா
மொருகொடியி லொன்றுகமு கொருபவள
மொன்றுகுமி ழொருமதிய மொன்றுபிறைதா
னிருசிலையி ரண்டுகணை யிருபணையி
ரண்டுகுழை யிருமுலையி ரண்டுமலையே. ௩0

அருணன் ஒளிதனிலும் - சூரியன் ஒளியைப் பார்க்கினும், ஒளிர் - பிரகாசிக்கின்ற, அருமலை - அரியமலையிலுள்ள, மருந்து ஆய - மருந்தாகிய, அமலர் - மலமில்லாதவரும், அதிரும் கழலி னார் - அதிருங்கழலினாரென்னும் பெயரை யுடையவருமாகிய சிவபெருமானார் வீற்றிருக்கின்ற, மருமலர் விரிந்து - வாசனை பொருந்திய மலர்கள் விகசித்து, நதிபெருகு - நதிபெருகி வரு கின்ற, அருணைப்பதியின் - அருணகிரிப்பதியில், மருவிய -

இருக்கின்ற, மடந்தை - பெண்ணின், இடையாம் - இடையாகிய, ஒரு கொடியில் - ஒரு கொடியினிடத்தில், ஒன்று கமுகு - ஒன்று கமுகு, ஒரு பவளம் - ஒன்று பவளம், ஒன்று குமிழ் - ஒன்று குமிழம்பூ, ஒருமதி - ஒன்று சந்திரன், ஒன்று பிறை—, இருசிலை - இரண்டுவில், இரண்டு கணை - இரண்டு அம்பு, இருபணை - இரண்டு மூங்கில், இரண்டு குழை - இரண்டு இலை, இருமுலை - சிறப்புப் பொருந்திய முல்லை யரும்புகள், இரண்டு மலை.—(உள்ளன.)

இஃதோர் தெய்வத்தன்மை பொருந்திய கொடியாயிருக்கின்றதெனத் தலைவன் தலைவியைப் புகழ்ந்தானென்க.

கமுகு - கழுத்திற்கும், பவளம் - உதட்டிற்கும், குமிழ்-மூக்கிற்கும், மதி - முகத்திற்கும், பிறை - நெற்றிக்கும், சிலை - கண்புருவத்திற்கும், கணை - கண்ணிற்கும், மூங்கில் - தோளுக்கும், (வள்ளை) இலை - காதிற்கும், முல்லை - பற்களுக்கும், மலை - கொங்கைக்கும் உவமம். இருமை - மை விகுதி கெட்டது; சிறப்பு என்பது பொருள். இருமுலை என்பதில் இரு என்பது இரண்டு வரிசையை யுணர்த்திற்று எனினுமாம். முலை தொகுத்தல் விகாரம். குழை - காதணி யென்பாருமுளர். அருணையம்பதி என்பதில் அம் சாரியை.

கமுகமரம் குமிழம்பூ மதி பிறை சிலை பணை குழை முல்லை யரும்பு மலை மெய்யுவமம். பவளம் உருவுவமம். கணை தொழிலுவமம். பிறை - பாதிமதி. குமிழ், முல்லை - முதலாகு பெயர். இச்செய்யுளில் மூன்று நாலு அடிகளில் முறையே ஒன்று இரண்டு என்னும் எண்கள் பல வந்தது, சொற்பொருட்பின் வருநிலையுணி.

இது இறுதிச்சீர் கூவிளங்கனிச்சீரும் ஏனைய காய்ச்சீரும் பெற்றுவந்த அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம். (கூo)

தலைமகன் தன்னைத்தானே புகழ்தல்

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

மலையாச னத்தர்மலை மயிலாச னத்தரெழு
மலையானி லத்து வருவா
ரலையாச னத்தரொடு மமிர்தாச னத்தர்தொழு
மருணாச லத்தர் வரையீர்
முலையானை கட்டியிடை வெளிதேர்நி றுத்திமதி
முகமாய மைத்த ருகுலா
மிலைவேல்ப ரப்பியினி தெழுதோள மைப்பனினி
பொழுதேனி ருப்பு மனமே. ௩க

மலையா - போர்செய்யாத, சன்னத்தர் - போர்க்கு ஆயத்தமா யிருப்பவரும், மலைமயில் - உமாதேவியின், ஆசம் - சிரிப்பிலே, நத்தர் - விருப்பமுடையவரும், மலைஎழும் - போர் செய்தற்கு எழுகின்ற, ஆனிலத்து - (திருமாலாகிய) இடபத்தினிடத்து, வருவார் - வருகின்றவரும் ஆகிய, அலை - பாற்கடலை, ஆசனத்தரொடு - இருப்பிடமாகவுடைய திருமாலோடு, அமிர்த அசனத்தர் - அமுதத்தை உணவாகவுடைய தேவர்களும், தொழும் - வணங்குகின்ற, அருணாசலத்தர் - அருணாசலேசுரருடைய, வரையீர் - மலையிலுள்ள தோழிகளே! (தலைமகளது அவயவங்களாகிய) முலையானை கட்டி - முலைகளாகிய யானைகளைக் கட்டி, இடைவெளி - இடையாகிய வெளியில், தேர் நிறுத்தி - அல்குலாகிய தேரை நிறுத்தி, மதி - சந்திரனை, முகமாய் அமைத்து - முகமாகப் பொருந்தச்செய்து, அருகு உலாம் - பக்கத்தே யுலாவுகின்ற, இலைவேல் பரப்பி - கண்களாகிய தகட்டு வடிவமைந்த வேலாயுதங்களைப் பரப்பி, இனிது எழு

தோள் அமைப்பன் - இனிமையாக வெழுந்த தோள்களை யெழுதுவன், இனி - இனிமேல், இரும்பு மனம் எழுதேன் - இரும்பாகிய மனத்தை யெழுதேன்.

இக்கவி தலைமகள்அவயவத் தருமை சாற்றி எழுதமுடியா தென்ற தோழிக்கு எழுத முடியுமெனத் தலைமகன் தன்னைத் தானே புகழ்ந்துரைத்ததாகக் கூறியது.

மலையா என்பது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். சன்னத்தர் என்பது சனத்தர் எனத் தொக்கிநின்றது. சன்னத்தம் - போர்க்கோலம். மலைமயில் - மலையரசன் மகளாகிய மயில்போன்ற உமாதேவியார். மயில் உவமவாகு பெயர். ஆசம் - சிரிப்பு. நத்து - விருப்பம். மலை எழும் என்பதில் மலை முதனிலைத் தொழிற்பெயர். மலையானிலம் - தென்றல்; அது வீசுங்கால் வருபவர் வசந்தராயர். எழுமலையா னிலத்து - எழுகின்ற வலிய அழகிய இடபத்தில் எனவும் (மலை-மல்-வலி, ஐ - அழகு); எழுகின்ற மலைபோன்ற எனவும் பொருள் கூறுவர். ஆனிலத்து - ஆன் இல் அத்து. இல்-எழனுருபு, அத்து-வேண்டா விடத்து வந்த சாரியை. அலை சினையாகு பெயர். அமிர்த அசனத்தர் - தீர்க்க சந்தி. உலாவும் என்னும் செய்யுமெனெச்சம் ஈற்றுயிர்மெய்கெட்டு உலாம் எனத் தொகுத்தலாய் நின்றது. இருப்பு என மென்றொடர் வன்றொடராயிற்று. மனத்தையு மெழுதுவேன் இளகாத இரும்பா யிருப்பதனால் எழுதே னென்றான் என்க.

இது, ஒன்று மூன்று ஐந்துசீர்கள் புளிமாங்காய்ச்சீரும், இரண்டு நான்கு சீர்கள் கூவிளங்காய்ச்சீரும், ஆறுஞ்சீர் தேமாச் சீரும், எழாஞ்சீர் புளிமாச்சீரும் பெற்றுவந்த எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம். (நக)

இரங்கல்

கட்டளைக்கலித்துறை

மேலாடை தோற்றணி சங்காழி கைவிட்டு மென்சிலம்பின்
காலால் வருந்தி நிலங்கீறுங் கோலத்தைக் கண்டிருந்து
மாலால முண்டவ ரண்ணு மலையர்த மன்பர்க்கன்றி
மாலான வர்க்கிரங் காரிங்ங னேயொரு வன்கண்ணரே. ௩௨

ஆலாலம் உண்டவர் - (திருப்பாற்கடலிற் றோன்றிய) விடத்தை யுண்டவராகிய, அண்ணுமலையர் - அருணசலேசுரர், மேல் ஆடை தோற்று - காமமயக்கத்தால் மேல் அணிந்த உடையையுமிழந்து [பீதாம்பரத்தையுமிழந்து], அணி சங்கு ஆழி கைவிட்டு - அணிந்த சங்கு வளையலையும், மோதிரத்தையும் நழுவவிட்டு [அழகிய சங்கு சக்கரத்தையும் நீக்கி], மென்சிலம்பின் காலால் - மிருதுவான சிலம்பை யணிந்திருக்கின்ற கால்விரலால் [அருணசலத்தினடியைக் காணுமேதுவினுல்], வருந்தி நிலம் கீறும் கோலத்தை - வருத்தமடைந்து பூமியைக் கிண்டுகின்ற கோலத்தை [வருந்தி பூமியைத் தோண்டிக் கிழிக்கின்ற பன்றி வடிவத்தை], கண்டிருந்தும் - பார்த்திருந்தும், தம் அன்பர்க்கு அன்றி - தம்முடைய அடியார்களுக்கல்லாமல், மால் ஆனவர்க்கு - மயக்கமடைந்த மாதருக்கு [திருமாலானவர்க்கு], இரங்கார் - மனமிரங்கி யருள்செய்யார், ஒரு வன்கண்ணர் - ஒரு கொடுமையாளர், இங்ஙனே - இப்படியு மிருக்கலாமா?

இச்செய்யுள் தலைவிக்கும், திருமாலுக்கும் சிலேடை. தலைவி தன்னைப்போல மயங்கிநின்ற மாதரையுந் தன்னேடுளப் படுத்தி மாலானவர் என்றுள். தன்னைப் படர்க்கையில் வைத்துக் கூறினுளெனலுமாம். வன்கண்ணரே, ஏகாரம் ஈற்றசை. இங்ஙனம் என்றது இங்ஙன் எனக் கடைகுறைந்தது. இங்ஙனே

என்பதில் ஏகாரம் வினைப்பொருள் தந்தது. அன்றி - குறிப்பு வினையெச்சம் ; அன்மை பகுதி.

இது நேரசைமுதலான கட்டளைக் கலித்துறை. (கஉ)

இருவிகற்பநேரிசை வெண்பா

கண்ணாருக்கும் போதருக்குங் காண்பரிதாய்க் கண்பறித்த
திண்ணாருக்கு நன்றாய்த் தெரிந்ததே—விண்ணாருக்குப்*
போற்றுவா ரண்ணார் புரமெரித்தா ரென்பிறவி
மாற்றுவா ரண்ணா மலை.

விண்ணர் உக்கு போற்றுவார் - தேவர்களால் மனமுருகித் துதிக்கப்பட்டவரும், அண்ணார் புரம் எரித்தார் - பகைவர்களுடைய திரிபுரத்தை யெரித்தவரும், என் பிறவி மாற்றுவார் - என்னுடைய பிறவியை யொழிக்கின்றவருமாகிய சிவபெருமானாது, அண்ணாமலை - திருவண்ணாமலை யுருவம், கண்ணருக்கும் - திருமாலுக்கும், போதருக்கும் - பிரமதேவருக்கும், காண்பு அரிதாய் - பார்த்தற் கரியதாகி, கண்பறித்த - கண்ணைத் தோண்டிய, திண்ணருக்கு - கண்ணப்ப நாயனாருக்கு, நன்றாய் தெரிந்தது - நன்றாகத் தெரிந்தது.

இதனால், அண்ணாமலை யுருவம் அன்பர்க்கன்றி ஏனையர்க்குத் தெரியாதென்பது பெறப்பட்டது.

கண்ணர் - கருநிறமுடையவர். போதர் - திருமாலுந்தியந் தாமரைப்போதி லுதித்தவர். காண்பு - பு தொழிற்பெயர் விகுதி. ஆய் என்பது செயவெனெச்சத்திரிபு. தெரிந்ததே என்பதில் ஏகாரந் தேற்றம். போற்றுவார் என்பதில் செயப்பாட்டு வினைப்பொருளுணர்த்தும் படு விகுதி தொக்கது. அண்ணார் - நெருங்காதவர் எனவே பகைவர் என்றவாறும்.

*விண்ணருக்கா என்றும் பாடமுண்டு.

[illegible] - சிறிதும் ஒளியாது தோன்றல். உக்கு [illegible] வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம்; உகு [illegible] வினையெச்ச விகுதி; பகுதி விகாரப்பட்டு உக்கு [illegible] இறந்தகாலங் காட்டியது; உகரக்கேடு சந்தி.

இது, மலர் என்னும் வாய்பாட்டான் முடிந்த இருவிகற்ப நேரிசை வெண்பா. (ருரு)

இரங்கல்

கலிவிருத்தம்

அண்ணா மலையத் தாடற் கிரிமே
லெண்ணா மலையத் தவரெய் திலராற்
கண்ணா மலையத் தனைநீர் கலுழும்
விண்ணா மலையத் தரும்வெண் மதியே. ருச

அண்ணமலை அத்தர் - அருணசலேசுரருடைய, அடல் கிரி மேல் - திண்ணிய மலையிடத்து, எண்ணா - எம்மைக் கருதி, மல் ஐய தவர் - வலிய அழகினையுடைய நாயகர், எய்திலர் - அடைந் திலர் (ஆதலால்), கண் - கண்கள், அலையாம் அத்தனை - கடலாகு மவ்வளவு, நீர் கலுழும் - நீரைச்சொரியும், விண் - ஆகாயத்தில், வெண்மதி - வெண்ணிறம் பொருந்திய சந்திரன், நாம் - அச் சத்தை, அலைய தரும் - வருந்தும்படி கொடுக்கும்.

இது, தலைவி தலைவன் வாராமை கருதி யிரங்கிக் கூறல்.

அழற்கிரியெனப் பாடங் கொள்வாருமுளர். எண்ணமல் எனப்பிரித்தும் பொருள் கொள்வர். எண்ணா செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம். விண்ணும் என்பதில் நாம் தன்மைப் பன்மைப் பெயராகக் கொண்டு பொருள் கொள்ளினுமாம். மலைய எனப் பிரித்து மயங்க எனப் பொருள் கொள்ளினுமாம். ஐயத்தவரெனச் செய்யுளோசை யின்ப நோக்கி மிக்கது.

இது, முதற்சீர் தேமாச்சீரும் ஏனைய புளிமாச்சீரும் பெற்று வந்த கலிவிருத்தம். (நச)

பாங்கன் இறைவியைக் காண்டல்

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

மதுவானி றைந்தகுழன் மடவார்நெ ருங்கருணை
    மலைமேன்ம ருந்தர் வரையின்
முதுநீரில் வந்தவவ ரடையாள மென்றிறைவர்
    முதலேமொ ழிந்த படியே
யிதுநாக மன்றுமுலை யிதுபூக மன்றுகள
    மிதுமேக மன்ற ளகமே
யதுநீல மன்றுவிழி யதுசாப மன்றுநுத
    லதுகோப மன்ற தரமே. நரு

மதுவால் நிறைந்த - தேனால் நிறைந்த, குழல் மடவார் - கூந்தலையுடைய பெண்கள், நெருங்கு அருணை - மிகுந்துள்ள அருணைப்பதியிலுள்ள, மலைமேல்மருந்தர் - மலைமேல்மருந்த ரென்னும் பெயரையுடைய சிவபெருமானாரது, வரையின் - மலையினிடத்து, முதுநீரில் வந்த அவர் - திருப்பாற்கடலிற் றோன்றிய இலக்குமியை யொத்த தலைவியரது, அடையாளம் என்று—; இறைவர் - தலைவர், முதல் மொழிந்தபடியே - முன்னே கூறியபடியே, இதுநாகம் அன்று முலை,- இந்த அவயவம் மலையன்று முலையாகும், இது பூகம் அன்று களம் - இது கமுகன்று கழுத்தாகும், இது மேகம் அன்று அளகம் - இது மேகமன்று கூந்தலாகும், அது நீலம் அன்று விழி - அது நீலோற்பலமன்று கண்ணாகும், அது சாபம் அன்று நுதல்-அது வில்லன்று கண்புருவமாகும், அது கோபம் அன்று அதரம் - அது இந்திரகோபமன்று இதழாகும்.

இது, தலைவர் கூறிய அடையாளப்படி பாங்கன் தலைவி யைக் கண்டு மயங்கிப் பின்பு துணிந்துரைத்தா னென்க.

[illegible]ளிற் றிருத்தலால், மதுவாணிறைந்த குழலென்றார். [illegible]பெண்கள் மிகுந்திருத்தல் சிறப்பு. முதுநீர்-கடல்; அது "முதுநீருலகிற் கடியப்பட்டன" என்னும் மணிமேகலையிலும் [illegible]பொருளாதலறிக. முதுக்குறைவு (பேரறிவு) என்றும் நீரர [illegible]ன்றும் பொருள் கூறுவாருமுளர். இந்திரகோபம் - [illegible]காலத்திற் றோன்றும் மிருதுவான செந்நிறம் பொருந் [illegible]. அன்று - எதிர்மறைக்குறிப்பு வினைமுற்று. முதலே - [illegible]லை; ஏனைய தேற்றம். உண்மையுவமையணி; இங்கே [illegible]கம், [illegible]கம், மேகம், நீலம், சாபம், கோபம் என்பன மறுத் [illegible]க்கப்பட்டன; முலை, களம், அள்கம், விழி, நுதல், அதரம் என்பன உண்மை யென்று சொல்லப்பட்ட பொருள்கள். அடை யாளம் - குறி.

இது, ஒன்று மூன்று ஐந்து சீர்கள் புளிமாங்காய்ச்சீரும், இரண்டு நான்கு சீர்கள் கூவிளங்காய்ச்சீரும், ஆறுஞ்சீர் தேமாச் சீரும் எழாஞ்சீர் புளிமாச்சீரும் பெற்றுவந்த எழுசீர்க்கழி நெடி லாசிரிய விருத்தம். (ரு௫)

நாரைவிடு தூது

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

அருணை வெற்பின ரயனி ருக்கவு
மரிபி ழைக்கவு மாகவே
இருபி டற்றொரு கருமை வைத்தவர்
திருந திக்கய றோடியே
கருது கெட்டிட லசைவ றத்துயில்
காரு டந்திரை நாரைகா
ளிருக ளித்திரை யிலையெ னச்சொல
விரைநர் பக்கலி லேகுமே. ருசு

அயன் இருக்கவும் - பிரமன் உயிரோடிருக்கவும், அரி பிழைக்கவும் - திருமால் உயிர்பிழைக்கவும், திருமிடறு ஒரு கருமை வைத்தவர் - அழகிய கண்டத்து ஒரு கரிய விடத்தைத் தரித்தவராகிய, அருணை வெற்பினர் - அருணகிரி யென்னும் மலையினையுடைய சிவபெருமானாரது, திருநதி கயல் தேடி - திருநதியின்கண் மீனைத்தேடி, கருதும் - சிந்திக்கின்ற, நெடுஉடல் அசைவு அற துயில் - நீண்ட உடலானது அசைதலில்லாமல் தூங்குவதுபோல, கபடம் நித்திரை நாரைகாள் - வஞ்சகம் பொருந்திய நித்திரையையுடைய நாரைகளே! இறைவர் பக்கலில் - தலைவரிடத்தில், இருகண்களும் - இரண்டு கண்களும், நித்திரை இல என சொல ஏகும் - தூங்குதல் இல்லையென்று சொல்வதற்குச் செல்லுங்கள்.

அயன் திருமாலிடத்துத் தோன்றியவன் என்பது பொருள். ஆகவென்னு மிடைச்சொல் தான் சார்ந்துநின்ற சொல்லின் பொருண்மையை யுணர்த்திற்று. ஆகவே - ஏகாரம் பிரிநிலை.

திரு என்பது கண்டாரால் விரும்பப்படுந் தன்மை;நோக்கம் என்றது அழகு. திருநதி அருணாசலத்திற்கு வடபக்கத்திலுள்ள ஒரு நதி. உம்மைகள் - எண்ணும்மை. ஒரு - ஒப்பற்ற எனினுமாம். கருமை - பண்பாகு பெயர். துயில் - முதனிலைத் தொழிற்பெயர்; உவமவுருபு தொக்கது. மீனைப்பிடித்தற்கு அவ்வாறிருத்தல்பற்றிக் கபடநித்திரை யென்றார். கருதும் செய்யுமென் வாய்பாட்டுப் பெயரெச்சம். நாரைகாள் - விளி. இல சொல என்பன தொகுத்தல்; சொல - செயவென்வாய்பாட்டு வினையெச்சம். நெட்டு நெடுமை யென்னும் பண்புப்பெயர் ஈறுபோய்த் தன்னொற்றிரட்டியது.

இது, ஒன்று மூன்று ஐந்துசீர்கள் புளிமாச்சீரும், இரண்டு நான்கு ஆறு ஏழு சீர்கள் கூவிளச்சீரும் பெற்றுவந்த எழுசீர்க் கழி நெடிலாசிரிய விருத்தம். (௩௬)

பாங்கி தலைவிக்குரைத்தல்

கட்டளைக்கலித்துறை

ஏகார் புனத்துத் தழையாற் கரிபட்ட தென்பரென்றும்
போகாத வூர்க்கு வழிதேடு வார்புலிக் கான்முனியு
நாகா திபருந் தொழுமரு ணாசல நாட்டிளந்
தோகா யணங்கனை யாயவர்க் கேது சொலத்தக்கதே. ௩௭

புலிக்கால்முனியும் - வியாக்கிரபாத முனிவரும், நாகாதிபரும் - பதஞ்சலி முனிவரும், தொழும்-வணங்குகின்ற, அருணாசல நாட்டில் - அருணகிரிப்பதியிலுள்ள, இளம் தோகாய்-இளமையாகிய மயில்போன்ற சாயலையுடையாளே! அணங்கு அனையாய் - தெய்வப்பெண்ணை யொத்த தலைவியே! புனத்து ஏகார் - தினைப்புனத்தைவிட்டு நீங்காதவராய், தழையால் - தமது கையில் ஏந்தி இருக்கும் தழையினால், கரிபட்டது என்பர் - யானை இறந்ததென்று கூறுவார், என்றும் - எப்பொழுதும், போகாத - தாம் செல்லப்படாத, ஊர்க்கு - நம்மூருக்கு, வழிதேடுவார் - வழி நம்பாற்கேட்டுத் தேடுவார், அவர்க்கு - அப்படிப்பட்டவர்க்கு, ஏது-யாது, சொல்லத்தக்கது-சொல்லத் தகுந்தது ?

பாங்கி தலைமகளை விளித்து, தலைவன் முன்சொல்வதும் பின்சொல்வதும் வேறுபட்டிருக்கின்றன; ஆதலால், அவர் எண்ணம் வேறு; நாம் பதில் கூறத்தக்கது என்னை? என்றாள்.

ஏகார்:- முற்றெச்சம். போகாத - எதிர்மறை. நாகாதிபர் - நாக + அதிபர்; வடமொழித் தீர்க்கசந்தி. நாகங்களுக்குத் தலைவராகிய ஆதிசேடன். அவரே பதஞ்சலி முனிவராகலின் இவ்வாறு கூறினார். தோகை யென்பதன் விளி தோகாய் என்பது. தோகை - ஆண் மயில், தோகையுடையது அது வாகலான்;

ஆண்பால் பெண்பாலுக்காயிற்று. ஈண்டு உவமையாகு பெயர். ஏ ஈற்றசை. முனி - மநநசீலன்.

இது நேரசை முதலதாய்வந்த கட்டளைக் கலித்துறை. (௩௭)

எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

சொர்க்கமெனு மொருபதவி யிருக்க மாலைத்
துளவணியு மரிபதவி யிருக்க மேலை
நற்கயிலை மலையிருக்க நினைத்தோர்க் கெல்லா
நயந்தமுத்தி நகரமொன்றே நல்கா நிற்பீர்
பொற்கையினா லுமைவணங்கிப் பரிந்து பூசை
புரிந்து தவந் தெரிந்துதினம் புகழ்வோர்க்கெல்லா
மெற்குலவு புகழருணை யீச னாரே
யினியளிக்கும் பதவிதனக் கென்செய் வீரே. ௩௮

எல் குலவு - பிரகாசம் விளங்குகின்ற, புகழ் - புகழினை யுடைய, அருணை ஈசனாரே - அருணாசலேசுரரே, சொர்க்கம் எனும் - தேவலோகம் என்கின்ற, ஒரு பதவி இருக்க - ஒப்பற்ற கதி இருக்கவும், துளவுமாலை அணியும் - துளசி மாலையை அணி கின்ற, அரிபதவி இருக்க - திருமால் கதி இருக்கவும், மேலை - தலைமையுடைய, நல்கயிலை மலை இருக்க - நல்ல கயிலாய மலை இருக்கவும், நினைத்தோர்க்கெல்லாம் - சிந்தித்தவர்களுக்கெல் லாம், நயந்த - விரும்பிய, முத்தி நகரம் ஒன்றே - முத்தியாகிய நகர மொன்றினையே, நல்காநிற்பீர் - கொடுக்கின்றீர், உமை - உம்மை, தினம் - நாடோறும், பொன் கையினால் - அழகிய கையினால், வணங்கி - கும்பிட்டு, பரிந்து - விரும்பி, பூசை புரிந்து - பூசை செய்து, தவம் தெரிந்து - தவத்தை யறிந்து, புகழ்வோர்க்கெல்லாம் - புகழ்கின்றவர்களுக்கெல்லாம், இனி

அளிக்கும் பதவி தனக்கு - இனி கொடுக்கும்படியான பதவிக்கு; என்செய்வீர் - யாது செய்வீர் ?

விளக்க முத்திதரும் தலத்தீராதலால் நினைத்தவர்க்கு முத்தி பதத்தைக் கொடுக்கின்றீர்; உம்மைப் பூசைபுரிந்து பூசிப்பவருக்கு அளிக்கும் பதவிக்கு என்செய்வீர் என்றார்.

சொர்க்கம் - சுவர்க்கம் என்பதன் சிதைவு. இருக்க - இருக்கிற்பீர் என செயவென் வாய்பாட்டு வினையெச்சம் பிற கர்த்தாவின் வினை கொண்டு முடிந்தது. எண்ணும்மை தொக்கது.

சொர்க்கம்-இந்திரன் பிரமன் முதலியோர் பதவிகளாகிய தேவலோகம், சத்தியலோகம் என்பன; திருமால் உருத்திரர் முதலியோர் பதவியைக் கூறவே பிரமனது சத்தியலோகமாகிய பதவியையுங் கூட்டிக்கொள்க. அரிபதவி - வைகுந்தம். உருத்திரபதவி - கயிலைமலை. பூசையாவது - அவரது திருமேனியை அகத்தும் புறத்தும் வழிபடல். அது ஆன்மார்த்தம், பரார்த்தமென இருவகைப்படும்: தன் பொருட்டுச் செய்வது ஆன்மார்த்தம்; பிறர் பொருட்டுச் செய்வது பரார்த்தம். இவற்றின் விரிவை ஆகம முதலிய நூல்களிற் காண்க. தவமாவது, மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு விரதங்களான் உண்டி சுருக்கலும், கோடைக்கண் வெயினிலை நிற்றலும், மாரியினும் பனியினும் நீர்நிலை நிற்றலும் முதலிய செயல்களை மேற்கொண்டு, அவற்றால் தம்முயிர்க்கு வருந்துன்பங்களைப் பொறுத்து, பிறவுயிர்களை யோம்புதல் என்பர் பரிமேலழகர். எல்லாம் என்பது இருதிணைப் பொதுப்பெயர்; ஈண்டு உயர்திணைக்கண் வந்தது. எல் - பிரகாசத்தை யுணர்த்தும் இடைச்சொல். அது "எல்லேயிலக்கம்" என்னுந் தொல் - இடை-௨௧ சூத்திரத்தா னுணர்க. செய்வீர் - முன்னிலைப் பன்மை வினைமுற்று. எவன் என்பது - என் என நின்றது. இனி - இடைச்

யொல்; காலவிடங்களின் எல்லைப்பொருளைத் தருவது; ஈண்டு இடப்பொருளின் மேற்று.

இது, முதற்சீர் கூவிளங்காயச்சீரும், இரண்டு ஐந்து ஆறு சீர்கள் கருவிளங்காய்ச்சீரும், ஏனைய மாச்சீரும் பெற்றுவந்த எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம். (௯அ)

சித்து

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

வீரத்தை யணிமழுவா ருமைபங் காளர்
விளங்கருணைச் சித்தர்யாம் விளம்பக் கேளா
காரத்தை யெமக்கிடுகஞ் சத்தை யேகோ
கனகமெனக் காட்டிடுவோங் கரியோ ருக்குத்
தாரத்தைப் பொன்னாக வமைத்தோந் தம்பீ
தாம்பரமும் பொன்னாகச் சமைத்தோ மிந்தப்
பாரத்தை யாரறிவா ரயனா கத்தைப்
பசும்பொனிற மாகவுமே பாலித் தோமே. ௯௯

வீரத்தை அணி - வலிமையைக்கொண்ட, மழுவார் - மழுவாயுதத்தை யுடையவராகிய, உமைபங்காளர் - உமா தேவியை இடப்பாகத்திலுடைய பரமசிவனார், விளங்கு - வீற் றிருக்கின்ற, அருணை - அருணகிரிப் பதியிலுள்ள, சித்தரேம் - சித்திபெற்ற இரசவாதிகளாவோம், யாம் - நாங்கள், விளம்பக் கேள் - கூறக்கேட்பாயாக; கரியோருக்கு - திருமாலுக்கு, தாரத்தை - தாரவை, பொன்னாக - பொன்னாகச் செய்தோம், [மனைவியை இலக்குமியாகச் செய்தோம்] தம்பீ—, தாம்பரமும்- செம்பையும், பொன்னாக அமைத்தோம் - செம்பொன்னாகச் செய்தோம், [தம்பீதாம்பரமும் - தம்முடைய பொன்னுடை

[illegible]றம், பொன்னிறமாகச் செய்தோம்]; அயன்நாகத்தை - இரும்பையும் [illegible]நாகத்தையும், பசுபொன் நிறம் ஆகவும் பாலித்தோம் - பசும்பொன்னிறமாகவும் செய்தோம் [அயன்ஆகம் - பிரமனது [illegible]த்தை, பொன்னிறமாகவுங் கொடுத்தோம்], ஆ - காரத்தை [illegible]றிடு - இது ஆச்சரியம்! காரத்தை (படிகாரத்தை) எமக்குக் கொடு [உணவை எமக்குக் கொடு], கஞ்சத்தை - வெண்கலத்தையும், கோகனகம் என காட்டிடுவோம் - ஒளியுள்ள பொன் என்னும்படி செய்து காட்டுவோம் [தாமரையைக் கோகனகம் என்னும்படி செய்வோம்.] இந்த பாரத்தை யார் அறிவார் - இந்தப் பெருமையை யாவர் அறிவார்கள்?

இரசவாதிகள் தமது திறமையை ஒரு தலைவனுக்கு எடுத்துக் கூறுவதாகச் செய்யுள் செய்தல், சித்து என்னும் உறுப்பின் இலக்கணமாம்; இரசவாதமாவது இரும்பு முதலிய தாழ்ந்த உலோகங்களைப் பொன் முதலிய உயர்ந்த உலோகமாக்குதல். பங்காளர் - பங்கை ஆளுதலை யுடையவர். கஞ்சம் தாமரை யென்ற பொருளில் கம் - நீர், ஜம் - முளைப்பது; நீரில் முளைப்பது என்பது பொருள். வெண்கலத்தைக் குறிக்கும்போது காம்ஸ்யம் என்னும் வடமொழியின் திரிபு. கோகனகம் - தாமரை. கோகனகம் என்னும் பெயருடையதாகும்படி யென்க. இலக்குமிக்கும் இவ்வாறே கொள்க. ஏகோ - வியப்பிடைச் சொல்லுமாம். தம்பீ - சித்தர்கள் வழங்குஞ் சொல் விழுக்காடு. அயல்நாகம் எனப்பிரித்து வேறுயுள்ள துத்தநாகமுமாம். தரா - ஒருவகை உலோகம். தாரம் - தராவென்னும் வடமொழித் திரிபு. பீத + அம்பரம் வடமொழித் தீர்க்கசந்தி. பாரம்-பொறை, பெருமை; அதாவது அரிய செயல். யார் அறிவார் - ஒருவரும் அறிவாரில்லை. யார் - வினா வினைக்குறிப்பு - இன்மை குறித்து நின்றது. இ - சுட்டு இந்த என மருவிற்று. ஏ - அசைநிலை. கேள் ஈறுகெட்ட முன்னிலை வியங்கோள் வினைமுற்று. அயன் -

இரும்பென்ற பொருளில் அயம் என்பது அயனென மொழி யிறுதிப் போலி யாயிற்று.

இச்செய்யுள் சிலேடையாக மற்றோர் பொருள் தருகின்ற நயம் பாராட்டற்பாலது. அடுத்த செய்யுளிலும் இங்ஙனமே காண்க.

இது ஒன்று இரண்டு ஐந்து ஆறுசீர்கள் காய்ச்சீரும், மூன்று நான்கு ஏழு எட்டுசீர்கள் மாச்சீரும் பெற்று வந்த எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம். (ருகூ)

இதுவுமது

பாதமெமக் களித்தவரு ணேச ஞர்க்கின்
 பச்சிலைபொன் செய்திமையோர் பசிநோய் தீர
வோதுகடை மருந்தளித்த சித்த ரேம்யா
 மொருபிடிசோ றல்லதுகூ ழுண்டோ வப்பா
மாதவர்தந் திருவாணை கரிக ளெல்லா
 மாதங்க மாக்குகிற்போ மருந்தில் லாதே
யேதமற நாகமொளித் தரவாச் செய்வோ
 மிரும்பையும்பொன் னுகவுரைத் திசைவிப் போமே.

பாதம் - திருவடியை, எமக்கு - எங்கட்கு, அளித்த - கொடுத் தருளிய, அருணேசனுர்க்கு - அருணைசலேசுரருக்கு, இன்பம் சிலை பொன்செய்து - இன்பம் பொருந்த கல்லைப் பொன்னுகச் செய்து [வில்லைப் பொன்மயமாகிய மேருமலையாகச் செய்து], இமையோர் பசிநோய் தீர - தேவர்களுக்குப் பசித்துன்பம் நீங்க, ஓது கடைமருந்து அளித்த - புகழ்ந்து சொல்லுகின்ற கடையிலுள்ள ஔடதத்தைக் கொடுத்த [மந்தரகிரியாற் கடை யப்பட்ட அமிழ்தத்தைக் கொடுத்த], சித்தரேம் யாம் - சித்

[illegible] நாங்கள்; அப்பா —, ஒருபிடி சோறு அல்லாது - ஒரு பிடியளவு சோறே யல்லாமல், கூழ் உண்டோ - வேறு உணவு உண்டோ? மாதவர் ஆணை - பெரிய தவத்தினையுடைய சித்தர்கள்மேல் ஆணை; மருந்து இல்லாது - மருந்து இல்லாமலே, கரிகள் எல்லாம் மாதங்கம் ஆக்குகிற்போம் - கரிகளெல்லாவற்றையும் சிறந்த பொன்னாகச் செய்வோம் [யானைகளெல்லாவற்றையும் மாதங்கமென்னும் பெயரையுடையதாகச் செய்வோம்], ஏதம்அற - துன்பம்நீங்க, நாகம் ஒளித்தரவா செய்வோம் - துத்தநாகத்தை ஒளிபொருந்திய தராவாகச் செய்வோம் [பாம்பென்னும் பெயரை மறைத்து அரவென்னும் பெயருடையதாகச் செய்வோம்], இரும்பையும்—; பொன்ஆக உரைத்து இசைவிப்போம் - பொன்னாகும்படி உரைகல்லிலுரைத்துப் பொருந்தும்படி செய்விப்போம் [கரும்பொன் என்னும் பெயருடையதாகும்படி சொல்லி அவ்வாறே வழங்கும்படி செய்விப்போம்].

"பாதம் எமக்களித்த" என்றதனால் திருவடியே வீடாயிருக்குமென்றார்; அதனை, "தென்னன் பெருந்துறையான், காட்டாதன வெல்லாங்காட்டிச் சிவங்காட்டித் தாட்டாமரை காட்டித் தன் கருணைத் தேன்காட்டி" எனத் **திருவாசகத்தும்**, "சேவடி படருஞ் செம்மலுள்ளமொடு, நலம்புரி கொள்கைப் புலம்பிரிந்துறையுஞ் செலவு" எனத் **திருமுருகாற்றுப் படையி**லும் பிறநூல்களிலும் வருவனவற்றா னுணர்க. அன்றித் திருவடி தீக்ஷை செய்தாரெனினுமாம். பிறரும் திருவடியைக் கூறுமாற்றா னுணர்க.

பச்சிலை பொன்செய்து - பச்சிலையினாற் பொன்செய்து எனலுமாம். அப்பா - இங்கே சித்தர்கள் வழங்குவதோர் சொல் விழுக்காடு. "தரிசித்து நேசமுடன் பூசித்துந் திரிகின்ற சித்தரப்பா" என்றார் இரட்டையரும். இச் சிறு உணவைத்

தருவீரேல் மிகப்பெரிய தொழில்களைச் செய்வேமென்பது தோன்றுதல் காண்க. கூழுண்டோ - அதிக உணவுண்டோ; ஓ - எதிர் மறை; இல்லை யென்றபடி. மாதவர் ஈண்டுப் பெரிய சித்தரை யுணர்த்திற்று. ஆணை - சபதமொழி. மருந்தில்லாதே என்பது நடுநிலைத் தீபகம். "ஒளித்தரவா" என்பதை, தரா என்ற பொருளில் ஒளி + தரவு + ஆ எனவும்; பாம்பு என்ற பொருளில் ஒளித்து + அரவு + ஆ எனவும் பிரித்துப் பொருள்கொள்க. இசைவிப்போம் - யாரையும் உடன்படும்படி செய்விப்போம், பிறவினை; ஆ - ஆகவென்பதன் கடைக்குறை. தீர - அளிக்க வென்க; தீர-காரியப்பொருளில் வந்த செயவெனெச்சம் எதிர் காலங் காட்டிற்று. கடை என்பது பெயருரும், கடைமருந்து என்புழி வினைத்தொகையுமாம். சித்தரேம் - எம் தன்மைப் பன்மை விகுதி.

இது முன்செய்யுள் போன்றதே. (௩௦)

தலைவியைப் புகழ்தல்

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

இதழி யந்தொடைய ரருணை யங்கிரியி
    லிரத முந்திவிடு வவையனே
பதிய டைந்து*மறு கினில்வ சந்தனதி
    படையெ ழுந்ததது பகருவேன்
புதிய கொம்புசிலை வளையி ரண்டருகு
    பொழியும் வெம்பகழி போரமு
வுதிய தந்தமத களிறுடன் கதலி
    வுபய தண்டவரு கின்றதே. ௩௧

*யடைந்த எனவும் பிரதிபேதம், வசந்தனது எனவும் பிரதிபேதம்.

இதழி தொடையர் - கொன்றைமலர் மாலையை அணிந்த அருணாசலேசுரரது, அருணகிரியில் - அருணகிரிப்பதியிலுள்ள சந்நிதியின்கண், இரதம் முந்தி விடுவலவனே - இரதத்தை முன்னே செலுத்துகின்ற தேர்ப்பாகனே! பதி அடைந்து - ஊரை யடைந்து, மறுகினில் - வீதியில், வசந்தன் அதிபடை - மன்மதனது மாதர்களாகிய மிக்க சேனைகள், எழுந்தது பகருவேன் - படையடைந்ததைக் கூறுவேன் (கேட்பாயாக); புதிய கொம்பு - புதுமையான பூங்கொம்பும் [இடையும்], சிலை - வில்லும் [புருவமும்], வளை - சங்கும் [கழுத்தும்], இரண்டு அருகு பொழியும் - இரண்டு பக்கத்திலுஞ் சொரிகின்ற, வெம்பகழி - கொடிய அம்புகளும் [கண்களும்], போர்அறு - போர்த்தொழில் நீங்காத, உதயம் தந்தம் மதம்களிறு - மூளைத்தலையுடைய கொம்புகளையும் மதத்தையுமுடைய யானையோடு [முலைகளோடு], கதலி உபய தண்டு - கதலிக்கொடியும் இரண்டு தண்டாயுதமும் [தொடைகளும்], வருகின்றது - வாரா நின்றது.

இக்கவி தலைவன் தலைவியின் உருவெளித் தோற்றங் கண்டு பாகனோடு கூறினதென்க.

இதழி அம்தொடையர், அருணை அம்கிரி - இவற்றுள், அம் சாரியை. அன்றி அழகுமாம். தொடையர் - உயர்திணைப் பலர்பாற் படர்க்கைப் பெயர். தொடை - தொடு பகுதி, ஐ செயப்படுபொருள் விகுதி சேர்ந்து தொடையாயிற்று. *முந்தி - இடைச்சொல்; ஈண்டு காலத்தினை யுணர்த்திற்று. வசந்தன் - வேனிற் காலத்திற்குரியவன். சித்திரை மாசமும் வைகாசி மாசமும் ஆகிய இளவேனிற் காலத்தே மன்மதனுக்குப் போர்த் தொழிலில் ஊக்கமும் களிப்பும் மிகுதியும் உண்டாதல்பற்றி இவ்வாறு கூறப்பட்டது. கொம்பு - பூங்கொம்பு. எழுந்தது -

---

* முந்தி - இடையடியாகப் பிறந்த வினையெச்சம்; முந்து - பகுதி, இ - வினையெச்ச விகுதி.

அது பகுதிப்பொருள் விகுதி; வினையாலணையும் பெயர். கதலி - ஒருவகைக் கொடிவிசேடம். உபயகதலி தண்டு - இரண்டு வாழைத்தண்டு. அரு - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

இது, ஒன்று மூன்று ஐந்துசீர்கள் புளிமாச்சீரும், இரண்டு நான்கு ஆறுசீர்கள் கூவிளங்காய்ச்சீரும், ஈற்றுச்சீர் விளச்சீரும் பெற்று வந்த எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம். தனன தந்ததன தனன தந்ததன தனன தந்ததன தனதனா என்பது இதன் சந்தம். (சக)

ஒன்பதின்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

வரைக்கனக சாப சோண கிரிப்புனித கால கால
மதிக்குநெடு மாயர் போலவே
தரைக்குளினி யாரி யாவ ரவர்க்குமுனி லாம னீடு
தழற்சிகரி யாக னீதியோ
விரைக்கமல வோடை யாவர் புரத்தைமுனி பாண மாவர்
விரித்தகொடி யாவ ரீதரா
விரக்குமனை தோறு மேறி நடத்துமெரு தாவர் மேவி
யிடத்திலுறை தேவி யாவரே. சஉ

கனகம் வரைசாப - மேருமலையை வில்லாக வுடையவரே சோணகிரிபுனித - அருணாசலத்திலுள்ள நின்மலரே, காலகால- யமனுக்கு யமனாயுள்ளவரே, (உம்மை) மதிக்கும் - மேலாகக் கருதுகின்ற, நெடு மாயர்போல - நீண்ட திருமாலைப்போல, தரைக்குள் - பூமியினிடத்து, இனியார் யாவர் - இனிமையுடையார் யாரிருக்கின்றார்? விரை கமலம் ஓடை ஆவர் - வாசனை பொருந்திய தாமரை மலர்களையுடைய தடாகமாயிருப்பவரும், புரத்தை முனி பாணம் ஆவர் - திரிபுரத்தை யழித்தற்கு அம்பா யிருப்பவரும், விரித்த கொடி அவா - விரிக்கப்பட்ட கொடியா

[illegible]ப்பவரும், ஈது அலால் - இவையல்லாமல், இரக்கும் மனை தோறும் - யாசிக்கின்ற வீடுகள்தோறும், ஏறிநடத்தும் - ஏறி நடத்துகின்ற, எருது ஆவர் - இடபமாயிருப்பவரும், இடத்தில் உறை - இடப்பக்கத்தில் வீற்றிருக்கின்ற, தேவி ஆவர் - அம்பிகையாயிருப்பவரும், (அவர் ஆதலால்) அவர்க்குமுன் நில்லாமல் - அத்திருமாலுக்கு முன்னே காட்சிகொடுத்து நில்லாமல், நீடழல் சிகரி ஆகல் - நீண்ட அக்கினி மலையாகுதல், நீதியோ - நியாயமாமோ?

மாயர் - கருநிறமுடையவர்; மாயம் - கறுப்பு. புனிதன் - தூய்மை வாய்ந்தவன்; ஆகவே, மனமில்லாதவன் என்றவாறும். காலகால - நான்காம் வேற்றுமைத் தொகை; பகைப்பொருள். தரை - எல்லாப் பொருள்களையுந் தரிப்பதென பூமிக்குக் காரணக்குறி. நெடுமைப்பண்பின் ஈறுகெட்டது. இனியார் - குறிப்பு வினையாலணையும் பெயர். இனிமை யென்னும் பண்பினடியாகப் பிறந்தபெயர். யாவர் - வினாவினைக்குறிப்பு ; ஈண்டு இன்மை குறித்தது. முன் - இடப்பொருளில் வந்த இடைச்சொல். நிலாமல் - தொகுத்தல் விகாரம்; எதிர்மறை வினையெச்சம். சிகரி - மலை; சிகரத்தை யுடையது. நீதியோ - ஓ வினாப்பொருள். போலவே - ஏ தேற்றம். கமலம் - கம் - நீர், அலம் அலங்கரிப்பது எனத் தாமரைக்குக் காரணக்குறி யாயிற்று. ஓடை - ஓடு பகுதி, ஐ செயப்படுபொருள் விகுதி. எண்ணும்மைகள் தொக்கன. கமலவோடையாவர் என்றது - மாயர் அவயவமெல்லாந் தாமரை வடிவமாயிருத்தல் காரணம்பற்றி; ஈண்டுக் கண்ணாகிய தாமரை மலரைக்கொண்டு பூசித்தலால் அத்தாமரை மலர்க்கிடமா யிருத்தல்பற்றி யிவ்வாறு கூறினார். ஈது - இது வென்னுஞ் சுட்டு முதனீண்டது; தொழிற் பன்மைக்குச் சாதி ஒருமையாக வந்தது. தோறும் இடப்பன்மைப் பொருளில் வந்த இடைச்சொல்.

இது, ஒன்று நான்கு ஏழுசீர்கள் கருவிளங்காய்ச் சீரும், இரண்டு மூன்று ஐந்து ஆறு எட்டு சீர்கள் தேமாச்சீரும், ஒன்ப தாஞ்சீர் கூவிளச்சீரும் பெற்றுவந்த ஒன்பதின்சீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம். தனத்ததன தான தான தனத்ததன தான தான தனத்ததன தான தானன என்னுஞ் சந்தம் பெற்று வந்தது. (சஉ)

கட்டளைக்கலித்துறை

ஆனிட பக்கொடிச் சோணா சலனென்று மன்பர்மலர்
தானிட முக்தி தரும்பெரு மானென்றுஞ் சம்புவென்றுங
கானிட வேடன்முன் னூனிட வுண்டது கண்டுமொரு
மானிட மானவ னைத்தேவர் செய்வதென் வந்தனையே. சங

ஆன் இடபம்கொடி - இடபக்கொடியையுடைய, சோணா சலன் என்றும் - அருணாசலன் என்றும், அன்பர் - அடியார்கள், மலர்தான் இட - பூக்களால் அர்ச்சிக்க, முத்திதரும் - மோட்சத் தைக் கொடுக்கின்ற, பெருமான் என்றும் - பெரியோன் என் றும், சம்பு என்றும் - சம்பு என்றுந் தோத்திரித்து, கான் இடம் வேடன் - காட்டிலுள்ள வேடன், முன் ஊன்இட - முன்னளில் மாமிசத்தைப் படைக்க, உண்டது கண்டும் - புசித்ததைப் பார்த் தும், ஒரு மானிடம் ஆனவனை - ஒரு மனிதன் ஆனவனை (ஒப் பற்ற உமாதேவியை யிடப்பாகத்தில் வைத்தவனை), தேவர் - தேவர்கள், வந்தனை - வழிபாடு, செய்வது என் - செய்வது யாது காரணம்?

ஆன் - இடபம்; ஒருபொருட் பன்மொழி. சம்பு-சுகத்தைக் கொடுப்பவன் என்பது பொருள். வேடன் என்றது கண்ணப்ப நாயனாரை. உண்டது - வினையாலணையும் பெயர். என்றும்-உம் எண்; கண்டும் - உம் இழிவுசிறப்பு. மானிடமாதல் அன்பர்கள் பொருட்டு; மான் இடம்ஆனவன் - மானை இடக் கையிலேந்தி

மாயமொன்று விலைப்பொருளில் வந்தது. மானிட மானவ னாக நீயவர் செய்வதென் வந்தனையே என்பது வஞ்சப் புகழ்ச்சியணி. ஊனவன் - இறந்தகாலத் தெரிநிலை வினையாலணை யும் பெயர்.

இது, நேரசை முதலதாய் வந்த கட்டளைக் கலித்துறை

கள

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

தனையிருக்கு மறைதுதிக்கு மருணை நாதன்
சரணமலர் புகழ்களியேஞ் சக்ர பூசை
வினையிருக்கு மவர்க்கெளிதோ வரிதா னையோ
விதிவசத்தால் விவரமற்ற விதஞ்சொல் வேனே
பனையிருக்க நெடியகஞ்சா விருக்க வீணே
பச்சையா லிலைதுயின்றான் பனையன் றேளி
யனையிருக்கப் பணிதுயின்றான் மதுவாந் தெய்வ
வாழிவிட்டுப் பாற்கடன்மீ தழுந்தி னானே. கஉ

(யாம்) தனை - தன்னை, இருக்குமறை - இருக்கு முதலா கிய வேதங்கள், துதிக்கும் - துதிக்கின்ற, அருணநாதன் - அரு ணாசலேசுரரது, சரணமலர் - திருவடித்தாமரை மலர்களை, புகழ் - புகழுகின்ற, களியேம் - கட்குடிப்பவராவோம்; சக்ரபூசை - சத்தி பூசையானது, வினை இருக்குமவர்க்கு - பாவமுள்ளவர்களுக்கு, எளிதோ - எளிதாகுமோ? அரிதான் - திருமால், ஐயோ —, விதி வசத்தால் - ஊழ்வினை வயத்தால், விவரம்அற்ற - உய்யும்வகை நீங்கிய, விதம்சொல்வேன் - செய்கையைக் கூறுவேன்; பனை இருக்க - பனைமரம் இருக்க, நெடிய கஞ்சாஇருக்க - நீண்ட கஞ்சாச்செடி யிருக்கவும், வீணே - பயனில்லாமல், பச்சை ஆலிலை - பசுமை பொருந்திய ஆலந்தழையின்மேல், துயின்

ருன்-உறங்கினன், பனையன் தேளி அனைஇருக்க - பனையனும் தேளியும் அனையும் ஆகியமீன்கள் இருக்க, பணிதுயின்ருன் - பாம்பின்மேல் நித்திரை செய்தான், மதுஆம் தெய்வம் ஆழி விட்டு - கள்ளாகிய தெய்வத்தன்மை பொருந்திய கடலை நீக்கி, பால்கடல்மீது - திருப்பாற் கடலின்கண், அழுந்தினன் - மூழ்கினன்.

கட்குடியர் அக்கள் முதலியவற்றைச் சிறப்பித்துக் கூறுவதாகச் செய்யுள் செய்வது, களியென்னும் உறுப்பிற்கு இலக்கணமாம்.

தான்என்பது உருபேற்றதனல் தன்னை எனக் குறுகியது. யாம் தோன்ருவெழுவாய். தனை தன்னையென்பதன் தொகுத்தல். களியேம் - தன்மைப் பன்மைக்குறிப்பு முற்று. சக்கர பூசையாவது, சக்கரமெழுதி தேவியின் மந்திரங்களை யடைத்துச் செய்யும்பூசை. வினை - தீவினை; அதாவது பாவம். எளிதோ - ஓ எதிர்மறைப்பொருள். ஐயோ - இரக்கக்குறிப்பு. பனையன், தேளி, அனை - மீன்களின் விகற்பம். அழுந்தல் - பள்ளிகொள்ளல். வீணே - ஏ தேற்றம். ஏனைய அசைநிலை. ஆகும் என்பது ஆயெனத் தொகுத்தலாயிற்று. செவ்வெண் உம்மைகள் தொக்கன. பணி - பணத்தையுடையது. பணம்-படம். அரிதான் என்பதில் தான் அசைநிலை; அரி - (அசுராதியரை) அழிப்பவன் என்பது பொருள்.

இது, ஒன்று இரண்டு ஐந்து ஆறுசீர்கள் காய்ச்சீரும், ஏனைய மாச்சீரும் பெற்றுவந்த எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம். (சச)

இதுவுமது

இருவிகற்பநேரிசைவெண்பா

ஆனர் கொடியா ரருணை புரிக்களியேம்
வானடே ரேனே மதியற்ருர்—மேனளிற்

சும்மாகஞ் சாவிலையே தூளிடித்துத் தின்றாலுந்
தம்மாகஞ் சாவிலையே தான். சரு

(யாங்கள்) ஆன்ஆர் கொடியார் - இடபம் எழுதிய கொடி பிறையுடைய சிவபெருமானாரது, அருணபுரி - அருணைப்பதியி லுள்ள, களியேம் - கட்குடியாராவோம்; கஞ்சாஇலை - கஞ்சா இலையை, சும்மா - ஒன்றுங் கலவாமல், தூள்இடித்துத் தின்றா லும்-பொடியாக இடித்து உண்டாலும், தம்ஆகம் சாவுஇலை-தம் முடைய உடம்பு அழிதல்இல்லை, (இவ்வாறிருக்க) மேல்நாளில்-முற்காலத்தில், வான்நாடர் - தேவர்கள், ஏனோ - யாது காரணமோ, (மலை முதலியவற்றால் வருந்திக் கடல்கடைந்து அமு தெடுத்துண்டு) மதிஅற்றார் - புத்தியற்றார்கள்.

தான் - அசைநிலை. கஞ்சாஇலை மயக்கத்தைத் தருவது. களி யர் களிப்பால் இவ்வாறு கூறினார்.

இது நாள் என்னும் வாய்பாட்டான் முடிந்த இருவிகற்ப நேரிசை வெண்பா. (சரு)

பிச்சியார்

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

தாமணிவர் திரிசூல மெதிர்கண் டார்மேற்
சக்கரத்தை விடுவர்சிவ சமயத் தாவர்
காமுகரை யாண்டுகொளார் சிவநூல் கேட்பர்
கருத்தின்மா றெரிசனமே காட்டா நிற்ப
ராமையர வணிதொடையார் விடையார் வாழு
மருணகிரி வளநாட்டி லகங்க டோறுஞ்
சேமநிதி யெனவுலவும் பிச்சி யார்தந்
திருப்பெயரை வெளியாக்கித் திரிகின்றாரே

ஆமை - யாமை யோட்டையும், அரவு - பாம்பையும், அணி தொடையார் - அணிகின்ற மாலையாக வுடையவராகிய, விடையார் - இடப வாகனத்தையுடைய கடவுள், வாழும் - வாழ்கின்ற, வளம் அருணகிரி நாட்டில் - வளப்பம் பொருந்திய அருணசலத்தையுடைய தேசத்திலுள்ள, அகங்கள் தோறும் - வீடுகளெல்லாம், சேமம் நிதிஎன - காவலோடு வைக்கப்பட்ட செல்வத்தைப் போல, உலவும் - திரிகின்ற, பிச்சியார் - பிச்சையேற்கும் பெண்கள், தாம் - தாங்கள், திரிசூலம் அணிவர் - முத்தலைவேலைத் தரித்துக் கொள்ளுவார், எதிர் - தமக்கு நேரே, கண்டார் மேல் - பார்த்தவர்களின் மேல், சக்கு அரத்தை விடுவர் - கண்ணாகிய அரத்தைச் செலுத்துவார், காமுகரை - காமிகளை, ஆண்டு கொளார் - பாதுகாத்துக் கொள்ளார்; சிவநூல் கேட்பர் - சைவ நூல்களைக் கேட்பார், கருத்தில் - மனதில், மால் தரிசனமே காட்டாநிற்பர் - மயக்கத் தோற்றத்தையே காட்டுகின்றார்; (இவ்வாறாகிய காரணத்தால்) தம் திருப்பெயரை - தம்முடைய அழகிய பிச்சியாரென்னும் பெயரை வெளி ஆக்கி திரிகின்றார் - வெளிப்படுத்தி யலைகின்றார்.

சூல முதலிய சிவ சின்னங்களைத் தரித்து, வீடுகடோறும் பிச்சையேற்கும் மகளிரைக் காமுகன் நோக்கிக் கூறியதாகக் கூறுவது பிச்சியார் என்னும் உறுப்புக்கு இலக்கணமாம். இது காலத்தான் மருவியது. பிச்சியார் என்பதற்குப் பயித்தியமுடைய பெண்கள் என்பதும் ஒரு பொருளாதலால் "தம் பெயரை வெளியாக்கித் திரிகின்றார்" என்றார் என்னை? பயித்தியமுடையாளைப் போலச் சொல்லுஞ் செயலு மாறுபட்டிருப்பதனால். பிச்சு - பித்து என்பதன் போலி. ஆமை - முதலாகு பெயர். அணுகுதற்கு அரிதாயிருத்தல் நோக்கிச் சேமநிதியென்றார். தரிசனமே - ஏ தேற்றம்; ஏனைய அசை நிலை. சக்கரமென்பதை ஒரு சொல்லாகக் கொண்டு தனத்தை யுணர்த்

[illegible] என்பாருமுளர். திருமால் கூர்மாவதார மெடுத்துச் [illegible] திரியுங்காலை அச்செருக்கினை யடக்கி அத [illegible] யணிந்தனர். அது, "முற்றலாமை யிளநாகமோ [illegible] கொம்பவை பூண்டு" என்ற ஆளுடைய பிள்ளையார் திருவாக்கானு முணர்க. தாம் - படர்க்கைப் பன்மைப்பெயர்; அசை நிலையுமாம். காட்டாநிற்பர் - நிகழ்கால வினைமுற்று.

முதல், மூன்று, இரண்டு, ஐந்து, ஆறு சீர்கள் காய்ச்சீரும்; ஏனைய மாச்சீரும் பெற்றுவந்த எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம். (௬௬)

இதுவுமது.

கட்டளைக்கலிப்பா

தில்லை மன்றுண டம்புரி பாதனார்
தேவ ராயர் திருவரு ணைக்குளே
முல்லை மல்லிகை சண்பகம் பிச்சியார்
மொய்த்த வார்குழன் மோகனப் பிச்சியார்
நல்ல மேனியும் பொற்றிரு வேடமே
நாடி யிட்டதும் பொற்றிரு வேடமே
யில்லை யாயினு மிவ்விடை யையமே
யேற்க வந்தது மிவ்விடை யையமே. ௬௭

தில்லை மன்றுள் - திருத்தில்லைப்பதியின்கணுள்ள கனகசபையின்கண், நடம்புரி பாதனார் - திருக்கூத்தியற்றுந் திருவடியையுடையவரும், தேவராயர் - தேவராயரென்னுந் திருப்பெயரையுடையவருமாகிய சிவபெருமானாரது, திருவருணைக்குள் - திருவருணைப் பதியினிடத்துள்ள, முல்லை -, மல்லிகை -, சண்பகம் -, பிச்சி -, ஆகிய இவைகளின் பூக்கள், மொய்த்த - நெருங்கிய, வார்குழல் - நீண்ட கூந்தலையுடைய, மோகனம் - மயக்கு[illegible]யுடைய, பிச்சியார் - பிச்சைக்கு வருகின்ற மகளிரது,

நல்ல மேனியும் - செவ்வையான வடிவமும், பொன் திரு வேடமே - இலக்குமியின் அழகிய வேடமே, நாடி இட்டதும் - விரும்பி யணிந்து கொண்டதும், பொன் திருவேடமே-பொன்னாற் செய்யப்பட்ட சிறப்புற்ற வாபரணமே, இல்லை ஆயினும் - இல்லையானாலும், இ விடை ஐயமே - இந்த விடையானது சந்தேகமே, ஏற்க வந்ததும் - யாசிக்க வந்ததும், இ இடை - இவ்விடத்தில், ஐயமே - பிச்சையேயாகும்.

பிச்சி - சாதிப்பூ வெனலுமாம். பொன் திருவேடம் என்பதற்குப் பொன்னாலாகிய சீதேவி யென்னுந் தலைக்கோல மெனினும், பொன்னாற் செய்த சிறப்புற்ற காதணியெனினும் பொருந்தும். இல்லையென்று துணிந்தாலும் மேலுள்ள உறுப்புக்க ளிருப்பதால் இந்த விடையானது சந்தேகமென்றார். இடையெனப் பிரித்து மருங்கு எனப் பொருள்கொள்ளலுமாம். அருணைக்குளே - ஏ அசைநிலை; ஏனைய தேற்றம். ஏற்க - தெரிநிலை வினையெச்சம்; ஏல் - பகுதி, அ-வினையெச்ச விகுதி, கு - சாரியை.

இதில் முதலடி நீங்க மற்றையடிகள் இடை மடக்காய் வந்தன. முதலில் மாச்சீரும் மற்ற மூன்றுங் கூவிளச்சீர்களும் பெரும்பாலும் பெற்று நாற்சீரால் வந்தது அரையடியாகவும், அஃதிரட்டி கொண்டது ஓரடியாகவும், அவ்வடி நான்கு கொண்டு அரையடிக்கு நேரசை முதலாய் ஒற்றொழித்துப் பதினேரெழுத்துப் பெற்று வந்த கட்டளைக் கலிப்பா. (சஎ)

கார் கண்டு பாகனோடு சொல்லல்

கட்டளைக்கலித்துறை

அயங்காட் டியமறை யார்விடை யாள ரருணைவெற்பிற்
புயங்காட் டியபணித் தேர்வல வாமுன்பு போனகொண்டல்
சயங்காட்டிக் கோபமுஞ் சாபமுங் காட்டித் தடித்திடித்துப்
பயங்காட்டி னலஞ்சு மேதனி யேநின்ற பைங்கொடியே. சஅ

அயங்காட்டிய - குதிரையாகக் காட்டிய, மறையார் - வேதத்தினை யுடையவராகிய, விடையாளர் - இடபவாகனத்தை யுடையவரது, அருணை வெற்பின் - அருணகிரிப் பதியி லுள்ள மலையைப்போல, புயம் காட்டிய - தோள்களைக் காட்டிய, மணித்தேர்வலவா - மணிகள் கட்டிய தேர்ப்பாகனே! முன்பு போன - முன்னே சென்ற, கொண்டல் - மேகமானது, சயம் காட்டி - கேட்டைத் தெரிவித்து [வெற்றியைக் காட்டி], கோபமும் - சினத்தையும் [இந்திரகோபப் பூச்சியையும்], சாபமும் - வில்லையும் [இந்திர தனுசையும்], காட்டி - காண்பித்து, தடித்து இடித்து - கனத்து முழக்கி [மின்னியிடித்து] பயங் காட்டி னால் - அச்சத்தைக் காண்பித்தால் [நீரைக் காண்பித்தால்], தனியே நின்ற - தனியாக நின்ற, பை கொடி - பைங்கொடி போன்ற தலைவி [பசிய பூங்கொடியானது], அஞ்சும்-பயப்படும். [ஆதலால் தேரை விரைந்து விடுவாயாக.]

தலைவன், கார்காலங் கண்டு பாகனிடம், தலைவி மிக வருந்துவாள் ஆதலால் தேரை விரைந்து விடு என்று கூறியது.

சயம் - கேடு என்ற பொருளில் க்ஷயம், வெற்றி என்னும் பொருளில் ஜயம் என்னும் வடமொழிகளின் திரிபு. ஏ - இரண்டும் அசைநிலைகள்.

இது, நிரையசை முதலதாய் ஒற்றெழுத் தொழித்துப் பதினேழெழுத்துப் பெற்று வந்த கட்டளைக் கலித்துறை. (௪௮)

இருவிகற்பநேரிசைவெண்பா

பைங்கட் புலிக்குப் பரிபவத்தைக் காட்டிநர
சிங்கத் தினையடர்த்துச் சீறியே—வெங்கைப்
புழைக்குஞ் சரமுரித்துப் போர்த்த தருணைக்கே
தழைக்குஞ் சரபமொன்று தான். ௪௯

அருணைக்கு - அருணைப் பதியினிடத்து, தழைக்கும் சரயம் ஒன்று - சிறப்புற் றோங்கிய ஒரு சரபமானது, பை கண் புலிக்கு - பசிய கண்ணையுடைய புலிக்கு, பரிபவத்தை காட்டி - துன்பத்தை யுண்டுபண்ணி, நரசிங்கத்தினை சீறி அடர்த்து - நரசிங்கத்தினைக் கோபித்து வருத்தி, வெம்புழை கை - கொடிய துளை பொருந்திய கையினையுடைய, குஞ்சரம் உரித்து - யானையை யுரித்து, போர்த்தது - அதன் தோலைப் போர்த்தது.

புலி - தாருகாவன முனிவர்களேவிய புலி. அதன் தோலை ஆடையாக உடுத்தின காரணம்பற்றி, புலிக்குப் பரிபவத்தைக் காட்டி என்றார். நரசிங்கம் - திருமால் இரணியனைக் கொல்வதற்கு எடுத்த வடிவம். குஞ்சரம் - கயாசூரன். சரபம் - எண் காற்புள். அருணைக்கு என ஏழாம் வேற்றுமை நான்கனுருபாக மயங்கிற்று. தான், ஏ அசை நிலைகள். இது சிவபெருமான் எடுத்த சரப வடிவத்தை வியந்து கூறிய தென்க.

இது, நாளென்ற வாய்பாட்டான் வந்த இரு விகற்ப நேரிசை வெண்பா. (சக)

குறம்

பதினன்குசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

ஒன்று மூன்று நாமு ரைக்க வந்து கேளு மரிவைமீ
  ரூதய் மான சுளகு நெல்லு மொற்றை பட்ட தாதலாற்
கன்று மானு மழுவு மாக வொருவர் வந்து தோன்றினர்
  கண்ட மட்டி லேக றுப்பர் கைக்க பால ரவரையுஞ்
சென்று நாடி லருணை மீது காண லாகு நாமமுந்
  தேவ ராய ரவர லாது தெய்வம் வேறு கண்டிலே
னின்று வாடு மிவட னசை யிடர்த வீர்ப்ப ராதலா
  னீறு கொண்டு மூன்றி ரேகை நெற்றி மீதி லெழுதுமே.

அரிவையீர்!- பெண்களே! நாம் - யாம், உரைக்க - குறி **கூற, வந்து** கேளும் - வந்து கேளுங்கள், உதயம் ஆன - **தோன்றி** வந்த, சுளகு நெல்லும் - முறத்திலுள்ள நெல்லும், **ஒன்றும் மூன்றும்** - ஒன்றாகவும் மூன்றாகவும் எண்ணும்போது, **ஒற்றைபட்டது** - ஒற்றைபட விருந்தது, ஆதலால் - ஆதலினால், **மான்கன்றும்** மழுவும் ஆக - கையிலே மான்கன்றும் மழு வாயுதமுமாக, ஒருவர் வந்து தோன்றினார் - ஒருவர் வந்து என் **கண்ணெதிர்ப்பட்டார்**, கண்டமட்டில் - பார்த்தவளவிலே [கழுத்தளவிலே], கறுப்பர் - கோபிப்பர் [நீல நிறத்தை யுடையவர்], கைகபாலர் - கையிலே பிரமகபாலத்தை யுடையவர், அவரையும் - அத் தலைவரையும், நாடில் - அடைய விரும்பினால், அருணைமீது - திருவருணைப்பதியில், சென்று - போய், **காணலாகும்** - பார்க்கலாகும்; நாமமும் - பெயரும், தேவராயர்- தேவராய ரென்பது; அவர் அலாது - அவரல்லாமல், வேறு தெய்வம் - வேறு தெய்வத்தை, கண்டிலேம் - பார்த்திலோம்; நின்று வாடும் - நின்று வருந்துகின்ற, இவள் தன் ஆசை - இவளுடைய ஆசையினாலுண்டாகிய, இடர் தவிர்ப்பர் - துன்பத்தை நீக்குவர்; ஆதலால் - ஆதலினால், நெற்றி மீதில் - நெற்றியின் மேல், நீறுகொண்டு - விபூதியினால், மூன்று இரேகை - திரிபுண்டரமாக, எழுதும் - அணியுங்கள்.

தலைவி தலைமகனைக் கண்டு காமுற்று மயங்கிநிற்கும் நிலைமைக்கண் தம்மிடம் வந்த, குறி கண்டறிந்து கூறவல்ல குறத்தியாகிய கட்டுவிச்சியைக் குறிவினவ, குறத்தி குறிதேர்ந்து கூறுவதாகச் செய்யுள் செய்வது குறம் என்னும் உறுப்பின் இலக்கணமாம்.

சுளகிலிட்ட நெல்லை யெண்ணலாவது, நெல்லை மூன்றகூறாக்கி யொருகூற்றை யெண்ணினால் ஒற்றைபட வருவதும் இரட்டைபட வருவதுமாக வெண்ணுதலென்க. ஒற்றைபட

வருவது நன்மையாகவும், இரட்டைபட வருவது அஃதின்மை யாகவுங் கொள்வர். சுளகிலிட்ட நெல்லைக் கையிலள்ளிக் கீழிட்டால் கையிலொட்டியிருக்கின்ற நெல்லையெண்ணிக்கூறு வது முண்டென்பர்.

மீனாட்சியம்மை குறத்தில், "இந்நாழி நெல்லையுமுக் கூறு செய்தோர் கூற்றை யிரட்டைபட வெண்ணினபோ தொற்றை பட்டதம்மே" எனவுங் கூறுவர்.

குறம் - தொழிற் பெயர்; குறிகூற லென்னும் பொருளது. ஏ - அசைநிலை. அரிவைமீர் - விளி. தான் - அசைநிலை; தன் எனக் குறுகியது. கண்டிலேம் - தன்மைப் பன்மை வினைமுற்று. கறுப்பு - வெகுளிப் பொருள்: அது, "கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள" (தொல். சொல். உரி. எஎ) என்றதனு னுணர்க. இதனுன், ஸ்ரீகண்டருத்திர ரென்னுங் குறிப்புத் தோன்றுதல் காண்க.

இது, எழு பதினன்கு சீர்கள் விளச்சீரும், ஏனைய மாச் சீரும் பெற்றுவந்த பதினன்குசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம். (௬O)

பாங்கி தலைவனை வேண்டல்

இதுவுமது

நெற்றி மீது கண்ப டைத்த வும்மை மார னெய்வனோ
நீர ணிந்த வரவி ருக்க நெடிய தென்றன் முடுகுமோ
வெற்றி யான தாளி ருக்க மதிய மும்மை நலியுமோ
விரவு கங்கு லுமது கண்ணின் வெயிலின் முன்பு நிற்குமோ
கற்றை யான குழலி யெந்த வுதவி கொண்டு பகைவெலுங்
கருணை கூர்தெ னருணை மேவு கலியு கத்து மெய்யரே
செற்ற லார்கள் புரமெ ரித்த புழுக ணிப்ர தாபரே
தேவ ராய ரேசு கந்த தினவ சந்த ராயரே. ௬க

கருணாகரர் - கிருபை யிருந்த, தென் அருணைமேவு - அழகிய அருணைப்பதியில் வீற்றிருக்கின்ற, கலியுகத்து மெய்யரே - கலியுகத்து மெய்யரென்னுந் திருநாமமுடையவரே! செற்றலர்கள் - பகைவர்களுடைய, புரம் எரித்த - முப்புரத்தை யெரித்த, புழுகு அணி ப்ரதாபரே - புழுகணிப் பிரதாபரென்னுந் திருநாமமுடையவரே! தேவராயரே - தேவராயரென்னுந் திருநாமமுடையவரே! தினம் சுகந்தம் வசந்தராயரே - தினமும் நல்ல வாசனையைத் தருகின்ற வசந்தராயரென்னுந் திருநாமமுடையவரே! நெற்றிமீது - நெற்றியின்மேல், கண்படைத்த கண்ணைப்பெற்ற, உம்மை-உம்மீது, மாரன் எய்வனோ- மன்மதன் பாணங்களைப் பிரயோகிப்பானோ? நீர்அணிந்த-நீர் ஆபரணமாகத் தரித்த, அரவு இருக்க - பாம்பிருக்க, நெடிய தென்றல் - நீண்ட தூரத்திலிருந்து வருகின்ற தென்றற்காற்று, மூடுமோ - விரைவாக வீசி வருத்துமோ? வெற்றி ஆன தாள் இருக்க - வெற்றியடைந்த திருவடியிருக்க, உம்மை மதியம் நலியுமோ-உம்மைச் சந்திரன் வருத்துவானோ? விரவு கங்குல் - நீண்ட இராக்காலமானது, உமது - உம்முடைய, கண்ணின் வெயிலின் - கண்ணாகிய சூரியனுக்கு, முன்பு நிற்குமோ - முன்னே நிற்குமோ? கற்றையான குழலி - தொகுதியான கூந்தலையுடைய தலைவி, எந்த உதவிகொண்டு - எந்த உதவியினால், பகைவெலும் - பகையை வெல்லுவாள்?

மாரனும், தென்றலும், மதியமும், கங்குலுமாகிய பகைகளை வெல்லுமுதவி உமக்கிருப்பது போலத் தலைவிக்கு இன்மையால் உம்முதவியால் வெல்ல வேண்டுமெனப் பாங்கி கூறினாளென்க. மெய்யர் - கண்கூடாக விளங்குகின்றவர். பிரதாபர் - கீர்த்தியை யுடையவர். தேவராயர் - தேவர்களுக்குத் தலைவர். சுகந்த தினம்-வசந்த காலத்திற்கு விசேடணமாம். வசந்தராயர்- வசந்த காலத்தில் விழாக்கொள்ளுகின்ற தலைவர். மெய்யரே,

ப்ரதாபரே, தேவராயரே என்பவை விளிகள். ஓகாரங்கள் எதிர் மறைப்பொருள். பாம்பிற்கு வாதாசனன் என்னும் பெயருண்மையான், 'அரவிருக்க நெடிய தென்றல் மூடுகுமோ' என்றாள். வெற்றியான தாள் என்றது சந்திரனைத் தேய்த்ததும், யமனை யுதைத்ததும்பற்றி. மதியம் - அம்சாரியை. கண்ணின்வெயில் - பண்புத்தொகை. கண்ணின் - இன்சாரியை. வெயிலின் - இன் உருபுமயக்கம். எந்த என்பது எவினாவின் மரூஉ. உதவிகொண்டு-கொண்டு மூன்றும் வேற்றுமைச்சொல்லுருபு. வெலும்-தொகுத்தல்; செய்யுமென்முற்று. ஆன - இறந்தகாலப் பெயரெச்சம்; ஆ பகுதி, அ பெயரெச்ச விகுதி, ன் இறந்தகால இடைநிலை.

செற்றலார்கள் புரமெரித்த வரலாறு:—முன்னொரு காலத்தில் தாருகாக்கன், கமலாக்கன், வித்துன்மாலி என்னும் மூன்றசுரர்க ளிருந்தனர். அவர்கள் தவஞ்செய்து, பிரமதேவனிடம் தனித்தனி பொன், வெள்ளி, இரும்புகளாலாகி யெங்கும் பறந்து செல்லும் அழியாத மூன்றரண்களைப் பெற்ற பின்னர், எங்கும் பறந்துசென்று தேவர் முதலிய யாவரையும் துன்புறுத்தினர். திருமால் பலவித சூழ்ச்சி செய்தும், சிவபூஜா பக்தியிற் சிறந்த அவர்களை வெல்ல முடியாதவராய், சிவபெருமானிடம் முறையிட, அப்பெருமான் பூமியைத் தேர்த்தட்டாகவும், சூரிய சந்திரர்களைத் தேருருளையாகவும், தேவர்களைத் தேருறுப்புக்களாகவும், பிரமனை வலவனாகவும், மேருவை வில்லாகவும், ஆதிசேடனை நாணாகவும், திருமாலை அம்பாகவும், அக்கினியை அம்பின் முனையாகவும், காற்றை அம்பினீர்க்காகவும், நான்கு வேதங்களைக் குதிரைகளாகவுங் கொண்டு அத்திரிபுரத்தை யெரிக்கச் சென்றனர். திரிபுரங்களை யழிப்பது எம்மைக் கொண்டன்றோ எனத் தேவர்கள் செருக்குற் றெண்ணினர். அதையறிந்த பரமசிவன் புன்னகை கொண்டார். அந்த அவ்மந்திச் சிரிப்பின் பிரகாசம் அத்தேரை யழித்து, முப்புரங்

[illegible] [illegible]. அப்போது, திருமால் இடபமாய்ப் [illegible] தாங்கின ரென்பது கந்தபுராணம், காஞ்சிப்புரா ணம் முதலிய நூல்களுட் காண்க.

இது முற்செய்யுள் போன்றதே. (ருக)

கார்

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

தினைப்போது தானே நினைத்தாலு மேலோர்
சிறப்பான பேறீகுவோர்
வனத்தாடு சோணா சலத்தூடு தீரா
மயிற்பேடை காளோடைகாள்
வினைப்பாவி யானேன் விழிப்பாயு நீரான்
மிகுத்தேறு கார்காலமே
தனித்தாவி சோர்வார் தமக்கால மேநீள்
சரற்கால மேகாலமே. ருஉ

சோணசலத்து ஊடு - அருணசலத்தினிடையே யுள்ள, வனத்துஆடு - காட்டின்கண் ஆடுகின்ற, தீரா - நீங்காத, மயில் பேடைகாள் - பெண் மயில்களே! ஓடைகாள் - நீர்நிலைகளே! மேலோர் - பெரியோர், தினைப்போது - மிகச்சிறிய காலம், நினைத்தாலும் - சிந்தித்தாலும், சிறப்பான பேறு - சிறப்பாகிய பேற்றை, ஈகுவோர் - கொடுப்பார் (என்பர்; அவ்வாறாயின் சதாகாலமும் நினைக்கும் எனக்கு என்றலைவர் ஏனோ பேறுஈய வில்லை), விழிபாயும் நீரால் - கண்களினின்றுஞ் சொரிகின்ற நீரினால், வினைபாவி ஆனேன் - தீவினையையுடைய பாவி யானேன், தனித்து ஆவி சோர்வார் தமக்கு - தனிமையாக உயிர் சோர்கின்றவர்களுக்கு, மிகுத்து ஏறு கார்காலம் - தன்

னியற்கையில் அதிகரித்தெழுகின்ற கார்காலமே, ஆலம் - விடமாகும், நீள் சரற்காலம் - மிகுந்த வருஷா காலமே, காலம் - இறுதிக்காலமாகும்.

கார்காலத்தில் மீண்டு வருவேனென்ற தலைவன் வாராமை கண்டு தலைவி மிக வருந்திக் கூறல்.

மயிற்பேடைகளையும் ஓடைகளையும் கூறியது, கார்காலத்தில் முறையே களித்தலும் நீர்நிறைதலுமாகிய சிறப்பை நோக்கி. அக்காலத்தில் சிறப்படையாத தான் அவைகளை விளித்து வருந்தினள். தான், ஏ - அசை நிலை. காலமே என்பதிலுள்ள ஏகாரங்கள் தேற்றம், ஏனைய அசை நிலை. ஆகும் என்ற சொல் எஞ்சி நின்றது. சதாகாலமும் நினைக்குமெனக்கு என்றலைவர் பேறீயவில்லை யென்றது அவாய்நிலைக்குறிப்பான் வருவிக்கப்பட்டது. சரத்காலம் என்ற வடமொழி தமிழில் மயக்க விதியின்மைபற்றி சரற்காலமென வந்தது. திணை - மிகச் சிறுமையைக் குறித்தது. சிறப்பு - வீடு. வனத்தாடு என்பதற்கு ஆகாயகங்கையின்கண் முழுகுகின்ற என சோணசைலத்திற்கு அடைமொழி யாக்கினும் அமையும். தீராத வென்னும் பெயரெச்சத்து ஈறு கெட்டது. ஓடை என்பது மனிதர்களால் ஆக்கப் படாத நீர்நிலை.

இது, ஒன்று மூன்று ஐந்து சீர்கள் புளிமாங்காய்ச்சீரும், இரண்டு நான்கு தேமாச்சீரும்; இறுதிச்சீர்கள் தேமாங்கனிச் சீரும் பெற்றுவந்த அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம். (௬௨)

இளவேனில்

நேரிசையாசிரியப்பா

காலையு மாலையுங் கைமலர் குவித்து
மாலு மயனும் வணங்குதற் கரியோ

[illegible] ளுலக மியாவையும் படைத்தோன்
[illegible]க்கொரு தாயுந் தந்தையு மில்லோன்
[illegible] கயிற்றிற் பல்லுயிர்ப் பாவை
[illegible] நடிக்கத் திருநடம் புரிவோன்
[illegible]வலை யறுக்கு மெய்த்தவ வேடன்
[illegible]வலைப் பிணிக்கு மான்மத நாதன்
பேரு மறுபத் தாரு யிரம்பொன்
மாருத் தியாகன் வசந்தவி நோத
னண்ணு மலைய னதிருங் கழலன்
கண்ணு ரமுதன் கைலைப் பொருப்பின்
மறலித் திசையின் மலயா சலமென
விருத்திய துருத்திகொண் டிளங்கால் பரப்பிக்
காவலைப் பல்லவக் கனலு வசைப்பக்
குறைவறு குயில்வாய்க் குறட்டினி லடக்கிப்
பொறிதிக ழரிக்கரி யதனிடைச் சொரிந்து
ளிசைத்திடு மஞ்சரிப் பசைக்கோ லசைத்து
மதவீ ரனுக்கு வசந்தக் கருமான்
பனிமலர்ச் சாயகம் பண்ணி நீட்டின
னின்னமும் வந்திலர் கேள்வர்
புன்னையங் கருங்குழ லன்னமென் னடையே. ௫௫

புன்னை அம் கரு குழல் - சுரபுன்னை மலரணிந்த அழகிய கரிய கூந்தலையுடைய, அன்னம் மெல்நடையே - அன்னம் போன்ற மிருதுவாகிய நடையினையுடைய தோழியே! காலையும் மாலையும் - காலைப் பொழுதினும் மாலைப் பொழுதினும், கை மலர் குவித்து - கைகளாகிய மலர்களைக் கூப்பி, மாலும் அயனும் வணங்குதற்கு அரியோன் - திருமாலும் பிரமனும் வணக்

கஞ் செய்வதற்கு அருமையானவரும், இமைக்குமுன் - இமைப் பதற்கு முன்னே, உலகம் யாவையும் படைத்தோன் - உலக மெல்லாவற்றையும் உண்டாக்கினவரும், தனக்கு ஒரு தாயும் தந்தையும் இல்லோன் - தனக்கு ஒரு அன்னையும் பிதாவும் இல்லாதவரும், பழவினை கயிற்றின் - பிராரத்த வினைக் கயிற் ருல், பல் உயிர் பாவை அழகுஉற நடிக்க - பல ஆன்மாக்க ளாகிய பாவைகளை யழகுபொருந்த நடிக்கும்படி, திருநடம் புரிவோன் - திருக்கூத்தியற்றுகின்றவரும், வினைவலை அறுக் கும் - சஞ்சிதம் ஆகாமியம் என்னும் வினைகளாகிய வலைகளை யறுக்கின்ற, மெய் தவவேடன் - உண்மையான தவவேடத்தை யுடையவரும், மனம் அலைபிணிக்கும் - மனவிருளை யொழிக் கின்ற, மான்மதநாதன் - மான்மதநாதரும், பேறுஆம் அறுபத் தாருயிரம் பொன் - பேருகிய அறுபத்தாருயிரம் பொன்னை, மாரு தியாகன் - மறுக்காமல் கொடுக்கின்றவரும், வசந்த விநோ தன் - வசந்த விநோதரும், அண்ணமலையன் - அண்ணமலைய ரும், அதிரும் கழலன் - அதிருங்கழலரும், கண்ணாரமுதன் - கண்ணாரமுதருமாகிய சிவபெருமானுரது, கைலை பொருப்பின் - திருக்கைலாய மலையின்கண்; மதன் வீரனுக்கு - மன்மதனுகிய வீரனுக்கு, வசந்தம் கருமான் - வசந்த காலமாகிய கொல்லன், மறலி திசையின் - இயமனது திசையாகிய தென்றிசையில், மல யம் அசலம் என இருத்திய துருத்தி கொண்டு - பொதியமலை யென்று வைக்கப்பட்ட துருத்தியினுல், இளகால் பரப்பி - தென்றற்காற்றை வீசி, கா உலை - சோலையாகிய உலையில், பல்லவம் கனல் நா அசைப்ப - தளிராகிய நெருப்புக் கொழுந்துவிட் டெரிய, குறைவு அறு குயில் வாய் குறட்டினில் அடக்கி - குறை வில்லாத குயிலின் வாயாகிய குறட்டினிற் செறித்து, பொறி திகழ் அரிகரி அதனிடை சொரிந்து - புள்ளிகள் விளங்குகின்ற வண்டுகளாகிய கரிகளை யதனிடத்துப் போகட்டு, உன் இசைத்

திடு மஞ்சரி பசைக்கோல் அசைத்து - உள்ளே பொருத்தப் பெற்ற பூங் கொத்தாகிய சுடுகோலால் அசைத்து, பனிமலர்ச் சாயகம் பண்ணி நீட்டினன் - குளிர்ச்சி பொருந்திய மலர்களாகிய அம்புகளை (நம்மீது தொடுப்பதற்குச்) செய்து கொடுத்தனன்; கேள்வர் - நாயகர் இன்னமும் வந்திலர் - இன்னமும் வரவில்லை.

இது தலைவி இளவேனிற் பருவங்கண்டு தோழிக்குக் கூறியது.

"மாலு மயனும் வணங்குதற் கரியோன்" என்றதனால் இவரே பரம்பொருள் என்பது பெற்றாம். "யாவையும் படைத்தோன்" என்றதால் சிருஷ்டியும், "தாய் தந்தையில்லோன்" என்றதால், தோற்றமில்லாதவர் என்றும், "உயிர்ப்பாவை நடிக்கத் திருநடம் புரிவோன்" என்றதால் திதியும், "வினைவலை யறுக்கும்" என்றதால் சங்காரமும், "மனவலைப் பிணிக்கும்" என்றதால் திரோபவமும், "பேறுமறுபத்தாறாயிரம் பொன்மாறாத் தியாகன்" என்றதால் அநுக்கிரகமும் கூறியதனால், பஞ்ச கிருத்தியமும் நடத்துகின்றவர் இவர் என்பது பெற்றாம். அது,

> "தோற்றந் துடியதனிற் றோயுந் திதியமைப்பிற்
> சாற்றியிடு மங்கியிலே சங்கார—மூற்றமா
> யூன்று மலர்ப்பதத்தே யுற்றதிரோ தம்முத்தி
> நான்ற மலர்ப்பதத்தே நாடு"

என்னும் உண்மை விளக்கத்தாலுணர்க.

மான்மத நாதன், தியாகன், வசந்த விநோதன், அண்ணாமலையன், அதிருங்கழலன், கண்ணாரமுதன் என்பன பெயர்கள்.

அறுபத்தாறாயிரம் பொன் வழங்கிய சரிதையைப் புராணத்துட் காண்க. பசைக்கோல் - உலையாணிக்கோல். குறடு - ஒரு

வகை ஆயுதம். அன்னமென்னடை - அன்மொழித்தொகை. அல்-இருள். மன அலை பிணிக்கும் - மன அலையை நிறுத்தும் எனினுமாம்.

இது, இருபானிரண்டடியான் வந்த நேரிசை ஆசிரியப்பா.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

அன்னியமா சடையாரும் பின்னியமா சடையாரு
மடிமாற நடித்தாரு முடிமாற னடித்தாரு
முன்னுமற மொழிந்தாரும் பின்னுமற மொழிந்தாரு
முகைத்திடுமா னேற்றாரு மிகைத்திடுமா னேற்றாரு
மென்னகத்தா முரியாருங் கொன்னகத்தா முரியாரு
மெருக்கிதழி மணத்தாரு முருக்கிதழி மணத்தாரும்
வன்னிவடி வனத்தாருஞ் சென்னிவடி வனத்தாரும்
வருகருணைப் பதியாரும் பெருகருணைப் பதியாரே.

அன்னியம் மாசு அடையாரும் - அன்னியமாகிய மலபந்தமில்லாதவரும், பின்னியமா சடையாரும் - பின்னிய பெரிய சடையினை யுடையவரும், அடிமாற நடித்தாரும் - (மதுரைப் பதியில் வெள்ளியம்பலத்தின்கண்) பாதம் மாறும்படி நடனஞ் செய்தருளியவரும், முடிமாறன் அடித்தாரும் - கிரீடமணிந்த பாண்டியனால் அடிக்கப்பட்டவரும், முன்னும் அறம் மொழிந்தாரும் - கருதுகின்ற தருமோபதேசஞ் செய்தருளியவரும், பின்னும் மறம் ஒழிந்தாரும் - பிணித்து வருத்துகின்ற பாவம் நீங்கினவரும், உகைத்திடும் ஆன் ஏற்றாரும் - இடபத்தை ஏறிச் செலுத்துகின்றவரும், மிகைத்திடுமான் ஏற்றாரும் - எதிர்த்து அதிகரித்து வந்த மானைக் கையில் ஏந்தியவரும், என் அகத்து உரியாரும் - என்னுடைய மனதில் எழுந்தருளி யிருத்தற்கு உரியவரும், கொல்நகத்து உரியாரும் - கொல்லும் மலையாகிய யானைத்தோலை யுடையவரும், எருக்கு இதழி மணத்தாரும் -

மருக்காப்பூ கொன்றைப் பூக்களின் வாசனையையுடையவரும், முருக்கு இதழி மணத்தாரும் - முருக்கம்பூப்போலும் அதரத்தை யுடையவளாகிய உமாதேவியை மணம் செய்தவரும், வன்னி வடிவு அனத்தாரும் - நெருப்பாகிய வடிவத்தில் அன்னம் போன்ற உமாதேவியை யுடையவரும், சென்னி வடி வனத்தாரும் - தலையிலே வடிகின்ற கங்கை நீருள்ளவரும், வருகருணைப் பதியாரும் - வருகின்ற கிருபைக்கு இருப்பிடமாயுள்ளவரும், பெருகு அருணை பதியாரே - சிறப்புமிகுந்த அருணாசலேசுரரே (ஆவார்).

மாசு - குற்றம், ஈண்டு மலபந்தத்தை யுணர்த்திற்று. அடி மாறி யடித்ததும் மாறனடித்ததும் முறையே திருவிளையாடற் புராணம் கான்மாறியாடிய படலத்தும், பிட்டுக்கு மண் சுமந்த படலத்துங் காண்க. முன் அறமொழிந்தது, சனகாதி நால்வருக்குக் கூறியது. முன் - காலமுமாம். ஆனே றுகைத்திடு வார் என விகுதி பிரித்துக்கூட்டுக. தாம் - அசைநிலைகள். உம் - எண்ணும்மைகள். ஏ - தேற்றம். இதழி - இ பெண்பால் விகுதி. அனம் தொகுத்தல், உவமவாகுபெயர். அடித்தார் என செயப்பாட்டு வினை செய்வினையாய் வந்தது. ஆவார் என்பது எஞ்சி நின்றது. வருகருணை - வினைத்தொகை.

மடக்கு என்னுஞ் சொல்லணியாதல் காண்க.

இது, ஒன்று மூன்று சீர்கள் கூவிளங்காய்ச் சீரும், இரண்டு நான்கு ஆறு எட்டுச் சீர்கள் பெரும்பாலும் புளிமாங்காய்ச் சீரும் பெற்று வந்த எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம். (௫௪)

சம்பிரதம்

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

பரவைபொ ருக்கெழவுங் ககனம்வ டுப்படவும்
பரிதிவ டக்கெழவு நிருதிகு ணக்குறவு

மிரவுப கற்படவும் பகலிர வொத்திடவு
மெளிதினி யற்றிடுவோ மிவைசில வித்தைகளோ
வரவம ணிப்பணியா னனலகி ரிப்பெருமா
னருணகி ரிக்கிணையா வவனித லத்திடையே
கருதிம னத்தினிலே சிறிதுநி னைத்தளவே
கதியைய ளித்திடுமோர் பதியுமு ணர்த்துவமே.

பரவை பொருக்கு எழவும் - சமுத்திரம் வற்றிப் பொருக்குத் தோன்றவும், ககனம் வடு படவும் - ஆகாயத்தில் தழும்பு உண்டாகவும், பருதி வடக்கு எழவும் - சூரியன் வடதிசையிற் றோன்றவும், நிருதி குணக்கு உறவும் - நிருதி கீழ்த்திசையிற் பொருந்தவும், இரவு பகல் படவும் - இராக்காலம் பகற்கால மாகப் பொருந்தவும், பகல் இரவு ஒத்திடவும் - பகற்காலம் இராக்காலமாகப் பொருந்தவும், எளிதின் இயற்றிடுவோம் - இலேசிற் செய்வோம்; இவை சில வித்தைகளோ - (எங்கள் திறமைக்கு) இப்படிப்பட்டவைகளாகிய சில வித்தைகள் தாமோ? அரவம் அணி பணியான் - சர்ப்பத்தை அழகிய ஆபரணமாக வுடையவராகிய, அனலகிரி பெருமான் - அருணசலேசுரரது, அருணகிரிக்கு - திருவண்ணமலைக்கு, இணையா - ஒப்பாக, அவனிதலத்து இடை - பூமியினிடத்து, மனத்தினில் சிறிது கருதி நினைத்த அளவே - உள்ளத்தில் சற்று ஊன்றி நினைத்த பொழுதில், கதியை அளித்திடும் - மோட்சத்தைக் கொடுக்கின்ற, ஓர் பதியும் உணர்த்துவம் - ஒரு தலத்தையும் தெரிவிப்போம்.

இந்திரஜால முதலிய மாயா வித்தை வல்லவர் தமது சிறப்பைத் தாமே எடுத்துக் கூறுவதாகச் செய்யுள் செய்வது சம்பிரதம் என்னும் உறுப்பின் இலக்கணமாம். சம்பிரதம் - தற்புகழ்ச்சி, இவ்வாறு செய்தற்கரியவற்றைச் செய்வதாகக் கூறி

[illegible]ள். சிலேடை வகையிற் பொருள் கொள்ளுங்கால், பரந்த [illegible] பாலைநிலத்தில் பொருக்குண்டாகவும், காட்டில் [illegible] வுண்டாகவும், சூரியன் உத்தராயண காலத்தில் வட [illegible] செல்லவும், அரக்கி மாறுபட்ட குணத்தை யடைய வும், [illegible]காலத்தில் சூரியன் மறையவும், அந்திக் காலத்தில் பகற்காலமும் இராக்காலமும் ஒத்திருக்கவும் எனவும்; அருணை [illegible]ற்கு ஒப்பான ஒரு தலத்தைத் தெரிவிக்க முடியாதென வும் பொருள்கொள்க. பதி - கடவுளுமாம்.

பாலை - சமுத்திரம்; பரந்தவிடம் (பாலை). பொருக்கு - காலை உறுத்துகின்ற சிறு மண்கட்டி. ககனம் - ஆகாயம், காடு. வடு - தழும்பு; மாவடு. நிருதி - அஷ்டதிக்குப் பாலகர் களிலொருவர், அரக்கி. குணக்கு - கிழக்கு, மாறுபாடு. பகல் - பகற்காலம், சூரியன். சில வித்தைகளோ என்பதின் இறுதி ஓகாரம் ஒழிபிசை, இன்னும் பல அரியனவுண்டு என்றற் றொடக்கத்து ஒழிந்த சொற்களைத் தருதலின். ஆ - ஆகவென் பதன் கடைக்குறை. அவனிதலம் - இருபெயரொட்டுப் பண்புத் தொகை. அவனிதலத்திடையே என்பதில் ஏகாரம் பிரி நிலை. மனத்தினிலே - ஏ அசைநிலை. நினைத்தளவே - அகரம் தொகுத்தல்; ஏ - தேற்றம். உணர்த்துவமே - ஏ தேற்றம். அ - ஈற்றசை. ஓர் - ஒன்று என்னும் எண்ணின் விகாரம்.

பொருக்கு என்பதற்கு ஒலியெனவும், பரிதி என்பதற்கு சக்கரமெனவும், இரவு என்பதற்கு யாசகனெனவும் உரை கூறு வாருமுளர். அனலகிரி - வடமொழிப் புணர்ச்சி இயல்பாயிற்று, நாககங்கணம் என்றாற்போல. பதியும் - உம் உயர்வு சிறப்பு; எதிர்மறையுமாம்.

இது, ஒன்று மூன்று ஐந்து ஏழுசீர்கள் கருவிளச்சீரும், இரண்டு, நான்கு, ஆறு, எட்டுசீர்கள் கூவிளங்காய்ச்சீரும் பெற்று வந்த எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம். இவ்வாறு மூன்

பதிப்பிற் சீர் பிரித்திருப்பினும் தன்னதனத் தனனம் எனச் சந்தங்கொண்டு அதற்கு இயைய அலகிட்டுக் கொள்க. (ருரு)

நேரிசைவெண்பா

உள்ளத்தின் ஞான முயர்ந்தவிடத் தன்றியிருட்
பள்ளத்தி லென்றும் படராதே—வள்ள
லருணா சலப்பெருமா னம்பிகையோர் பாகன்
கருணா சலமாங் கடல். ருசா

வள்ளல் - கொடையாளியும், அருணாசலப்பெருமான் - அருணாசலேசுரனும், அம்பிகை ஓர் பாகன் - உமாதேவியை இடப்பாகத்தி லுடையவனுமாகிய, கருணா சலம் ஆம் கடல் - கிருபை வெள்ளமாகிய கடல், உள்ளத்தில் - மனதில், ஞானம் உயர்ந்தவிடத்து அன்றி - அறிவு மேம்பட்ட விடத்திலல்லாமல், இருள்பள்ளத்தில் - அஞ்ஞானமாகிய குழியில், என்றும் படராது - எந்நாளும் சென்று பாயாது.

கருணாசலம் என்பதற்குக் கருணைமலை எனினுமாம். உலகத்துள்ள கடல்போன் றிராமையால், இஃதோர் திப்பியக் கடலாயிருக்கின்றதெனக் கருணைச்சிறப்பை வியந்து கூறினரென்க. ஏ-அசைநிலை. அன்றி - அன்றி படராதென்க. பாகனுமாகிய கடல் என உருவகித்தார்.* இதுவிரூபகவணி; விசித்ர அலங்காரமுமாம்.

இது; மலர் என்ற வாய்பாட்டான் முடிந்த இருவிகற்ப நேரிசை வெண்பா. (ருசா)

பாண்

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

கங்கை வார்சடைப் பரமர்தென்
னருணையிற் கடைதொறு நீபாட
வங்கை யாலிரு செவிபுதைத்
தேத்துவோ மருச்சுனன் றிருநாம

*விரோதமான தன்மையையுடைய உருவகம், விரூபகம். வி - விரோதம்.

மங்கைமார்செவி பொறுக்குநின்
னிசையெனு மிடிக்குரல் மகிழ்வாரார்
மங்கைமார்செய லறிந்துகொள்
பாணனே மயிலெனப் புகழ்வாயே. ருஎ

மங்கைமார் செயல் அறிந்துகொள் பாணனே - பெண்களது செய்கைகளை அறிந்துகொள்ளுகின்ற பாணனே! மயிலெனப் புகழ்வாயே - மயிலென்று புகழ்பவனே! நீ—, கங்கைவார் சடை பரமர் - கங்காநதியைத் தரித்த நீண்ட சடையினை புனைந்த மேலான கடவுள் எழுந்தருளியிருக்கின்ற, அருணையில் - திருவண்ணாமலைப் பதியில், கடைதொறும் பாட - வாயில்கடோறும் பாட, அகம் கையால் இருசெவி புதைத்து - (இடிக்குரலென அஞ்சி) உள்ளங்கைகளால் இரண்டு காதுகளையு மூடி, அருச்சுனன் திருநாமம் ஏத்துவோம் - அருச்சுனனது திருப்பெயரைச்சொல்லித் துதிப்போம், நின் இசை எனும் இடிகுரல் - உன்னுடைய இசையென்கிற இடியை யொத்த குரலைக்கேட்டு, மங்கைமார் செவி பொறுக்கும் - பரத்தையரது காதுகள் பொறுத்துக்கொள்ளும் (ஆதலால் அஞ்சுவாரே யன்றி), மகிழ்வார்ஆர் - இங்கு மகிழ்கின்றவர் யாவர்? (ஒருவருமில்லை என்றபடி).

பரத்தையரைப் புணர்தற்பொருட்டுத் தலைமகளைப் பிரிந்து சென்ற • தலைமகனால், தலைமகளது கருத்தையறிந்து அவளைச் சமாதானப்படுத்தி அவளிடம் தான்வரும்படி பேசிவருமாறு அனுப்பப்பட்ட பாணனுக்குத் தலைவி வெகுண்டு கூறியது. இது "பாணனொடு வெகுளுதல்" என்னும் துறை.

பாணனே! புகழ்வாயே! இவ்விரண்டும் விளி. புகழ்வாய் - வினையாலணையும் பெயர். மயிலெனப் புகழ்வாய் - மயில் இடிக்குர லுவக்கும்; நின் இசையெனு மிடிக்குரலெம்மை

வருத்துகின்றது ஆதலால், மயிலெனப் புகழ்தல் தகாதென்க. கடை - இற்கடை (அதாவது) வாயில்.

இடிமுழக்கங் கேட்டவுடனே தன்பெயர் கூறுவார்மேல் இடிவிழப்படாதென்று பாண்டு புத்திரனாகிய அருச்சுனன் வரம் பெற்றானென்பது பாரதம். அது இன்றும் பெருவழக்கா யுள்ளது.

என் தங்கை யென்பது எங்கையென மருவி ஈண்டுப் பரத்தையரை உணர்த்திற்று. அகம் என்பது கையென்னுஞ் சொல் வர இடையேயுள்ள ககரங் கெட்டுப் புணர்ந்தது.

இது, முதற்சீர் தேமாச்சீரும், இரண்டாஞ்சீரும், இறுதிச் சீரும் கூவிளச்சீரும், ஏனைய பெரும்பாலுங் கருவிளச் சீரும் பெற்றுவந்த அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம். (நௌ)

தலைவியைப் புகழ்தல்

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

புடைசெறிந் தளிபாடு மிதழியந்
தொடைமார்பர் புலிபதஞ் சலிநாடுவார்
மடையிளங் கயறாவு மருணையங்
கிரிமீது மலரணங் கெனமேவுவார்
நடையுமிந் திரவேழ மிருகையிந்
திரதாரு நயனமிந் திரநீலமே
யிடையுமிந் திரசால நுதலுமிந்
திரசாப மிதழுமிந் திரகோபமே. நிஅ

புடைசெறிந்து அளிபாடும் - அருகிற் சூழ்ந்து வண்டுகள் இசை பாடுகின்ற, அம்இதழி தொடைமார்பர் - அழகிய கொன்றைப் பூமாலையைத் தரித்த மார்பினையுடையவராகிய, புலி

பதஞ்சலி பாதனார் வியாக்கிரபாத முனிவரும் பதஞ்சலி முனிவரும் அருச்சிப்பட்ட சிவபெருமானுரது, மடை இள வாளை பாயும் நீர் பாய்கின்ற மடைகளில் இளமை பொருந்திய வாளை மீன்கள் பாய்கின்ற, அம் அருணை கிரி மீது - அழகிய அருணாசலத்தின் மேல், மலர் அணங்கு என மேவுவார் - செந்தாமரை மலரில் வீற்றிருக்கின்ற இலக்குமியைப் போலத் தோன்றுகின்ற தலைமகளது, நடையும் இந்திரவேழம் - நடையும் ஐராவதம், இருகையும் இந்திரதாரு - இரண்டு கைகளும் கற்பக விருட்சம், நயனம் இந்திரநீலம் - கண்களும் இந்திர நீலம், இடையும் இந்திர சாலம் - இடையும் இந்திரசால வித்தை, புருவமும் இந்திரசாபம் - கண்புருவங்களும் வானவில், இதழும் இந்திரகோபம் - அதரமும் இந்திரகோபப் பூச்சியாகும்.

ஐராவதம் போன்ற நடையும், கற்பக விருட்சத்தைப் போலக் கொடுக்கின்ற கைகளும், இந்திர நீலமணி போன்ற கண்களும், இந்திரசாலம் போன்ற பொய்யாகிய இடையும், வானவில் போன்ற வளைந்த புருவங்களும், இந்திர கோபப் பூச்சி போன்ற சிவந்த இதழும் உடையாள் ஆகையால், இவ்வாறு உருவகித்துத் தலைமகன் தலைமகளைப் புகழ்ந்து கூறினான் என்க.

அம்-சாரியைகளுமாம். நாடுவார் எனச் செயப்பாட்டு வினை செய்வினையாய் வந்தது. மேவுவார் வினையாலணையும் பெயர். ஏ தேற்றம்; அசைநிலை எனினுமாம். ஆகும் என ஒரு சொல் வருவித்துரைக்கப்பட்டது. இந்திரமெனப் பன்முறை வந்தது சொற்பின் வருநிலையணி. இந்திர நீலமணி யென்பது "இந்திர நீலமொத் திருண்ட குஞ்சியும்" எனக் **கம்பர்** கூறுவதாலுணர்க. (மிதி - ௫௯.)

இது, ஒன்று மூன்று ஐந்து சீர்கள் கருவிளச்சீரும், இரண்டு நான்கு சீர்கள் புளிமாங்காய்ச்சீரும், இறுதிச் சீர்கள்

புளிமாங்காய்ச் சீரும் பெற்றுவந்த அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம். (ருஅ)

உருவெளி

கலிவிருத்தம்

இந்திர கோபமா மிதழி பாகனார்
செந்தமி ழருணைநந் தேருஞ் செல்லுமே
சந்திர ரேகையுஞ் சமர வாளியு
மந்தர மேருவும் வளைந்து கொண்டவே. ருகூ

சமரம் - யுத்தஞ் செய்வதற்காக, சந்திரரேகையும் - பிறைமுகக்கணையும், வாளியும் - அம்பும், மந்தரம் - மந்தரகிரியும், மேருவும் - மேருமலையும், வளைந்து கொண்ட - சூழ்ந்து கொண்டன (ஆதலால்), இந்திரகோபம் ஆம் இதழிபாகனார் - இந்திரகோபப்பூச்சியை யொத்த செந்நிறமமைந்த அதரத்தையுடைய உமாதேவியைத் தமது திருமேனியில் ஒரு கூறாகவுடைய சிவபெருமானாரது, செம்தமிழ் அருணை - செவ்விய தமிழ் வழங்குகின்ற திருவருணைப் பதியினிடத்து, நம் தேரும் செல்லுமே - நம்முடைய இரதமும் செல்லமாட்டாது. (ஆதலால் விரைந்து விடுவாயாக.)

இச்செய்யுள் ஊர் கண்டு வருந் தலைவன் தலைவியது உருவெளித் தோற்றங்கண்டு பாகனை நோக்கிக் கூறியதென்க.

தலைவியது நெற்றியிலுள்ள சந்திரரேகையைப் பிறைமுகக்கணை யென்றும், கண்களை அம்பு என்றும், கொங்கைகளை மந்தரகிரி மேருகிரி யென்றும் மயங்கிக் கூறினனென்க. செல்லுமே - ஏ எதிர்மறை. கொண்டவே - ஏ ஈற்றசை. தேரும் என்பதிலுள்ள உம்மை எச்சவும்மை; மற்றைப் படைகளேயன்றி யென்க. ஏனைய உம்மைகள் எண்ணும்மை. இரேகை-வரை

இது, முன்னும் பின்னும் நான்கு சீர்கள் கூவிளச்சீரும், மூன் றாஞ்சீர் பொருப்பாலும் புளிமாச்சீரும் பெற்றுவந்த கலிவிருத் தம். (ருக)

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

கொண்டலணி கண்டர்நிறை கங்கையணி செஞ்சடையர்
கொம்பரொரு பங்கி லுறைவா
ரண்டபகி ரண்டமள வங்கியென நின்றவதி
ருங்கழலர் தங்க ருணையீர்
கண்டுளது கொண்டன்மிசை திங்களெழு கின்றதிது
கண்டதிலை யுங்கண் முகமா
மண்டலமெ னும்புதிய திங்கண்மிசை கொந்தளக
மஞ்சுகுடி கொண்ட வடைவே. சா0

கொண்டல் அணி கண்டர் - மேகத்தை யொத்த கரிய விடத்தை யணிந்த களத்தையுடையவரும், நிறைகங்கை அணி செம்சடையர் - நீரான் நிறைந்த கங்காநதியைத் தரித்த சிவந்த சடையினையுடையவரும், கொம்பர் ஒருபங்கில் உறைவார் - பூங்கொம்பை யொத்த உமாதேவியார் தமதுடம்பின் பாதியில் பொருந்தப் பெற்றவரும் ஆகிய, அண்டம் பகிர்அண்டம் அளவு- இவ்வுலக முதல் தேவலோகம் வரையிலும், அங்கி என நின்ற அதிருங் கழலர் - அக்கினி என்று சொல்லும்படி எழுந்தருளிய அதிருங்கழலர், தங்கு அருணையீர் - வீற்றிருக்கின்ற அருணைப் பதியிலுள்ளவரே! கொண்டல் மிசை திங்கள் எழுகின்றது - மேகத்தின்மேல் சந்திரன் தோன்றுவதை, கண்டுளது - யாம் பார்த்துள்ளது, உங்கள் முகம்ஆம் மண்டலம் எனும் புதிய திங்கள்மிசை - உங்கள்முகமாகிய மண்டலம் என்கின்ற புதிய சந் திரன்மேல், கொந்து அளகம் மஞ்சு குடிகொண்ட அடைவு

இது - பூங்கொத்துக்கள் நிறைந்த கூந்தலாகிய மேகம் தங்கியிருக்கின்ற முறையாகிய இதை, கண்டது இலை - (எங்கும்) பார்த்ததில்லை.

இவ்வாறு தலைவன் தலைவியை வியந்து கூறினான் என்க.

கொண்டல் - உவமவாகுபெயர். அண்டம் என்றதை மேலுலகமெனினும் பகிரண்டமென்றதை அதற்கப்பாலுள்ள வெளியண்டங்களெனினும் அமையும்.

அதிருங் கழலர் என்பது அருணைப் பதியிலுள்ள சிவபெருமானின் றிருநாமங்களு ளொன்று; சப்திக்கின்ற வீரக்கழலணிந்தவர் என்பது பொருள். அருணையீர் என்பது தலைவியை விளித்தல். மண்டலம் - வட்ட வடிவு. திங்களின் செய்கையில் மாறுதலேநோக்கிப் புதிய திங்கள் என்றார். கொந்து - மெலித்தல் விகாரம். ஏ - அசைநிலை. கண்டதிலை யென்றதனால் இது அற்புதமா யிருக்கின்றதென்பது கருத்து. என உவமவுருபுமாம்.

இது, முதலைந்து சீரும் கூவிளங்காய்ச் சீரும், ஆறாஞ்சீர் தேமாச்சீரும், ஏழாஞ்சீர் புளிமாச் சீரும் பெற்றுவந்த எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம். (௬0)

இருவிகற்ப நேரிசை வெண்பா

அடுத்தமதிச் சென்னியின்மே லம்பிருக்கு மற்றோ
ரிடத்திலே நாரி யிருக்குந்—தடக்கையிலே
யேந்துசிலை விட்டிருக்கு மெம்மருணை நாதனார்
போந்து புரமெரித்த போது. ௬க

எம் அருணை நாதனார் - எமது அருணசலேசுரர், போந்து புரம் எரித்தபோது - சென்று முப்புரங்களைத் தகித்தகாலை, அடுத்த மதி சென்னியின்மேல் - தம்மைச் சரணடைந்த சந்திரனிருக்கின்ற சிரசின்மீது, அம்பு இருக்கும் - பாணம் இருக்கும்

[கங்கைநீர் இருக்கும்], மற்று ஓர் இடத்திலே நாரி இருக்கும் - பிறிதோர் இடத்திலே நாண் இருக்கும் [இடப் பாகத்தில் உமா தேவியார் இருப்பார்], தட கையிலே ஏந்து சிலை விட்டு இருக்கும் - நீண்ட கையிலே ஏந்தப்பட்ட வில் முறிந்திருக்கும் [தமருகம் தன்னிடத்தில் பொருந்திய ஒலியைச் செய்துகொண்டிருக்கும்].

எனவே, வில், அம்பு முதலியன வேண்டாது சிரித்தெரித்தாரென்று விளங்கக் கூறினாரென்க.

மற்று என்னும் இடைச்சொல் பிறிது என்னும் பொருளைத் தந்தது. தட-உரிச்சொல், பெருமையை யுணர்த்திற்று; அது "தடவுங் கயவு நளியும் பெருமை" (தொல்- உரி. சூ. உஉ.) என்பதனா னுணர்க; வளைந்த கை எனினுமாம்; அது "தடவென் கிளவி கோட்டமுஞ் செப்பும்" (தொல்- உரி. சூ. உங) என்பதனா னுணர்க. போந்து என்பது திரிபுரம் இருக்குமிடத்தை யடைந்து என்க.

இது, காசு என்ற வாய்பாட்டான் முடிந்த இருவிகற்ப நேரிசை வெண்பா. (சுக)

கார்காலம்

கலித்துறை

போதற்கு மரிதான வருணா
, சலத்தீசர் பொன்மேருவா
யேதப்ப டும்பாவி மனமே
  பிரிந்தாரி தெண்ணார்கொலோ
வோதத்தி னீரோடு கனலுண்டு
  புயன்மீள வுமிழ்தன்மைபோற்
காதற்குண் மடவார்மெய் பொன்பூசு
  மின்வீசு கார்காலமே சூஉ

போதற்கும் அரிது ஆன அருணாசலத்தீசர் - நான்முகனுக்கும் அறிதற்கு அருமையான அருணசலேசுரரது, பொன் மேருவாய் - பொன்மயமாகிய மேருமலையின்கண், ஏதம்படும் பாவி மனமே - துன்பப்படுகின்ற பாவி மனமே! பிரிந்தார்-நம்மை விட்டு நீங்கிய தலைவர், புயல் - மேகமானது, ஓதத்தின் நீரோடு கனல் உண்டு-கடலின் நீரோடு வடவைத் தீயையும் உண்டு, மீள உமிழ் தன்மைபோல் - திரும்ப உமிழ்கின்ற தன்மையைப் போல, மின் வீசு கார்காலம் - மின்னொளியை வீசுகின்ற கார் காலம், காதற்கு உள் மடவார் மெய் பொன் பூசு கார் காலம் - காதற்குள்ளான பெண்களது மேனியில் பசலையை யுண்டாக்குகின்ற கார்காலம், இது - ஆகிய இதை, எண்ணார்கொலோ - நினையாம லிருப்பாரோ?.

தலைவி கார்ப்பருவங்கண்டு, தலைவன் வாராமை கருதி மனத்தொடு விளுதல்.

பாவிமனமே - பாவத்தைச்செய்த மனமே! என்க. கொல் அசைநிலை. ஓ - வினாப்பொருள். உண்டு - தெரிநிலை வினையெச்சம். பசலை பொன்போன்ற நிறமாதலின் பொன் என்றார்; உவமவாகுபெயர். பிரிந்தார் எண்ணார்கொல் என முடிக்க.

இது, முதற்சீர் தேமாங்காய்ச்சீரும், இரண்டாஞ்சீர் காய்ச்சீரும், மூன்றாஞ்சீர் புளிமாச்சீரும், நான்காஞ்சீர் பெரும்பாலும் புளிமாங்காய்ச்சீரும், ஐந்தாஞ்சீர் பெரும்பாலும் தேமாங்கனிச்சீரும் பெற்றுவந்த விருத்தக்கலித்துறை. (கூஉ)

கொச்சகக் கலிப்பா

கார்வந்தா லன்னகறைக் கண்டனார் செங்கதிரோன்
றேர்வந்தா லும்பொழில்சூழ் தென்னருணை நன்னாட்டி
லார்வந்தா லுந்தணியா தன்னமன்னீ ரானாலு
நீர்வந்தா லாசை நெருப்பவியுங் காணுமே. கூங

கார் வந்தால் அன்ன - மேகம் வந்தாற்போன்ற, கறை கண்டர் - திருநீலகண்டரது, செம் கதிரோன் தேர்வந்து அசையும் - சிவந்த கிரணங்களை யுடைய சூரியனது தேர்வர அசைகின்ற, பொழில் சூழ் - சோலைசூழ்ந்த, தென் அருணை நல் நாட்டில் - அழகிய அருணகிரியையுடைய நல்ல நாட்டின்கண் உள்ள, அன்னம் அன்னீர் - அன்னம் போன்றவரே! ஆசை நெருப்பு - எனது ஆசையாகிய நெருப்பு, ஆர் வந்தாலும் தணியாது - யாவர் வந்தாலும் அவியாது, ஆனாலும் - ஆயினும், நீர் வந்தால் - நீவிர் வந்தால், அவியும் - தணிந்துபோகும்.

இவ்வாறு தலைவன் தலைவியை வேண்டினான் என்க. பாங்கியை வேண்டலாகவும் பொருள் கூறுவர்.

ஆலும் - ஆரவாரிக்கும் எனலுமாம்; சூரியமண்டலத்தை யளாவிய சோலை என்பது குறிப்பு. வந்து - செயவெனெச்சமாகக் கொள்க. வந்தாலும் - காற்றாலு மெனினுமாம்; வந்து - காற்று. நீர் வந்தால் நெருப்பவியும் என்பதுதோன்ற நின்றது. அன்னம் அன்னீர் தொழிலுவமம்; அன்னம் நடைக்கு உவமம், காணும் - முன்னிலையசை. ஓ அசைநிலை.

இது, பெரும்பாலும் காய்ச்சீரான் வந்த கொச்சகக் கலிப்பா. (௬௩)

பனிக்காலம்

கலித்துறை

காணம்ப ரந்தோலி னுடையாள ரருணேசர் கைலாசமேற்
றாணங்க ணிகர்தோள ருறைகின்ற நகரூடு சொரியாதரோ
பூணங்கை வளைசிந்த மடவார் மனத்தேறு புகைபோலவேள்
பாணங்க ளுதிர்கின்ற துகள்போல வுறைகால் பனிக்காலமே.

காண் - பார்க்கத்தகுந்த, அம்பரம் தோல் உடையாளர் - திக்கையும் புலித்தோலையும் ஆடையாக உடையவராகிய, அரு

ணேசர் - அருணாசலேசுரரது, கைலாசமேல் - கைலாச மலையினிடத்துள்ள, தூணங்கள் நிகர் தோளர் - தூண்களை யொத்த தோள்களையுடைய தலைவர், உறைகின்ற நகர் ஊடு - வீற்றிருக்கின்ற நகரத்தினிடையே, மடவார் - பெண்களது, பூண் அம் கைவளை சிந்த - தரிக்கப்பட்ட அழகிய கையின்கணுள்ள வளையல் கழல, மனத்து எழு புகைபோல - மனத்தின்கண் எழுகின்ற காமாக்கினியாற்றோன்றிய புகையைப்போல, வேள் பாணங்கள் உதிர்கின்ற - மன்மதனது பாணங்களாகிய மலர்கள் சிந்துகின்ற, துகள்போல - துகளைப்போல, உறைகால் - துளியைச் சொரிகின்ற, பனிக்காலம் - பனிக்காலமானது, சொரியாது அரோ - நீர்த்துளியைச் சொரியாதோ?

தலைவி பனிக்காலத்தின் வருத்தநோக்கித் தலைவன் இருக்குமிடத்தில் இப்பனி சொரியாதோ என்றபடி.

கைலாச வரையிடத்துள்ள நகர் என்க. தூணங்கள்-அம் சாரியை. அரோ ஐயப்பொருளில் வந்தது. சிந்த எழு மென்க. புகைபோல துகள்போல உறையைக் காலுகின்ற என்க. உதிர்கின்ற பனிக்கால மென்க. வளைசிதறல் - காமாக்கினியால் உடல் மெலிதலால். ஏ - ஈற்றசை. துகள் - நுண்பொடி. மடவார் - ஈண்டுத் தலைவனைப் பிரிந்த மகளிர். உதிர்கின்ற - அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை வினைமுற்று; அன்சாரியை குறைந்தது.

இது, முதற்சீர் தேமாங்காய்ச்சீரும், இரண்டு மூன்று நான்குசீர்கள் பெரும்பாலும் புளிமாங்காய்ச்சீரும், இறுதிச்சீர் பெரும்பாலும் புளிமாங்கனிச்சீரும் பெற்றுவந்த விருத்தக் கலித்துறை. (௬௪)

இருவிகற்பநேரிசைவெண்பா

பண்ணிறந்த வாசவரிற் பல்கோடி மாண்டாலு
மெண்ணிறந்த வேத ரிறந்தாலுங்—கண்ணாற்

கண்ணனார்க் கமைத்தவெலா மாண்டாலு மண்ணா மலையார்க்
கிமைப்பளவுங் கால மிலை. ௬௫

பண்ணிறந்த - அலங்கார மிகுந்த, வாசவரில் - இந்திரர்களில், பல்கோடி மாண்டாலும் - பல கோடியிறந்தாலும், எண்ணிறந்த வேதியர் இறந்தாலும் - அளவுகடந்த பிரமர்கள் மாண்டாலும், கண்ணனார்க்கு - திருமாலுக்கு, அமைத்த எலாம் மாண்டாலும் - ஏற்படுத்தப்பட்ட காலங்களெல்லாம் ஒழிந்தாலும், அண்ணாமலையார்க்கு - அருணாசலேசுரருக்கு, காலம் இமைப்பு அளவும் இமைப்பளவுங் காலம் இமைப்பொழுதளவும் ஆக வில்லை.

வாசவரில் - பொருளிடமாயிற்று. அமைத்த எலாம் மாண்டாலும் எனவே அவரழிவு கூறிற்று.

"கோடி விதிமாளிற் குலாவுகம லக்கண்ணன்
ஓடி வடவா லுறங்குமே — நாடுங்கால்
அக்கண்ணர் கோடி யழியி னருணகிரி
நக்கனருள் சற்றே நகும்"

என்னும் அருணகிரி யந்தாதிச் செய்யுளானும் இது தெளிக. அளவும் என்பதில் உள்ள உம்மையைக் காலமென்பதனோடு கூட்டுக. உம் உயர்வு சிறப்பு. எலாம், இலை - தொகுத்தல்விகாரம். காலாதீதராதலால் இவ்வாறு கூறினரென்க. வாசவன் - செல்வத்தை யுடையவன்; எனவே இந்திரனென்றவாறும்.

இது, மலர் என்ற வாய்பாட்டான் முடிந்த இருவிகற்ப நேரிசைவெண்பா. (௬௫)

ஒன்பதின்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

இலகொளி பரந்து மாரன் விடுகணை துரந்து நாடி
யிடுமிரு நெடுங்கண் மாதரார்
விலகரிய கொங்கைமீது பழநழுவி வந்து பாலின்
விழுவதென வந்து சேர்கிலீர்

மலகரி குறிஞ்சி தேசி பைரவி சுரும்பு பாடும்
வயலருணை மங்கை பாகரே
பலமலர் கதம்ப தூளி மிருகமத சுகந்தம் வீசு
பரிமள வசந்த ராசரே. சுசு

மலகரி குறிஞ்சி தேசி பைரவி சுரும்பு பாடும் - மலகரி குறிஞ்சி தேசி பைரவி ஆகிய பண்களை வண்டுகள் பாடுகின்ற, வயல் அருணை - வயல்கள் சூழ்ந்த அருணகிரிப் பதியிலுள்ள, மங்கைபாகரே - உமாதேவியை இடப் பாகத்திலுடையவரே, பல மலர் - பல மலர்களும், கதம்பம் தூளி - பல வாசனைப் பொடியும், மிருகமதம் - கத்தூரியும், சுகந்தம் வீசு - நல்ல வாசனை வீசுகின்ற, பரிமள வசந்தராசரே—, இலகு ஒளி பரந்து - விளங்குகின்ற ஒளியைப் பரவச்செய்து, மாரன்விடு கணை துரந்து - மன்மதன் விடுகின்ற பாணங்களை நீக்கி, நாடியிடும் இரு நெடுகண் மாதரார் - உம்மையே கருதுகின்ற இரண்டு நீண்ட கண்களையுடைய தலைவியரது, விலகரிய கொங்கைமீது - நெருங்கிய தனங்களின்மேல், பழம் நழுவி வந்து பாலின் விழுவது என - வாழைப்பழம் நழுவிவந்து பாலில் விழுவதுபோல, வந்துசேர்கிலீர் - வந்து அடையாமலிருக்கின்றீர்.

இது, தோழி தலைவியை யணையும்படி தலைவனை வேண்டல்.

பரந்து, துரந்து பிறவினையாக்குக. துரந்து - செலுத்தி; நீக்கி. விலகு அரிய - இடையீடில்லாத; நெருங்கிய. "பழம் நழுவிப் பாலில் விழுவது போல" என்பது பழமொழி. இது, இலேசாகச் சேர்வதை குறித்துக் கூறியதென்க. மங்கைபாகரே என்று விளித்தது நீர் மங்கைபாகராதலால் சேர்கிலீரென்ற குறிப்பு. கதம்பம் - கலப்பு. தூளி - பொடி. சுகந்தம் - நல்ல சந்தனமுமாம். பரிமள வசந்தராசர் என்றும் வசந்தராயர் என்றும் இந்நூலிற் பல கவிகளிலும் அருணகிரிநாதரது திருப்பெயர் வருதல் காண்க. பாகரே, ராசரே - விளி.

இது, பெரும்பாலும் ஒன்று நான்கு ஏழு ஒன்பதுசீர்கள் விளச்சீரும், ஏனைய மாச்சீரும் பெற்றுவந்த ஒன்பதின்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம். (சுசு)

மதங்கு

ஒன்பதின்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

வசிகரம் வயங்கு நீறு மபிநய புயங்க ராச
வலயமு மணிந்த தோளினு
ரசலகுல மங்கை பாகர் பரிமள வசந்த ராச
ரருணையின் வளங்கள் பாடியே
யிசைபெற வரங்கி னூடு பவுரிகொண் மதங்கி யார்த
மிலகிவளர் கொங்கை யானையே
திசைபெற விருந்த யானை பிறகிட முனிந்து போர்செய்
திறலிப மனந்த மானவே. சுஎ

*வசிகரம் வயங்கு நீறும் - வசீகரணம் விளங்குகின்ற திருவெண்ணீற்றையும், அபிநயம் புயங்கராசன் வலயமும் - கூத்து ஆடுகின்ற ஆதிசேடனாகிய வாகுவலயத்தையும், அணிந்த தோளினர் - தரித்த புயங்களையுடையவரும், அசலம் குலம் மங்கை பாகர் - இமாசல மன்னனது சிறந்த புத்திரியாகிய உமாதேவியை இடப்பாகத்திலுடையவரும் ஆகிய, பரிமளவசந்த ராசர் - பரிமளவசந்த ராசரது, அருணையின் வளங்கள் - அருணாசலத்தின் சிறப்புக்களை, அரங்கின் ஊடு - சபையினிடையே, இசைபெற பாடி - இசைபொருந்தப் பாடி, பவுரிகொள் மதங்கியார் - பவுரிக் கூத்தாடுகின்ற மதங்கியாரது, இலகிவளர் கொங்கை யானையே - விளங்கி வளர்கின்ற தனமாகிய யானையே, திசைபெற இருந்த யானை - எட்டுத்திசைகளிலுமுள்ள யானைகளை, பிறகிட - பின்னிடும்படி, முனிந்து - கோபித்து, போர்

*வசிகரம் - கவர்ச்சி.

செய்-யுத்தஞ்செய்கின்ற, திறல் இபம் அனந்தம் ஆன-வலிமை பொருந்திய யானைகள் பலவாயின.

இரண்டு கைகளிலும் வாளையெடுத்துச் சுழற்றிக்கொண்டு தானும் ஆடுவாளோர் இளமாதினை, ஒருவன் பாராட்டிக்கூறுவதாகச் செய்யுள் செய்வது, மதங்கியார் என்னும் உறுப்பின் இலக்கணமாம்.

மதங்கி - ஆடல்பாடல்வல்ல பதினாறுவயதுப் பெண். வசீகரணம் - தன்வசப்படுத்தல். வ - சத்தி, சி - சிவம் என சிவசத்திகளின் தன்மையை யுணர்த்து மென்ப. அபிநயம் - கூத்து; அபி உபசர்க்கமுமாம்.

புயங்கராசன்-பாம்புகளுக்குத் தலைவன்; எனவே ஆதிசேடனென்றவாறும்; புயம் + கம்-மார்பால் நகர்வது எனக் காரணக் குறி. வாகுவலயம் - தோளணி. பவுரி - கூத்துவிகற்பம்; அதாவது சுற்றியாடுதல். திசையானை பிறகிட என்றது திக்கின் முடிவில் தலையைவைத்துத் தாங்கிநிற்பதாகக் கொண்டு. பிறகிடல் - பின்னிடுதல்; அதாவது; முதுகுகாட்டல். யானையே - ஏ தேற்றம்; ஏனைய அசைநிலை. ஆன - அஃறிணைப் பலவின் பாற்படர்க்கை இறந்தகாலத் தெரிநிலை வினைமுற்று.

இது, பெரும்பாலும் ஒன்று நான்கு எழுசீர்கள் கருவிளச்சீரும், இரண்டு ஐந்து எட்டுச்சீர்கள் புளிமாச்சீரும், மூன்று ஆறு சீர்கள் தேமாச்சீரும், இறுதிச்சீர் கூவிளச்சீரும் பெற்றுவந்த ஒன்பதின்சீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம் (கூஎ)

இதுவுமது

கட்டளைக்கலித்துறை

நதியைச் சூடதி ருங்கழ றைதனா்
நம்ப னாரரு ணைபுரி வீதிமேல்
சதியிற் பாடிந டிக்கும தங்கியார்
தந்த வாசைத ரிக்கும தங்கியார்

வதனத் தார்சசி மண்டல மாறுமே
வந்தி ருந்தவிம் மண்டல மாறுமே
நடையிற் கொண்டது மந்தக் கரணமே
கண்ட பேர்க்கிலை யந்தக் கரணமே. சுஅ

கங்கையைச் சூடு அதிருங்கழல் நாதனார் - கங்காநதியைத் தரித்த சப்திக்கின்ற வீரக்கழலை யணிந்த தலைவராகிய, நம்பனார் சிவபெருமானா ரெழுந்தருளியிருக்கின்ற, அருணபுரி வீதியினில் - அருணகிரிப் பதியிலுள்ள வீதியினிடத்து, சதியின் பாடு மாடுக்கும் மதங்கியார் - தாளவொத்தோடு பாடி நடனஞ் செய்கின்ற மதங்கியார், அங்கு தந்த ஆசை தரிக்குமது யார் - அங்கே கொடுத்த ஆசையாகிய அதனைத்தாங்குபவர் யார்? வதனத்தால் சசிமண்டலம் மாறும் - முகத்தினால் சந்திரமண்டலம் தன்னிலையி னீங்கும், வந்துஇருந்த மண்தலம் ஆறுமே - அவண் வந்திருந்த மண்ணுலகத்திலுள்ளவர்களுக்கு (காமத்தீ) தணியுமா? நடையில்கொண்டது அந்தகரணம் - நடையினாற் கொண்டதும் அந்தக் கூத்தேயாகும், கண்ட பேர்க்கு அந்தக்கரணம் இல்லை - பார்த்த ஆடவர்களுக்கு அந்தக்கரணங்கள் இல்லை.

இதுவும் மேலைச் செய்யுளிற்கூறிய மதங்கியாரைப்பற்றிக் கூறியதே.

தரிக்குமது-திணைவழுவமைதி. அதிருங்கழனாதனார்-பெயருமாம். சதியின் - உருபுமயக்கம்; மூன்றனுருபு ஐந்தனுருபாக வந்தது; சாரியையுமாம். அங்கு - அவளாடுமிடம். சசம் - முயற்களங்கம்; அதனையுடையது சசி. சந்திரனிடத்துள்ள களங்கத்தை முயல்மான் என்றல் கவிமரபு. தன்னிலையி னீங்குதல் - கலைகள் குறைந்துவருதல். வந்து என்பதற்குக் காற்றென்பாருமுளர். ஆறுமே - பொறுக்குமா என்று பொருள்கூறிக் காமநோயைப் பொறுக்குமா என்பாருமுளர். ஆறுமே - ஏ எதிர்

மறை; தணியாதென்பது பொருள். அந்த - அ என்னும் சுட்டின் மரூஉ. கரணம் - கூத்துவிகற்பம்; நடனத்திற்குரிய உறுப்பென்பாருமுளர். அந்தக்கரணங்கள், மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்பன. இலையென்பது நிலைகலங்கி நிற்றல். சசி மண்டலம் மாறுமே - ஏ அசைநிலை. கரணமே என்றுள்ள ஈரிடத்தும் ஏ தேற்றம்.

இது, முதலில் மாச்சீரும் மற்றை மூன்றும் பெரும்பாலுங் கூவிளச்சீர்களும் பெற்று நாற்சீரால் வந்தது அரையடியாகவும், அஃதிரட்டி கொண்டது ஓரடியாகவும், அவ்வடி நான்குகொண்டு அரையடிக்கு நிரையசை முதலாயின் ஒற்றொழித்துப் பன்னிரண்டெழுத்தும், நேரசை முதலாயின் பதினொன்றும் பெற்று வந்த கட்டளைக்கலிப்பா. (கூஅ)

குறம்

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

அருணமணி முலைக்கிரிமேற் செங்கை வைத்தா
　　யாகையா லருணகிரி யன்பன் மூதூர்
வருணமுலை கண்ணாரப் பார்த்தா யுன்றன்
　　மகிழ்நனுங்கண் ணாரமுதன் வந்து கேளாய்
தரணியிலுன் றனைச்சேர்வன் முருகன் போலத்
　　தநயரையும் பெறுவையிவை தப்பு மாயின்
றிருநிறைவண் டார்குழலாய் குறமுட் பாடேன்
　　சிறந்தகுறக் கூடையும்யான் றீண்டி லேனே. கூகூ

திருநிறை வண்டு ஆர்குழலாய் - சீதேவியென்னுந் தலைக் கோலமணிந்த நிறைந்த வண்டுகளாரவாரிக்கின்ற கூந்தலையுடையவளே! வந்து கேளாய் - வந்து (யான் குறி கூறுவதைக்) கேட்பாயாக! அருணம் மணிமுலை கிரிமேல் - செந்நிறம் பொருந்

[illegible] மணிந்த மூலையாகிய மலையினிடத்து, செங் கை வைத்தாய் - சிவந்த கையை வைத்தாய், ஆகையால் உன்றன் மூதூர் அருணகிரி - ஆதலால் உனது நாயகனது பழைய ஊர் அருணகிரிப் பதியாகும், வருணம்முலை கண் ஆர பார்த்தாய் - அழகிய தனத்தைக் கண்பொருந்தப் பார்த்தாய், மகிழ்நன் பெயர் கண்ணாரமுதன் - காதலனது பெயரும் கண்ணாரமுதன் என்பது, தாரணியில் உன்தனை சேர்வன் - பூமியில் உன்னைக் கூடுவன், முருகன்போல தநயரையும் பெறுவை-(தூணிற் சாய்ந்திருத்தலால்) சுப்பிரமணியக் கடவுள்போல நல்ல பிள்ளைகளைப் பெறுவாய், இவை தப்புமாயின் - இவைகள் தவறுதல் அடையுமானால், யான் குறமும் பாடேன் - யான் குறப்பாட்டையும் பாடேன், சிறந்த குறகூடையும் தீண்டிலேன் - சிறந்த குறக் கூடையையுந் தொடேன்.

குறம் என்னும் உறுப்பிலக்கணம் ௫0-ங் கவியிற் கூறப்பட்டது. [illegible]. அணிந்த கூந்தல், ஆரவாரிக்கின்ற கூந்தலென்க.

கண்ணாரமுதன் - பெயர்: கண்களுக்கு நிறைந்த அமுதம் போன்ற இனிமையையுடையவன்; எனவே, பேரழகுடையவன் என்றவாறும். பெயரன்றி இவ்வாறு பொருள் கூறிக்கொள்ளலுமமையுமென்க. இப்பொருட்குக் கணவனுமெனக் கூறிக்கொள்க. மகிழ்நன் - உயர்திணை யாண்பாற் படர்க்கைப்பெயர்; மகிழ்ச்சியைத் தருபவன் என்பது பொருள். 'மூதூர்' என்றது பிரளயகாலங்களிலும் அழியாமல் என்றுமுளதாகின்ற அவ்வூரின் [illegible]நிலையைக் கருதி. வருணம் - இளமையுமாம். கேளாய் - முன்னிலையேவலொருமை வினைமுற்று. உன்றன் - தன் சாரியை. மகிழ்நனும் - உம் எச்சவும்மை. "தநயரையும் பெறுவை" என்பதற்குத் தூணிற் சாய்ந்திருத்தலால் என்பது வருவிக்கப்பட்டது, தூணிற்கும் தநயற்கும் மதலை என்ற பொருள் உள்ளதாதலினால். பெறுவை முன்னிலையொருமை வினைமுற்று; பெறு பகுதி.

ஐ முன்னிலையொருமை விகுதி, வ் எதிர்காலவிடைநிலை. ஆயின் - செயின் என்னும் வாய்பாட் டெதிர்கால வினையெச்சம். குழலாய் - குழலாள் என்பதன் விளி. பாடேன் நீண்டிலேன் - எதிர் மறைத் தன்மைஒருமை வினைமுற்றுக்கள்; பாடு பகுதி, என் தன்மை ஒருமைவிகுதி, எதிர்மறை ஆகார இடைநிலை தொக்கது; நீண்டு பகுதி, என் தன்மை ஒருமை விகுதி; இல் எதிர் மறையிடைநிலை. குறம் - குறி சொல்லும் பாட்டு. குறக்கூடை - குறிசொல்பவள் தானிய முதலிய வாங்குதற்கு ஏந்திய கூடையென்க. திருவணிந்த குழலாய் என்க. குறமும் கூடையும்-உம் எச்சவும்மைகள். தநயரையும் - உம் உயர்வுசிறப்பு. பாடேன் நீண்டிலேன் என்பதனால், இத்தொழிலுக்கு வாரேன் என்பது குறிப்பு. இதனால் யான் கூறுவது மெய்ம்மையென்று உறுதி கூறியவாறும். ஏ - அசைநிலை. இதனால் குறத்தி நெற்குறி பார்த்துக் கூறுவதேயன்றித் தொடுமிடமுதலியவற்றை யறிந்து குறி சொல்லுவதுமுண்டெனவறிக. வட்டறிதல் என மற்றொன்றுமுண்டென்ப.

இது, ஒன்று இரண்டு ஐந்து ஆறுசீர்கள் காய்ச்சீரும், மூன்று நான்கு ஏழு எட்டுசீர்கள் மாச்சீரும் பெற்றுவந்த எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம். (சுகூ)

மறம்

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

தீண்டரிய மடற்பனையின் சருகை வாரிச்
சிற்றிருப்பாற் சுற்றிவாசச் செருக்கிக் கூட்டி
நீண்டதுவுஞ் சுருண்டதுமா வரைந்து சுற்றி
நிருபமெனக் கொடுத்தெதிரே நிற்குந் தூதா

[illegible] பரனா ரருணை நாட்டிற்
தருமறப்பெண் டனைவேண்டிச் சமரிற் போந்து
[illegible]றியகோணல் வளைக ணாங்கள்
வருங்கல்வழி வாயினடு மரங்க ளாமே. ௭௰

[illegible] அரிய - தொடுதற்கு அரிய, மடல்பனையின் சருகை [illegible] விரிந்த பனைமரத்தினது சருகுகளை எடுத்து, [illegible] இரும்பால் - சிறிய இரும்பினால், சுற்றிவர * செருக்கி [illegible] சுற்றிலும் பொருந்தச் சீவிச்சேர்த்து, நீண்டதுவும் சுருண் [illegible] வளைந்து சுற்றி - நீட்சியுடையதும் சுருளுடையதுமாக [illegible] சுற்றி, நிருபம் என கொடுத்து எதிர் நிற்கும் [illegible] அரசனது திருமுகமென்று கொடுத்து முன்னே நிற்கின்ற [illegible]தனே! தாண்டவம் ஆடும் பரனார் அருணைநாட்டில் - [illegible]கூத்தியற்றுகின்ற அம்பலவாணரது அருணகிரிப்பதியை உடைய நாட்டின்கண், தரு மறப்பெண்தனை வேண்டி - இன்பத்தைத் தரும் மறவர் குலப்பெண்ணை விரும்பி, சமரில் போந்து மாண்டவர் - யுத்தத்தில் வந்து இறந்தவர்கள், ஏறிய கோணல் வளைகள் - ஏறிவந்த சிவிகையில் உள்ள வளைந்த மூங்கில்கள், நாங்கள் வரும் கல்வழிவாயில் நடுமரங்கள் ஆம் - நாங்கள் வருகின்ற பருக்கைக் கற்களையுடைய வழியிலுள்ள வாயிலினிடத்து நட்டிருக்கின்ற மரங்கள் ஆகும்.

இதனை யறிந்துகொள்வாயாக, என்பது எஞ்சிநின்றது.

தமது மகளை மணம் பேசும்படி ஓரரசனால் அனுப்பப்பட்ட தூதனை நோக்கி, மறவர்கள் மணமறுத்து அவ்வரசனை யிகழ்ந்து பேசியதாகச் செய்யுள் செய்வது மறம் என்னும் உறுப்பிற்கு இலக்கணம் ஆம். இது மகண்மறுத்துமொழிதல் என்னுந் துறை. என்னை? "வெம்முரணன் மகள் வேண்ட, வம்மதிலோன்

* செதுக்கி எனப் பாடங்கொள்ளுதல் நேர்.

மறுத்துரைத்தன்று" வ - று. "ஒள்வாண் மறவ ருருத்தெழுந் தும்பர்நாட், கள்வார் நறுங் கோதை காரணமாக் - கொள் வான், மருங்கெண்ணி வந்தார் மழகளிற்றின் கோடிக், கருங் கண்ணி வெண்கட்டிற் கால்" என்ற (**புறப்பொருள் வெண்பா மாலை நொச்சிப் படலம் செ. கூ**) வெண்பாவானறிக. இது மறவர்க்குரித்து என்றதனால் அரசன் எனக்கூறியது யாரை யெனின், மறவர் தலைவனை யென்க.

இதனை அரசருக்குரியதெனக்கொண்டு மகட்பாற் காஞ்சி யென்னுந் துறையின் இனமாகக் கூறுவாருமுளர்.

ஓலையைத் தீண்டரிய சருகென்றும் எழுத்தாணியைச் சிற் றிரும்பென்று மிழித்துக்கூறினான். நிருபம் - அரசனுடைய திருமுகம். ஓலையைத் திருமுகமென்றல் மங்கலவழக்கு. மடல் பனை-தன் வடிவமுழுவதும் கூரிய கருக்குமடல்கள்விரியப்பெற்ற பனை. தூதா - தூதன் என்பதன் விளி. தாண்டவமாடும் பரனார் என்றது நடராசப் பெருமானை. அத்தாண்டவம் பஞ்சகிருத்தியம் நிகழ்த்தும். வளை - மூங்கில். ஏறிய கோணல்வளைகள் என் பதற்குத் தங்கியிருக்கிற கோணல் வளைதடிகள் என்று பொருள் கூறி வீரரிறந்த விடத்திற் கல்நாட்டுவதுபோல வளைதடியையும் நாட்டுவதுண் டென்பதை யிதனானறிக என்பாருமுளர். ஏ- அசைநிலைகள். ஆக என்பது கடைகுறைந்து ஆ என நின்றது.

இது முற்செய்யுள் போன்றதே. (எ0)

கொச்சகக் கலிப்பா

மறைக்கவனப் பரியாரும் வரைக்கவனப் பரியாரு
மெறித்தவிரும் பிறையாரு மெவருந்விரும் பிறையாரும்
பொறுத்தசின விடையாரும் பொருந்துசின விடையாரு
மறத்தவளம் பதியாரு மருணைவளம் பதியாரே. எக

மறைதாவளம் பரியாரும் - வேதங்களாகிய வேகத்தை யுடைய குதிரைகளை யுடையவரும், வரைக்க வனப்பு அரியாரும்- அழகு செய்யவரிய அழகையுடையவரும், எறித்து அவிரும் பிறையாரும் நிலவை வீசி விளங்குகின்ற பிறைமதியை யணிந்தவரும், எவரும் விரும்பும் இறையாரும் - யாவர்களும் விரும்புகின்ற தலைவரும், பொறுத்த சினம் விடையாரும் - தாங்குகின்ற கோபம் பொருந்திய இடபவாகனத்தையுடையவரும், பொருந்து சின இடையாரும்-இடப்பாகத்தில் பொருந்திய சிறிய இடையை யுடைய உமாதேவியையுடையவரும், அறத்தவள் அம்பதியாரும்- முப்பானிரண்டறம் வளர்த்தவளாகிய உமாதேவிக்கு அழகிய நாயகரும், அருணை வளம் பதியாரே - வளப்பம் பொருந்திய அருணகிரிப் பதியினையுடைய சிவபெருமானேயாவர்.

அருணை வளம் பதியார் இத்தன்மையுடையார் என்றதனால் இது பொருட்டன்மையணி.

பொருந்து சின விடையார் ஈண்டு - இடை ஆகுபெயரென் றாவது அன்மொழித்தொகை என்றாவது கொள்க. பரி - தாங் குவது எனக் காரணக்குறி. வரைக்க அரிய வனப்பாரும் என விகுதி பிரித்துக் கூட்டுக. இரும் பிறை எனக் கொண்டு பெரிய பிறைச் சந்திரன் என்பாருமுளர். சின - சின்ன என்பதன் தொகுத்தல்; சிறிய வென்பதன் மரூஉ. காஞ்சிபுரத்தில் ௩௨ அறங்கள் வளர்த்த காரணம்பற்றி, உமாதேவியை அறத்தவ ளென்றார். அறத்த வளம்பதி - தருமத்தையுடைய செழிய பதி யெனினுமொக்கும். ௩௨ அறங்களாவன :—

'ஆதுலர் சாலை யைய மறுசமயத்தோர்க் குண்டி
ஓதுவார்க் குணவு சேலை யுறுமேறு விடல்கா தோலை
மாதுபோ கம்ம கப்பால் மகப்பேறு மகவளர்த்தல் [தல்.''
வேதைநோய் மருந்து கொல்லா விலைகொடுத்துயிர்நோய் தீர்த்

"கண்ணாடி பிறரிற் காத்தல் கன்னிகா தானங் காவே
வண்ணார்நா விதரே சுண்ண மடந்தடங் கண்ம ருந்து, [ரோடு
தண்ணீர்பெய் பந்தல் கோலத் தலைக்கெண்ணெய் சிறைச்சோ
பண்ணான விலங்கூ ணல்கல் பசுவின்வா யுறைகொ டுத்தல்."

"அறவையாம் பிணம டக்க லறவைத்தூ ரியம்வ ருந்தா
நிறுவியே யிடம்வி டாம னிறையத்தின் பண்டநல்கல்
உறுதியா வுரிஞ்சு கின்ற தறியிவை யோது மெண்ணான்
கறநிலை யபிதா னங்க ளம்பிகை செய்யு மாறே."

என்னும் நிகண்டுச் செய்யுட்களானுணர்க. பதி - தலைவன். உம்மைகள் எண்ணும்மை. அருமை - இன்மை குறித்து நின்றது. பொறுத்தல் - சுமத்தல். ஆவர் என்பது வருவித்துரைக் கப்பட்டது. ஏ - தேற்றம். இடை - சினையாகுபெயர். மடக்கு என்னுஞ் சொல்லணி வந்தவாறுணர்க.

இது காய்ச்சீரான் வந்த கொச்சகக் கலிப்பா. (எக)

கலித்துறை

ஆரணி துங்க னாரணி பங்க னருணேசன்
றாரணி யஞ்சுங் காரண நஞ்சந் தரியானேல்
வாரண ரெங்கே சாரண ரெங்கே மலர்மேவும்
பூரண ரெங்கே நாரண ரெங்கே போவாரே. எஉ

ஆர் அணி துங்கன் - ஆத்திப் பூமாலையைத் தரித்த மேன்மையை யுடையவரும், நாரணிபங்கன் - உமாதேவியை இடப் பாகத்தி லுடையவரும் ஆகிய, அருணேசன் - அருணாசலேசுரர், தாரணி அஞ்சும் காரண நஞ்சம் - உலகத்தார் அஞ்சுதற்குக் காரணமான விடத்தை, தரியானேல் - (கண்டத்தின்கண்) தரிக்காவிட்டால், வாரணர் எங்கே - இந்திரர் எங்கே, சாரணர்

[illegible] எங்கே, மலர் மேவும் பூரணர் எங்கே - [illegible] பிரமர் எங்கே, நாரணர் எங்கே - [illegible] எங்கே, போவார் - செல்வார்கள் ? (தப்பிச் [illegible] இறப்பார்கள் என்பது குறிப்பு.)

[illegible] பெயர். துங்கன் - துங்கம் - உயர்வு. [illegible] யென்பதன் மரூஉ. காரணம் - ஏது. [illegible] ஆம் சாரியை. தரியானேல் - எதிர்மறை வினையெச்சம். [illegible] செய்யுமெனெச்சந் தொழின்மாத்திரையாய் நின்றது. [illegible] வாரணர் - ஐராவதம் என்னும் யானையை யுடையவர் [illegible], இந்திரர் என்றவாறும். வாரணம் - யானை. சாரணர் - [illegible] ளாகிய பதினெண் கணத்தரு ளொருவகையார்; "ஒருமொழி யொழிதன் இனங்கொளற் குரித்தே" என்றதனுல் அப் பதினெண் கணத்தரையுங் கொள்க. மலர்மேவும் பூரணர்- திருமாலினது உந்தியந் தாமரைப்போதிற் றோன்றிய நான்முகர் ; பூரணர்-வியாபகத் தன்மையை யுடையவர், ஈண்டு நான்முகற்கு உபசாரமாக வந்தது. நாரணர் - நாராயணர் என்பதன் மரூஉ. எங்கே - எவ்விடத்தே. எங்கே போவார் என வினவுகையில் ஏ எதிர்மறைப் பொருள்பட நின்றது. போவாரே - ஏ ஈற்றசை.

"மாலெங்கே வேதனுயர் வாழ்வெங்கே யிந்திரன்செங்
கோலெங்கே வானோர்குடி எங்கே—கோலஞ்சே
ரண்டமெங்கே யவ்வவ் வரும்பொருளெங் கேநினது
கண்டமங்கே நீலமுறாக் கால்."

என்ற திருவருட்பிரகாச வள்ளலார் திருவாக்கும் இப்பொருளாதலறிக.

இது, ஒன்று மூன்று கூவிளச் சீரும், இரண்டு நான்கு தேமாச் சீரும், இறுதிச் சீர் பெரும்பாலும் புளிமாங்காய்ச் சீரும் பெற்றுவந்த விருத்தக் கலித்துறை. (எஉ)

தழை

கட்டளைக் கலிப்பா

போந்த போதகக நல்லுரி யாடையார்
  போர்வை யாளர் புகழரு ணேக்குளே
யீந்த சூதக நறுந்தழை யையனே
  யெங்கண் மாத ரெடுத்து மகிழ்ச்சியாய்
மோந்த போது துவண்டது மெய்யிலே
  மொய்த்த போது புலர்ந்தது கண்ணினீர்
பாய்ந்த போது நனேந்தது மீளவும்
  பார்த்த போது பசந்து மலர்ந்ததே. எரு.

போந்த போதகம் நல் உரி ஆடையார் - (செருக்கடைந்து) வந்த யானையினது நல்ல தோலை ஆடையாக வுடையவரும், போர்வையாளர் - திருவிக்கிரமனது தோலைப் போர்வையாக வுடையவரும் ஆகிய சிவபிரானுரது, புகழருணைக்குள் - யாவரும் புகழ்கின்ற அருணகிரிப் பதியின்கண், ஐயனே - தலைவரே நீர், ஈந்த சூதம் நறும்தழை - கொடுத்த மாமரத்தின் நல்ல வாசனை வீசுகின்ற தழையை, எங்கள் மாதர் மகிழ்ச்சியாய் எடுத்து - எங்கள் தலைவியானவள் களிப்படைந்தெடுத்து, மோந்தபோது - முகர்ந்தகாலை, துவண்டது - வாடியது, மெய்யிலே மொய்த்தபோது - உடம்பிலே பட்டகாலை, புலர்ந்தது - உலர்ந்தது; கண்ணில் நீர் பாய்ந்தபோது - கண்களினின்றும் நீர் சொரியப்பட்டகாலை, நனைந்தது—; மீளவும் பார்த்தபோது - திரும்பவும் பார்த்தகாலை, பசந்து மலர்ந்தது - பசுமையடைந்து மலர்ந்தது.

இது தழை விருப்புரைத்தல். தழை மலர்களை இடையிட்டு மாந்தளிர் முதலியவற்ருல் செய்வதோர் உடைவிசேடம். அதா

[illegible] தழையேற்பித்துத் தலைமகளிடத்துச் சென்று [illegible] யான் சென்று கொடுத்தேன், அதுகொண்டு [illegible] செய்தன’ளெனத் தலைமகளது விருப்பங் கூறு [illegible].

[illegible] க்கப்படுவது தோல்; செயப்படுபொருளுணர்த்தும் [illegible] கெட்டது. திருமால் வாமன வடிவங்கொண்டு மாவலிச் சக்கரவர்த்தியிடஞ் சென்று மூன்றடிமண் யாசித்து [illegible] திருவிக்கிரம வடிவத்தை அரனார் அழித்து அதன் [illegible] போர்வையாகக் கொண்டனரென்க. காம வெப்பத் [illegible] மயிர்ப்பினால் துவண்டதும் புலர்ந்ததுமென்க. மகளிரான் மலரும் மரங்கள் பத்தினுள் மாமரம் பார்ப்பதால் மலர்வதால் பார்த்தபோது பசந்து மலர்ந்ததென்றாளென்க. ஐயனே - விளி. மெய்யிலே - ஏ பிரிநிலை. மலர்ந்ததே - ஏ ஈற்றசை.

இது சஎ-ம் கவிபோன்ற கட்டளைக் கலிப்பா. (எரு)

இரங்கல்

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

மலரிதழித் தொடைபான் மதியணி வித்தகனார்
மலைமக ளற்புதனார் வயலரு ணைப்பதிசூழ்
குலவுமி டக்கழியே பலவுமி டக்கழியே
குறவையி னக்கயலே யுறவுமெ னக்கயலே
சலமிகு முற்பலமே தளர்வது முற்பலமே
சருவும னத்திடரே தழுவும னத்திடரே
யிலைநெரி சற்பனையே யிவருரை சற்பனையே
யினியப னித்திரையே யினியிலை நித்திரையே. எசு

மலர் இதழி தொடை - கொன்றைமலர் மாலையையும், பால்மதி அணி வித்தகனார் - வெண்ணிறம் பொருந்திய சந்தி

ரணையுந் தரித்த மேம்பாடுடையவராகிய, மலைமகள் அற்புதனார்- உமாதேவியின் நாயகர் எழுந்தருளி யிருக்கின்ற, வயல்அருணைப் பதிசூழ் - வயல்களையுடைய அருணகிரிப் பதியைச் சூழ்ந்த குலவும் இடம் கழியே - விளங்குகின்ற இடத்திலுள்ள உப்பங் கழியே! பலவும் இடக்கு அழியே - எனக்கு நேரிடுகின்ற எல் லாம் துன்பத்தால் கலங்குதலே; குறவை இனம் கயலே - குறவையினத்தையுடைய கயல்மீனே! உறவும் எனக்கு அயலே - எனக்குச் சுற்றமும் புறம்பே, சலம் மிகும் உற்பலமே - நீரில் உயர்ந்து விளங்குகின்ற நீலோற்பலமே!, தளர்வதும் முன் பலமே - யான் வருந்துவதும் முன் செய்த தீவினையின் பயனே, சருவும் அனம் திடரே - சஞ்சரிக்கின்ற அன்னத்தையுடைய மணற்குன்றே! மனத்து இடரே தழுவும் - மனத்திலே துன் பமே பொருந்தும்; இலைநெரிசல்பனையே - இலை நெருக்கத்தை யுடைய பனைமரமே! இவர் உரை சற்பனையே - பிரிந்த இந் நாயகரது வார்த்தை வஞ்சனையே, இனிய பனிதிரையே - இனிமையைத் தருகின்ற குளிர்ச்சி பொருந்திய அலையே! இனி நித்திரையே இலை - இனிமேல் தூக்கம் என்பதே இல்லை. (முடிவில்லாத வாக்கியங்களில் ஆகும் என்பதை யொட்டுக).

இது காமமிக்க கழிபடர்கிளவி. தலைமகனைக் காணலுற்று வருந்துகின்ற தலைமகள் தனது வேட்கை மிகுதியாற், கேளா தனவற்றைக் கேட்பனவாக விளித்து, தன் வருத்தங் கூறல். தொடையார் எனவும் பாடங்கொள்வர். சூழ் இடமென்க. குறவை - மீன் விகற்பம். அழி - முதனிலைத் தொழிற் பெயர். உறவு - சுற்றத்தார் அயல் என்றது வரைதலுக்கு முன்னாதலி னென்க. இடக்கழி - உப்பங்கழியிடம் என மாற்றியும், இடக்கு அழி - குதர்க்கந் தருகின்ற அழிவு எனவும், சருவும் - மருவுகின்ற எனவும், சற் பனையெனப்பிரித்து நல்ல பனை யென வும் பொருள் கூறுவர்.

[illegible] உற்பலமே திடரே பனையே திரையே [illegible] எகாரம் தேற்றம்; அசைநிலையுமாம். முதலடி [illegible]றையடிகள் மடக்கு.

[illegible] கலிபோன்ற எண்சீர்க்கழி நெடிலாசிரிய [illegible]. இதன் முன்னும் பின்னும் சந்தங்காட்டாத சில [illegible] இதற்கும் குழிப்பையுந் தொங்கலையும் முன்னர்க் [illegible]றைக் கொண்டு உய்த்துணர்க. (எசு)

சுவடுகண்டறிதல்

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

நித்த னம்பனரு ணாசலத் திருவை
நின்று தேடியுழ னெஞ்சமே
*யித்த டஞ்சுரம டங்க வேயிதல
தில்லை வேறுமர மிதனிடை
யத்தி நின்றவிட மவ்வி டஞ்சிலைகொ
ளரசு நின்றவிட முவ்விட
மெய்த்து ளஞ்சியிள வஞ்சி நின்றவிட
மிவ்வி டஞ்சுவடு மேவுமே. எரு

நித்தன் நம்பன் அருணசலம் திருவை - என்றுமழிவில் [illegible]ராகிய சிவபெருமானாரது அருணகிரிப்பதியிலுள்ள [illegible]யனையாளை, தேடிநின்று உழல் நெஞ்சமே - தேடி நின்று [illegible]கின்ற மனமே! இ தடம் சுரம் அடங்க - இவ் வழியிலுள்ள பாலை நிலத்தின் வெப்பம் தணிய, இது அலது வேறு [illegible] இலை இதனிடை - இதுவன்றி வேறு மரம் இல்லை இத[illegible]த்து, அத்திநின்றவிடம் அ இடம் - யானைநின்ற விடமாகிய அவ்விடத்திலும், சிலைகொள் அரசு நின்ற இடம் உ இடம் -

* "யித்தடஞ்சுரம டங்கவோ விதல" என்னும் பாடம்.

வில்லைக்கொண்டு தலைவன் நின்ற விடமாகிய உவ்விடத்திலும், எய்த்து உள்அஞ்சி இளவஞ்சி நின்ற இடம் இ இடம் - இளைத்து உள்ளத்தில் அச்சங்கொண்டு இளமை பொருந்திய தலைவி நின்ற இடமாகிய இவ்விடத்திலும், சுவடு மேவும் - அடிச்சுவடு பொருந்தி யிருக்கும்.

சுவடு கண்டறிதலாவது, சோகிடாங்கேட்டுச் செல்லா நின்ற செவிலி, பாலைநிலத்தின்கண் உள்ள ஒரு மர நிழலில், சென்றவர்களி னடிச்சுவடு கண்டு நெஞ்சொடு கிளத்தல். இதனைச் சுவடுகண் டிரங்கல் எனக் கூறுவாருமுளர்; அது பொருந்தாமை **திருக்கோவையார்** முதலிய இலக்கியங்களிற் கண்டுணர்க.

அத்தி, அரசு, வஞ்சி என்னும் மரங்களின் பெயர்களமைந்துள்ளமை காண்க. சிலைகொள் என்பது மரத்தை யுணர்த்துங்கால் ஒலித்தலைக்கொண்ட என்க. இதில் சேய்மை நடு அண்மை முதலிய சுட்டுக்கள் வந்தன காண்க. தேடி நின்று ஒருசொன்னீர்மைத்து. நின்று - வருந்திநின்றெனினுமாம். நம்பன் - விரும்பத்தக்கவன். நம்பு - விருப்பம்; அது "நம்புமேவு நசையாகும்மே" (**தொல். உரி. நக.**) என்பதனு லறிக. நெஞ்சமே என்பது விளி. சுரம் - பாலை நிலம்; ஈண்டு அதன் வெம்மையை உணர்த்திற்று. பிரிதலும் பிரிதல் நிமித்தமும் பாலையாதலின் இவ்வாறு கூறினர். அரசு என்பது, அமைச்சு, தச்சு என்றாற்போல விகுதி குன்றி நின்றது. வஞ்சி- வஞ்சிக்கொடி. இதுபோறலின் மகளிர்க்கு வஞ்சி யெனப் பெயராயிற்று; உவமவாகுபெயர். வஞ்சி மரமென்று கொண்டு வஞ்சிக் கொம்பென்பாருமுளர். சுவடு - பாதப்பதிவின் குறி. ஏ - அசைநிலை. எண்ணும்மைகள் தொக்கன. அத்தி நின்ற இடமாகிய அவ்விடத்து என இயைத்துக் கொள்க.

இது, ஒன்று மூன்று ஐந்து சீர்கள் தேமாச்சீரும், இரண்டு நான்கு ஆறுசீர்கள் கூவிளங்காய்ச்சீரும், ஈற்றுச்சீர் பெரும்

[illegible]றும் பெற்றுவந்த எழுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம். (எரு)

மடல்விலக்கு

கலிவிருத்தம்

ஏறுடை யண்ணலா ரேழை பாகனா
ராறணி சென்னியா ரருணை வெற்பரே
கூறொரு பெண்ணையே கூட வேண்டுவார்
வேறொரு பெண்ணையே வெட்டு வார்கொலோ. எசு

ஏறு உடை அண்ணலார் - இடபவாகனத்தையுடைய தலைவரும், ஏழை பாகனார் - உமாதேவியை இடப்பாகத்திலுடைய வரும், ஆறு அணி சென்னியார் - கங்கையை யணிந்த சடைமுடி யுடையவருமாகிய சிவபெருமானரது, அருணை வெற்பரே - அருணகிரிப் பதியிலுள்ள தலைவரே! ஒரு பெண்ணை கூட வேண்டுவார் - ஒரு பெண்ணைச் சேர விரும்புகின்றவர், வேறு ஒரு பெண்ணை வெட்டுவாரோ - வேறொரு பனைமரத்தை வெட்டுவாரோ, கூறு - கூறுவீராக.

கூறு என்பது பன்மையின் ஒருமைவந்த வழுவமைதி. இக்கவி தலைவன் பாங்கியை நோக்கி மடலேறுவேனென்றபோது அது கூடாதெனத் தோழிவிலக்காகக் கூறியதென்க.

மடலேறுதல் என்றது, தலைவன் தலைவியைச் சேரவேண்டி, நீறுபூசி யெருக்கம் பூமாலை முதலியவற்றை யணிந்து தலைவி படத்தைக் கையில் வைத்துப் பனங்கருக்காற் செய்த குதிரை மீதேறுதல். இவ்வாறேறி வந்தவனுக்குக் கருதிய பெண்ணைக் கொடுத்தல் மரபு.

ஏறு-தருமவிடை யென்க. வெற்பரே - விளி. கொல், ஏ- அசைநிலைகள். ஓ-எதிர்மறை; வெட்டார்கள் என்றபடி. கூறு-

விகுதி குன்றிய முன்னிலையேவலொருமை வினைமுற்று; வினைத் தொகை யெனக்கொண்டு, தாம் புகழ்ந்து கூறுகின்ற என்று பொருள் கூறினுமாம். வெட்டிற் பாவமுண்டாமென்பது கூறி விலக்கினுனென்க. ஒரு மகளிரை யடையவேண்டுபவர் வேறொரு மகளிரை வெட்டுவாரோ என்னும் நயந்தோன்றுதல் காண்க

இது, ஒன்று இரண்டு நான்கு சீர்கள் கூவிளச் சீரும், மூன்றுஞ்சீர் பெரும்பாலும் தேமாச்சீரும் பெற்றுவந்த கலி விருத்தம். (எசு)

தவம்

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

வாய்ந்தநல மருந்தருந்தி யரிய யோக
வகைபுரிந்து வாயுவுள்ளே யடக்கி னாலுங்
காய்ந்தவிருப் பூசியிலே தவஞ்செய் தாலுங்
காயம்வருந் திடுவதல்லாற் கதிவே றுண்டோ
வாய்ந்ததிரு நீறணிந்தைந் தெழுத்தை யோதி
யகமகிழ்ந்து சிவாகமத்தி னடைவை யோர்ந்தே
யேய்ந்தருணா சலத்தைவலங் கொண்டா ரன்றோ
விமைக்குமுன்னே கைலைமலை யிடங்கொண் டாரே. எஎ

நலம் வாய்ந்த மருந்து அருந்தி - நன்மை சிறந்த மருந்துகளையுண்டு, அரிய யோகம் வகைபுரிந்து - செய்தற்கரிய யோக வகைகளைச் செய்து, வாயு உள்ளே அடக்கினாலும் - காற்றை வெளியிற் செல்லாமல் உள்ளே அடங்கச் செய்தாலும், காய்ந்த இருப்பு ஊசியிலே - நெருப்பிற் காய்ந்த இருப்பூசியின் கண்ணே நின்று, தவம் செய்தாலும் - தவத்தைச் செய்தாலும், காயம் வருந்திடுவது அல்லால் - உடல் வருத்தப்படுவது அன்றி, வேறு

உண்டோ - வேறு உய்யும் வழிஉண்டோ? ஆய்ந்த திருநீறு அணிந்து - அறிஞர்கள் மேலானதென்று ஆராய்ந்தெடுத்த திருவெண்ணீற்றைத் தரித்து, ஐந்து எழுத்தை ஓதி - ஸ்ரீ பஞ்சாட்சரத்தை யுச்சரித்து, அகம் மகிழ்ந்து - மனமகிழ்ச்சி யடைந்து, சைவ ஆகமத்தின் அடைவை ஓர்ந்து - சைவ ஆகமங்களின் முறைமையை அறிந்து, அருணசலத்தை ஏய்ந்து - திருஅண்ணாமலையை அடைந்து, வலம் கொண்டார் - பிரதட்சணஞ் செய்தவர்கள், இமைக்குமுன் - கண்மூடித் திறக்கு முன்னே, கைலைமலை இடம் கொண்டார் - திருக்கைலாய மலையைத் தனக்குரிய இடமாகக் கொண்டவர்களாவார்கள்.

இக்கவி * தவஞ் செய்வாரை நோக்கி நீவிர் இவ்வாறு தவஞ் செய்வதனுற் பயனின்று; திருவண்ணமலையை ஆகம முறைப்படி வலஞ்செய்து வணங்கினல் கதி எளிதிற் கிடைக்கும் எனக்கூறியதென்க.

யோகம் - அட்டாங்கயோகம். அட்டாங்கமாவன: இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி; இவற்றைத் திருமந்திர முதலியயோக நூல்களுட் காண்க.

மருந்து - யோக சாதனத்திற்குரிய மருந்து. கதி-மோக்ஷம் எனினுமாம். காயம் வருந்திடுவது - உடல்வற்றி உலர்ந்து போதல். உண்டோ-ஓ எதிர்மறை; இல்லை என்றபடி. திருவைந்தெழுத்து - சிவாயநம. இவற்றின் பேதங்கள் பல. சி - சிவத்தைக் காட்டும்; வ - அருட்சத்தியைக் குறிக்கும்; ய - உயிரைச் சுட்டும், ந - உயிர்களைப் போகத்திற் செலுத்தும் மறைப்புச் சக்தியை யுணர்த்தும்; ம - மலத்தினைக் குறிக்கும்.

உயிர்கள் நகரவாற்றலாற் பாசவாழ்க்கை யுறும். அருட்சத்தியும் மறைப்புச் சத்தியும் சிவசத்தியும் ஒன்றேயாதலான்

---

* ந-அ-ம் செய்யுளுரை.

வீடு நாடலுறுவார்க்கு மறைப்புச்சத்தி அருட்சத்தியி லொடுங்கி அருட்சத்தியே மேற்பட்டுத் தோன்றும். அதனை நகரம் வக ரத்தி லொடுங்குவதென்ப. சிவத்தில் சத்தி ஒடுங்குதலால் சிக ரத்தில் வகரம் ஒடுங்குவதாகும். உயிர் அருட்சத்தியின் துணை கொண்டு சிவத்தில் ஒடுங்குவதால் யகரமும் சிகரத்தி லொடுங்கு மென்ப. உயிரைப்பற்றிய மலம் வலியற் றடங்குவதால் மகர மும் யகரத்திலொடுங்கும். இம்முறையாக, ஐந்தெழுத்தும் சிக ரத்தி லொடுங்குமென்ப.

ஆகமம் - சிவபெருமானல் அருளிச் செய்யப் பட்டமையின் சிவாகமம் என்றூர். ஆகமம் - ஆ - ஞானம், க - மோக்ஷம், ம-மலநாசம்; எனவே, ஆன்மாக்களுக்கு மலத்தை நாசம் பண்ணி ஞானத்தை யுதிப்பித்து மோக்ஷத்தைக் கொடுக்க வல்லது; ஆ - பாசம், க - பசு, ம - பதி, எனவே, திரிபதார்த்த லக்ஷணத்தை யுணர்த்தவல்லது என்ப. சைவாகமங்கள் காமிக முதலிய உஅ-ம் ஆம். காமிக முதலிய கO-ம் பிரணவர் முதலிய கO சிவன் களுக்கும் அருளிச் செய்யப்பட்டமையின் சிவபேதமென்றும்; விசய முதலிய கஅ-ம் அநாதிருத்திரர் முதலிய கஅ உருத்திரர் களுக்கும் அருளிச்செய்யப்பட்டமையின் ருத்திரபேதமென்றுஞ் சொல்லப்படும். காமிக முதலிய ஆகமங்கள் சிவபெருமானுக்கு அங்கங்களாம்.

ஆகமம், சிந்தாந்தம், மந்திரம், தந்திரம் என்பன ஒரு பொருட்கிளவி. இவற்றின் விரிவை காமிகாகமம் தந்திராவ தாரப் படலத்திலும் பிறஆகமங்களிலுங் கண்டுகொள்க.

இமை - ஒருமுறை கண்ணிமைத்தற்கு வேண்டும் பொழுது. அன்று, ஓ, ஏ - அசைநிலைகள். இரும்பு என்பது இருப்பு என வலித்தல் விகாரம் பெற்றது. ஓதுமுறை - மானதம், மந்தம், உரை என மூன்று வகைப்படும். அது "மானதமந்தமுரை யென்ன வொருமூன்றாகு, மானதநெஞ்சிற் செபிக்குமாறு"

''[illegible] செவிகேட்கச் சொலுமாற்றம், அந்தம் பிறர் [illegible]ாம்'' என்னுஞ் சைவசமயநெறியானுணர்க.

இது, [illegible]செய்யுள் போன்ற எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம். இதனை அடிதோறும் முதற்சீர் முழுவதும் ஓசை [illegible], மோனை பாக்களுக்குக் குறித்த சீர்களன்றி இசை [illegible], பொருணயம் வலியுறுத்தல் ஆகிய இவைபற்றிப் பிற [illegible]லும் இந்நூலிற் பயின்றுவரும் அழகு நோக்கற்பாலது.

மாலை யிரத்தல்

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

இலங்கிய திங்க ளெழுந்தா லெங்கண்மின் வெங்கதி ரென்பாள்
கலங்கின ளாயினு மன்னாள் கட்கம லங்குவி யாவோ
இலங்கிய வெங்கதிர் தானேய் சோணகி ரிப்பெரு மானே
அலங்கலை யென்றுகொ டுப்பா யன்றது வெண்மதி யாமே.

இலங்கிய வெம்கதிர்ஏய் - விளங்குகின்ற சூரியனை யொத்த, சோணகிரிப் பெருமானே - அருணைசலத்திலுள்ள தலைவனே! எங்கள் மின் - எங்கள் மின்னற் கொடிபோன்ற தலைவி, இலங்கிய திங்கள் எழுந்தால் - விண்ணில் விளங்குகின்ற சந்திரன் தோன்றினால், வெம்கதிர் என்பாள் - வெம்மையைத் தருகின்ற சூரியன் என்று சொல்லுவாள், கலங்கினள் ஆயினும் - மனக்கலக்கத்தை யுடையவளானாலும், அன்னாள் - அத்தன்மை யுடையவளது, கள் கமலம் குவியாவோ - (தண்கதிராகிய சந்திரனையிருந்தால்) கண்ணாகிய தாமரைமலர் குவிந்து போகாவோ!(ஆனால்), அலங்கலை என்று கொடுப்பாய் - நீ மாலையை யெப்பொழுது கொடுப்பாய், அன்று-அப்பொழுது, அது வெண்மதி ஆம்-அத்திங்கள் வெண்ணிறம் பொருந்திய தட்பத்தையுடைய சந்திரனாகும்.

இவ்வாறு கூறித் தோழி தலைவனிடம் மாலை வேண்டினாளென்க. கள் கமலம் - கள்ளையுடைய தாமரை யெனவும் இரு

பொருள் கொள்க. கலங்கினள் ஆயினும் - கலக்க முடையாள் ஆதலால் அவ்வாறு கூறினளாயினும் தண்கதிராயிருந்தால் கமலங் குவியாவோ என்க. குவியாவோ என்பதில் ஓ வினா. கட்கமலங் குவியா என்றது நித்திரையின்மை குறித்தது. ஏய் - உவம வுருபு.

இது, முதற்சீர் கருவிளச்சீரும், இரண்டு, நான்கு, ஐந்து சீர்கள் கூவிளச் சீரும், மூன்று, ஆறுசீர்கள் பெரும்பாலும் தேமாச் சீரும் பெற்றுவந்த அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம். (எஅ)

இருவிகற்பநேரிசைவெண்பா

ஆற்றுங்காற் கஞ்சத் தவர்தா மரைக்கண்ணர்
சாற்றுங்காற் கண்ணரவர் தந்தையார் — கீற்றுமதி
சூடும் பெருமானைச் சோணகிரி வித்தகனைத்
தேடுவதிங் கெப்படியோ சேர்ந்து. எகூ

ஆற்றுங்கால் கஞ்சத்தவர் - முடியில் தாங்குகின்ற தண்டினை யுடைய கமலாசனராகிய பிரமர், அரை கண்ணர் - அரைக் கண்ணை யுடையவர்; சாற்றும் - புகழ்ந்து சொல்லும், அவர் தந்தையார் - அப்பிரமரது தந்தையாராகிய திருமாலானவர், கால் கண்ணர் - காற்கண்ணையுடையவர் (ஆதலால்), கீற்று மதி சூடும்பெருமானை - பிறைச் சந்திரனைத் தரித்த தலைவரும், சோணகிரி வித்தகனை - அருணைசலேசுரரும் ஆகிய கடவுளை, இங்கு சேர்ந்து தேடுவது எப்படி - இப்பதியில் கூடித் தேடுவது எவ்விதம்?

பிரமதேவரும் திருமாலும் முறையே அரைக் கண்ணரும் காற் கண்ணரும் ஆதலால், அருணைசலேசுரரைத் தேடுவது எவ்விதம் என்பது. எப்படியோ என்றதனால் முடியாமை பெறப்பட்டது. ஆற்றுங்கால் என்பதில், கால் - இடமென்பாரும் உளர். கஞ்சத்தவர் - தாமரை மலரில் தோன்றியவர்;

அதாவது திருமாலினது உந்தியந்தாமரை மலர். தாம் அசை நிலை. அரை, கால் - கீழ்வாயிலக்கம். அரைக் கண்ணர் - நெற்றியின்கண் தோன்றியவர். காற் கண்ணர் - சிவ பிரானது திருவடியில் கண்ணைச் சாத்தியவர். அது,

"பங்கய மாயிரம் பூவினிலோர் பூக்குறையத்
தங்க ணிடந்தான் சேவடிமேற் சாத்தலுமே
சங்கர னெம்பிரான் சக்கரமாற் கருளியவா
றெங்கும் பரவிநாந் தோணுக்க மாடாமோ"

என்றும் திருவாசகத்தானுணர்க. இக் காரணத்தால் ஊனக் கண்ணரெனச் சாதுரியமாகக் கூறினரென்க. காற்கண்ணரவர், காலின்கட் சிலம்புடையரெனவும், காற்றை உணவாக உண்ணு கின்ற அரவினை அணிந்தவரெனவும் கூறுப.

கீற்று - துண்டம். வித்தகன் - மேம்பாடுடையவன். ஏ - அசைநிலை. இது கருத்துடை யடைமொழியணி.

இது, காசு என்னும் வாய்பாட்டான் முடிந்த இருவிகற்ப நேரிசை வெண்பா. (எகூ)

கட்டளைக்கலித்துறை

சேணார் திருவுடைச் செல்வரைக் காணிற் சிறப்புச்செய்து
பேணா தவருமுண் டோபுவி மீதிற் பெருத்தெழுந்து
சோணா சலவடி வாய்வெளி யாய்நின்ற சோதிதனைக்
காணாத கண்ணனைச் சொல்வர்செந் தாமரைக் கண்ணனென்றே.

புவிமீதில் - பூமியின்கண், சேண் ஆர் திருவுடை செல் வரை காணின் - மிகுதியாய் நிறைந்த சிறப்பினையுடைய செல் வர்களைப் பார்த்தால், சிறப்பு செய்து - உயர்வுபெறச் செய்து, பேணாதவரும் உண்டோ - நன்கு மதியாதவரும் உளரோ? பெருத்து எழுந்து - அதிகரித்தெழுந்து, சோணசல வடிவாய் வெளியாய் நின்ற சோதிதனை - அக்கினிமலை யுருவமாய் வெளிப்

படையாய் எழுந்தருளிய சோதியை, காணாத கண்ணனை - பார்க்காத கண்ணையுடையவனை, செந்தாமரைக் கண்ணன் என்று சொல்வர் - செங்கமலக் கண்ணன் என்று கூறுவர்.

சேண் - நெடுமை ; ஈண்டு மிகுதியை உணர்த்திற்று. திரு - இலக்குமிவிலாச மெனினுமாம். உயர்வுபெறச் செய்தல் - தாந் தாழ்ந்து நிற்றல். காணின் - செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சம். பேணாதவரும் - முற்றும்மை. உண்டோ - ஓ எதிர்மறை. இல்லை யென்றபடி. பகைவர், நட்டார், நொதுமலர் என்னும் மூவகையாரும் பேணுதலின், இவ்வாறு கூறினார். திருவள்ளுவரும் "செல்வரை யெல்லாரும் செய்வர்சிறப்பு" என்றார் (திருக்குறள் - எ௫௨). பேணுதல் - நன்குமதித்தல், வழிபடல் ; விரும்புதல் எனினும் ஒக்கும். புவிமீதில் என்பதைப் பெருத்தெழுந்து என்பதனோடும், சொல்வர் என்பதனோடும் ஒட்டுக : இடைநிலைத் தீபகம். காணாத கண் - குருட்டுக் கண் எனினுமாம். ஏ - அசைநிலை. சோதி - சோதியாகிய கடவுள் ; சிவபெருமான் அனற்பிழம்பாய்த் தோன்றியமை. செந்தாமரைக் கண் என்பது - முகமன் என்றபடி.

இது, நேரசை முதலாய் ஒற்றொழித்துப் பதினாறெழுத்துப் பெற்றுவந்த கட்டளைக் கலித்துறை. (அ௦)

இருவிகற்பநேரிசைவெண்பா

என்றுமதிக் கண்ணா ரிறைவரரு ணாபுரியி
னின்றுதவம் புரியாய் நெஞ்சமே—பொன்றிரளான்
மாதரையா னாயிழைசூழ் மாதரையா னீதுவண்டு
மாதரையா னைமையென்சொல் வாய். அக

நெஞ்சமே நீ - மனமே! நீ, என்றுமதிக் கண்ணார் இறைவர் அருணாபுரியில் - சூரிய சந்திரர்களைக் கண்ணாக வுடையவ

நாயேன் சிவபெருமானுறைதரு திருவருணைப் பதியில், நின்று தவம் புரியாய் - தவத்தைச் செய்யாய், பொன் திரளான் - பொற் குவியலாலும், மா தரையான் - பெரிய பூமியாலும், ஆயிழை சூழ்மாதர் ஐயான் - ஆராய்ந்த ஆபரணத்தை யணிந்த மாத ருடைய அழகாலும், துவண்டு - வாடி, மாதரை ஆறுமை என் சொல்வாய் - ஆசையை விடாமைக்கு யாது கூறுவாய்?

அருணையிற் றவஞ் செய்யினன்றி மூவாசையும் நீங்கா வென்றபடி. சிவபிரானுக்குச் சூரியன் வலக் கண்ணும் சந்திரன் இடக் கண்ணுமாதல்பற்றி என்றுமதிக் கண்ணு ரென்றார். புரியாய் - எதிர்மறை முன்னிலை யொருமை வினைமுற்று. புரி - பகுதி, ஆய் - விகுதி, எதிர்மறை ஆகார இடைநிலை தொக்கது. நெஞ்சமே - விளி. ஆன் - மூன்றனுருபு; கருவிப்பொருள். உம் என்ற எண்ணும்மை தொக்கது. ஆய் இழை, சூழ் மாதர் - வினைத்தொகை. ஐ - அழகு. மாதர் - ஆசை. அது "மாதர் காதல்" (தொல். - உரி - ௩௰) என்பதனுனுணர்க. சொல்வாய்- முன்னிலை யொருமை வினைமுற்று. பின்னிரண்டடியும் மடக்கு. அருணபுரி என்பது அருணைபுரி என்று விகாரப்பட்டது.

இது, நாள் என்ற வாய்பாட்டான் முடிந்த இருவிகற்ப நேரிசை வெண்பா. (அக)

இடைச்சியார்

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

சொல்லாடி னுமக்கிரண்டு பசுவே யுண்டு
சுமந்திடுபாற் கலசமுமத் துணையா மீது
மல்லாம லிடையின்மிக விளைத்துப் போனீ
ராயிருந்து மிடைமதியோ வகந்தை தானே
புல்லாரென் பணிதொடையா ரருணை நாட்டிற்
பொதுவர்குல மங்கையரே புவிமேற் கண்டோ
ரெல்லாருந் தனித்தனியே டெடுத்தக் காலு
மிரண்டுமுரை யாமலகன் றேகு வீரே. அ௨

புல் ஆர் என்பு அணி தொடையார் - அறுகம் புல்லையும் ஆத்திப் பூவையும் பிரமவிட்டுணுக்களது எலும்பையும் தொடுத்த மாலையை அணிந்த சிவபெருமானாரது, அருணை நாட்டில் - திருவருணைப் பதியையுடைய நாட்டின்கணுள்ள, பொதுவர் குல மங்கையரே - இடையர்குல மகளிரே! சொல்லாடின் உமக்கு - விசாரிக்கின் நமக்கு, இரண்டு பசுவே(ப்) உண்டு - இரண்டு பசுவே யுள்ளது [இரண்டு பசிய மூங்கில் போன்ற தோள்கள் உள்ளன]; சுமந்திடு பால் கலசமும் அது ணை ஆம் - சுமக்கின்ற பாற்குடமும் அவ்வளவினதாகும் [சுமக்கின்ற தனங்களுமிரண்டாகும்]; ஈதும் அல்லாமல் இடையில் மிக இளைத்துப்போனீர்- இதுவே யன்றி - மத்தியில் மிகவும் இளைத்துப் போய் விட்டீர் [இடையினிடத்து மிகவும் தேய்ந்து போயிருக்கின்றீர்]; ஆய் இருந்தும் - இவ்வாறாக விருந்தும், இடைமதியோ - பின் புத்தியோ! [இடைச்சாதியின் புத்தியோ], அகந்தையோ - கர்வமோ! புவிமேல் கண்டோர் எல்லாரும் - பூமியில் பார்த்தவர்கள் யாவரும், தனி தனி ஏடு எடுத்தக்காலும் - ஒவ்வொருவராக நீர் கொண்டுவந்த தயிரிலே ஏடாகிய ஆடையை யெடுத்துக் கொண்டு போனபோதும் [தலையிலேயுள்ள பூவை யெடுத்துக்கொண்டு போனபோதும்], இரண்டும் உரையாமல் அகன்று ஏகுவீர் - உடன்படல் மறுத்தலென்ற இவ்விரண்டு வகையுளொன்றுங் கூறுமல் நீங்கிச் செல்வீர். (என்றனென்க.)

தெருவிற் பால் தயிர் கொண்டுவிற்கும் இடைச்சியை நோக்கிக் காதல் கொண்டானொரு காமுகன் தனது வேட்கையை வெளிப்படுத்தி அவளை முன்னிலையாக்கிச் சொன்னதாகக் கூறுவது இடைச்சியாரென்னும் உறுப்பினிலக்கணமாம். இது காலத்தான் மருவியது.

சொல்லாடல் - ஒருசொன்னீர்மைத்து. சொல்லாடின் செயினென்னும் வாய்பாட்டு வினையெச்சம்; சொல்லாடு-பகுதி,

[illegible] பசுவேயுண்டு-ஆக்களே யுளவென்னும் பொருளில் [illegible] யுமாம்; ய் - உடம்படுமெய்; மூங்கிலென்ற [illegible] வேய் உண்டு எனப்பிரிக்க; பசுமைப்பண் [illegible] கெட்டது. தோள் மூங்கில் போறலின் இவ் [illegible] ர். பசுவேய் என்பதற்கு முழந்தாளைக் குறித்த [illegible] பொருள்கொண்டு பசுமூக்கென்பாருமுளர். பசு [illegible] என்பதற்கு ஜீவான்மா பரமான்மா வென்பாருமுளர். [illegible] பயோதரமாதலின் பாற்கலசமென்றார். அத்துணை - [illegible] வெனவே இரண்டாம். ஈது-சுட்டு முதல் நீண்டது. உம் [illegible] தழீஇய வெச்சவும்மை. அல்லாமல் - எதிர்மறைக் குறிப்பு வினையெச்சம். இடை - மத்தியகாலம். போனீர் - முன்னிலை இறந்தகாலத் தெரிநிலைவினைமுற்று. ஆய் - செய வெனச்சத் திரிபு. பொதுவர் - முல்லைக்குங் குறிஞ்சிக்கும் பொதுவாயுள்ளவர்; வேசையர். உடன்படல் - எடுத்துக் கொள்ளுங்க ளென்றல்; மறுத்தல் - எடுக்கவேண்டாம் என்றல். ஏகுவீர் - முன்னிலை யெதிர்கால வினைமுற்று. ஏ - அசைநிலை.

இது சுகூ-ஆம் செய்யுள் போன்ற எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம். (அஉ)

இதுவுமது

கட்டளைக்கலித்துறை

வீரனை நல்கி மகமூறு செய்த விடைக்கொடியார்
காரணி கண்ட ரருணை சலத்திற் கலசங்கொண்டு
மோரது கூறு மிடையின மானுக்கு முண்டகம்போ
லீரடி மெல்லினம் வல்லின மாகு மிருதனமே. அ௩

வீரனை நல்கி - வீரபத்திரனைத் தோற்றுவித்து, மகம்ஊறு செய்த - யாகத்திற் கிடையூறுண்டாக்கிய, விடைகொடியார் - இடபக்கொடியை யுடையவராகிய, கார்அணி கண்டர் -

மேகத்தை யொத்த கருநிறம் பொருந்திய விடத்தைத் தரித்த சிவபெருமானுரது, அருணைசலத்தில் - திருவண்ணமலைப் பதியில், கலசம்கொண்டு - மோர்க்குடத்தை யெடுத்துக்கொண்டு, மோர் அது கூறும் - மோர்விலை கூறுகின்ற, இடையினம் மானுக்கு - இடையர்குலப் பெண்ணுக்கு, முண்டகம்போல் ஈர் அடி மெல்லினம் - தாமரை மலர்போன்ற இரண்டு பாதங்கள் மிருதுத் தன்மை யுடையனவாகும், இருதனம் வல்லினம் ஆகும்- இரண்டு முலைகள் சூதாடு கருவியின் தன்மையை யொத்திருக்கும்.

மகம் - தக்கயாகம். கார்அணி - அணி உவமவுருபு; சீவகசிந்தாமணி ௨௨௩-ம் செய்யுளில் "முத்தணி மாலை" என்பதற்கு, ஆசிரியர் நச்சினர்க்கினிய ருரையைக் கவனிக்க. மோர் அது - அது பகுதிப்பொருள் விகுதி. மான் - உவமவாகுபெயர்; மருண்ட பார்வைக்கு உவமம். ஈர், இரு - இரண்டென்னும் எண்ணின் திரிபு. ஆகும் என்பதை மெல்லினம் என்பதனேடு ஒட்டுக. ஏ - அசைநிலை. இக்கவியில் வல்லினம், மெல்லினம், இடையினம் வரப்பாடியது காண்க.

இது நேரசை முதலாய்வந்த கட்டளைக் கலித்துறை.(அ௩.)

தலைவியிளமைத்தன்மை பாங்கி தலைவர்க்குணர்த்தல்

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

தடஞ்சுக மணிவெயிலும் பிறையுமிழு
　　நிலவுமெதிர் சடில நாத
னடஞ்சுக நெடுஞ்சிலையா னசுரர்புர
　　மெரித்தபிரா னருணை நாட்டிற்
றிடஞ்சுக மனையவரே தனஞ்சிறிதுங்
　　காணுத சிறியார் தம்மைக்
கடஞ்சுக நீர்வினவிப் பிணைதேடி
　　முறிதனையேன் கைக்கொண் டீரே. அச

தடம் நாகம் மணிவெயிலும் - பெரிய பாம்பினது மாணிக்கத்தின் ஒளியும், பிறை உமிழும் நிலவும் - இளஞ்சந்திரன் வீசுகின்ற ஒளியும், எதிர் - ஒன்றோடொன்று பகைத்தெதிர்க்கின்ற சடிலம்நாதன் - சடையையுடைய தலைவரும், அடல்நாகம் நெடுசிலையான் - போர் புரிவதற்கு மேருமலையாகிய நீண்ட வில்லையுடையவரும், அசுரர்புரம் எரித்தபிரான் - அசுரர்களது முப்புரத்தையும் எரித்தழித்தருளிய தலைவருமாகிய சிவபெருமானுடைய, அருணைநாட்டில்-திருவருணகிரிப் பதியையுடைய நாட்டின்கணுள்ள, திடன் நாகம் அனையவரே - வலிய யானையை யொத்த தலைவரே! தனம் சிறிதும் காணாத - முலைசிறிதுந் தோன்றப் பெறாத, சிறியார்தம்மை - சிறியராகிய மகளிரை, நீர்கடன்ஆக வினவி - நீர் அணையும் முறைமையாகக் கேட்டு, பிணைதேடி - மான் வந்ததோவெனக் கூறித் தேடி, முறிதனை என் கை கொண்டீர் - தழையை என் கையிற்கொண்டீர்?

இது, தலைவி யிளமைத்தன்மையள், இப்போது நீர் இவ்வாறு வருவதில் பயனில்லையெனத் தலைவனை நோக்கிப் பாங்கி கழறினாளென்க.

சிலேடை வகையிற் பொருள் கொள்ளுங்கால், தனம் சிறிதும் காணாத சிறியார் தம்மை - பொருள் சிறிதுமில்லாத ஏழை மனிதரை, நீர்கடன் ஆகவினவி - நீர் வட்டிக்கு வாங்கிய கடனைக் கேட்டு, பிணைதேடி - பிணையைத்தேடி, முறிதனை என் கை கொண்டீர் - எழுதிக்கொடுத்த ஓலை முறியை என் கையிற் கொண்டீர்? ஏழைகளுக்குக் கொடுத்தால் பின்னர்க் கேட்கக் கூடாதென்பது கருத்து.

தடநாகம் எனற்பாலது எதுகை நோக்கித் திரிந்தது. வெயிலும் பிறையும் என்பவற்றில் உம்மைகள் எண்ணும்மை. திடன் - மொழி யிறுதிப்போலி. அனையவரே - விளி. சிறிதும் என்றதனால் மிகுந்த இளமையென்பது பெறப்பட்டது. ஏ -

அசைநிலை. சிலேடை வகையில் பிணை என்பதற்கு, பொருள் கொடுக்கலாமென்று அவரோடு கையெழுத்திட்டவ ரென்க. பதிலாகக்கொள்வது என்பாருமுளர்.

இது, முதல்நான்கு சீரும் காய்ச்சீரும், இறுதி இரண்டு சீரும் மாச்சீரும் பெற்றுவந்த அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம். (அச)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

கையடைந்த மழுமானுஞ் செழுமானு
முழைமானுங் கயலு மானு
மையடைந்த விழிமானு முடனாக
வருணேசர் வருகு வாரே
மெய்யடைந்த நிறங்கருகி விழிகளும்பஞ்
சடைந்துவர மிடற்றி னூடே
யையடைந்து படர்ந்துவர யமனடர்ந்து
தொடர்ந்துவரு மன்று தானே. அரு

மெய் அடைந்த நிறம் கருகி - உடம்பிற் பொருந்திய செவ்விய நிறங் கருமையடைந்து, விழிகளும் பஞ்சு அடைந்துவர - கண்களும் ஒளியிழந்து வரவும், மிடற்றின் ஊடே - கண்டத்தினிடத்து, ஐ அடைந்து படர்ந்துவர - கோழை சேர்ந்து அதிகரித்து வரவும், யமன் அடர்ந்து - கூற்றுவன் நெருங்கி, தொடர்ந்துவரும் அன்று - நம்மைத் தொடர்ந்து வருகின்ற அக்காலத்து, கை அடைந்த மழுமானும் - தமது கையிலே பொருந்திய மழுப்படையும் மானும், செழுமானும் - செழிப்புற்றிருக்கும் இடபமும், உழைமானும் - உழை மானையும், கயலும் மானும் - சேலையும் ஒக்கும், மை அடைந்த விழிமானும் - மைதீட்டிய கண்களையுடைய உமாதேவியும், உடன் ஆக - தம்மோடு வர,

அருணேசர் வருகுவாரே - அருணசலேசுரர் வருகுவாரோ? (வர மாட்டாரென்றபடி).

வாழ்நாளளவும் அருணசலேசுரரை நினையா திருந்தால், இறக்குநாளில் அருள்செய்ய மாட்டாரென்பது கருத்து. உம் மைகள் எண்ணும்மை. மான் - ன் சாரியை. உழை - மான் விகற்பம். மானும் - உவம வுருபு. மான் (மருண்ட பார் வைக்கு) உவமவாகுபெயர். வருகுவார் - வா பகுதி, ஆர் விகுதி, வ் எதிர்கால இடைநிலை, கு சாரியை, ரு விரித்தல்: பகுதி விகாரப்பட்டது. ஏ - வினப்பொருள்; இன்மைப் பொருள் தந்தது. தான், ஏ - அசைநிலைகள்.

இது முதற் செய்யுள் போன்றதே. (அ௫)

தலைவன் கூற்று

இருவிகற்பநேரிசைவெண்பா

அண்ணு மலையா ரருணை யனையீ ரும்மைக்
கண்ணாலஞ் செய்தான் கமலத்தோ—னெண்ணு
திணைக்கோலஞ் செய்தமுலை யேந்திழையீ ரென்னை
மணக்கோலஞ் செய்தான் மதன். அசு

அண்ணமலையார் அருணை அனையீர் - அருணசலேசுரரது அருணகிரிப் பதியை யொத்தவரே! கோலம் செய்த இணை முலை எந்து இழையீர் - தொய்யி லெழுதிய இரண்டு தனங்களை யுடைய தலைவியரே! கமலத்தோன் - நான்முகன், உம்மை கண்ணாலம் செய்தான் - உம்மை விவாகஞ்செய்துகொண்டான் மதன் - மன்மதன், எண்ணது - இதனை ஆராயாது, என்னை மணம் கோலம் செய்தான் - என்னைக் கலியாண கோலஞ் செய்தான்.

சிலேடை வகையிற் பொருள் கொள்ளுங்கால்: உம்மை யெண்ணு து கண் ஆலம் செய்தான் - இத்தகைய உம்மை அர

யாது கண்ணிடத்து விடமாகச் செய்தான், மதன் - மன்மதன், மணம் கோல் அஞ்சு எய்தான் - வாசனை பொருந்திய மலர்ப் பாணங்கள் ஐந்தையுந் தொடுத்தா னென்க.

கண்ணாலம் - கல்யாணம் என்பதன் மரூஉ; தேய வழக்கு. எண்ணாது - எதிர்மறை வினையெச்சம். அனையீர், எந்திழையீர் என்பன அனையார், எந்திழையார் என்பவற்றின் விளி. எந்திழையீர் - வாளா பெயர்மாத்திரையாய் நின்றது; எந்திய ஆபரணத்தை யுடையவரே யென்பது பொருள். தன் வருத்த மிகுதியால் ஐந்து பாணமு மெய்தா னெனக் கூறினா னென்க.

இது, மலர் என்ற வாய்பாட்டான் முடிந்த இருவிகற்ப நேரிசை வெண்பா. (அசு)

கொற்றியார்

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

மழலைமொழி யிசையாலுங் கொடும்பார்வை
யதனாலு மயக்க மாகிச்
சுழலும்விட ரரவமெலாம் படமெடுத்து
முன்னாடத் தோன்றி னீரே
யழலுருவ மணிகரத்த ரருணகிரி
வளநாட்டி லளிவந் தாதுங்
குழலொருசற் றுண்டாயி னெப்படியோ
வாட்டிடுவீர் கொற்றி யாரே. அஎ

அழல் உருவம் அணி கரத்தர் - அங்கி வடிவமாகிய மழுப்படையை யேந்திய அழகிய கைகளையுடைய சிவபெருமானா ரெழுந்தருளி யிருக்கின்ற, அருணகிரி வளம் நாட்டில் - அருணகிரிப்பதியையுடைய வளப்பம் பொருந்திய நாட்டின் கணுள்ள, கொற்றியாரே!—, (உம்முடைய) மழலை மொழி இசையாலும் - மழலைபோன்ற இன்சொல்லின் இசையினாலும்,

கொடு பார்வையதனாலும் - கொடிய பார்வையினாலும், மயக்கம் ஆகி சுழலும் விடர் - மயக்கமடைந்து வருந்துகின்ற காமுகர், அரவம் எலாம் படம் எடுத்து நாட முன் தோன்றினீர்-(உருவே யன்றி) சிலம்பு முதலிய அணிகளெல்லாவற்றையும் கிழிச்சீலையி லெழுதி எடுத்து (மடலேறக்) கருதும்படி எதிரே வந்தீர், அளி வந்து ஊதும் குழல் - வண்டுகள் வந்து ஊதுகின்ற கூந்தல், ஒருசற்று உண்டாயின் - ஒருசிறிது உண்டானால், எப்படி வாட்டிடுவீர் - எவ்விதம் வருத்துவீர்?

விடர் சுழலும் - மலைப்பிளப்பின்கண் திரிகின்ற, அரவம் எலாம் - பாம்புகளெல்லாம், படம் எடுத்து முன்ஆட - படத்தை விரித்து எதிரேயாட எனவும்; அளிவந்து ஊதும்குழல் - அன்பு வந்து ஊதப்படுங்குழல் எனவும்; ஒருசற்று - ஒருசிறிது நேரம் எனவும் இருபொருள் கொள்க.

தலைமுண்டிதஞ் செய்து வைணவச் சின்னம் பூண்டு, சூல முதலிய தாங்கி வீதியிற் பிச்சைக்கு வருகின்ற மகளிரை முன் னிலைப்படுத்திக் காமுகன் ஒருவன் தன் காதலைப் புலப்படுத் திக் கூறுவது, கொற்றியாரென்னும் உறுப்பின் இலக்கணமாம்.

கொற்றி யென்னும் பெயருள்ள துர்க்கையைப்போல்; இவட்குஞ் சூல முதலிய வுண்மையால்கொற்றியாரென வழங்கி னர்போலும்.

இதனால் பாம்பாட்டிடுவது முண்டெனத் தெரிகிறது. மழலை - நிரம்பாமொழி; சிறுவர்களின் சொல்: அதுபோன்று இன்பந்தருதலின் மழலைமொழி யென்றார். கண்டாரை வருத் துந் தன்மைத்தாதலின் கொடும் பார்வை யென்றார். விடர்- நிலப்பிளப்புமாம். பார்வை - ஐ கருவிப்பொருளில் வந்தது. படம் - வஸ்திரம்: படாம் என்பதன் குறுக்கல்விகாரமுமாம். தோன்றினீர், வாட்டிடுவீர் என்பன முறையே முன்னிலைப் பன்மை யிறந்தகால வினைமுற்றும் எதிர்கால வினைமுற்றுமாம்.

குழல் - ஊதுகுழல் (புல்லாங்குழல்) என்க. சற்று என்பது அளவையும் காலத்தையும் உணர்த்தியது. கொற்றியாரே - விளி. ஏ, ஓ - அசைநிலை. ஆகி - செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சம். ஆக்கி யெனப் பாடங்கொண்டும், செயவெனெச்சத் திரிபென்றும் சிலர் பொருள் கூறுவர். வாட்டிடுவீர் - இடு துணைவினை.

இது, அசஞ்செய்யுள் போன்றதே. (அஎ)

இதுவுமது

கொச்சகக் கலிப்பா

ஆரிதழி சூடு மருணேசர் நன்னாட்டில்
வாரிறுகு கொங்கை மலைசுமக்குங் கொற்றீரே
பேரிருள்போ னாமப் பிறைநிலவு கண்டொளிக்கக்
கூரியகண் ணில்லார் குழல்குறைந்தா ரென்பாரே. அஅ

ஆர்இதழிசூடும் அருணேசர் - ஆத்தி கொன்றைகளின் பூக்களைத் தரித்த அருணாசலேசுரரது, நல்நாட்டில் - நல்ல நாட்டின்கண் உள்ள, வார்இறுகு கொங்கை மலைசுமக்கும் கொற்றீரே - கச்சினால் இறுகப்பட்ட தனமலைகளைத் தாங்குகின்ற கொற்றீரே! பேர் இருள்போல் - மிகுந்த இருளைப்போல, நாமம் பிறைநிலவுகண்டு ஒளிக்க - நீர் அணிந்திருக்கிற புகழமைந்த அணியாய பிறைச்சந்திரனது ஒளியைக்கண்டு மறைந்திருக்க, (அதனை யறியாது) கூரியகண் இல்லார் - கூர்மையான விழிகள் இல்லாதவர், குழல் குறைந்தார் என்பார் - கூந்தல் இல்லாதவர் என்று கூறுவார்கள்.

ஆர் இதழி - முதலாகுபெயர். கொங்கைமலை - பண்புத்தொகை. கொற்றீரே - கொற்றியாரென்பதன் விளி. பேர் பெருமை யென்பதன் திரிபு. ஒளிக்க - செயவெனெச்சம். கூரிய

உரிச்சொல்லடியாகப் பிறந்த பெயரெச்சம். இல்லார் - எதிர் மறைக் குறிப்புவினையாலணையும் பெயர். ஏ - அசைநிலை.

இது, முதற்சீர் கூவிளங்காய்ச் சீரும், இரண்டாஞ் சீர் தேமாச் சீரும், மூன்றாஞ்சீர் பெரும்பாலும் கருவிளங்காய்ச் சீரும், நான்காஞ்சீர் பெரும்பாலும் தேமாங்காய்ச் சீரும் பெற்று வந்த கொச்சகக் கலிப்பா. (அஅ)

வஞ்சித்துறை

பாணார் மொழிநிறை
சோணா சலாடி
பேணா தவனுறு
மாணா நரகமே. அகூ

பாண் ஆர் மொழிநிறை - இசைப் பாட்டுகள் நிறைந்த வேதங்களில் மிகுதியாகப் புகழ்ந்து பேசப்பட்டுள்ள, சோணாசலர் அடி - அருணாசலேசுரரது திருவடியை, பேணாதவன் - வழிபாடு செய்யாதவன், மாணா நரகமே உறும் - இழிந்த நரகத்தையே யடைவான்.

மொழி - கருவியாகு பெயர். ஆகமவறிவிற்குப் பயன் அவர் தாளைத் தொழுது பிறவியறுத்தலாதலால், அவர் தாளைத் தொழாதார்க்குப் பிறவியறாமல் நரகத்துன்பத்தையே யடைவர் என்பது இதனாற் கூறினார். திருவடியே வீடுபேறாதலின் இவ்வாறு கூறினார். ௬௦-ஞ் செய்யுளுரை கவனிக்க. வழிபாடு - பூசித்து வணங்குதல். பேணாதவன் எதிர்மறைத் தெரிநிலை வினையாலணையும் பெயர். மாணா - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். ஏ - தேற்றம். உறும் - செய்யும் என்னும் முற்று.

இச் செய்யுளில் வழிபடாதாருக் குளதாகுந் தீமை கூறப்பட்டது.

இது, முதற்சீர் தேமாச் சீரும், இரண்டாஞ் சீர் கருவிளச் சீருமாகி, குறளடி நான்கு கொண்ட வஞ்சித்துறை. (அக)

வஞ்சிவிருத்தம்

நரக வாதையில் வன்பிறார்
தரணி மீதொரு கொன்பெறார்
சுரரு லோகமு மின்புறா
ரருணை நாயக ரன்பறார். கூO

அருணை நாயகர் அன்பு அறார் - அருணசலேசுரரிடத்து அன்பு நீங்கப் பெறாதவர், தரணிமீது ஒரு கொன்பெறார் - பூமியின்மேல் எவ்வாற்றானும் ஒருசிறிது அச்சமு மடையார். நரகம் வாதையில் வன்பு இறார் - நரகத் துன்பத்திற் சென்று தமது வலிமை கெடார், சுரர் உலோகமும் இன்பு உறார் - தேவலோகங்களினும் இன்பத்தை யடையார்.

எனவே, வீடு பேற்றையே விரும்புவரென்றபடி; அது பிற் செய்யுளால் விளக்குகின்றார்.

அன்பு - உள்ள நெகிழ்ச்சி; அது அவர்மாட்டுச் செய்யும் வழிபாட்டான் விளங்கும். ஏனைய அன்பு போலாது இது வீடு பேற்றையே தருதலின் இவ்வாறு கூறினார். அறார் - வினையாலணையும் பெயர். இறார், பெறார், உறார் - எதிர்மறைத் தெரிநிலை வினைமுற்று.

இது, முதற்சீர் புளிமாச் சீரும், ஏனையிரண்டும் கூவிளச் சீர்களுமாகிச் சிந்தடி நான்கு கொண்ட வஞ்சி விருத்தம். (கூO)

வேற்றொலி வெண்டுறை

அருணையதி ருங்கழல ராறணிசெஞ்
சடையாள ரரிவை பாகர்
கருணைநெடுங் கடலான பெருமானார்
தாடொழுதார் கதியை நாடின்

மரணமிலா விமையவர்தம்
வானுலக மன்றே
பொருணிறையு நான்மறையோர்
புகலுமத்தாட் பூவே. சுக

அருணை அதிரும் கழலர் - அருணகிரிப் பதியிலுள்ள அதிருங் கழலரும், ஆறு அணி செம் சடையாளர் - கங்கா நதியைத் தரித்த சிவந்த சடைமுடியை யுடையவரும், அரிவை பாகர் - உமாதேவியை யிடப்பாகத்திலுடையவரும், கருணை நெடு கடல் ஆன பெருமானார் - பெரிய கிருபா சமுத்திரமான சிவ பெருமானாரது, தாள் தொழுதார் - திருவடியை வணங்கினவர், கதியை நாடின் - அடைதலை ஆராயின், மரணம் இலா இமையவர் தம் வான் உலகம் அன்று - மரித்தல் இல்லாத தேவர்களது விண்ணுலகம் அன்று, பொருள் நிறையும் நான்மறையோர் புகலும் அ தாள் பூவே - பொருள் நிறைந்த நான்கு வேதங்களை யுணர்ந்த அந்தணர்கள் துதிக்கின்ற அந்த திருவடித் தாமரை மலரேயாகும்.

திருவடி யடைதலே வீடுபேறாதலின் இவ்வாறு கூறினார். வீடுபேறு சாயுச்சிய மென்ப. கருணை நெடுகடல், தாட் பூ - உருவகம். மரணம் இலா என்றது இழிவுக் குறிப்பு; அவர்கள் பல துன்பங்களும் உடையவரென்பது பெற்றாம். அது,

“ தீயவசுரர் பகையுண்டு செற்றமார்வ மிகவுண்டு
நோயுண்டனங்க னுருண்டு நோய்கட் கெல்லாந் தாயான
காயமுண்டு கைதொழ வேண்டினருமுண்டு கற்பகத்தே
மாயுந் தன்மையுண்டானால் வானோர்க்கென்ன வளனுண்டே.”

என்னும் பெருந்திரட்டா னுணர்க.

நாடின் - செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சம். அன்று - எதிர்மறைக் குறிப்பு வினைமுற்று. ஏ - அசை நிலை. நிறையும், புகலும் - செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம்.

இது, நான்கடியாய், முதலிரண்டடியும், முதல் நான்கு சீருங் காய்ச்சீர்களும், ஏனைய மாச்சீர்களுமாய் வந்த கழிநெடிலடிகளாய், பின்னிரண்டடியும் நான்காஞ்சீர் மாச்சீரும் ஏனைய காய்ச்சீர்களுமாய் வந்த அளவடிகளாய், முன்னிரண்டடியும் ஓரோசையாய், ஏனையடிகள் வேறோசையாய் வந்த வேற்றொலி வெண்டுறை. (சுக)

இரங்கல்

விருத்தக் கலித்துறை

பூவுண்ட விடையாளர ருணச லத்தீசர்
பொன்மேருவாய்ப்
பாவுண்ட புகழாளர் பிரியே னெனச்சொன்ன
பருவத்திலே
காவுண்டு குயிலுண்டு மயிலுண்டு கிளியுண்டு
கனிதூவுதே
மாவுண்டு குருகுண்டு திருகுண்ட மனனுண்டு
மறவாமலே. சுஉ

பூ உண்ட விடையாளர் - பூமியை உண்ட திருமாலாகிய இடபவாகனத்தை யுடையவராகிய, அருணசலத்தீசர் - அருணசலேசுரரது, பொன் மேருவாய் - பொன்மயமாகிய மேருமலையிடத்து, பா உண்ட புகழாளர் - பாக்களால் பாடப்பெற்ற புகழையுடைய தலைவர், பிரியேன் என சொன்ன பருவத்தில் - உன்னைவிட்டுப் பிரியேன் என்று சொல்லிய காலத்தில் சான்றாக, கா உண்டு - சோலை உளது, குயில்உண்டு - குயில் உளது, மயில்உண்டு - மயில் உளது, கிளிஉண்டு - கிள்ளை யுளது, கனி தூவு தேமா உண்டு - கனிகளைச் சொரிகின்ற தேமாமரம் உளது, குருகுஉண்டு - பறவை யுளது, மறவாமலே திருகு

உண்ட மனன்உண்டு - மறவாமலே மாறுபாட்டைக் கொண்ட மனம் உளது.

தலைவன் கூறியதற்குத் தலைவி சோலை முதலியன சான்ருக வுள்ளனவெனக் கூறினளென்க. புலவர் பலராலும் பாடப் பெற்ற பெருஞ்சிறப்பினர் என்பாள் பாவுண்ட புகழாளர் எனக் கூறினளென்க. பருவத்திலே - ஏ அசைநிலை. மனன் - மொழி யிறுதிப் போலி. மறவாமலே - ஏ தேற்றம். உண்டு - குறிப்பு வினைமுற்று.

இது, முதல் நான்குசீர் காய்ச்சீரும், இறுதிச்சீர் கனிச்சீரும் பெற்று வந்த விருத்தக் கலித்துறை. (கூஉ)

பாங்கி வெறிவிலக்கிச் செவிலியர்க்கு அறத்தொடுநிற்றல்

கலிவிருத்தம்

வாங்குவில் லேர்நுதல் வயங்கு மாதரீ
ரீங்கிவ ளொருவர்கை யேட்டை வாங்கின
லாங்கடு வணிந்தவ ரருணை நாட்டிலே
நீங்கண்மை யழிப்பது நீதி யல்லவே. கூ௩

ஆம் கடு அணிந்தவர் அருணை நாட்டில் - தேவர்கள் உயிரைப் பருகும்படி யெழுந்ததாகிய விடத்தைக் களத்திற்றரித்த சிவபெருமானரது அருணகிரியையுடைய நாட்டில் உள்ள, வாங்குவில் ஏர்நுதல் வயங்கு மாதரீர் - வளைந்த வில்போன்ற அழகிய புருவம் விளங்குகின்ற மகளிரே! ஈங்கு இவள் ஒருவர் கைஏட்டை வாங்கினல் - பக்கலுள்ள இவள் ஒருவரிடத்தில் காதல்கொண்டால், நீங்கள் மையழிப்பது நீதியல்ல - நீங்கள் ஆட்டைக் கொல்வது நியாயமன்று.

ஓர் உத்தம புருஷன் பரிவாரத்துடன் வேட்டை யாடுதற்குப் புறப்பட்டு வனத்துக்குச் சென்றவனுய், ஓர் உத்தம கன்னி

[illegible]யும் தோழியருடன் பூக்கொய்து விளையாடுதற் கென்று பூஞ்சோலையிற் சேர்ந்த வளவிலே, ஒவ்வொரு நிமித்தத்தால் தோழியர் பிரிய அக்கன்னிகை அங்குத் தனித்து நின்ற சமயத் திலே, ஒவ்வொரு நிமித்தத்தால் பரிவாரங்கள் பிரியத் தனிப் பட்டவனாய் அப்புருஷன் அங்கு வந்து சேர, இருவரும் ஊழ் வினை வசத்தால் இங்ஙனம் தற்செயலாய் ஓரிடத்திலே சந்தித்து ஒருவரையொருவர் கண்டு காதல்கொண்டு காந்தருவ விவாகக் கிரமத்தாற் கூடி உடனே பிரிய, பின்பு மற்றுஞ் சில களவுப் புணர்ச்சிக்கு உரியவகைகளால் அத்தலைமகளது கூட்டுறவைப் பெற்ற தலைமகன், பின்பு அவளை வெளிப்படையாக மணஞ் செய்து கொள்ளுதற் பொருட்டுப் பொருள்தேடி வருவதற்காக அவளைப் பிரிந்து செல்ல, அந்நிலையிற் பிரிவாற்றாது மிக வருந் திய தலைமகளைச் செவிலித்தாய்மார் எதிர்ப்பட்டு அவளது வடிவு வேறுபாட்டை நோக்கி இவள் இங்ஙனம் மெலிதற்குக் காரணம் என்னோ? என்று கவலையுற்றுக் கட்டுவிச்சியைக் குறி கேட்க, அவளும் தன் மரபின்படி ஆராய்ந்து இவளுக்கு முருகக் கடவுள் ஆவேசித்த தொழியப் பிறிதொன்றுமில்லை என்றுகூற அது கேட்ட செவிலித்தாயர், உடனே, தலைமகள் பக்கல் தமக்குள்ள அன்பின் மிகுதியால், ஏதேனும் ஒரு தெய்வத்தை வழிபட்டாகிலும் இவளை உயிர்த்திருக்கப் பெறில் அதுவே நமக்கு ஆத்ம லாபமென் றெண்ணி, வழியல்லா வழியிலே யிழிந்து, அதற்குப் பரிகாரமாக வேலனெனப்பட்ட வெறி யாட்டாளனை யழைப்பித்து அவனைக்கொண்டு ஆடு பலியிடுதல், கள்ளிறைத்தல், இறைச்சி தூவுதல், கருஞ்சோறு செஞ்சோறு வைத்தல், ஆவேசம் ஆடுவித்தல் முதலிய காரியங்களை இடை விடாது ஒன்றன்மே லொன்றாகச் செய்யத் தொடங்க, நோயொன்றும் மருந்தொன்று மாதலால், தான் காதலித்த புருஷோத்தமனான தலைமகனது தகுதிக்கு ஏலாத அச்செயல்

கனை நோக்கித் தலைமகள் மேன்மேல் மிகவருந்த, அவளது துன்பத்தின் மெய்க்காரணத்தை யறிந்த தோழி அச்சமயத்திற் செவிலியரை நோக்கிச் சில கூறி வெறிவிலக்கித் தலைவியினது துன்பத்தின் உண்மைக் காரணத்தை யுணர்த்துகின்ற துறை இஃது ஆகும்.

ஆடு பலிகொடுத்தலானது இவளுடம்பினின்று உயிர் நீங்காதபடி செய்து மரண வேதனைப்படுகின்ற இவளைப் பிழைப் பிக்க மாட்டாது என்ற பொருளை யுட்கொண்டு, 'நீங்கண் மை யழிப்பது நீதியல்ல' என்றாள். தான் கரையேறாதவன் பிற ரைக் கரையேற்ற மாட்டாமை போல, தான் கழுத்தறுப்புண்டு இறக்கிற ஆடு இவளுயிரைப் பிழைப்பிக்க மாட்டாதென்க: "வீழ்வார்க்கு வீழ்வார் துணை" என்றபடி இறக்கிற ஓர் உயிரோ மற்றோர் இறக்கிற உயிரைக் காத்தற்குத் துணை யாகும்!

மாதரீர் என்பது மாதரார் என்பதன் விளி. ஆம், இடைக் குறை; அசைநிலையுமாம். ஈங்கு - சுட்டு முதனீண்டது. அணிந் தவர் - வினையாலணையும் பெயர். வாங்கினால் - எதிர்காலத் தெரி நிலை வினையெச்சம், அழிப்பது என்னும் பிற வினையைக் கொண் டது. அல்ல - எதிர்மறைக் குறிப்பு வினைமுற்று.

இவள் ஒருவர் கையிலிருந்த ஓலைச் சுவடியை வாங்கினால், நீங்கள் அவ்வேட்டிலிட்ட மையை அழித்துவிடுவது நீதி யல்ல என வேறொரு பொருள் படுதலும் காண்க.

இது எகூ-ஞ் செய்யுள் போன்றதே. (கூகூ)

தலைவியைப் புகழ்தல்

கட்டளைக்கலித்துறை

அள்ளற் கடல்விட நீங்கா தகண்ட கருணைவெற்பிற்
பிள்ளைப் பிறையுஞ் சிலையுமொப் பாநுதற் பேதைநல்லாள்

வள்ளைக் குழைபொரு கண்ணுக்குத் தோற்றம்பும் வாரிதியுங்
கள்ளக் கயலு மிராசியின் மீனுங் கடைப்பட்டதே. கூச

அள்ளல் கடல்விடம் நீங்காத கண்டர் - சேற்றையுடைய திருப்பாற்கடலிற் றோன்றியவிடம் நீங்காத கண்டத்தையுடைய சிவபெருமானது, அருணைவெற்பில் - அருணகிரிப் பதியிற் சேர்ந்த மலையின்கண், பிள்ளைபிறையும் - இளஞ்சந்திரனையும், சிலையும் - வில்லையும், ஒப்புஆம் - ஒப்பாகின்ற, நுதல்-நெற்றியை யுடைய, பேதை நல்லாள் - பெண்ணாகிய நல்லாளது, வள்ளை குழைபொரு கண்ணுக்கு - வள்ளையிலையை யொத்த காதைப் பொருகின்ற நீண்ட கண்ணுக்கு, தோற்று - தோல்வி யடைந்து அம்பும் - பாணமும், வாரிதியும் - கடலும், கள்ளம் கயலும் - வஞ்சகம் பொருந்திய சேல்மீனும், இராசியின் மீனும்-இராசியி லுள்ள மீனமும், கடைபட்டது - தாழ்மை யடைந்தது.

இங்ஙனம் தலைவன் வேட்கை மிகுதியால் தலைவியைப் புகழ்ந்து கூறினானென்க. பாணம் கம்மியனாற் கடையப்பட்ட தென்றும், கடல் மந்தரகிரியாற் கடையப்பட்டதென்றும், கயல் விற்பதற்காகக் கடையிற் கிடப்பதென்றும், மீனம் இராசிகளி னிறுதிப்பட்டதென்றும் பொருள் கொள்க. பிள்ளைப் பிறை அட்டமி திதிச் சந்திரன். பிள்ளை ஈண்டு இளமையை உணர்த்தியது. நுதல் - புருவமுமாம். பேதை - பெண்ணென்னு மாத்திரையாய் நின்றது. நல்லாள் - நன்மையைத் தருகின்றவள். ஆம் - தொகுத்தல். வள்ளை முதலாகுபெயர். கொடியென்பாரு முளர். பொருதல் - போர் செய்தல்; அதாவது, அணுகிநிற்றல்; அல்லது, காதளவு பொருந்தி நிற்றல். இராசி - மேடமுதலிய பன்னிரண்டு இராசி. ஏ - அசைநிலை. கடைப்பட்டது எனத் தனித்தனி முடிவு கொள்க.

இது நேரசை முதலாய் வந்த கட்டளைக் கலித்துறை. (கூச)

வலைச்சியார்

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

தேவியிட மகலாத வருணகிரி
வளநாட்டிற் றெருக்க டோறு
மாவிரத முனிவரெலா மயல்கூரக்
கயல்கூறும் வலைச்சி யாரே
காவிதிகழ் வாவியிலே மீன்பிடித்து
வருவோரைக் கண்டோங் கண்டோ
ராவியெலாம் பிடித்திழுக்கு முமைப்போல
வொருவரைக்கண் டறிந்தி லோமே. கூடு

தேவி இடம் அகலாத - உமாதேவியார் இடப்பாகத்தி னின்றும் நீங்காத சிவபிரான் எழுந்தருளியிருக்கிற, அருணகிரி வளம் நாட்டில் - அருணகிரியை யுடைய வளப்பம் பொருந்திய நாட்டிலுள்ள, தெருக்கள் தோறும் - வீதிகளெல்லாம், மா விரதம் முனிவரெலாம் - அரியவிரதங்களையுடைய முனிவர்கள் எல்லாம், மயல்கூர - மயக்கமிகும்படி, கயல் கூறும் வலைச்சி யாரே - மீன்விற்கும் வலைச்சியாரே!, காவிதிகழ் வாவியில் - குவளைமலர்கள் பொருந்திய தடாகத்தில், மீன் பிடித்து வருவோரைக் கண்டோம் - மீன்களைப் பிடித்து வருகின்றவர் களைப் பார்த்துள்ளோம், உமைபோல - உம்மைப்போல, கண்டோர் ஆவி யெலாம் - பார்த்தவர்களது உயிரை யெல்லாம், பிடித்திழுக்கும் - பிடித்திழுக்கின்ற, ஒருவரை கண்டு அறிந்திலோம் - ஒருவரையாவது பார்த்து அறிந்திலோம்.

மீன் விற்கும் வலையர் மகளைக் கண்டு காமுற்றவனொருவன், அம்மகளை முன்னிலைப்படுத்திச் சிருங்காரமான வார்த்தைகள் பேசினதாகச் செய்யுள் செய்வது, வலைச்சியார் என்னும் உறுப்புக்கு இலக்கணமாம். இது காலத்தான் மருவியது.

பிருங்கி முனிவர், சிவபெருமானை யன்றித் தன்னை வழிபடாத காரணத்தால், உமையம்மை அப்பெருமானை வேண்டி அவரது திருமேனியில் இடப்பாகம் பெற்றனளாதலால் தேவி யிடமகலாத வென்றார்.

மா - பெருமை; அன்று அருமையை யுணர்த்தியது. விரதங்களாவன: இன்னவறஞ் செய்வலெனவும், இன்ன பாவ மொழிவலெனவும் தம்மாற்றலுக்கேற்ப வரைந்து கொள்வன. முனிவர் - தவஞ் செய்வோர். "முனிவரெலாம் மயல்கூரக் கயல் கூறும்" என்றதனால், இனிய மொழியும் பேரழகும் வாய்ந்தவளென்பது பெற்றாம். வலைச்சியாரே - விளி. கூர - உரிச் சொல்லடியாகப் பிறந்த வினையெச்சம். ஆவி யென்பதற்குக் குளமென்ற பொருளு முளதாதலை யறிக. அறிந்திலோம் - எதிர்மறை வினைமுற்று. ஏ - அசை. கண்டோர் - வினையாலணையும் பெயர்.

இது, நான்கு காய்ச்சீரும் இரண்டு இயற்சீரும் பெற்று வந்த அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம். (கரு)

இதுவுமது.

இருவிகற்பநேரிசைவெண்பா

மேலா றணிசடையார் வீறருணை வீதியிலே
மாலாக வந்த வலைச்சியரே—காலா
மிருவரா லுங்காட்டும் யான்பிடிக்கக் காத
லொருவரா லுந்திரு மோ.

மேல் ஆறு அணிசடையார் - ஆகாய கங்கையை அணிந்த சடையினையுடைய சிவபிரானரது, வீறு அருணை வீதியில் - பெருமை பொருந்திய அருணகிரிப் பதியிலுள்ள வீதியினிடத்து, மால்ஆக வந்த வலைச்சியரே - கண்டோர் மயக்க

முறம்படியாக வந்த வலைச்சியாரே! காதல் ஒரு வராலும் தீருமோ -- என்னுடைய ஆசை ஒரு வரால் மீனாலுந் தீருமோ (தீராதாதலால்), யான் பிடிக்க - நான் பிடிப்பதற்கு, கால்ஆம் இருவராலும் காட்டும் - கால்வாயிலுள்ள இரண்டுவரால் மீன் களையும் காட்டும்.

காதல் ஒருவராலுந் தீருமோ - என்னுடைய காதல் வேறு ஒருவராலுந் தீருமோ (தீராதாதலால்), யான் பிடிக்க - நான் பிடிக்க, கால்ஆம் இருவராலும் காட்டும் - உமது கால்களாகிய இரண்டு வரால் மீன்களையும் காட்டும் என இருபொருள் கொள்க. காலிற்கு வரால் மீனை உவமையாகக் கூறுதல் மரபு; ஈண்டு உருவகமாக உரைத்தா ரென்க.

மேல் - மேன்மையுமாம். வீறு - பிறிதொன்றற் கில்லாத பெருமை. வீதியிலே - ஏ அசைநிலை. மால் - பெருமையுமாம். இரு - இரண்டென்னும் எண்ணின் விகாரம். காட்டும் - செய்யு மென் முற்று. பிடிக்கக் காட்டுமென்க. தீருமோ - ஓ எதிர் மறை.

இது நாள் என்னும் வாய்ப்பாட்டான் முடிந்த இருவிகற்ப நேரிசை வெண்பா. (கசு)

செவிலி நற்றாயைத் தேற்றல்

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

ஒருவ ராலுமணு காத நாளிலே
யுயிரி னனவொரு கேள்வ னுசையான்
மருவி னாலுமென தாகு நாளையே
வழிக டோறுமினி நாடி மீளலே
கருணை நீதிமனை பேணு மாதுடன்
கடல்க ளேழுமலை யேழு மேழுமா
வருணர் சூழுமுல கேழு மேழுமா
வருணை நாதர்சர பாவ தாமே. கள

ஒருவராலும் அணுகாத நாளில் - ஒருவராலும் செல்ல முடியாத காலத்தில், உயிரின் ஆன ஒரு கேள்வன் ஆசையால் மருவினும் - உயிரை யொத்த ஒரு நாயகன் மீது வைத்த ஆசையினால் அவனுடன் சென்றாலும், நாளையே - நாளைய தினமே, மாதுடன் கருணை நீதி மனை பேணும்-தலைவன் மணந்து நமது மகளோடு கருணையாலும் நீதியாலும் இல்லறத்தை விரும்பி நடத்துவான், (அதுவேயன்றி) கடல்களேழும் - சமுத்திரங்கள் ஏழும், மலையேழும் - மலைகள் ஏழும், ஏழுமா அருணர் சூழும் உலகு ஏழும் ஏழும் ஆம் - சப்தமா என்னும் குதிரையையுடைய சூரியர்கள் சூழ்கின்ற உலகம் பதினான்கும் ஆகிய, அருணை நாதர் சரப அவதாரமே - அருணைசலேசுரரது சரப அவதாரத்தின் இருதலையைப் போல இயைந்து பிரியாது வாழ்வார்கள். (ஆதலால்), இனி வழிகள்தோறும் நாடிமீளல் அது என் ஆகும் - இனிமேல் வழிகள் தோறும் நம்மகளைத் தேடிச் சென்று திரும்புதலாகிய அச்செயல் யாது பயன் தரும்?

தலைவியின் உடன்போக்குக் கருதித் தேடி வருந்திய நற்றாய்க்கு, செவிலி நிகழ்வு கூறித் தேற்றிய தென்க.

இனி வழிகள் தோறும் நாடிமீளல் எனதாகும் - இனிமேல் வழிகடோறும் தேடிச்சென்று திரும்புதல் என்னுடைய தொழிலாகும், எனச்செவிலி தன்னுடைய தொழிலாகக் கூறித் தேற்றினா ளெனினுமாம். இப்பொருட்கு (ஆனாலும் அத்தலைவன்) மாதுடன் கருணை நீதி மனை பேணு மென்க.

ஒருவராலும் அணுகாத நாள் - நள்ளிரவு. ஆன - உவம உருபு. கானிலே எனவும் பாடம்; இதற்குப் பாலை நிலமெனப் பொருள் கொள்க. மருவுதல் - தழுவுதல்; ஈண்டு செல்லுதலின் மேற்று. நாளையே - ஏ தேற்றம். உடன் - மூன்றாம் வேற்றுமைச் சொல்லுருபு.

கடல்கள் ஏழாவன: உப்பு, கருப்பஞ்சாறு, கள், நெய்,

தயிர், பால், நன்னீர். மலைகள் ஏழாவன: கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி. ஏழுமா - ஏழு குதிரைக ளென்பாரு முளர். அருணர் பன்னிருவ ராவார்: வைகத்தன், விவச்சுதன், வாசன், மார்த்தாண்டன், பாற்கரன், இரவி, உலோகப்பிரகாசன், உலோகசாட்சி, திரிவிக்கிரமன், ஆதித்தன், திவாகரன், அங்கிசமாலி. உலகம் பதினான்காவன: பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், மகர்லோகம், சனலோகம், தவலோகம், சத்தியலோகம் என மேலுலகங்க ளேழும்; அதலம், விதலம், சுதலம், தராதலம், இரசாதலம், மகாதலம், பாதலம் எனக் கீழுலகங்க ளேழுமாம்.

கடல்கள், மலைகள், உலகங்கள் ஆகிய அருமைச யென்றதால் எல்லாப் பொருளுமாயுள்ளவனென்பது கருத்து. சரப + அவதாரம்-சரபாவதாரம்; வடமொழிப் புணர்ச்சி. அவதாரமே- ஏ தேற்றம். இனி, சரபாவதாரம் போலத் தமக்கு நிகராவா ரொருவருமின்றி வாழ்வா ரெனினுமாம். சரபாவதாரம், திருமாலாகிய நரசிம்மத்தை யடர்ப்பதற்குச் சிவபெருமா னெடுத்த வடிவம். கருணை - இரக்கம். நீதி - முறைமை.

இது ஒன்று ஐந்து சீர்கள் புளிமாச் சீரும், இரண்டு ஆறு சீர்கள் கூவிளங்காய்ச் சீரும், மூன்று ஏழு சீர்கள் தேமாச் சீரும், நான்கு எட்டு சீர்கள் கூவிளச் சீரும் பெற்று வந்த எண்சீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம். (கஎ)

வண்டோச்சி மருங்கணைதல்

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

தாரிலங்கு மறைமுடிவி னடித்தருளு
மருணேசர் தமது நாட்டி
ஞரியர்மேன் மனமகிழு மளியினங்கா
ளொருவார்த்தை நவிலக் கேளீர்

ரேரிருக்குங் கைதையெலாஞ் சோறிருக்க
நீரிருக்கு மிடங்க டோறும்
வேரிமலர்த் தேனிருக்க விவர்கூழை
விரும்பியென் றேன் விழுகின் றீரே. கூஅ

தார் இலங்கு மறை முடிவில் - தொடர்ச்சியாக விளங்குகின்ற வேதாந்தத்தில், நடித்தருளும் அருணேசர் தமது நாட்டில் - நடித்தருளுகின்ற அருணைசலேசுரரது நாட்டின்கண், நாரியர்மேல் மனம் மகிழும் அளியினங்காள்-பெண்களினிடத்து மனமகிழ்ச்சியடைகின்ற வண்டுக் கூட்டங்களே! ஒரு வார்த்தை நவில கேளீர் - யான் ஒரு வார்த்தை சொல்லக் கேளுங்கள், நீர் இருக்கும் இடங்கள்தோறும் - நீங்கள் வசிக்கின்ற இடங்கள் எல்லாம், ஏர்இருக்கும் கைதை எலாம் - எழுச்சியை யுடைத்தாயிருக்கின்ற தாழைகளில் எல்லாம், சோறு இருக்க - மகரந்தம் இருக்க, வேரிமலர் தேன் இருக்க - வாசனை பொருந்திய மலர்களின் தேன் இருக்க, இவர் கூழை விரும்பி ஏன் வந்து விழுகின்றீர் - இத்தலைவியரது கூந்தலை விரும்பி யாது காரணம் கருதி வந்து விழுகின்றீர்கள்?

இக்கவி, தலைவன் தலைவியைத் தீண்டுவதற்குபாயங் கருதி அவள் கூந்தலிலிருக்கின்ற வண்டுகளை நோக்கி இவள் சிற்றிடை பாரம் பொறாது இற்றுவிடும் ஆதலால், நீங்கள் விலகிப் போகவேண்டுமெனக் கூறித் தலைவிமருங் கணைதலாகக் கூறியது என்க. இதனை மெய்தொட்டுப் பயிறலெனவுங் கூறுப.

சோறிருக்கும்போது கூழையேன் விரும்புகின்றீர் வேண்டாவென விலக்கியவாறாக வேறுமொரு பொருள் தோன்றுதல் காண்க.

தார்-வரிசை எனவே தொடர்ச்சி யென்றவாறும். மறை-மறைந்த பொருளுடையது எனக் காரணக் குறி. மறை-முதனிலைத் தொழிற்பெயராகக் கொண்டு இறைவனது ஐந்தொழிலி

லொன்று என்பாருமுளர். தம்-அசைநிலை. நாரியர்-நாரத்தை யுடையவர்; நாரம்-அன்பு. அளியினங்காள்-விளி. கேளீர்-முன்னிலைப் பன்மை வினைமுற்று. ஏர் - அழகுமாம். மகரந்தம் - பூந்தாது. ஏ-அசைநிலை.

இது, கூரு-ங் கவி போன்றதே. (கூஅ)

பாங்கி தலைமகளவயவத்தருமை சாற்றல்

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

ஏமநெடுஞ் சிலைவளைத்த பெருமானு
ரருணகிரி யிறைவர் நாட்டிற்
றாமரைமண் டபத்துறையு மடந்தையிடை
யெழுதவென்றாற் றலைவ னாரே
மாமுயற்கொம் பினிலேறி விசும்பலரைப்
பறித்துமுனம் வடிவி லாதோ
னாமைமயிர்க் கயிறுகொடு தொடுத்தணிந்த
புதுமையினு மருமை யாமே. கூகூ

தலைவனாரே-தலைவரே!, ஏமம்நெடு சிலைவளைத்த பெருமானார்-பொன் மயமாகிய நீண்ட மேரு மலையை வில்லாக வளைத்த தலைவராகிய, அருணகிரி இறைவர் நாட்டில்-அருணகிரீசுரரது நாட்டின்கண், தாமரை மண்டபத்து உறையும் மடந்தை-தாமரை மலராகிய ஆலயத்தில் வீற்றிருக்கின்ற இலக்குமி தேவியை யொத்த தலைவியினது, இடை எழுத என்றால்-இடையை எழுதவேண்டுமென்றால், முனம்-முன்னே, வடிவு இலாதோன்-உருவமில்லாதவன், மாமுயல் கொம்பினில் ஏறி-பெரிய முயலினது கொம்பினில் ஏறி, விசும்பு அலரைப் பறித்து-ஆகாயப் பூவைக் கொய்து, ஆமை மயிர் கயிறுகொடு தொடுத்து அணிந்த-ஆமையின் மயிர்க் கயிற்றினால் தொடுத்துத்

தரித்துக்கொண்ட, புதுமையினும் அருமையாமே-அதிசயத்தி னும் அருமையுடையதாகும்.

தோழி தலைவனை நோக்கி இத்தலைவியினது அவயவங்களை யெல்லாம் எழுதினாலும் இடையை எழுத முடியாதெனமுயற் கொம்பு முதலிய இல்பொருளுவமை கூறி அதனினும் அருமை யுடைத்தாமென்று கூறினாளென்க. மண்டபம்-தேவாலயம். பேரழகுடைமை பற்றி இலக்குமியென உருவகித்தாளென்க. மடந்தை - பருவங் குறியாது பெண்மாத்திரையாய் நின்றது; என்னை? மங்கைப் பருவமுடையவளாதல்பற்றி யென்க. தலைவனாரே - விளி. முனம் - தொகுத்தல்; காலத்தைக் குறித் தது. ஏ-அசைநிலை. கொண்டு என்னும் மூன்றும் வேற்றுமைக் கருவிப் பொருள்குறித்து வருஞ் சொல்லுருபு கொடு என விகாரப்பட்டது.

இது முற்செய்யுள் போன்றதே. (கூக)

இறைவி கையுறையேற்றமை பாங்கி யிறைவர்க்குணர்த்தல்

கட்டளைக்கலிப்பா

ஆர்வ லர்க்கழி யாவர நல்குவா
　　ரத்த னாரரு ணாபுரி வெற்பரே
பார்வி யப்புற நீர்தரு மாமணி
　　பட்ட பாடு பகர்ந்திட லாகுமோ
கார்கு ழற்கு முடிமணி யாயிரு
　　கண்கண் மீதுறு கண்மணி யாய்முலை
சேர்த லுற்ற பொழுதிரு குன்றிலுஞ்
　　சென்று லாவுந் தினமணி யானதே. கOO

ஆர்வலர்க்கு அழியாவரம் நல்குவார் - அன்பர்களுக்கு அழி யாத வரத்தைக் கொடுக்கின்றவராகிய, அத்தனார் - பரமேசுர

உரை, அருணைபுரி வெற்பரே - அருணைபுரியிலுள்ள மலைக்குத் தலைவரீர்! நீர் கார்குழற்கு பார் வியப்புற தரு மாமணி - நீவிர் மேகம் போன்ற கூந்தலையுடைய தலைவிக்கு உலகத்திலுள்ளவர்கள் அதிசயமடையும்படி கையுறையாகக் கொடுத்த பெருமை பொருந்திய மணி, பட்டபாடு - அடைந்த பாட்டை, பகர்ந்திடல் ஆகுமோ - என்னால் கூறுவதற்கு முடியுமோ? முடிமணி ஆய் - சிரோரத்தினமாய், இருகண்கள் மீதுறு கண்மணி ஆய் - இரண்டு கண்களினிடத்துப் பொருந்திய கருவிழியாய், முலை சேர்தல் உற்றபொழுது - தனங்களை அடைந்தபோது, இரு குன்றிலும் சென்று உலாவும் - உதயகிரி அத்தகிரி ஆகிய இரண்டு மலைகளிலும் போய் உலாவுகின்ற, தினமணி ஆனது - சூரியனாயிற்று.

கையுறையாகக் கொடுத்த மணியைத் தலைவி விரும்பி முடியிலுங் கண்ணிலும் முலையிலும் வைத்தாளென்னுங் குறிப்புத் தோன்ற, தலைவனிடம் பாங்கி உரைத்தமை யறிக.

ஆர்வலர் - பண்படியாகப் பிறந்த உயர்திணைப் பலர்பாற் படர்க்கைப் பெயர். ஆர்வு பகுதி, அர் பலர்பால் விகுதி, அல் சாரியை. அழியா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். நல்குவார் - வினையாலணையும் பெயர். அத்தன் - கடவுள். வெற்பரே - விளி; மலையிலுள்ள தலைவரே யெனினுமாம். பார் - இடவாகுபெயர். வியப்புறுதல் - தாம் என்றுங் காணாத அருமையினால் என்க. மணி - இரத்தினம். பாடு - பெருமை; அன்றி, கேடென்று கொண்டு முன்னர் அச்சந் தோன்றும்படி கூறிப் பின் மகிழ்வித்தலுமாம். ஆகி யென்பது - ஆய் என விகாரப்பட்டது; **கம்பராமாயணம்** சூளாமணிப்படலம் ௬00-வது செய்யுளை நோக்குக.

உறுகண்மணி - வினைத்தொகை. தினமணி - நாடோறுந் தோன்றுகின்ற இரத்தினம் போல்வது எனக் காரணக் குறி. கார்குழல்-உவமத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. ஆனது-அஃறிணையொன்றன்பாற் படர்க்கை யிறந்த காலத் தெரிநிலை வினைமுற்று; ஆ பகுதி, து ஒன்றன்பால் விகுதி, ன் இறந்தகால இடைநிலை, அ சாரியை. ஏ- ஈற்றசை. சேர்தலுற்ற என ஒருசொன்னீர்மைத்தாய் வந்தது.

இது, எங-ங் கவி போன்ற கட்டளைக்கலிப்பா. (க00)

இவ்வுரையில் செய்யுட்களின் முதலடிக்குக் கூறிய இலக்கணத்தில் மாச்சீர் விளச்சீர் இரண்டும், காய்ச்சீர் கனிச்சீர் நான்கும் வருமிடங்களில் இவற்றுள் ஒன்றே காட்டப்பட்டிருப்பினும் இவ்வகையுள் பிறசீர்கள் வருதலும், கட்டளைக் கலிப்பாவிலும் அஃதொத்த ஒருசார்க்கலிவிருத்தத்திலும் கூவிளத்திற்குத் தேமாங்காயும், கூவிளம் கூவிளத்திற்குத் தேமா கருவிளமும் வருதலும், ஐந்து சீரான், முதல் நான்கு சீரும் இயற்சீராகவும் இயற்சீர் வெண்டளையாகவும் கடையொருசீர் விளங்காயாகவும் அமைவதாகிய கட்டளைக் கலித்துறையில் விளம்வருமிடத்து மாங்காயும் விளங்காய் வருமிடத்து அஃதொத்ததென் றெண்ணப்படும் மாங்கனி மாந்தண்பூவும் வருதலும், சந்தப்பாக்களில் தந்தன முதலிய சந்தங்கள் வருமிடங்களில் தானன முதலிய சந்தங்கள் வருதலும், பெயர் மாத்திரத்தான் சுட்டப்பட்ட சில பாக்களுக்கும் பாவினங்களுக்கும் அவ்வவற்றின் இயல்பு இலக்கணநூல்களில் வருதலும், அகத்திணைக் குரியவாகிய சில செய்யுளுறுப்புக்கள் அவ்வுறுப்புக்களோடு பொருந்தும் புறத்திணைக்கு வருதலும், உரையில் விரித்துக் கூறிய உவமை உருவகம் சிலேடை முதலிய அணி

களின் தன்மைகள் இலக்கண நூல்களில் வருதலுங் கண்டு கொள்க.

திருவருணைக் கலம்பகம் மூலமும் உரையும்
முற்றுப்பெற்றன.

திருச்சிற்றம்பலம்

தருணத் தியைபல்
வருணச் சிறுவருக்
கருணைக் கலம்பகங்
கருணைக் கடலகம்.

செய்யுள் முதற்குறிப் பகராதி

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
உ	கரு	தலங்களு து	தலங்களுள், இது
உச	உ	சக்கரத்தையும்	சக்கரத்தை
உஉ	உஉ	மருந்தா	மருந்தா, புனிதா
உஎ	உஅ	ணச்சம்	ணெச்சம்
உகூ	கூ	யுருவம்	யுருவமும்
நச	உஎ	மாண து	மாணாது
நரு	கரு	சங்கரன்	சங்கரர்
நசு	உஉ	எடுப்பதற்கு	பிச்சை யெடுப்பதற்கு
நஎ	உஉ	ஊடன் எலும்பு	ஊன் என்பு
நஅ	கஅ	பருமை -	பருமை,
நகூ	கஉ	மகங்	மதங்
ச0	கஅ	தன து	தமது
சஉ	கஉ	வருணம்	அருணம்
சந	உஎ	வருணம்	அருணம்
சகூ	உ	சிரிப்பினால்	சிரிப்பினால்;
,,	ககூ	தகனமுறை	தகனமுற
ருந	எ	கூறும்	கூறுப.
,,	கச	எண்	அறு
ருஅ	கச	அறுர்சீக்	அறுசீர்க்
சுக	உச	சோணாசைலேசுரர்	சோணாசைலேசர்
எச	கச	வசந்தராயர்.	வசந்தராயர் எனவும்:
அக	உ0	தலைவன்	தலைவர்
அச	உ0	சித்தரேம்	சித்தர்
அஅ	கசு	தலைவியைப் புகழ்தல்	உருவெளிகண்டு கூறல்
கூக	கக	மன	மல
ககக	கசு	தாம்	ஆம்
ககந	உக	அ-	ஏ -
ககரு	கஅ	கொள்ளும்	கொள்ளும்;
கஉச	அ	போல	போலவும்
,,	க0	போல	போலவும்
,,	கஎ-	உதிர்கின்ற பனிக் காலமென்க	எண்ணும்மைகள் தொக்கன.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
௧௨௪	௧௮	நுண்பொடி.	நுண்பொடி, பூந்தாது.
,,	௧௯	உதிர்கின்ற - அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை வினைமுற்று; அன்சாரியை குறைந்தது.	உதிர்க்கின்ற என்னும் பிறவினை தன் வினையாய் வந்தது. பாணங்களாகிய மலர்களினின்றும் உதிர்கின்ற எனத் தன்வினையாகக் கொள்ளினுமாம்.
௧௨௫	௧௯	டுக	டிப்பொருள்கள் கொள்ளினுமாம்.
௧௨௮	௨௫	கலித்துறை.	கலிப்பா
௧௩௧	௬	உன்றன்	உன்றன் அன்பன்
௧௩௯	௨	தலைமகளிடத்	தலைமகனிடத்
௧௪௫	௧0	தனக்கு	தமக்கு
௧௪௯	௯	ணைக்க	ணேக்க
௧௫௭	௧௨	முதற்	முற்

௮-வது பக்கம் 27-வது வரியில், அமைத்தருளிய, என்பதற்குப்பின், சீர்-சிறப்பாகிய, என்றும், ௩௨-வது பக்கத்திறுதியில், தத்தன தனதன தந்தன, தத்தன தனதன தந்தன, தத்தன தனதன தந்தன, தனதான, என்னுஞ் சந்தக் குழிப்புக்கேற்ப சீர்பிரித்துக்கொள்க என்றும், ௩௪-வது பக்கம் ௭-வது வரியில், இன்மை, என்பதற்குப்பின் இல்லாத - அப்போது அங்கு இல்லாத, என்றும், ௭௨-வது பக்கம், ௨௩-வது வரியில், முதலாகுபெயர் என்பதற்குப்பின், தான் - அசைநிலை, என்றும் பெய்து படித்துக்கொள்க.

The Progressive Printers, Madras.

புத்தகம் கிடைக்குமிடங்கள் :



1. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
6, பவழக்காரத் தெரு, சென்னை.

2. ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்,
53-56, பவழக்காரத் தெரு, சென்னை.

3. சி. வி. ஜம்புலிங்கம் பிள்ளை அவர்கள்,
20, காரணேஸ்வரர் கோயில் தெரு,
மயிலாப்பூர், சென்னை.